திவ்வியப் பிரபந்தத்தில் மனம்

கரு. நாகராசன்

யாதும் ஊரே யாவரும் கேளிர்
INTERNATIONAL INSTITUTE OF TAMIL STUDIES

திவ்வியப் பிரபந்தத்தில் மனம்

கரு. நாகராசன்

உலகத் தமிழாராய்ச்சி நிறுவனம்
International Institute of Tamil Studies
டி. டி. டி. ஐ. அஞ்சல், சென்னை 600 113

BIBLIOGRAPHICAL DATA

Title of the Book	...	Tivviyap Pirapantattil Manam
Author	...	Karu. NAGARAJAN Research Scholar, International Institute of Tamil Studies, TTTI Post, Madras-600 113.
Publisher & Copyright	...	International Institute of Tamil Studies, TTTI Post, Madras-600 113
Publication Number	...	58
Language	...	Tamil
Edition & Date	...	First, December 1982
Paper used	...	16 kg. D/Demy
Size of the book	...	21 x 14 cms.
Printing types used	...	10, 12, 18 points
No. of Copies	...	1200
No. of Pages	...	viii + 252
Price	...	Rs. 12/- (Rupees Twelve)
Printers	...	Arulmani Printers, 8, 59th Street, Ashok Nagar, Madras-600083.
Binding	...	Section, Cardboard
Artist	...	Eswari
Subject	...	Concept of mind, as found in the Devotional poems of Alvars.

முன்னுரை

டாக்டர் ச. வே. சுப்பிரமணியன்
இயக்குநர், உலகத் தமிழாராய்ச்சி நிறுவனம்
டி. டி. டி. ஐ., சென்னை-600 113.

தமிழருக்கு எனத் தனித்த பண்புகள் உண்டு என்ற நம்பிக்கை உலகஅறிஞர் அனைவர்க்கும் உண்டு. மனம் பற்றிய கொள்கையை பற்றி திரு. கரு. நாகராசன் அவர்கள் நிறுவனத்தில் ஆய்வுசெய்து வருகின்றார். முதல் நூலாகத் 'தமிழர் கண்ட மனம்' என்ற தலைப்பில் தமிழ் இலக்கியத்தில் இருந்து பல இலக்கியப் பகுதி களைத் தொகுத்து அந்நூலை அவர் ஆக்கினார். அந்நூல் 1980-ல் நிறுவனத்தில் இருந்து வெளிவந்தது. அந்த வரிசையில் இரண்டாவது நூலாக வைணவ இலக்கியமான 'நாலாயிர திவ்வியப் பிரபந்தத்தில்' மனம் பற்றிய கொள்கைகளை ஆய்ந்து இந்த நூலை உருவாக்கியுள்ளார்.

பொது நிலையில் ஒவ்வொரு சமயத்தினரும் மனம்பற்றி என்ன நினைத்தனர்? என்னென்ன வேறுபாடுகள் இருந்தன? என்பதைப் பற்றிய செய்திகளைத் தெளிவாகத் தெரிந்துகொள்வதற்கு இந்நூல் உதவும். ஆழ்வார்கள் மனத்தை எவ்வாறெல்லாம் உவமித்துப் பேசினார்கள். என்னென்ன சொற்களால் தங்கள் கருத்துக்களை வெளியிட்டார்கள் என்பதைப் பற்றிய செய்திகளையெல்லாம் நன்கு நுணுகி ஆழ்ந்து ஆய்ந்து இந்நூலை உருவாக்கியுள்ளார்.

வழக்கம்போல் மனம், நெஞ்சம், உள்ளம், சிந்தை, சித்தம் ஆகிய இவைகளைப் போன்ற சொற்கள் வருகின்ற இடங்கள் அனைத்தையும் பின் இணைப்பாகத் தொகுத்துத் தந்துள்ளார். இது ஆய்வாளருக்குப் பெரிதும் உதவும்.

இவ்வரிசையில் ஒவ்வொரு சமயத்தினரும் கண்ட மனத்திற்கு ஒவ்வொரு நூலாக அமைத்தால் இனனும்பல நூல்கள் இது போன்று உருவாகலாம். அந்தச் செயலைத் திரு. கரு. நாகராசன் அவர்கள் செய்வார்கள் என்று நம்புகிறேன். திரு. நாகராசன் அவர்கள் உழைப்பைப் பர்ராட்டிப் போற்றுகின்றேன்.

நிறுவனத்தின் எல்லாப் பணிகளுக்கும் ஆக்கமும் ஊக்கமும் தருகின்ற மாண்புமிகு கல்வி அமைச்சர் செ. அரங்கநாயகம் அவர் களுக்கு நிறுவனத்தின் சார்பில் நன்றி தெரிவித்துக்கொள்கிறேன்.

குறிப்பிட்ட காலத்தில் சிறப்பாக அச்சிட்டுத்தந்த அருள்மணி பிரிண்டர்ஸ் உரிமையாளர் திருமதி அருள்மணி குணசேகரன் அவர்களுக்கும் எங்கள் நன்றி.

அன்புள்ள,
ச. வே. சுப்பிரமணியன்

நன்றியுரை

ஆய்வு உலகில் நான் அடியெடுத்து வைத்து நடக்கக் கற்றுக் கொண்டிருந்தபோது, தமிழர்களின் மனக் கோட்பாடுகள்பற்றி என் மனத்தில் எழுந்த ஐயங்கள் மிகப்பல. அவைகளுக்கெல்லாம் விளக்கங்கள் தந்து என் மனம் தெளிவு பெறச் செய்தார்கள் நிறுவன இயக்குநர், பேராசிரியப் பெருந்தகை டாக்டர் ச. வே. சு. அவர்கள். அவர்கள் தந்த ஊக்கத்தினால்தான் என் முதல் ஆய்வு நூலான 'தமிழர் கண்ட மனம்' உருப்பெற்றது.

ஒவ்வொரு சமயத்தினரும் மனம் பற்றி என்ன நினைத் தார்கள் என்பதைத் தனித்தனியாகக் காணவேண்டும் என்ற அவர்களது விருப்பத்தின் விளைவே இப்போது உருவாகியுள்ள 'திவ்வியப் பிரபந்தத்தில் மனம்'. முதல் நூலில் குறிப்பிட்டதுபோல் இதையும் ஓர் அறிமுக நூல் என்று குறிப்பிடமாட்டேன். கடந்த மூன்றாண்டு கால என் ஆய்வு அனுபவத்தில் பெற்ற சிந்தனைகள், பிற நூல்களில் கற்ற உண்மைகள் யாவும் இந்நூலை நுணுகிக் காணத் துணை செய்துள்ளன. அந்த அடிப்படையில் சில சிந்தனைகளை, மூல நூலில் முரண்படாது வெளியிட்டுள்ளேன். சரியென்று ஏற்றுக்கொள்வது, தவறுயென்று சுட்டிக்காட்டுவது ஆகிய இரண்டுமே என் எதிர்கால ஆய்வு வளர்ச்சிக்கு நிச்சயம் துணை செய்யும்.

ஒல்லும் வகையான் ஓவாது தமிழ்ப்பணி செய்துவரும் நிறுவன இயக்குநர் அவர்கள் என்னைப் போன்ற இளைஞர் களுக்கும் இதுபோன்று நூல் வெளியிடும் வாய்ப்புக்களை உருவாக்கித் தந்து வருகின்றார்கள். தமிழுக்குத் தொண்டு செய்யத் தகுதியுள்ள இளைஞர்கள் தேவை என்பதை உணர்ந்து வாய்ப்பளித்து வரும் அவர்களது உள்ளக் கிடக்கைகளை நிறை வேற்றும் இளைஞர்களில் குறிப்பிடத்தக்கவனாக நான் இருப்பேன் என்ற உறுதியோடு என் பணிவான நன்றிகளை அவர்களுக்குக் காணிக்கையாக்குகிறேன்.

எனது ஆய்வு நெறியாளர் டாக்டர் அன்னதாமசு அவர்களும் அவ்வப்போது பல அரிய கருத்துகளை வழங்கி உதவியுள்ளார்கள். இந்நூல் உருவாவதற்கும் அக் கருத்துகள் பயன்பட்டுள்ளன. அவர்களுக்கும் என் பணிவான நன்றிகள். இந்நூற் படியினைப் படித்துத் தேவையான இடங்களில் திருத்தமும் செய்து உதவிய நிறுவன அறிஞர் திரு. ஆளவந்தார் அவர்களுக்கும் என் அன்பான நன்றிகளைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

குறுகிய காலத்தில் இந் நூலைப் பொறுப்பாகவும் சிறப்பாக வும் அச்சிட்டு உதவிய அருள்மணி அச்சகத்தினர் நிறுவனத்தின் பாராட்டு தலுக்குரியவர்கள். அச்சக உரிமையாளர் திருமதி. அருள்மணி குணசேகரன் அவர்களுக்கும் முகப்பு அட்டையை அழகாக வடித்துத் தந்த ஓவியர் 'ஈஸ்வரி' அவர்களுக்கும் என் அகம் நிறைந்த நன்றிகளைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

18—12—82 கரு. நாகராசன்.

உள்ளே

(எண் : பக்க எண்)

முன்னுரை III

நன்றியுரை IV

ஆழ்வார்களும் திவ்வியப் பிரபந்தமும் : 1—16

முன்னுரை—1; வைணவத்தின் தொன்மை—3; தமிழ் மண்ணில் புறச்சமயங்கள்—5: ஆழ்வார்களும் வைணவமும்—6; ஆழ்வார்களும் அவர்கள் தோன்றிய காலமும்—8; திவ்வியப் பிரபந்தம் பொது மக்கள் இலக்கியமே—10; ஆழ்வார்களும் மனமும்—13;

நாலாயிரத் திவ்வியப் பிரபந்தத்தில் மனம்: 17—67

முன்னுரை—17; ஆழ்வார்களும் மனமும்—18; மனத்தின் தன்மைகள் உணர்த்தும் இடைச் சொற்கள்—24; தீய இயல்புகள்—28; மனமாசு தீரும் வழி—32; மனமும் அதன் பிற நிலைகளும்—33; மனம்—உள்ளம்—34; மனம்—நெஞ்சம்—34; மனம்—சிந்தை—34; மனமும் அறிவும்—35; மனமும்—ஞானமும்—39; மனமும்—கனவும் —40; மனமும் ஐம்பொறிகளும்—42; மனம், வாக்கு கருமம்—45; மனமும் வினைகளும்—47: மனமும் பற்று களும்—50; மனமும் பக்தியும்—51; மனக்கடல்—54; மனக் கோயில்—55; கதவு மனம்—55; மனக்கேதம்—56; மனப்போர்—57; மனச்சுடர்—58; மனத்தேன்—58; மூவர் மனங்கள்—59; 'இரு' மனமும் சிறு' மனமும்—60; மன ஒருமைப்பாடு—61

நெஞ்சம் : **68—120**

முன்னுரை—68; அடைச்சொற்களுடன் நெஞ்சம்—71; நல்ல தன்மைகள்—72; தீய தன்மைகள்—75: பொதுத் தன்மைகள்—80; தீய நெஞ்சம் திருந்தும் வழி—82; நெஞ்சமென்னும் அன்பு—88; ; நெஞ்சப் பெருஞ்செய்—89 நெஞ்சென்னும் உட்கண்—90; நெஞ்சே, கல்—93; நெஞ்சே, சொல் — 96 ; நீ கதியாம் நெஞ்சே — 98 ; நெஞ்சக் கோயில்—99 ; தனி நெஞ்சம்—102; நெஞ்சங் கவர்தல்—104: நெஞ்சிடிதல்—105; நெஞ்சு நிறைதல் — 106; நெஞ்சமும் கண், வாயும் — 107; நெஞ்சமும் வினையும்—109: நெஞ்சமும் உயிரும்—111; ஆழ்வார் களின் பக்தி நெஞ்சம்—112; நெஞ்சுடையார் எவர்—114; நெஞ்சினார்—115; நெஞ்சம் பிளத்தல்—115;

உள்ளம் : **121 — 162**

முன்னுரை — 121; ஆழ்வார்களும் உள்ளமும் — 126; அடைச்சொற்களில் உள்ளம்—133; உள்ளத்து இருளற —143; உள்ளத்தை நைவித்து—144; வலிய உள்ளம் — 145; என்கு முள்ளம் — 146: குழையுமுள்ளம்—146: தாங்கா உள்ளம்—147: மலங்கும் உள்ளம்—148; இடர்ப் படும் உள்ளம்—149: உளங்கோயில் — 149; உள்ளம்— போது—151; உள்ளத்துள் சுடர்ச்சோதி—152; உள்ளு வார் உள்ளாதார் உள்ளங்கள்—153; ஊனக்குரம்பையின் உள்புக்கு—155; உள்ளமும் வான், நரகமும்—156; உள்ள மும் மதியும் — 157; உள்ளத்து அகம் — 158; உள்ளம் என்ற சொல் வழக்கு—159;

சிந்தை : **163 — 197**

முன்னுரை — 163: சிந்திக்கும் சிந்தை — 165; ஞானச் சிந்தை—166; மெய்ஞ்ஞானமும் வீடுபேறும்—169; சிந்தை யும் இறைவனும் — 171; காலச் சூழலில் சிந்தை — 175; அடைச்சொற்களுடன் சிந்தை—177; தீய தன்மைகள் — 178: நல்ல தன்மைகள்—181; சிந்தையும் தீவினையும்

—187; சிந்தையும் அல்லல் பிறவி முதலியனவும் — 188; சிந்தை நோய்—189; சிந்தை சிதைத்தல்—190, சிந்தை, சொல், செயல் — 191; பல்வகைச் சிந்தைகள் — 192; சிந்தை என்னும் சொற்பொருள் — 194;

சித்தம் : 198 — 206

முன்னுரை—198; ஆழ்வார்களும் சித்தமும்—200; சித்தம் ஒருங்குதல்—201; திருமால்பால் சித்தம்—202; மங்கையர் பால் சித்தம்—204; பித்தர் போலச் சித்தம்—205;

அகம் : 207 — 219

முன்னுரை — 207; அகம் நெகுதல் — 209; தொண்டர் அகமே கோயில் — 210; அகங்குளிர்தல் — 211; அகங் கரைதல்—212; அகத்தான் புறத்தான்—213; இறைவன் அகம்—214;

இதயம் : 217 — 218

பின் இணைப்பு : சொற்பட்டியல்

ஆழ்வார்களும் திவ்வியப் பிரபந்தமும்

முன்னுரை :

'சென்ற விடத்தாற் செலவிடா தீதொரீஇ
நன்றின்பா லுய்ப்ப தறிவு' 1

என்று அறிவிற்கு இலக்கணம் கூறினார் திருவள்ளுவர். சிந்திக்கும் திறனின்றித் தீய வழிகளில் சென்று தாமும் கெட்டுப் பிறருக்கும் கேடு விளைவிக்கும் மனிதர்களை நெறிப்படுத்தி நல்லாற்றுப் படுத்தும் சீரிய நோக்குடன்தான் உலகில் சமயங்கள் தோன்றின. அறிவிற் சிறந்து விளங்கிய சமயத் தலைவர்கள் தாமுணர்ந்த அறிவு நெறியில் பிறரையும் ஈடுபடுத்தி அவர்களிடத்திருந்த அறியாமை இருளை அகற்றும் பணியினைச் செய்து வந்தனர். சமைத்தல் என்றாலே பக்குவப்படுத்துதல் என்று பொருள். உண்மை யுணரும் திறனின்றி அல்லற்பட்டோர்க்கு உண்மை நெறிகளையுணர்த்தி அவர்களைப் பக்குவப்படுத்தும் விழுமிய பணியினையே சமயங்கள் செய்துள்ளன.

சமயங்கள் தோன்றிய இடங்களும் சூழல்களும் வேறுபட்டிருக் கலாம்; போதித்த நீதிகளில்கூட வேறுபாடுகள் தோன்றலாம். ஆனல் அவைகளின் இறுதி இலக்குகளில் வேறுபாடு இருகக முடியாது. எல்லாச் சமயங்களுமே மனிதன் மனிதனுக வாழவே வழிவகுத்துள்ளன. அப்படி அவன் சிறந்த வாழ்வு நடத்துதற்கு எதனைச் செய்யவேண்டும்; எதனைச் செய்தல் கூடாது என்ப தனையே அச்சமயங்கள் எடுத்துக் கூறியுள்ளன. அறத்தில் விருப்பும், பாவத்தில் வெறுப்பும் மனிதனுக்கு ஏற்பட வேண்டும் என்பதுடன், அறவாழ்வு வாழ்ந்தால் இறைவன் திருவடியினையும், பாவங்கள் புரிந்தால் அருநரகினையும் அடைவர் என்பதனையும் எல்லாச் சமயங்களும் வலியுறுத்தியுள்ளன. மனித மனங்களில் பக்தி விதை களை விதைத்து அன்பு மணம் பரப்பும் அருளாளர்களாக ஆக்கும்

தொண்டினையே சமயங்கள் தங்கள் கடமைகளாகப் புரிந்து வந்துள்ளன.

தமிழர் வாழ்வில் பொற்காலம் என்று போற்றப் பெறுவது சங்ககாலம். எல்லா நிலைகளிலும் உலகோர் வியக்கும்வண்ணம் தமிழர் உயர்வுபெற்று நின்றனர் அன்று. நாட்டில் நல்லாட்சி நிலவியது; மக்களும் மனநிறைவுடன் வாழ்ந்தனர். அறத்திற்கே யன்றி மறத்திற்கும் அன்பைத் துணையாகக்கொண்டு அக்கால மன்னர்களும் மக்களும் வாழ்ந்தனர். இயல்பாகவே மனத்தில் நேர்மையும் வாழ்வில் நிறைவும் கண்டு அவர்கள் வாழ்ந்ததால் அவர்களை நெறிப்படுத்துதற்குச் சமயங்களின் துணை தேவை யில்லாமற் போயிற்று. இறையுணர்வு அக்கால மக்கள் மனங் களிலும் நிலவியபோதிலும் அச்சமற்ற அறவாழ்வு அவர்கள் வாழ்ந் ததால் சமயங்கள் அங்கு கால்கொள்ள வாய்ப்பில்லாமற்போயிற்று. பிற்றை நாளில் சமயவாதிகள் செய்த தொண்டினைத் தண்டமிழ்ப் புலவர்களே அன்று புரிந்தனர். புலவர் காட்டிய தூய தமிழ் நெறி யைப் புரவலரும் மக்களும் பின்பற்றி நல்வாழ்வு வாழ்ந்தனர். சமயங்களைப் பற்றிய தெளிந்த அறிவும் உணர்வும் அன்று வாழ்ந்த சான்றோர்களிடமும் காணப்பட்டாலும் சமயங்களுக்கு முதன்மை கொடுத்து அவைகளின் ஆளுகைக்கு உட்பட்ட நிலையில் அன்றையத் தமிழர் வாழ்வு நடத்தவில்லை.

சங்ககாலத்திற்குப் பின்பு தமிழ் நாட்டில் ஏற்பட்ட ஆட்சி மாற்றங்களால் மக்கள் மனங்களிலும் நடைமுறை வாழ்விலும் பல மாற்றங்கள் தோன்றலாயின. பண்பட்ட நிலையில் வாழ்ந்த தமிழர்கள் வாழ்வில் பல புறச்சமயங்களும் புகுந்து புண்பட வைத்தது. அந்நிலையில்தான் வைணவ, சைவ, சமயங்கள் தமிழ் மக்களின் வாழ்வியற் சமயங்களாக அமைந்து மக்களை நெறிப் படுத்தும் பணியினை முனைந்து செய்ய முற்பட்டன. சங்க காலம் தொட்டே இச்சமயங்கள் தமிழ் மண்ணில் வேரூன்றியிருந்த போதிலும் அவைகள் வளர்ந்து செழிக்கும் வாய்ப்புப் பின்னரே உருவாகியது.

வைணவ, சைவ சமயங்களைச் சேர்ந்த பல தலைவர்கள் அவ்வப் போது தோன்றித் தத்தம் கொள்கைகளை எடுத்துரைத்துள்ளார்கள். அக்கொள்கைகளிலும், அவர்கள் வணங்கும் கடவுளிடத்தும் ஈடு பாடுடைய அருளாளர்கள் தாம்பெற்ற இறையனுபவங்களை

அருந்தமிழ்ப் பாடல்களாக வடித்துத் தந்துள்ளனர். திருமாலை முழுமுதற் கடவுளாக எண்ணித் துதிக்கும் வைணவத்தில் ஈடுபாடு கொண்டு, திருமாலின் பெருமைகளையும் பக்தி நெறியின் சிறப்பினையும் தாம் உணர்ந்து, பிறர்க்கும் உணர்த்த முற்பட்ட ஆழ்வார்களின் அன்பு நெஞ்சத் தோட்டத்தில் பூத்த அருட் பூக்களே திவ்வியப் பிரபந்தமாகும். அச்சீரிய நூலைப்பற்றியும் அதனை அருளிய ஆழ்வார்களைப் பற்றியும் அறிய முற்படுவதே இம்முயற்சியின் நோக்கம்,

வைணவத்தின் தொன்மை :

'பழமையும் பெருமையும் வாய்ந்த இப்பாரத கண்டத்தில் அநாதியாக நிலைபெற்றுள்ள மதங்களிலே திருமால் சமயமும் ஒன்றென்பதற்கு வேத வேதாங்கங்களும் இதிகாச புராணாதிகளுமே தக்க சான்றாக உள்ளன.'[2] பரதகண்டமெங்கும் இச்சமயம் அநாதியாக நிலைபெற்றிருந்த போதிலும் தமிழ் மண்ணில் இது பரவத் தொடங்கிய காலத்தை வரலாறு, இலக்கண, இலக்கியங்கொண்டு உய்த்துணர முடிகிறது. ஆரியர்கள் தமிழர்களோடு பழகத் தொடங்கிய பின்னரே திருமால் வழிபாடு தமிழகத்தில் பரவியிருக்க வேண்டும். எனினும் தமிழில் இன்றுள்ள, காலத்தால் முந்திய நூலான தொல்காப்பியத்திலும் அதனையொட்டித் தோன்றிய திருக்குறளிலும்கூட திருமால் வழிபாடு பற்றிய கருத்துக்களைக் காணமுடிகிறது.

இயற்கையமைப்பினை யொட்டி நான்கு நிலங்களைப் பகுத்து அந்நிலங்களுக்குரிய தெய்வங்களையும்கூற முற்பட்ட தொல்காப்பியர்,

'மாயோன் மேய காடுறை யுலகமும்' 3

என்று முதன் முதலில் மாயோனாகிய திருமாலை வழிபடும் முல்லை நிலத்தினையே குறிப்பிடுகிறார். திருமால் முழுமுதற் கடவுள் என்ற உணர்வு அவருக்கிருந்தமையால்தான் முதலில் திருமாலைக் குறிப்பிட்டுள்ளார் என்றும் கூறப்படுகிறது. 'அகத்திணையொழுக்கந் தொடங்குதற்கிடமான குறிஞ்சியை ஏனைப் புலவர் போலத் தாமும் முதலில் வைத்துக் கூறாது, திருமாலுக்குரிய முல்லையை முதலாகக் கொண்டு தொல்காப்பியர் எண்ணுதல் ஒரு சிறப்பியல்பு பற்றியே

தென்றே கருதத்தகும்'[4] என்ற ஆய்வுக் கருத்தும் சிந்தித்தற் குரியது.

மன்னர்க்குத் திருமாலை உவமைகூறும் 'பூவைநிலை' யென்னும் புறத்துறைச் செய்தி கூறுமிடத்தே,

'மாயோன் மேய மன்பெரும் சிறப்பிற்
றாவா விழுப்புகழ்ப் பூவை நிலையும்'[5]

என்று திருமாலின் இறைமைக் குணங்கள் புலப்படுமாறு அவர் கூறியுள்ளதும் திருமாலிடத்து அவர் கொண்ட ஈடுபாட்டை எடுத்துக் காட்டும் வண்ணம் அமைந்துள்ளது மேற்கண்ட சான்று களிலிருந்து தொல்காப்பியர்க்குத் திருமாலிடத்திருந்த பற்றுதலை யுணர்வதினும் அவர் காலத்திலும் திருமால் வழிபாடு தமிழகத்தில் இடம் பெற்றிருந்தது என்பதையுணர முடிகிறது.

எச்சமயத்தவர் என்று முடிவுகாண முடியாதவாறு எல்லாச் சமயத்தவரது சிறந்த கருத்துக்களையும் கூறிய பெருமைக்குரியவர் திருவள்ளுவர். அவர் கூறாத சிறந்த கருத்துகளே இல்லை என்று பிறர் கூறும் பேற்றினைப் பெற்ற பேரறிவாளர் அவர். அவரும் கூடத் தம் திருக்குறளில் ஆங்காங்கு திருமால் பற்றிய செய்திகளைக் குறிப்பிட்டுச் சென்றுள்ளார்.

'மடியிலா மன்னவ னெய்தும்; அடியளந்தான்
தாஅய தெல்லா மொருங்கு' 6

'தாம்வீழ்வார் மென்றோள் துயிலின் இனிதுகொல்
தாமரைக் கண்ணா னுலகு' 7

என்ற திருக்குறள்களில் 'அடியளந்தான்' என்றும், 'தாமரைக் கண்ணான்' என்றும் திருமாலை அவர் குறிப்பிட்டுள்ளார்.

சங்க இலக்கியங்களிலும், அதன் பின்னர்த் தோன்றிய சிலப்பதிகாரம், மணிமேகலையிலும்கூடத் திருமால் வழிபாடுபற்றிய செய்திகளைக் காணமுடிகிறது. அதனையடுத்த பக்தி இலக்கியக் காலமான ஆழ்வார்கள் காலத்தில்தான் திருமாலின் பெருமை தேயமெங்கும் பரவுகிறது; வைணவ சமயம் வாழ்வியற் சமயமாகத் தமிழர்களிடம் செல்வாக்குப் பெறுகிறது. எனினும், தொல் காப்பியர் காலத்திலிருந்தே தமிழ் மண்ணில் இச்சமயம் இடம் பெற்றிருந்தது என்பதை உணர முடிகிறது.

தமிழ்மண்ணில் புறச் சமயங்கள் :

சைவமும் வைணமும் நீண்ட நெடுங்காலமாகவே தமிழ் மண்ணில் பரவியிருந்த பெருமைக்குரிய சமயங்கள். சங்க காலத்தில் இச் சமயங்கள் உச்ச நிலையில் இருந்தன என்று சொல்ல முடியாது எனினும் ஒருசில அரசர்களது ஆதரவையும் இச் சமயங் கள் பெற்றிருந்ததால் பொது மக்களும் இவைகளைப் போற்றிப் பின்பற்றினர். அக்காலத்திலேயே சமண, பௌத்த மதங்களும் தமிழ் நாட்டில் பரவத் தொடங்கியிருந்தன. அரசர்களோ, பொது மக்களோ அம் மதங்களின் வளர்ச்சிக்குப் பெரிதும் துணை செய்யாத தால் சைவ, வைணவ மதங்களின் செல்வாக்கை அம் மதங்களால் பெற முடியவில்லை. எனினும் மெல்ல மெல்ல அவைகள் வேரூன்றிக் கொண்டே வந்தன.

'கி பி. 5, 6ஆம் நூற்றாண்டுகளில் வடநாட்டில் வீசிய சண்ட மாருதம் தென்னாட்டிலும் வீசத் தொடங்கியது. அதன் விளைவு, சமண, பௌத்த மதங்களின் வளர்ச்சிக்கு இங்கு அடிகோலியது.'[8] தமிழரசர்களது தலைநகர்ப் புறச் சேரிகளிலும், வைதிகர் வாழிடங் களிலும் தங்கிப் பள்ளிகளையும் உபதேசக் கூடங்களையும் அமைத்துத் தத்தம் மதங்களைப் பரப்பும் பணிகளில் சமணரும் பௌத்தரும் தீவிரமாக ஈடுபட்டு வந்துள்ளனர். வடகலையில் அவர் கள் வல்லமை பெற்றிருந்ததுடன் சென்ற தேசத்தினரின் மொழி களையும் அவர்கள் கற்றிருந்ததால் அந்தந்தப் பகுதி மக்களுடன் இணைந்தொன்றிப் பழகி அவர்கள் மனத்தில் தம் மதக் கருத்து களைப் புகுத்துவதில் எளிதாக வெற்றியையும் அவர்களால் பெற முடிந்தது.

கி. பி. 6. 7ஆம் நூற்றாண்டுகளில் ஆட்சி புரிந்த பல்லவ மன்னர்கள் சைன மதத்திற்கு ஆதரவளித்தனர். பேரரசர்களின் ஆதரவுடன், அம் மதப் பிரச்சாரகர்களின் கடின உழைப்பும் அம் மதம் இம் மண்ணில் வளரத் துணை செய்தது. சைன மதம் இம் மண்ணில் வேரூன்றியதால் தமிழ் மக்கள் தம் சொந்த வாழ்வில் பெற்ற நலன்களைவிடத் தமிழ் மொழி பெற்ற சிறப்புப் பெரிது. இலக்கியம், இலக்கணம், நிகண்டு, உரை எனப் பலவாற்றான் சமணகள் தமிழை வளம் பெறச் செய்துள்ளனர். இவ்வாறு சமண மதம் மெல்ல மெல்ல வளர்ச்சி பெற்றுக்கொண்டு வந்தது.

வைதிக மதங்களிலிருந்த வேள்வி முதலிய சடங்குகளும், அதனால் உயிர்களைப் பலியிடும் கொடுமைகளும் பிற சமய வளர்ச்சிக்குத் துணை செய்தன. அன்பை அடிப்படையாகக் கொண்டு வளர்ச்சி பெற்ற பௌத்த மதத்தினர் அக் கொடுமைகளைச் சுட்டிக் காட்டி அன்பின் சிறப்பை எடுத்துக் கூறினர். அதனால் ஈர்க்கப் பட்ட பலர் அம் மதத்தில் சேரத் தலைப்பட்டனர். இவ்வாறு வந்த சமயங்கள் வளர்ச்சி பெற்றதால் வைணவம் முதலிய சமயங்கள் குன்றத் தலைப்பட்டன.

ஆழ்வார்களும் வைணவமும்:

சமண, பௌத்த மதங்களின் விரைவான வளர்ச்சி சைவ, வைணவ மதங்களை வெகுவாகப் பாதித்தது என்றே குறிப்பிட வேண்டும். புதிய மதங்களின் போதனைகளால் கவரப்பட்ட மக்களுக்குப் பழைய மதங்கள் உணர்த்திய நீதிகளிலும், தர்மங் களிலும் நம்பிக்கை குறையத் தொடங்கின. தமிழகச் சமய வரலாற்றில் பெரிய திருப்பங்கள் ஏற்பட்ட அக்காலத்தில்தான் மீண்டும் சைவ, வைணவ மதங்களுக்குப் புத்துயிரூட்டும் பணியில் அருளடியார்கள் பலர் தீவிரமாக முற்பட்டனர். சைவமும், வைணவமும் இரு சமயங்களாகத் தனித்துச் செயற்பட்டாலும் ஒரே இலக்கினுக்காக இரு தரப்பினரும் போர்க்கொடி யுயர்த்தினர். அதுதான் சமண, பௌத்த மதங்களை இம் மண்ணினின்றும் மறையச் செய்யும் முயற்சியாகும்.

ஆழ்வார்களும், நாயன்மார்களும் செய்த இம் முயற்சிக்கும் அன்றைய பல்லவ அரசே காரணமாக இருந்தது. 'பல்லவர்களுக் கென்று மரபு வழிவந்த சமயம் எதுவுமில்லையாதலால் எல்லாக் கலைகளும், எல்லாக் கருத்துகளும் அவர்கள் ஆதரவில் வளர்ந்தன. இத்தகைய சூழ்நிலை மீண்டும் சைவமும், வைணவமும் அவர்கள் ஆதரவுடன் வளரத் துணை செய்தது. அறிவு மேம்பாடும், சமயப் பொது நோக்குமுடைய சங்க காலத்திற்குப் பிறகு, மன எழுச்சியும் உணர்ச்சியும் இலக்கியங்களில் முதன்மை பெறுமாறு அமைந்த தற்குக் காரணம் ஆட்சிப்பொறுப்பிலிருந்த அவர்களின் அரவணைப் புடன் மதங்கள் வளர்ந்ததே'[9].

ஆழ்வார்களும் நாயன்மார்களும் தத்தம் மதக் கருத்துகளைப் பரப்புவதுடன் எதிர் மதங்களைத் தாக்கியும் அவர்களுடன்

வாதிட்டும் தம் கொள்கைகளை நிறுவியுள்ளனர். பிற்கால ஆழ்வார்கள் அருளிய பாசுரங்களிலும் அத்தகு எதிர்ப்புணர்ச்சிகளை அறிய முடிகின்றது. ஆழ்வார்கள் தோன்றி அருட் பாசுரங்களை அருளிய பின்னர் வைணவ சமயம் புத்துயிர் பெறத் தொடங்கியது. எந்த அன்பை அடிப்படையாகக் கொண்டு பௌத்தமும், சமணமும் இங்கு வளரத் தலைப்பட்டனவோ, அந்த அன்பின் நெகிழ்ச்சிகளையும், இறைவனிடம் நாம் அன்பு காட்டுவதன் மூலமே அவனருளைப் பெற முடியும் என்ற உறுதிப்பாட்டினையும் ஆழ்வார்கள் மக்கள் மனங்களில் விதைத்தனர். வேள்வி செய்தல், உயிர்களைப் பலியிடல் போன்ற கொடிய நிலைகளெல்லாம் மாற்றப்பட்டு, அனைத்துயிர்களிடமும் அன்பு காட்டத் தூண்டும் தூய சமயமாக வைணவம் மலர்ந்தது. திருமாலடியாராக இருப்பின் அவர் எக் குலத்தோராயினும் வணங்குதற்குரியவர்; இறைவனுக்கு முன் உயர்வு தாழ்வு கிடையாது என்ற உயர்ந்த கருத்துகளை ஆழ்வார்கள் உணர்த்தி வந்ததால் அனைவரும் விரும்பிப் பின்பற்றுவதற்குரிய சமயமாக வைணவம் ஆகியது.

'உலகிலுள்ள அனைத்துச் சமயங்களையும் பற்றிய ஆய்வு ஒன்றை நடத்தினால், இறையனுபவம் அல்லது இறைவனோடு ஒன்றுதல் என்ற புது எண்ணத்தை முதன் முதல் அறிமுகப்படுத்திய பெருமை வைணவத்திற்கே உண்டு'[10] என்று ஆய்வு முடிவு காணும் நிலையினை வைணவத்திற்கு ஏற்படுத்தியவர்களே ஆழ்வார்கள்தான். ஏனென்றால் அவர்கள் பெற்ற இறையனுபவங்களையே பாடல்களாக வடித்துத் தந்துள்ளார்கள். அத்தகைய அனுபவத்தை எல்லோரும் பெறவேண்டும் என்பதே அவர்கள் நோக்கம். எனவே, வைணவத்திற்குப் புத்துணர்ச்சியூட்டி அதன் பெருமையை உலகமுணரச் செய்த பெருமை ஆழ்வார்களையே சாரும்.

ஆழ்வார்—சொற்பொருள் :

திருமாலின் பெருமைகளையும், அவனிடம் பெற்ற அனுபவங்களையும் அருந்தமிழ்ப் பாக்களாக வடித்துத் தந்தவர்கள் ஆழ்வார்கள். ஒவ்வொருவரின் திருநாமங்களுடனும் 'ஆழ்வார்கள்' என்ற சிறப்புப் பெயர் சேர்ந்துள்ளதே தவிர அப்பெயருக்குரிய பொருள் யாது என்பதைத் திவ்வியப் பிரபந்தம் மூலம் அறியமுடியவில்லை. ஆழ்வார்கள் என்றால் எத்தகைய சிறப்பிற்குரியவர் என்பதைத்தான் உணர முடிகிறதேயன்றி அச்சொற் பொருளைத்

தெளிவாக உணரமுடியவில்லை. 'திவ்வியப் பிரபந்தத்தில் இதற்குச் சான்று இல்லையெனினும் பண்டைச் சாஸனங்களினும் நூல்களிலும் இச்சொல் பெரிதும் பயின்று வந்துள்ளது'[11] என்று குறிப்பிடும் அறிஞர் மு. இராகவையங்கார், ஆழ்வார் என்பதற்கு, 'பகவத் குணங்களில் ஆழ்ந்து ஈடுபடுவோர்' என்று பொருள் கூறுகிறார்.

'ஆழ்வார் என்ற சொல், ஆள்வார் என்ற சொல்லிலிருந்து மாற்றம் பெற்றிருக்க வேண்டும். மனத்தை இறைவனிடம் செலுத்தி அதனையாள்பவர் என்ற பொருளை அது பெற்றிருக்க வேண்டும்'[12] என்றும் கருதப்படுகிறது. 'ஆழ்தல்' என்றால் மூழ்குதல் என்றும் பொருள் உண்டு. எனவே ஆழ்வார் என்றசொல் 'இறையனுபவத்தில் திளைப்பவர்; அல்லது பக்தியில் மூழ்குபவர்' என்ற பொருட் சிறப்பினைக் குறிப்பதாகக் கொள்ள இடமுண்டு. ஆழ்வார்கள் அனைவருமே அறிவு நலம் சான்ற சான்றோர்களே யென்பதில் ஐயமில்லை. ஆனால் அவர்கள் அருளிய பாசுரங்களெல்லாம் அவர்களின் நுண்மாண் நுழைபுலத்தைக் காட்டுவதைவிட அவர்களது இதயத்துடிப்புகளையே பிரதிபலிக்கின்றன. கற்பனை எண்ணங்களுக்குச் சொல் வடிவம் கொடுத்தவர்கள் அல்லர் ஆழ்வார்கள். தாம்பெற்ற இறையனுபவங்களையே செந்தமிழ்ச் சொற்களாகக் குழைத்துத் தந்துள்ளனர். இறையனுபவத்தால் அவர்கள் இதயத்தில் பெற்றிருந்த உணர்வுகளே பாசுரங்களாக வெளிப்பட்டன. அவ்வுணர்வுகளே வைணவ சமயத்தின் வளர்ச்சிக்கு அடித்தளமாக அமைந்தன.

'யான் பெற்ற இன்பம் பெறுக இவ்வையகம்' என்பது போன்று, தாங்கள் இறைவனிடம் பெற்ற அனுபவங்களைப் பிறரும் பெற வேண்டுமென்பதற்காகத் தங்கள் பாசுரங்களில் அதைப் பகிர்ந்தளித்துள்ளார்கள் என்றே கூறவேண்டும். எனவே, ஆழ்வார் என்ற சொல்லிற்கு இறைவனுபவங்களில் ஆழ்ந்து ஈடுபடுபவர் என்ற பொருளே பொருந்துவதாகும்.

ஆழ்வார்களும் அவர்கள் தோன்றிய காலமும்:

தேனார் தமிழில் திவ்வியப் பிரபந்தத்தை அருளிய ஆழ்வார்கள் பன்னிருவர் என்பதனை அவர்கள் அருளிய பாசுரங்களைக் கொண்டே அறிகிறோம். ஆனால் யார் எந்தக்காலத்தில் தோன்றினார் என்பதில் அறிஞரிடையே கருத்து வேறுபாடு காணப்படுகிறது. நம்

மாழ்வார் முதலிய எண்மரும் கலியுகத்தில் தோன்றியதாகவும், முதலாழ்வார் மூவரும் துவாபர யுகத்தில் தோன்றியதாகவும், முதலாழ்வார்கட்குப் பின்தோன்றிய திருமழிசையாழ்வார் 400 ஆண்டுகள் வாழ்ந்ததாகவும் 'குரு பரம்பரைகள்' கூறுகின்றது.

முதலாழ்வார் மூவரும் இயல்பான முறையில் தோன்றியவர் அல்லரென்றும், இறையருளால் மலர்களாகத் தோன்றிப் பின் மனித உருவெடுத்தனர் என்றும் 'குரு பரம்பரைகள்' கூறுகின்றது. மேற்கண்ட செய்திகள் முதலாழ்வார் மூவரும் முற்பட்ட தொகுதியினர் என்பதனையும், இறையருளால் அவர்கள் சிறந்து விளங்கினர் என்பதனையுமே உணர்த்தும். யுகங்களை இடைவெளியாக வைத்துக் கூறுவனவெல்லாம் மிகைப்படுத்திக் கூறப்பட்டனவே யன்றி வரலாற்று ஆய்விற்குப் பொருந்தக்கூடிய உண்மையல்ல அது.

'பொய்கையார் பூதத்தார் பேயார் புகழ்மழிசை
அய்ய னருண்மாறன் சேரலர்கோன் – துய்யபட்ட
நாதனன்பர் தாட்டூளி நற்பாண னற்கலியன்
ஈதிவர்தோற் றத்திடைவா மிங்கு'

என்ற ஸ்ரீ மணவாள மாமுனிகள் அருளிய உபதேசமாலையால் ஆழ்வார்களின் வரிசையை யுணரமுடிகிறது. முதலாழ்வார்களில் ஒருவரான பொய்கை யாழ்வாரையும், சங்க நூல்களில் ஒன்றான 'களவழி நாற்பது' என்ற நூலைப் பாடிய பொய்கையார் என்ற புலவரையும் ஒருவரே எனக் கூறி, சோழன் செங்கணான் வாழ்ந்த காலமே பொய்கையாழ்வார் காலம் எனக் குறிப்பிடுவோரும் உண்டு. இறையருளில் ஈடுபாடு கொண்டு திருவாய் மலர்ந்தருளிய பொய்கையாழ்வார் மனிதனைப் பாடியிருக்க முடியாது என்று கூறி மேற்கண்ட கருத்தினை மறுப்போரும் உண்டு.

வரலாற்று அடிப்படையில் நோக்குகின்ற பொழுது ஆழ்வார்கள் அனைவருமே சங்க காலத்திற்குப் பின்புதான் தோன்றியிருக்க வேண்டும் என்றே தெரிய வருகிறது. 'சரித்திர வறிஞரெல்லாம் கருதுமாறு ஆழ்வார்கள் கடைச்சங்க காலத்திற்குப்பின் வாழ்ந்தவர்களே யென்பது, சங்க நூல்களிலும் சாஸனங்களிலும் நன்கு பயின்றவர் யாவரும் எளிதில் அறியக் கூடியதென்பதில் ஐயமில்லை'[13]. என்ற கருத்தும் அவ்வுண்மையினை உறுதிப்படுத்தும்.

வைணவ ஆசாரியருள் தலைவர் நாதமுனிகள் ஆவார். அவரே நாலாயிரத்திவ்வியப் பிரபந்தத்தைத் தொகுத்து முறைப்படுத்தியவர்,

அவர் காலம் கி.பி. 823 என்பது வரலாற்றறிஞர் முடிபு. அவருக்குப் பின்னால் ஆழ்வார் எவரும் தோன்றியிருக்க முடியாது. எனவே, கடைச் சங்க காலத்திற்குப் பின்பும், நாதமுனிகள் காலத்திற்கு முன்பும் ஆழ்வார்கள் அனைவரும் தோன்றியிருக்க வேண்டும்.

பாடுதற்குக் கையாண்ட யாப்பினாலும், கருத்துக்களைக் கூறிய முறைகளினாலும் பிற ஆழ்வார்களினின்று முதலாழ்வார் மூவரும் வேறுபட்டே நிற்கின்றனர். 'ஏனை ஆழ்வார்கள் போல, பிற்கால வழக்குப் பெற்ற விருத்தம் முதலிய செய்யுள் விகாரத்தைக் கொள்ளாது, பழைமையாகிய வெண்பா வொன்றானே தம் இயற் பாத்திருவந்தாதிகளை இவர்கள் அருளிச் செய்திருத்தலும், ஏனையவர் வாக்கிற்போல பௌத்தம் சைனம் முதலிய சமயவாதம பற்றிய செய்திகளேனும், மத்மாச்சர்ய மேனும இவர்கள் வாக்கில் பயிலாமையும் இவர்களது பழைமைக்கு ஏற்ற சான்றாகும்'[14]. என்ற கருத்து ஓரளவே ஏற்புடையது. ஏனெனில், வெண்பா யாப்புப் பழைமையானதாக இருப்பினும், அந்தாதி பாடும்முறை பின்னர்த் தோன்றியதே.

முதலாழ்வார்களினும் சற்றுப் பிந்திய, ஆனல் சம காலத்தவ ராகக் கருதப்படுகிறார் திருமழிசையாழ்வார். மேற்கண்ட நான்கு ஆழ்வார்களது காலமும் கி. பி. 7-ஆம் நூற்றாண்டின் முற பகுதிக்குள் அடங்கும் என்பது வரலாற்று முடிபு. ஏனைய ஆழ்வார் களில் பெரும்பாலோரின் காலம் கி. பி. 8-ஆம் நூற்றாண்டே. நம்மாழ்வார் 9ஆம் நூற்றாண்டின் தொடக்கத்தில் தோன்றியவர். அவரைப் பற்றிப் பாடிய மதுரகவி யாழ்வாரும் அவர் காலத்தை யடுத்தே வாழ்ந்துள்ளார். இவ்வாறு கி.பி. 5ஆம் நூற்றாண்டு முதல் 9ஆம் நூற்றாண்டு வரையிலான காலத்தில் ஆழ்வார்கள் வாழ்ந் துள்ளனர்.

திவ்வியப் பிரபந்தம் பொதுமக்கள் இலக்கியமே!

இறைவன் புகழ் பேசும் புராணங்கள், பிரபந்தங்களெல்லாம் பொதுவாக, எல்லோர்க்கும் புரியும் நிலையில் அமைவதில்லை. வேதங்கள், ஆகமங்களின் சாரமாகவும், தத்துவ விளக்கமாகவுமே அந்நூல்கள் அமைந்திருக்கும். அதைப் படித்துப் புரிந்து கொள் வதற்கு நிரம்பிய புலமையும், அச்சமயத்தைப் பற்றிய தெளிந்த அறிவும் தேவைப்படும். ஆனல் திவ்வியப் பிரபந்தம் அந்நிலைகளி

னின்றும் மாறுபட்ட நூலாகும். எழுதப் படிக்கத் தெரிந்த எவரும் இந்நூலைப் படித்துச் சுவைத்து மகிழலாம். திருமாலின் அவதாரங்களைப் பற்றிய செய்திகளை மட்டும் தெரிந்திருந்தாலே போதும்; ஆழ்வார்கள் பெற்று மகிழ்ந்த இறையனுபவங்களை நாமும் துய்த்து மகிழலாம்.

'நம்மாழ்வாரைத் தவிர ஏனைய ஆழ்வார்களெல்லாம் தாங்கள் இறைவனுடன் பெற்ற அனுபவங்களையே தங்கள் பாசுரங்களின் மூலம் பிறருடன் பரிமாறிக் கொண்டுள்ளனர். நம்மாழ்வார், ஐயத்திற்கிடமில்லாத, நிரம்பிய அறிவினர் ஆவார். எனவே அவர் பாசுரங்களில் தத்துவ விளக்கங்களைக் காணமுடிகிறது. பிறரது இறையனுபவங்களையே திவ்வியப் பிரபந்தத்தில் காணமுடிவதால் அதைப் பொது மக்களின் இலக்கியம் என்றே கூறலாம்'[15]. என்ற கருத்து முற்றிலும் ஏற்புடையதே!

இறைவனை எல்லோராலும் அறிய முடியாது; அவனைக் காண்பதற்குக் கடுந்தவம், வேள்வி முதலியன இயற்றல் வேண்டும் என்றெல்லாம் முன்னர்க்கூறி வந்தமையால்தான் வைதிக மதங்களை மக்கள் புறக்கணித்து பௌத்தம், சமணம் ஆகிய மதங்களை நாடிச் சென்றனர். காலத்தின் தேவையையும் சூழலையும் நன்குணர்ந்த ஆழ்வார்கள், இறைவனிடம் நாம் காட்டும் அன்பின் மூலமாகவும், அவன் புகழினைப் பேசுவதன் மூலமாகவுமே அவன் திருவடியை அடைய முடியும் என்று உறுதியாக எடுத்துரைத்தனர். அப்படிச் செய்ததன் விளைவாக இறைவனுடன் தாங்கள் பெற்ற அனுபவங்களையும் கூறினர். செயலுடன் சேர்ந்த சொல்லாக அவர்கள் பாசுரங்கள் அமைந்திருந்ததால் எவரும் எளிதில் படித்துப் பின்பற்றக் கூடியதாகவும் அது திகழ்கிறது.

'பண்டைய நான்மறைகள், புராண இதிகாசங்கள் இவற்றுள் பொதிந்துள்ள அரிய கருத்துக்களின் சாரமாக, இறைவன் நமக்குத் தாயும் தந்தையும் ஏனைய உறவுமாவான்; நம்மை உய்விக்கும் பரிவுடையான்; அவனிடம் நாம் காட்டும் அன்பு ஒன்றே நம்மை அவன் திருவடிகளிற் சேர்க்கவல்லது என்று இவர்கள் ஒரு மிடறாக ஒலித்துள்ளனர். முதுவோர் வரைந்த நெறிப்படி கர்மஞான பக்திகளை இயக்க இயலாத இக்காலத்திற் பெருமானது புகழ்களை நவிலுதல் ஒன்றே அமையும் என்றுணர்த்தினர் இம்மேலோர்'[16],

மொழியின் வளர்ச்சிக்கேற்ப இலக்கண நூலார் மாற்றங்களை ஏற்று வரையறைப்படுத்துவது போன்று, முன்னோர் கூறிய நெறிப்படி கர்மஞான பக்திகள் இக்கால நடைமுறைக்கு ஏற்புடையதாகா வென்பதை யுணர்ந்து, இறைவன் புகழ் பேசும் எளிய முறையினை எடுத்துக் காட்டிய ஆழ்வார்களின் பாங்கு, பொதுமக்கள் இலக்கிய மாகத் தங்கள் படைப்பு ஆகவேண்டும் என்ற அவர்கள் உள்ளக் கிடக்கையினையே உணர்த்தும்.

திவ்வியப் பிரபந்தம் பலராலும் விரும்பப்படும் நிலையை அடைந்ததன் விளைவு, திருமாலின் பெருமையும், வைணவத்தின் அருமையும் பலராலும் விரும்பப்படும் நிலையினை அடைந்தன. அது ஆழ்வார்களது முயற்சிக்குக் கிடைத்த நல்வெற்றியேயாகும். கல்வி வல்லாரது ஆய்விற்குரிய நூலாக மட்டும் விளங்காமல் எல்லோரும் படித்துச் சுவைக்கும் நூலாகவும் இது திகழ வேண்டும் என்பதால் தான் இசைப் பாடல்களாகவே இதனை ஆக்கியுள்ளார்கள் ஆழ்வார்கள். சமய இலக்கியங்களில் வடசொல் கலந்திருப்பது சில போது தவிர்க்க இயலாத தொன்றாகிவிடக்கூடும். ஆனால் செந்தமிழ்ச் சொற்களைத் தேர்ந்து பயன்படுத்தியிருப்பது ஆழ்வார் களது தமிழ்ப் பற்றிற்கும் புலமைக்கும் சான்றாகும்.

அவதாரங்கள் பல எடுத்து, அற்புதங்கள் பல புரிந்தாலும் முழு முதற் கடவுள் திருமால் ஒருவரேயென்றும், அவனடியாராக விளங்கும் ஒருவர் எக்குலத்தோரேனும் வணங்குதற்குரியவரே யென்றும் திவ்வியப் பிரபந்தம் உணர்த்தும் உண்மை, 'ஒன்றே குலம்; ஒருவனே தேவன்' என்ற உணர்வினை மக்கட்கு ஊட்டவல்லதாகும். இறையுணர்வினை மக்கட்கு ஊட்டியதுடன் அமையாது, மனிதர் தவறிழைக்கத் தூண்டுகின்ற ஆசாபாசங்கள், பெண் உறவு போன்றவற்றின் இழிநிலையினையும் எடுத்துக் காட்டியுள்ளனர். இவ்வுடம்பும் புலன்களும் இறைவனது தொண்டிற்கெனவே அமைந்தது; அப்படி அது பயன்படவில்லையென்றால் எத்தகைய இழிவினை இவ்வுடம்பு அடையும் என்பதனையும் திவ்வியப் பிரபந்தம் நன்கு எடுத்துக் காட்டுகிறது.

பன்னிரு ஆழ்வார்களில் ஆண்டாளைத் தவிர ஏனையவர் அனைவரும் ஆடவர்களே. ஆனால் அவர்களே தங்களை இளம் பெண்ணாகவும், சிறுமியாகவும், குழந்தையாகவும் கற்பனை

செய்துகொண்டு பாடும் பாங்கு எண்ணி வியத்தற்குரியது. கற்போர் மனங்கவரக் கற்பனை செய்து பாடினாலும் பாடல்கள் அனைத்தும் அவர்களது அனுபவ வெளியீடுகளேயாகும்.

ஆழ்வார்களும் மனமும் :

இறைவன் பெருமைகளையும் அவன் திருவடியினை அடைதற்கு நாம் செய்தற்குரிய செயல்களினையும், திருவடியை அடையாதவர் படும் அல்லல்களையும் விரிவாக எடுத்துக் கூறிய ஆழ்வார்கள், இறையருளை நாம் பெறுதற்குத் துணை செய்யும் கருவியகா இருப்பது நம் மனமே என்பதனையும் ஆழ்ந்தறிந்துள்ளார்கள். நம்முடைய உயர்விற்கும் தாழ்விற்கும் காரணமாக விளங்குகின்ற மனமே நாம் இறைவன் திருவடியை அடைந்து சிறப்படைதற்கும், அருநரகில் வீழ்ந்து இடர்ப்படுதற்கும் காரணமாக இருப்பதை அவர்கள் நன்கு உணர்ந்துள்ளார்கள். எனவே பக்தி நெறியைப் பரப்புதற்கு மனித மனங்களைப்பற்றி நன்கு அறிதல் அவசியம் என்பதையுணர்ந்து அதன்படி செய்துள்ளார்கள்.

உடம்பின் தன்மைகளையும், அதைத் தாக்கும் நோய்களின் இயல்பு, போக்கும் முறை முதலியனவற்றையும் மருத்துவர்கள் நன்கு தெரிந்துள்ளார்கள். அதுபோன்று மனத்தின் தன்மைகளையும், அது கெடுவதற்குரிய சூழல்கள், திருந்துதற்குரிய வழிகள் முதலியனவற்றையும் நன்கு தெரிந்தவர்கள் பக்தி இலக்கியங்களைப் படைத்தவர்கள். இது, பிற இலக்கியப் படைப்பாளர்களிடம் காணமுடியாத தனித்தன்மையாகும். மனித மனங்களையுணர்ந்து, அம் மனங்களைப் பண்படுத்தித் தாம் எண்ணுவதை அம் மனங்கள் ஏற்கச் செய்யும் முறைகளில் தேர்ந்து அதன்மூலமே தம் மதக் கருத்துக்களை மக்கள் மத்தியில் பரப்பும் முயற்சியில் அவர்கள் ஈடுபட்டுள்ளார்கள். இந்நிலையினையே ஆழ்வார்களிடமும் காண்கிறோம்.

மனத்தின் தன்மைகள், அதன் பிற நிலைகளாகிய நெஞ்சம், உள்ளம், சிந்தை, சித்தம், அகம், இதயம் போன்றவைகளுடன் மனத்திற்குள்ள தொடர்புகள், அவை ஒவ்வொன்றின் இயல்புகள், ஆன்மா, உயிர், உடம்பு இவைகளுக்கிடையேயுள்ள தொடர்புகள், இறைவன் உறையும் கோயிலாக நம் மனங்களை ஆக்கும் முறை முதலியனவற்றையெல்லாம் தெள்ளிதின் உணர்ந்து தெளிவாக

உரைத்துள்ள திறத்தினை ஆழ்வார்களிடம் காண்கிறோம். அரிய உண்மைகளையும் எவரும் எளிதில் உணரும் வண்ணம் எளிய உவமைகள், உதாரணங்களின் மூலம் விளக்கியிருப்பது ஆழ்வார்கள் சிறப்பாகும். மனங்களின் உயர்வு தாழ்வுகளை நேரடியாக விளக்கியிருப்பதுடன், நன்மனத்தால் உயர்வு பெற்றோரையும் தீ மனத்தால் இழிவடைந்தோரையும் சான்றுகளாகக் காட்டி விளக்கியிருப்பது எல்லோர்க்கும் எளிதில் புரியக்கூடியதாகும்,

'யானையின் நெஞ்சிடர் தீர்த்தபிரான்'தான்[17].

'இரணியன் நெஞ்சை இரு பிளவாக முன்கீண்டான்'[18];

'வஞ்ச மேவிய நெஞ்சுடைப் பேய்ச்சி'[19]யின்உயிர் குடித்தான்.

எனவே அன்பால் நினைவோர் எவராக இருப்பினும் இறைவன் அருள்புரிவான்; வஞ்ச நெஞ்கினரையே அவன் வருத்துவான். விலங்கும்கூடத் திருமாலைத் தொழுது உய்வடையும்போது மனிதன் ஏன்அடைய முடியாது என்ற சிந்தனையை நம்முன் எழுப்பி, விடை காணும் முயற்சியில் நம்மை ஈடுபடுத்தியுள்ளார்கள் ஆழ்வார்கள். நினைக்கும் தன்மையுடைய மனமில்லாதது விலங்கு; அதுவே உயர்வடையும்போது'மனத்தைப் பெற்றுள்ள மனிதன் உறுதியாக இறையருள் பெற்றுப் பேரின்பம் துய்க்கலாம் என்ற நம்பிக்கை இங்கு ஊட்டப்படுகிறது.

'ஆன்மாக்கள் எண்ணற்றவை; ஆதியந்த மற்றவை; அழியாதவை;இறைவனைப்போல் ஒளியுருவானவை; இன்பமயமானவை; ஒளியாற் சிறந்த மணி தூசால் மாசுறுவதுபோல், ஆத்மா உடலுள் பொருந்தி ஒளி மழுங்கியுள்ளது; நமது வினைகட்கேற்ப இன்ப துன்பங்களை நுகர்வது; புலன்களை அடக்கி நாம் நன்னெறியில் நின்ருல், ஆத்மாவை நன்குணர்ந்து, இறைவனது பெரும் பதத்தைப் பெற இயலும். இறைவனது தொண்டிற்கெனவே வாய்ந்துள்ள மெய், வாய், கண், மூக்கு, செவிகளை வகுத்த விஷயத்திலே உய்ப்பது நமது கடன் என்று உபதேசித்துள்ளனர் ஆழ்வார்கள்'[20]. புலன்களை அடக்கி நன்னெறியில் நிற்பதற்கு மனம் இறைவனை நினைப்பதாக இருக்க வேண்டும் என்பது அவர்கள் முடிவு.

பிற தெய்வங்களின் உயர்வெல்லாம் தாழ்வடையுமாறு முழுமுதற் கடவுளாக விளங்குபவன் திருமால்; அவன் இவ்வுலகினர்க்கு

மட்டுமன்றித் தேவர்களுக்கும் கூடத் தலைவனாகத் திகழ்பவன். நம்முடைய மயக்கமெல்லாம் தீர்ந்து உண்மையை யுணர்தற்குத் தேவையான மதிநலத்தை அருளுபவன் அவனே! நமது துயரங் களைப் போக்கும் அவன் திருவடிகளை நம் மனம்தொழுது பயன் பெறட்டும்; மனத்தை நாம் பெற்றிருப்பதன் நோக்கம் அதுவே என்பது திவ்வியப் பிரபந்தம் உணர்த்தும் உண்மையாகும்.

'உயர்வற வுயர்நல முடையவன் எவனவன்;
மயர்வற மதிநல மருளினன் எவனவன்;
அயர்வறு மமரர்க ளதிபதி எவனவன்;
துயரறு சுடரடி தொழுதெழென் மனனே!' 21

என்பது நம்மாழ்வார் திருவாக்கு.

அடிக்குறிப்பு விளக்கம்:

1. திருக்குறள்-அறிவுடைமை.
2. ஆழ்வார்கள் காலநிலை-மு, இராகவையங்கார்-பக் : 2
3. தொல்-பொருள்-அகத்திணை. நூற்பா : 6
4. ஆழ்வார்கள் காலநிலை-பக் : 7
5. தொல்-பொருள்-அகத்திணை ; நூற்பா : 60
6 திருக்குறள் : 610
7. ,, 1103
8. ஆழ்வார்கள் காலநிலை-பக் : 17
9. Religion and Philosophy of Nalayiram-Dr. Subbu Reddiar - Page : 199
10. ,, Page : 198
11. ஆழ்வார்கள் கால நிலை-பக் : 22
12. Religion and philosophy of Nalayiram-Page -197
13. ஆழ்வார்கள் கால நிலை-பக் : 31
14. ,, பக் : 50
15. Religion and Philosophy of Nalayiram Page : 199
16. ஆழ்வார்கள் வரலாறு-முன்னுரை பக் : XIV-T.S. இராஜ கோபாலன்.

17. திருவாய் மொழி - 7-10-9
18. பெரியாழ்வார் திருமொழி-2-6-7
19. பெருமாள் திருமொழி-7-10
20. ஆழ்வார்கள் வரலாறு-முன்னுரை பக் : XVIII
21, திருவாய் மொழி-1-1-1

துணைசெய்த நூல்கள் :

1. ஆழ்வார்கள் காலநிலை - மு. இராகவையங்கார் - மணி வாசகர் நூலகம், சிதம்பரம்.
2. ஆழ்வார்கள் வரலாறு. ஸ்டார் பிரசும், 66, பெரிய தெரு, சென்னை-5.
3. Religion and Philosophy of Nalayiram-Dr. N. Subbu Reddiar, Sri Venkateswara Universiry, Tiruppati.
4. தொல்காப்பியம்–பொருளதிகாரம்
5. திருக்குறள்-பரிமேலழகர் உரை

நாலாயிரத் திவ்வியப் பிரபந்தத்தில் மனம்

முன்னுரை :

இந்து மதத்தின் ஒரு பிரிவாகிய வைணவத்தின் சிறப்பியல்பு களைச் சித்தரிக்கும் நூல்களில் தலையாயது என்று வைத்துப் போற் றப்படுவது நாலாயிரத்திவ்வியப் பிரபந்தம். அருட்செல்வர்களாகிய ஆழ்வார்கள் தாம் பெற்ற இறையனுபவங்களைப் பிறரும் துய்த்து வீடு பேறடைய வேண்டுமெனும் விழுமிய நோக்கோடு பாடப் பெற்ற பாசுரங்கள் அவை. பக்தி மணம்பரப்பும் அப்பாசுரங்கள் அருள்கனிந்த கனியாக, கனியின் சுவையாகக் கற்போர் நெஞ்சை இனிக்கவைக்கும் இயல்புடையன. பூங்காவினுள் நுழைவோர் மலர்களின் நறுமனத்தை நுகர்ந்து பெறும் இன் பத்தைப் போன்றே இப்பக்திப் பூங்காவில் நுழைவோரும் அருள் மணம் நுகர்ந்து பேரின்பம் பெறுவர்.

'அயர்வறும் அமரர்கள் அதிபதி'[1] யாகத்திகழும் திருமால் பெருமைகளை அப் பாசுரங்கள் பேசுகின்றன. நாராயணன் என்ற நாமத்தின் சிறப்பினைக்கூறும் இந்நூல், அவனது பல அவதாரங் களையும், அந்த அவதாரங்களில் அவன் நிகழ்த்திய அற்புதங்களை யும் சுவைபடச் சொல்லும் பான்மையது. இறைவன், அடியார் களுக்குத் தாயாகவும் தந்தையாகவும் காதலனாகவும் மழலை பேசும் குழந்தையாகவும் காட்சி தரும் நுட்பத்தை உணர்ந்து, உள்ளம் நெகிழ்ந்து ஆழ்வார்கள் பாடியிருக்கும் பாங்கு அவர்தம் புலமைச் சிறப்பிற்கும் இறைவனிடத்துக் கொண்டிருந்த ஈடுபாட் டிற்கும் அரிய சான்றுகளாகும்.

கற்பனைக் களஞ்சியமாக, கருத்துக்குவியலாகக் காட்சிதரும் இப்பிரபந்தம் தத்துவப் பூஞ்சோலையாகவும் திகழ்கிறது. இறைவன் ஆன்மா, உலகம், மனம் போன்ற பல்வேறு நிலைகளையும் ஆழ்வார்கள் ஆங்காங்குக்காட்டிச் சென்றுள்ள விதம் நினைந்து வியத்தற்குரியது. இறைவன் புகழ்பாடுவதோடு நின்றுவிடாமல் இறைவன் திருவடி நிழலை மனிதன் எவ்வாறு அடைவது என்பதையும், அதற்கு அவன் மனம் எப்படி அமையவேண்டும் என்பதையும் ஆழ்வார்கள் சிந்தித்துக் கூறியிருப்பதே இந்நூலின் சிறப்பாகும். 'மனம்' பற்றிய அவர்களது சிந்தனையைக் காண முற்படுவதே இக்கட்டுரையின் நோக்கம்.

ஆழ்வார்களும் மனமும் :

"நாமமது தமிழரெனக் கொண்டிங்கே வாழ்ந்திடுதல் நன்றோ?"[2] என்று பாரதியார் வினவியதைப் போன்று பெயரளவில் மட்டும் தமிழர்களாக வாழ்ந்தவர்கள் அல்லர் ஆழ்வார்கள். மனத்தாலும், நினைவாலும், செயலாலும் தூய்தமிழ் உணர்வோடு வாழ்ந்தவர்கள். அதனால், அவர்கள் பாடிய பாசுரங்களில் வீசுகின்ற தமிழ் மணத்தை அவர்கள் கூறுகின்ற கருத்துகளிலும் காண முடிகிறது.

மனம் என்ற சொல் தமிழ்ச்சொல்லே; அது 'மன்' என்ற அடிச் சொல்லிலிருந்து தோன்றியது. மனம் என்ற ஒன்று மனிதனுக்கு மட்டுமே வாய்க்கப் பெற்றது. மனத்தை உடையவன் மனிதன் மனிதப் பிறவியின் நிலைபேற்றிற்குக் காரணமாக இருப்பது மனமே. மனம் என்ற ஒன்று மட்டும் இல்லையென்றால் விலங்கிற்கும் மனிதனுக்கும் வேறுபாடு இருக்கமுடியாது. எனவேதான் ஐந்தறிவு வரை, வரையறையான விளக்கம் கூறிய தொல்காப்பியர் மனிதனுக்கு மட்டுமே உரிய ஆறாம் அறிவைக்குறிப்பிடும் போது,

'ஆறறி வதுவே அவற்றொடு மனனே' 3

என்று, ஆறாம் அறிவின் சிறப்பே மனத்தால் அமைகிறது என்று எடுத்துக் காட்டினார்.

தான் செய்த வினைகளின் பயனாக அடுத்த பிறவியில்தன்னைப் புழுவாகப் படைத்தாலும் பரவாயில்லை என்று கூறும் திருநாவுக்கரசர் உலகிலுள்ள புழுக்களுக்கு இல்லாத ஒரு ஆற்றலைத் தனக்குத் தருமாறு இறைவனிடம் வேண்டுகிறார். அது வேறொன்றுமில்லை;

இறைவன் திருவடி அவர் மனத்தே என்றும் வழுவாதிருப்பதற்கு வரம் வேண்டுமாம்.[4] புழுவாய்ப்படைத்தாலும் மனத்தையும் வைத்துப் படையென்று அவர் வேண்டுவதன் நோக்கம் மனம் இருந்தால், தான் இறைவனை எண்ணமுடியும்; அவன் திருவடியைச் சேர்வதற்கான முயற்சியில் ஈடுபட முடியும் என்பது கருதியே! அத்தகைய சிறப்பிற்குரியது மனம். இவ்வுணர்வுகளையெல்லாம் ஆழ்வார்கள் தம் பாசுரங்களில் பரக்கக் காண்கிறோம்.

நாம் அன்போடு இறைவனை நினைத்தால் நம் மனங்களையே கோயில்களாகக் கொண்டு இறைவன் உறைவான் என்பதையும், நம் மனங்களை விட்டுப் பிரியாது நிற்பதோடு நாம் வீடு பேறடையவும் அவன் அருள்புரிவான் என்பதையும்,

'நினைந்தவர் மனங் கொண்ட கோயில் 5
'மனத்துப் பிரியா தருள்புரிபவன்' 6

என்ற பிரபந்த வரிகள் வலியுறுத்துகின்றன

மனங்களைக் கோயில்களாகக் கொண்டு மட்டும்தானா இறைவன் உறைவான்? அம்மனமாகவும் அவனே ஆவதும் உண்டாம். அதுமட்டும்தானா? நாம் பேசுகின்ற வார்த்தையாகவும், செய்கின்ற செயல்களாகவும், ஏன்? நம்மிலும்கூட அவன் கலந்து நிற்பதுண்டாம். இவ்வுண்மையை,

'மனமும் வாசகமும் செய்கையும் யானு நீ தானே' 7

என்ற பாசுரவரி எடுத்துக்காட்டும். இறைவனைத்தம்மனமாகவே காணுமளவிற்கு மனத்தின் சிறப்பைக் கண்டறிந்தவர்கள் ஆழ்வார்கள்.

நம் வாயிலிருந்து வரக்கூடிய வார்த்தைகள். இனியனவாக அமைவதற்கும், நாம் செய்யக்கூடிய செயல்கள் நல்லனவாக அமைவதற்கும் மூலகாரணமாக இருப்பது நம்முடைய மனமே! அந்த மனத்தை இறைவன் எழுந்தருளக்கூடிய இடமாக ஆக்கிவிடும்போது எல்லாம் நல்லனவாக அமைந்துவிடும். தம் மனத்தில் இறைவன் இருப்பதை உணரக்கூடிய பக்குவம் அவர்கட்கு இருந்ததால்தான் தாம் பேசக்கூடிய பேச்சு, செய்யக்கூடிய செயல் அனைத்திலுமே இறைவனை அவர்களால் காணமுடிந்தது.

'மனமும் வாசகமும் செய்கையும்' 8

என்ற அளவோடு நிற்காமல் 'யானும் நீ' என்று கூறி

யிருப்பது சிந்தித்தற்குரியது. ஜீவாத்மாக்களாகிய நாமெல்லாம் பரமாத்மாவின் உறுப்புகளே! 'மனிதனின்ஆன்மா இறைவனின் பகுதியாகும். அனைத்து ஆன்மாக்களின் இயைந்த நிலை இறைவனாகும். இறைவனுக்கும் ஆன்மாவுக்கும் உள்ள உறவு உறுப்புகட்கும், உடலிற்கும் உள்ள உறவைப் போன்றது. இறைவனின் கூறுகளாக ஆன்மாக்கள் விளங்குகின்றன'[9] என்ற கவியரசர் தாகூரின் கருத்து இங்கு நினைத்தற்குரியது. இங்கு 'யானும்' என்று ஆழ்வார் குறிப்பிடுவது இறைவனின் பகுதியாகிய அவரது ஆன்மாவையேயாம். அவரது ஆன்மாவிலும் இறைவன் உள்ளமையை யுணர்ந்துதான் 'யானும் நீ தானே' என்று உறுதியோடு உரைக்கின்றார்.

நம் ஒவ்வொருவர் மனத்திலும் இறைவன் இருப்பது உண்மையே! பின்பு ஏன் அவனுக்குப் பிறவிடங்களில் கோயில் கட்டிக்கும்பிடவேண்டும்? அவன் புகழை ஏன் பாடவேண்டும் என்றெல்லாம் சந்தேகம் எழல் இயல்பே! பூமியினடியில் எங்கும் வியாபித்திருக்கும் தண்ணீரை நாம் உபயோகப்படுத்த வேண்டுமானால் ஒரு கிணறு வெட்டிக் கட்டவேண்டியதிருக்கிறது தண்ணீர் பூமியின் அடியில் எங்கும் நிறைந்திருந்தாலும் கிணற்றினாலேயே நமக்குத் தாகவிடாய் தீருகிறது. 'எலக்ட்ரான்' ஆகாய மெங்கும் வியாபித்திருந்தாலும், 'மின்சார நிலையம்' மூலமாகவே நாம் அதனை அனுபவிக்கமுடிகிறது. இவற்றைப்போல, கடவுள் எங்கும் நீக்கமற நிறைந்திருந்தாலும் ஆலயங்களில் சிறப்பாக எழுந்தருளி அருள் செய்கின்றார். ஆகையால் அவர் அருள்பெற ஆலயங்கள் இன்றியமையாததாகின்றன.

இறைவன் புகழை நாம்பேசுவதாலும், அவன் திருநாமங்களைப் புகழ்ந்து பாடுவதாலும் அவனுக்கு ஆகக் கூடிய தொன்று மில்லை அதனால் பயன்பெறுவது நாமே! எண்ணெய் வார்த்து நெருப்பை வளர்க்கின்றோம். அதனால் நெருப்பிற்கு விளையும் பயன் யாது? ஒன்றுமில்லை. நாமே அதனால் பயன் பெறுகின்றோம். அது போலவே இதுவுமென்க. 'வானோர்கள் இறைவன் புகழ் பாடுவதும் கூட அவர்கள் வாழ்வதற்காகவே' என்றல்லவா மணிவாசகப் பெருந்தகை கூறுகிறார். எனவே, நம் மனத்தில் இறைவன் எழுந்தருளியிருந்தாலுங்கூட நம்முடைய நினைவுகள் இறைவனைப்

பற்றியதாகவே இருத்தல் வேண்டும் என்ற உண்மையை ஆழ்வார்கள் நன்கு உணர்ந்துள்ளனர். அதனால்தான்,

'மணிமாடக்கோயில் வணங்கென் மனனே' 10

'நந்திபுர விண்ணகரம் நண்ணு மனமே 11

என்றெல்லாம் தங்கள்மனங்களுக்கு அவர்கள்கட்டளையிடுகின்றனர். திருமாலின் திருநாமங்களைத் துதியாமலும், அவன் பெருமைகளை எண்ணாமலும் வீணில்பொழுது போக்கி வேண்டாதனவற்றையெல்லாம் எண்ணி இடர்ப்படுவோர்களும் உண்டே! அவர்கட்கு அறிவுறுத்தும் பாங்கில்,

'மணிவண்ணனை எண்ணி நுந்தம் மனத்தேயிருத்தும் 12

என்று கூறுகின்றார் ஒரு ஆழ்வார். நம்முடைய மனத்தில் இறைவனைப் பற்றிய எண்ணங்களே வியாபித்திருக்குமென்றால் அங்கு தீயநினைவுகள் தோன்றுவதற்கு முடியாது அல்லவா! ஒளிவியாபித்திருக்கும் வீட்டில் இருளுக்கு இடமேது?

'இருள்சேர் இருவினையும சேரா; இறைவன்
பொருள்சேர் புகழ்புரிந்தார் மாட்டு' 13

என்பார் திருவள்ளுவர். உலகில் நாம் அடையத் துடிக்கும் புகழெல்லாம் பொருளற்றவை; தற்காலிகமானவை. ஆனால், இறைவனால் நாம் அடையும் புகழே பொருளுடையவை; நிரந்தரத்தன்மை வாய்ந்தவை. ஏனெனில் இவ்வுலகில் நிரந்தரப் புகழ்வடிவாக இருப்பவன் இறைவன் ஒருவனே! இவ்வுண்மையினை யுணர்ந்த ஆழ்வார் ஒருவர்,

'என்றும் என் மனத்தகலாதிருக்கும் புகழ்' 14

என்று திருமாலைக் குறிப்பிடுகின்றார். இறைவன் புகழ்வடிவாக என்றும் அவர் மனத்தில நிலைத்து நின்ற பெற்றியை யுணர்ந்து அவர் கூறும் பாங்கு, இறைவன் அருள்பெறத் துடிப்பதே உண்மைப புகழை அடையும் வழி என்பதனையும்அடையும் அந்தப்புகழ் என்றும் நிலைத்து நிற்குமாறு நம் மனங்களை மாண்புடன் வைத்திருத்தல் வேண்டும் என்பதனையும் வலியுறுத்துவதை யுணரலாம். சிலர் சில காலம் சிறந்த முறையில் வாழ்ந்து பின்னர் நிலைமாறி விடுவதுமுண்டே! அந்நிலை கூடாது. என்றும் நம் மனம் மாசற்றதாக விளங்க வேண்டும் அப்போதுதான் அம்மனத்தை விட்டு அகலாது இறைவனும் நின்று அருள் பாலிப்பான்.

அன்னையென்பவள் அன்பின் வடிவம். இறைவன் கருணைக்கு அவளைத்தான் உவமை சொல்ல முடியும் 'பால் நினைந்து ஊட்டும்' பாங்கு, பெற்றவளைத்தவிர பிறசெவிலித்தாய்க்கு இருக்கமுடியாது. மனமாசற்ற அன்னையின் வடிவில் கொடிய அரக்கியாகிய பூதனை என்பவள் தோன்றி இறைக்குழந்தைக்குப் பால்நினைந்தூட்ட முனைகிறாள். ஆனால் அவள் ஊட்ட நினைத்தது அமுதனைய பால் அல்ல; ஆலகால விடம். நச்சுமரத்தில் நச்சுக்கனிகள்தானே பழுக்கும்? அவள் அம்முயற்சியில் ஈடுபடக்காரணம், அவள் மனத்தி லிருந்த வஞ்சக நினைவுகளே என்பதை யுணர்ந்த ஆழ்வார்,

'மனமேவு வஞ்சனையால் வந்த பேய்ச்சி' 15

என்று குறிப்பிடுகிறார். நாம் செய்யும் செயல்கள் உயர்ந்தனவாக இருக்க வேண்டுமென்றால் நம் மனத்திலுள்ள நினைவுகளும் உயர்ந்தனவாக இருத்தல் வேண்டும் என்ற உண்மை இங்கு பெறப் படுகிறது.

நம்மனத்தில் பொய்மைகளுக்கோ, வஞ்சகங்களுக்கோ சிறிதும் இடம் தரலாகாது. மனத்தில் தோன்றும் நினைவுகள் எல்லாம் உண்மையானவைகளாகவே இருத்தல் வேண்டும். அப்படிப்பட்ட மனத்தால் இறைவனை போற்றித் துதிக்கும் போதுதான் அவனருள் கிட்டும் என்ற நுட்பத்தை,

'மெய்ம்மை மனத்துவைத்து ஏத்த' ...16

என்று குறிப்பிடுகிறதுஆழ்வார் பாசுரவரி. மனத்தில் ஆயிரம் பொய் மைகளையும் ஆசைகளையும் சுமந்துகொண்டு, பிறர் மெச்சச் செய்யும் பூசனையெல்லாம் பயனற்றது என்ற எச்சரிக்கையை என்றோ கொடுத்துவிட்டது திவ்வியப் பிரபந்தம்.

பிறவிகளுள் உயர்ந்ததும் சிறந்ததும் மானிடப் பிறவியே! மானிடனாய்ப் பிறப்பதனையே அரிது என்று கூறினார் ஔவை மூதாட்டி. காரணம், பிற உயிரினங்களுக்கில்லாத 'மனம்' என்ற தனிச் சொத்து மானிடப் பிறவிக்கே உரியது. அந்த மனம் நமக் கிருப்பதால்தான் நன்மை தீமைகளை அறிந்து நடக்கின்றோம். மனத்தை மாசற்றதாக்கி, அதை இறைவன் எழுந்தருளும் ஆலய மாக்கி, அவனருள் பெற்று இறுதியில் பிறவிப் பயனையும் பெறு கிறோம். மாடியில் ஏறிச்செல்வதற்கு அமைக்கப்பட்ட படிக்கட்டு கள் போன்றனவே நம் மனம். அம் மனத்தின் துணையால்தான்

நாம் உயர்வடைய வேண்டும். ஆனால், உயரச் செல்வதற்காக் அமைக்கப்பட்ட படிக்கட்டுகளில் ஒழுங்காகப் பார்த்து ஏறாவிட்டால் தடுமாறி வீழ்ந்து, தம்முயிர்க்கு இறுதியினைத் தேடிக்கொள்பவர் களும் உண்டே! அது போலத்தான் தீய மனத்தால் விளையும் தீங்கு களும். எனவேதான், மனமுடையதால் மனிதப் பிறவி அரியது என்று கூறியதற்கு மாறாக, துன்பங்களுக்குக் காரணமாக விருக்கின்ற மனத்துடன் பிறந்துள்ள, அழுக்கு நிறைந்த மானிடசாதி என்று வேதனையுடன் குறிப்பிடுகின்றார் ஓர் ஆழ்வார்.

சமைத்து சுவைத்து உண்டு மகிழட்டும் என்று எண்ணித் தரப் பட்ட நெருப்பைக் கொண்டு ஒருவன் வீட்டையே எரிப்பான் என்றால் அவனிடம் நெருப்பைத் தந்ததே தவறல்லவா? அதுபோலத்தான், நலம்பெற வேண்டி நாம் பெற்ற மனந்தால் தீமைகளை விளை வித்து விலங்கினும் கிழான நிலையினை அடைவதும்! அப்படிப்பட்ட இழிந்த தன்மையுடையது இந்த மானிட சாதி என்பதனை,

'மனப்பரிப் போடழுக்கு மானிடசாதியிற்றான் பிறந்து'...... 17

என்று நொந்து குறிப்பிடுகிறார் ஆழ்வார். 'அழுக்கு மானிடசாதி' என்று அவர் குறிப்பிடுவது, 'மனப்பரிப்பு' உடையோர் நிலை கண்டு வருந்தித் தானேயன்றி பொதுநிலையில் அல்ல என்பதனையும் நாம் உணரவேண்டும்.

யானையை, அசைய விடாமல் சங்கிலியால் பிணைத்துக் கட்டிப் போட்டாலுங்கூட அதன் துதிக்கை அசைந்து கொண்டுதான் இருக்கும். அதுபோன்று எவ்வளவுதான் நாம் எச்சரிக்கையாக இருந் தாலும் நம்மையும் மீறித் தப்பிஓட முயலும் தன்மையுடையது நம்மனம். துன்பக் காலத்தில் கைவிட்டு ஓடும் மனிதர்களைப் போன்றது சிலரது மனங்கள். அந்நிலை தமக்கும் நேர்ந்து விடக்கூடாது என்பதனை முன்னெச்சரிக்கையாக,

'வாழி மனமே! கைவிடேல்' 18

என்று தம் மனத்தை வேண்டுகிறார் ஆழ்வார் ஒருவர்.

பக்திப் பாசுரங்களைப் பாடி இறையுணர்வை மக்கள் மனங் களில் விதைப்பதனையே முழுநோக்கமாகக் கொண்டிருந்தாலும், மனித மனங்களின் பல்வேறு இயல்புகளையும் நன்கு அறிந்திருந் தனர் ஆழ்வார்கள் என்பது தேற்றம். நிலங்களின் தன்மைகளை

யுணர்ந்த உழவர்களைப் போன்று காட்சியளிக்கின்றார்கள் மனங்களின் தன்மைகளை யுணர்ந்த ஆழ்வார்கள்.

மனத்தின் தன்மைகள் உணர்த்தும் இடைச்சொற்கள்:

மூவாயிரத்து எழுநூற்றி ஃ மூபத்தாறு பாசுரங்களைக்கொண்ட இந்நூலில் இருநூற்று முப்பத்தாறு இடங்களில் மட்டுமே 'மனம்' என்ற சொல் பயன்படுத்தப்பட்டுள்ளது. ஆனால் இதே நூலில் 'நெஞ்சம்' என்ற சொல் முந்நூற்றி எழுபத்தேழு இடங்களில் பயன் படுத்தப்பட்டுள்ளது. 'உள்ளம்', 'சிந்தை' ஆகிய சொற்கள் முறையே நூற்றி மூன்று, எழுபத்து நான்கு இடங்களில் மட்டுமே பயன்படுத்தப்பட்டுள்ளன.

நெஞ்சம், உள்ளம், சிந்தை போன்ற சொற்களும் மனத்தின் வெவ்வேறு தன்மைகளை உணர்த்துவனவே. அறிகின்ற தன்மையினை (Knowing) நெஞ்சமும், செயல்படும் (Doing) தன்மையினை உள்ளமும் சிந்திக்கும் தன்மையினைச் (Thinking) சிந்தையும் பெற்றனவாம்.. இவைகளுக்கெல்லாம் முதல் நிலையாகவும், முழு நிலையாகவும் உள்ளதுவே மனம், அது உணர்ச்சிநிலை (Feeling) யுடையது: நன்மைக்கும் தீமைக்கும் காரணமாய் விளங்குவது. அது தீயமனமாக இருக்கும்போது இருட்குகையாகவும் நன்மனமாக மாறும்போது இறைவன் உறையும் கோயிலாகவும் மாறுகிறது.

நாலாயிரத் திவ்வியப் பிரபந்தத்தில் இறைவனை 'அறகன்ற. ஆர்வம்தான் அதிகமாகக்காணப்படுவதால் நெஞ்சம்என்ற சொல்லும அதிகமாகக் காணப்படுகிறது. மேலும், விளித்துப் பேசும் பாங்கு நெஞ்சை முன்னிலைப் படுத்தும்போதுதான் பெரும்பாலும் நிகழும்' இறைவனைப் பல நிலைகளில் உருவகம் செய்து விளித்துப் பேசியுள்ள தன்மைகளையே நூலில் பல இடங்களிலும் காணமுடிகிறது.

செயல்பாட்டிற்கோ, சிந்தனைக்கோ அதிக வாய்ப்பு பக்திப் பாசுரங்களில் இருக்க வாய்ப்பில்லை யாதலால் 'உள்ளம்' 'சிந்தை' போன்ற சொற்களும் குறைந்த அளவிலேயே பயன்படுத்தப் பட்டுள்ளன.

இனி, மனம் என்ற சொல்லின் தன்மைகளை விளக்க எத்தகைய அடைச்சொற்களைக் கையாண்டுள்ளனர் என்பதனைக் கிழே காண்போம்.

1. பரவு மனம் 9

2. அறந்திகழு மனம் 20
3. மறந்திகழு மனம் 21
4. தொடக்கறா மனம் 22
5. மருவிய மனம் 23
6. கோடிய மனம் 24
7. வலங்கொள் மனம் 25
8. தீ மனம் 26
9. மாசறு மனம் 27
10. கள்ள மனம் 28
11. துளக்கமில் மனம் 29
12. பற்றா மனம் 30
13. ஓர்ந்த மனம் 31
14. கதவு மனம் 32
15. அறிவில் சிறுமனம் 33
16. தூயமனம் 34
17. கறுத்த மனம் 35
18. மையலுற்ற மனம் 36
19. தாய் மனம் 37
20. கலவர் மனம் 38
21. நில்லா மனம் 39
22. நண்ணும் மனம் 40

மேற்கண்ட அடைச்சொற்களிலிருந்து மனத்தின் நல்லியல்புகள் தீய இயல்புகள் ஆகிய இரண்டுமே தெரிய வருவதை யுணர்கிறோம்.

நல்லியல்புகள் :

மனத்தினுடைய நல்லியல்பு இறைவனை எண்ணி அவன் சீர் பரவுவதே. உண்மையான ஒரு பக்தர் மன நிலை அப்படித்தான் இருக்கும் என்பதனை,

'பரவு மனமுடைப் பக்தர்' 41

என்று பேசுகிறது திவ்வியப் பிரபந்தம். இறைவனிடத்துப் பக்தி செலுத்தும் மெய்யடியார்கட்கு இறைவனருள் வேண்டுதலைவிட இன்பம் அளிக்கக்கூடிய செயல் வேறேதும் இருக்கமுடியாது. எனவே 'பரவுதல்' என்பது மனத்தின் சிறந்த தன்மையாக வைத்துப் போற்றுதற்குரியது.

நறுமணம் கமழ்வதனால்தான் மல்லிகை, முல்லை போன்ற மலர்களை மாதர்கள் விரும்பிச்சூடி மகிழ்கிறார்கள். காண்பதற்குக் கவர்ச்சியாக இருந்தாலும் வெறுக்கத்தக்க மணமுடைய பொருட்களை எவரும் விரும்புவதில்லை. அதுபோல ஒரு மனத்தின் சிறப்பே அதிலிருக்கும் அற உணர்வுகளைப் பொறுத்துத்தான் அமைகிறது. அறவுணர்வுடையோரால்தான் இறைவனை அடையமுடியும் என்ற உண்மையை,

'அறந்திகழும் மனத்தவர் தம் கதி' 42

என்று குறிப்பிடுகிறது திவ்வியப் பிரபந்தம். மனத்தில் அறமில்லாதவர்கள், கதியை இழந்தவர்களே என்ற குறிப்பும் இதிலுண்டு.

'தொடக்கறா திருத்தலும் மனத்தின் சிறந்த தன்மையேயாம். அத்தன்மை எல்லோர்க்கும் எளிதில் அமைந்துவிடுவதில்லை. இறைவன்மீது காதலாகிக் கசிந்து கண்ணீர்சிந்துவோர்கட்கு மட்டுமே அத்தன்மை வாய்க்கப்பெறும்.

'சோர்விலாத காதலால் தொடக்கறா மனத்தராய்' 43

என்று அந்நிலையைத் தெளிவுபடுத்துகிறது திவ்வியப் பிரபந்தம்,

நாம் எண்ணியது ஈடேற வேண்டுமென்றால் நம் மனம் வலிமையுடையதாய்த் திகழவேண்டும். மனவலிமையற்றவர்களிடம் எவ்வளவுதான் உயர்ந்த எண்ணங்கள் இருந்தாலும் அவைகள் நடைமுறை வாழ்வில் பயன் தந்து நலம்விளைவிப்பதில்லை.

'எண்ணிய எண்ணியாங் கெய்துப; எண்ணியார்
திண்ணிய ராகப் பெறின்' [44] என்ற திருக்குறளும்

மனவலிமையினையே வலியுறுத்துகிறது. இந்நிலையில் வேறொன்றினையும் நாம் சிந்திக்கவேண்டும். நல்லது செய்யத் துணைநிற்கும் அதே மனவலிமை தீய செயல்களைத் திறப்படச்செய்யவும் துணைநிற்பதுண்டு. எனவே, 'வலங்கொள்மனம்' என்ற சொற்றொடர் பெரும்பாலும் நல்ல தன்மையினை யுணர்த்துவதாகவே கொள்ளலாம்.

மனத்தில் மாசில்லாதிருக்கும் நிலையினைத்தான் சிறந்த அறச்செயல் புரியும் நிலையுடன் இணைத்துப் பலரும் பேசியுள்ளனர். எனவே 'மாசறுமனம்' என்பது அறவுணர்வுடைய சிறந்த மனம் என்பதையே குறிக்கும்.

'ஓர்தல்' என்பது உண்மை நிலையுணரும் தன்மை. ஆராய்ந்து முடிவுகாணும் நிலை அது. பண்பட்ட, சிறந்த மனத்தின் தன்மையினையே அச்சொல் உணர்த்தும், உண்மை நிலை யுணர்தலோடு. நம்மைத்துன்பச் சேற்றில் தள்ள முற்படும் ஐம்புலன்களையும் அடக்கி வைக்கும் ஆற்றலும், ஆராய்ந்து முடிவுகாணும் சிறப்பும் கொண்ட மனநிலையினையே 'ஓர்ந்தமனம்' என்ற சொல் உணர்த்தும்.

'ஓர்ந்த மனத்தராய் ஐந்தடக்கி ஆராய்ந்து'[45] என்று குறிப்பிடுகிறது திவ்வியப் பிரபந்தம். ஐம்புலன்களை அடக்கும் ஆற்றலுடையோரால்தான் விருப்பு வெறுப்பற்ற ஆராய்ச்சியில் ஈடுபடமுடியும் என்ற நுட்பமும் இங்கு உணரக்கிடக்கிறது.

தீய எண்ணங்கள் ஏதுமற்ற தன்மையினைத்தான் தூய மனம் என்ற சொல் உணர்த்துகிறது. நல்ல மனத்தின் தன்மைகளைப் பல அடைச் சொற்களால் விளக்கியதுபோன்று ஓர் உறவைக்குறிக்கும் சொல்லைக் கொண்டும் மனத்தின் உயர்வைப் புலப்படுத்துகிறது திவ்வியப் பிரபந்தம். அதுவே 'தாய்மனம்' என்ற சொற்றொடர். இவ்விடத்தில் தாய் என்றாலே அன்பு என்ற பொருட்சிறப்பை யுணர்கிறோம். பிற உறவுப் பெயர்கட்கு இல்லாத சிறப்பு தாய்க்கு உண்டு என்பதனையே இது எடுத்துக்காட்டும்.

'தாய்மனத்திரங்கி யருளினைக்கொடுக்கும்'[46] என்பது பாசுரவரி. மனம் அன்பால் சிறந்து விளங்குவது அதன் உயர்வினையே யுணர்த்தும்.

'நண்ணுதல்', 'மருவுதல்' போன்ற சொற்களும் நல்ல மனத்தின் தன்மைகளையேயுணர்த்தும். 'கதவுமனம்' என்ற உவமைத் தொடரும் பொருட்சிறப் புடையதேயாம். கதவுகள் அடைக்கப்பட்டிருக்கும்போது அறையினுள்ளே உள்ளபொருட்கள் பாதுகாப்பாக இருக்கும். கதவுகள் திறந்து கிடந்தால் கண்டவரெல்லாம் உட்புகுவர்; களவு போகவாய்ப்புண்டு. மனமும் அப்படித்தான். அது முறைப்படி பயன் படுத்தப்பட்டால் அதனால் நமக்குப் பாதுகாப்புக்கிடைக்கும். இல்லாவிட்டால் நம்முடைய அறிவையும் பாழ்படுத்தித் தீராப் பழிகளைச் சேர்த்துவிடும். கதவுபோடுவது வீட்டின் காவலுக்கே. எனவே, மனமும் நமக்குக் காவலாய்

அமைந்து நலம் பயக்கும் என்ற குறிப்பினையே 'கதவுமனம்' என்ற சொல் உணர்த்துகிறது.

தீய இயல்புகள் :

நல்ல மனத்தில் தோன்றுகின்ற நல்லியல்புகளைப் போலவே தீய மனங்களில் தீய தன்மைகள் தோன்றுகின்றன, எப்படிப்பட்ட தீய தன்மைகள் என்பதனையும், அவைகள் தோன்றக்காரணம் என்ன என்பதனையும் தெளிந்து தேர்ந்து கொண்டு விட்டால் நம் மனத்தில் அவைகள் அரும்பாது எச்சரிக்கையாய் இருக்க முடியும்.

'அறந்திகழும்' நன்மனத்தின் இயல்பைக் குறிப்பிட்ட திவ்வியப் பிரபந்தம் 'மறந்திகழும்' வஞ்சகமனத்தையும் குறிப்பிடுகிறது. 'மறம்' என்ற சொல் 'வீரம் என்ற பொருளில் இங்கு பயன் படுத்தப் படவில்லை. இரக்கமற்றவன் தன்மையினையே அச்சொல் உணர்த்து கிறது. இரங்கும் தன்மை மனத்தின் சிறப்பைக்குறிக்கும். இரக்க மற்றவன் தன்மை, மனத்தின் இழிவினையே குறிக்கும். அப்படிப் பட்ட மனத்தில் வஞ்சக எண்ணங்கள் எழுவது இயல்புதானே! எனவேதான்'

'மறந்திகழும் மனம் ஒழித்து வஞ்சம்மாற்றி' 47

என்று குறிப்பிடுகிறார் ஆழ்வார். இரக்கமற்ற தன்மையைப் போக்கி, வஞ்சக நினைவுகளையும் மாற்றினால் அம்மனம் நன்மன மாக மாறும்.

நன் மனம் நேரியதாக இருக்கும். ஆனால் தீயமனம் அதன் நேர்மைத் தன்மையில் வளைந்துதானே காணப்படும்! அந்நிலை யினையே, 'கோடியமனம்' என்று குறிப்பிடுகிறார். நேரிய மன மாகத் திகழும்போது அம்மனம் நற்செயல்களைப்புரியும். ஆனால் கோடிய மனம்?.........

'கோடிய மனத்தால் சினத்தொழில் புரிந்து' 48

என்று குறிப்பிடுகிறது திவ்வியப் பிரபந்தம். மனிதர்கள் செய்கின்ற பல பாவச்செயல்களுக்கு மூலகாரணமாக விருப்பதுசினமே! சின மானது அவ்வியல்பு உடையோரைக் கெடுப்பதுடன் அவரைச்சேர்ந் தோரையும் கெடுக்கும் தன்மை வாய்ந்தது என்ற உண்மை யினையே' 'சினமென்னும் சேர்ந்தாரைக் கொல்லி' என்று திருக்குறள் உணர்த்துகிறது. மனம் சோடும் நிலை ஏற்படும்போது

சினத்தை ஒரு தொழிலாகவே அது புரியத் தொடங்குகிறது. அதன் விளைவால் சங்கிலித் தொடர்போலப் பல பாவச் செயல்களைப் புரியும் நிலையும் உருவாகிறது.

பொதுவாக நோக்குமிடத்துத் தீயினால் நன்மையும் உண்டு; தீமையும் உண்டு. ஆனால், 'தீமனம்' என்று தீயுடன் மனத்தை உவமிக்கும்போது மனத்தின் தீய தன்மைகள் மட்டுமே எடுத்துக் காட்டப்படுகிறது.

'தீ மனத்தான் கஞ்சனது வஞ்சனை' .. 49

தீ மனத்தரக்கர் திறலழித்தவனே' ...50

என்றெல்லாம் ஆழ்வார்கள் எடுத்துரைக்கும் இடங்களில் 'வஞ்ச னைத் தன்மை' அரக்கர்களது 'கொடிய தன்மை' ஆகியன வற்றையே 'தீ' என்ற உவமையின் மூலம் உணர்த்தியுள்ளனர் என்பது புலப்படும்.

'கள்ளம்' நிறைந்திருத்தல் மனத்தின் இழிநிலையினையே யுணர்த்தும். 'கறுமை' என்பது வஞ்சகத்தினையே குறிக்கும், 'கறுத்தமன' மென்பது இழிந்த மனம் என்ற பொரு ளைத் தரும். தூய நன்மனத்தை 'வெண்மை' நிறத்துடன் ஒப்பிட்டுச் சொல்வர். திருமால் பள்ளிகொண்டிருக்கும் பாற் கடலின் நிறமும் வெண்மையே. அது தூய்மையானது அப்படிப் பட்ட வெள்ளை மனங்களில்தான் இறைவன் எழுந்தருளுவான் என்ற குறிப்பினையே அவன் பாற்கடலில் பள்ளிகொண்டிருக்கும் உண்மை உணர்த்துகிறது. திருமாலடியார்களின் மனமும் வெண்மையாகவல்லவா திகழ வேண்டும்! ஆனால் 'கறுத்த மனம்' அதற்கு நேர்மாறானதல்லவா? எனவேதான்,

'கறுத்த மனமொன்றும் வேண்டா' ...51

என்று அத்தகைய மனத்தை வெறுக்கின்ற நிலையைக் காண்கின்றோம்.

மனத்தின் இயல்பு, ஏதேனும் ஒன்றைப்பற்றி நிற்பதே எந்நிலையி லும் இது தனித்து நிற்கமாட்டாது. நல்லனவற்றைப் பற்றும்போது நலம் விளையும்; தீயனவற்றைப் பற்றும்போது துயர் விளையும். இது மனத்தின் பொதுவான தன்மை. ஆனால் சில மனங்கள் எந்த ஒன்றிலுமே நிலைத்து நிற்காது அங்குமிங்கும் அலைமோதிக் கொண்டிருக்கும். அத்தகைய மனங்களால் விளைவனவெல்லாம்

தீமைகளாகத்தான் இருக்கும். அப்படிப்பட்ட மனத்தின் இழி நிலையினை,

'தம்மையே பற்றா மனம்' 52

'நில்லா மனமும் நில்லா எமக்கது தன்னாலே' 53

என்ற பாசுர வரிகள் நன்கெடுத்துக் காட்டுகின்றன.

மனத்தின் சிறப்பு, அது பெறும் அறிவையும் பொறுத்தே அமைகிறது. அறிவால் சிறப்படையாத மனம்தான் தீய செயல்களைப் புரியத் துடிக்கும். அம் மனத்தின் சிறுமையினைக் குறிக்கும் விதத்தில், 'அறிவில் சிறுமனம்' என்று மனத்திற்குச் 'சிறு' என்ற அடைச் சொல்லையும் சேர்த்துக் குறிப்பிடுகிறார்' 'மையலுறுதலும் மனத்தின் தீய தன்மையினையே யுணர்த்தும். எது உண்மை, எது பொய்யென்று உணரும் திறமின்றி மயங்கி நிற்கும் மனத்தினால் பெரும்பாலும் துயர்கள்தான் உருவாகும்.

மேற்கண்ட இருவிதத் தன்மைகளே யன்றிச் சில பொதுத் தன்மைகளும் மனத்திற்கு இருப்பதை அப்பாசுரங்கள் காட்டுகின்றன. கீழ்க்கண்ட சான்றுகளைக் கொண்டு அவைகளை நாம் உணரலாம்.

'மனமுருகி மலர்க்கண்கள் பனிப்ப'—உருகுதல் 54

'வேறொருவரோடென் மனம் பற்றாது' — பற்றுதல், பற்றாமை 55

'மனத்தினாற் சிந்திக்க'—சிந்தித்தல் 56

'வண்ணம் திரியும் மனங்குழையும்'—குழைதல் 57

'மனத்தினால் நினைக்கலாமே'—நினைதல் 58

'வாடினேன் வாடிவருந்தினேன் மனத்தால் - வாடுதல்...59

'தாய் மனம் நின்றிரங்க'—இரங்குதல் 60

'கண்டவர் தம் மனம்மகிழ'—மகிழ்தல் 61

'மனமாய்ப் பதைக்கின்ற மாதின் திறத்து பதைத்தல்...62

'மனங்களிப்ப வந்தியங்கும்—களித்தல் 63

'துயரறு சுடரடி தொழுதெழென் மனனே'—தொழுதல் ...64

மனம் உணர்ச்சி மயமானது என்பதை முன்னர்க் கூறினோம். அதனால்தான் அது உருகுதல், குழைதல், பதைத்தல் போன்ற தன்மைகளைப் பெற்றுள்ளது. இது மனத்தின் நல்லியல்பினையும்

குறிப்பதாகக் கொள்ளலாம். பிறர் துன்பம் கண்டு உருகுவதும், அன்பால் குழைவதும், துயரில் தவிப்போர் நிலைகண்டு பதைப் பதும் நன்மனத்தின் தன்மைகளேயாம். அது போலவேதான் வாடுதல், இரங்கல் போன்ற தன்மைகளும். நல்லனவற்றைக் கண்டு மகிழ்வதும், அம்மகிழ்ச்சி மேலீட்டால் மனங்களிப்பதும் நன்மனத் தின் இயல்புகளே !

மனத்தின் தனித் தன்மைகள் சிலவற்றையும் நாம் இங்கே காணமுடிகிறது. 'பற்றுதல்' என்பது மனத்தின் தன்மைகளில் ஒன்று. எதனையுமே உடனே பற்றிக் கொள்ளும் இயல்பு அதற்கு உண்டு. நல்லனவற்றை மட்டுமே பற்றிக் கொள்ளும் விதத்தில் மனத்திற்குப் பயிற்சியளித்து வந்தால் அது நம்மை ஈடேற்றும். இல்லையேல் துன்ப இருளில் நம்மைச் சிக்கித் தவிக்கச் செய்யும்.

'வேறொருவரோடு என் மனம் பற்றாது' என்று எதிர் மறையாகக் கூறுவதன் மூலம் தனது மனம் திருமாலின் திருவடி களையே பற்றி நிற்கும் என்று ஆழ்வார் அருளியது அவரது நன்மனத்துக்கு நற்சான்றாம்.

அதுபோவே சிந்திப்பது, நினைப்பது என்பனவும் மனத்தின் தனித் தன்மைகளாம். சிந்திப்பது சிந்தையின் பாற்பட்டதாகக் கருதினாலும் அது மனத்திற்கும் பொருந்திவரும். பெரும்பாலும் சிந்தை என்ற சொல் மனம் என்ற பொருள் படுமாறுதான் இலக் கியங்களில் பயன் படுத்தப்பட்டுள்ளது. ஆனால் மனத்திற்குரிய எல்லா நிலைகளையும் சிந்தை உணர்த்தாது; சிந்தித்தல் என்ற அளவோடு அதன் தன்மை முடிந்துவிடும். சிந்திக்கும் விதத்தில் வேண்டுமானால் வேறுபாடுகள் இருக்கலாம்.

நினைப்பது என்பது மனத்திற்கே உரிய தன்மையாகும். மனத்தின் இத்தன்மையினைப் பக்தி இலக்கியங்கள் பலவும் உணர்ந்து கையாண்டிருப்பது சிந்தித்தற்குரியது. மனத்தின் மாண்பே இதில்தான் உள்ளது. இறைவன் பெருமைகளை நினைப்பதற்கும், நல்லன எவை, தீயன எவை என்பனவற்றை நினைத்துப் பகுப்பதற்கும், கடந்தகால நிகழ்ச்சிகளை நினைத்துப் பார்ப்பதன் மூலம் எதிர்காலத்தைச் சிறப்பாய் அமைத்துக் கொள்வதற்கும் மனமே துணை செய்கிறது. அத் தகைய நினைவாற்றல் இல்லையென்றால் மதிமயங்கியவர்

களாகி இடர்ப்படுவோம். எனவே, நாம் நிலைபிறழாது வாழ்வதற்குத் தேவையானது நினைவாற்றலேயாம். போதைப் பொருட்களை அதிகமாகக் கையாண்டவர்கள் தம் நினைவு இன்றிக் கண்ட இடங்களில் சாய்வதையும், வாய்க்கு வந்தவாறு பேசுவதையும் காண்கிறோம். அப்படிப்பட்ட நிலையில் தற்காலிகமாகச் சிலமணி நேரங்களே ஒருவர் பாதிக்கப்பட்டிருந்தாலும் அந்த இடைவெளியில் மனம் அவருக்குத் தொழிற்படவில்லை; அல்லது அளவுக்கு மீறிய போதையால் மனம் தொழிற்படும் நிலையை இழந்துவிட்டது என்பதே பொருள். ஐந்து அறிவுடன் 'மனம்' சேர்ந்தால்தானே மனித நிலையடைய முடியும்? மனம் தொழிற்படவில்லையென்றால் அது விலங்கு நிலைதானே?

மனமாசு தீரும் வழி :

மனத்தின் தன்மைகளை உணர்த்தும் அடைச்சொற்களை ஆராயுமிடத்துத் தீய தன்மைகள் சிலவும் மனத்திற்கு உண்டு என்பதைக் கண்டோம். மனம் தீய தன்மைகளைப் பல வழிகளில் அடைய வாய்ப்புண்டு. புலன்களின் போக்கில் சென்று இடர்ப்படுவதாலும், வினைப் பயன்களால் துன்பத்தில் சிக்கி உழல்வதாலும் மனம் தீங்கு செய்ய நேரிடுகிறது. இதுபற்றி விரிவாகப் பின்னர்க் காண்போம். அப்படிப்பட்ட தீய மனம் தூய மனமாக வேண்டுமானால் இறைவன் தங்கும் கோயிலாக அம்மனத்தை மாற்றுவது ஒன்றேவழி என்பதையே பிரபந்தப் பாசுரங்கள் வலியுறுத்துகின்றன.

திருமாலின் திருநாமங்களை 'வாயினாற்பாடி மனத்தினால் சிந்திக்கத் தொடங்க வேண்டும். வாயினால் கூறிவிட்டால் மட்டும் போதாது; மனத்தில் உண்மையான அன்பு இறைவனிடத்திருக்க வேண்டும். ஏனென்றால்,

'ஆவலன்புடையார் மனத்தன்றி மேவலன்' 65

என்றல்லவா நாச்சியார் திருமொழி நவில்கிறது!

அப்படி உண்மையான அன்போடு நாம் இறைவனை வழிபட்டால்தான் அவன் நம் மனக்கோயிலைத் தேடிவர முற்படுவான் என்ற உண்மையினை,

'மாசற்றார் மனத்துளானை' 66

'தம்மடைந்தார் மனத்திருப்பார்' 67

போன்ற பிரபந்த வரிகள் எடுத்துக் காட்டும். அப்படி நம் அன்பின் விளைவாக இறைவன் நம் மனக் கோயிலை அடையச் செய்து விட்டோமென்றால் கதிரவனைக் கண்டு காரிருள் நீங்கிவிடுவது போல நம் மாசுகளும் மறைந்துவிடுகின்றன. காரணம், இறைவன், "அறந்திகழும் மனத்தவர் தம்கதியாக" இருப்பவன்; அவன் "மறந்திகழும் மனம் ஒழித்து வஞ்சம் மாற்றும்" வல்லமை பெற்றவன் என்று ஆழ்வார் அருள் வாக்குக் கூறும். அவ்வல்லமை ஒன்றே தீய மனங்களை நல்ல மனங்களாக்கும் என்பது அவர் தம் நம்பிக்கை.

மனமும் அதன் பிற நிலைகளும்:

மனம், நெஞ்சம் உள்ளம், சிந்தை, சித்தம், அகம், இதயம் போன்ற சொற்கள் சொல் அளவில் வேறுபட்டிருந்தாலும், பொருள் அளவில் நெருங்கிய தொடர்புடையனவே மனம். என்பதே இவைய னைத்தையும் உள்ளடக்கிய, அனைத்திற்கும் தலைமையான சொல்லாகும். மனத்தின் வெவ்வேறு நிலைகளைக் குறிக்கவே பிற சொற்கள் பயன்படுத்தப்பட்டுள்ளன. எந்தெந்த நிலைகள் எங்கு மிக்குள்ளனவோ, அவசியம் அறிந்து அந்நிலையினைக் குறிக்கும் சொற்களையும் புலவர்கள் புரிந்து கையாண்டு வந்துள்ளனர். எல்லாமும் மனத்தின் தன்மைகளையே எடுத்தியம்புவதால் சில சமயங்களில் ஒரு நிலையைக் குறிக்க வேறு சொல்லையும் பயன் படுத்திவிடுவதுண்டு, சான்றாக, மனத்தின் செயல்பாட்டை உணர்த்தும் சொல்லாகிய 'உள்ளம்' என்ற சொல்லிற்குப் பதிலாக 'நெஞ்சம்' என்ற சொல்லைப் பயன்படுத்திவிடுவதும் உண்டு. கூர்ந்து நோக்குங்கால் இது குற்றமாகப் படினும் இரண்டு சொற் களுக்கும் உள்ள உறவுபற்றி எண்ணுங்கால் இது பெருங் குற்றயாகப்படுவதில்லை. இந்நிலையினையே பல இலக்கியங் களிலும் காணமுடிகிறது.

இருப்பினும், இச்சொற்களிடையேயுள்ள நுண்ணிய வேறு பாட்டின் நுட்பத்தைப் பலரும் அறிந்தே பயன்படுத்தியுள்ளனர். அப்பாங்கினை இப்பிரபந்தப் பாசுரங்களிலும் காணலாம்.

மனம்—உள்ளம் :

மனத்தின் ஒரு குறிப்பிட்ட நிலையைத்தான் உள்ளம் உணர்த்துமேயன்றி மனம் என்பதை அப்படியே உணர்த்தும் சொல்லாக அது ஆகமுடியாது; இரண்டிற்கும் வேறுபாடு உண்டு என்பதை,

> 'அடியேன் **மனம்** புகுந்து என் **உள்ளத்** துள்ளும்
> கண்ணுள்ளும் நின்றார்' 68

என்ற அடி எடுத்துக்காட்டும். மனமும் உள்ளமும் ஒன்றாக இருக்குமென்றால் முதலில் மனத்தில் புகுந்ததாகவும் பின்பு உள்ளத்துள்ளும் கண்ணுள்ளும் நின்றதாகவும் கூறவேண்டிய அவசியம் இருந்திருக்காதே! மனத்தைப் புகுந்த இடமாகவும், உள்ளத்தை நின்ற இடமாகவும் பிரித்துக் காட்டுவதே இரண் டிற்கும் இடையில் சிறிதேனும் வேறுபாடு உண்டு என்பதை உணர்த்தவே!

> 'ஒருமை **மனத்** தினுள் வைத்து **உள்ளம்** குழைந்து
> எழுந்தாடி' 69

என்ற வரியும் மனத்தினின்றும் உள்ளம், தன்மையால் வேறுபட்ட, ஆனால் மனத்தின் தன்மையைக் குறிக்கும் ஒருசொல் என்பதையே உணர்த்தும்.

மனம்—நெஞ்சம் :

உள்ளத்தைப் போலவே நெஞ்சமும் மனத்தின் ஒரு குறிப்பிட்ட தன்மையை உணர்த்தும் சொல்லாகும். இந் நுட்பத்தினையும் பிரபந்தப் பாடலில் காணமுடிகிறது.

> 'போர் வேந்தர் மண்ணை **மனங்** கொள்ள
> வஞ்சித்து **நெஞ்சுருக்கி**' 70

என்ற வரியில், மனங்கொள்ள வஞ்சித்து, நெஞ்சுருக்கி என்று மனம், நெஞ்சம் இரண்டையும் வேறு படுத்திக் காட்டிய விதம் நினைத்தற்குரியது. இரண்டும் வெவ்வேறு என்பதைக் காட்டிய போதும் தன்மைகளால் இரண்டு சொற்களும் ஒத்திருப்பனவாகக் காட்டப்பட்டிருப்பது இரண்டு சொற்களுக்கும் உள்ள உறவை உணர்த்தும்.

மனம்—சிந்தை ;

சிந்தை என்ற சொல்லும் மனத்தின் ஒரு குறிப்பிட்ட தன்மை

யினை உணர்த்துவதுவே. இந்நூலில் இச்சொல் சிறு வழக்கிற்றாகவே காணப்படுகிறது.

'நிறுத்தும் மனத்து ஒன்றிய சிந்தையினார்க்கு'. 71

என்ற பாசுர வரியில் மனம், சிந்தை இரண்டிற்கும் உள்ள வேறுபாடு நன்கு காட்டப்பட்டுள்ளது. அதே சமயம் ஓர் நுட்பமும் விளக்கப்பட்டுள்ளது. அலைமோதிக் கொண்டிருக்கும் மனத்தை நிறுத்தி வைக்கும் ஆற்றலைப் பெற்று விட்டால் அம் மனத்துடன் சிந்தையும் ஒன்றி நிற்கும் என்ற உண்மை இங்கு பெறப்படுகிறது.

'நன்பாலினை யன்றி என் மனம்
சிந்தை செய்யாதே'. 72

என்ற வரியில் 'சிந்தை செய்யாது' என்ற சொற்கள் 'நினைக்க மாட்டாது' என்ற பொருளைத் தந்து நிற்கின்றன. நினைத்தல் என்பது மனத்தின் செயல். சிந்தையும் மனத்தோடு தொடர்புடைய சொல். ஆதலால், நினைத்தல் என்ற பொருளை அச் சொல் இங்குப் பெற்றுள்ளது.

மனம் என்பதைக் குடும்பத் தலைவனாகிய தந்தை என்று கொண்டால், அத் தந்தையே மனைவிக்குக் கணவனாகவும், அலுவலகத்தில் அலுவலராகவும், நண்பர்களுக்கு நண்பனாகவும் இருப்பது போலத்தான் மனத்தின் பிற நிலைகளாகிய உள்ளம், நெஞ்சம், சிந்தை போல்வன. பழகும் இடங்கட்கு ஏற்பச் சிறிது வேறுபாடு காணப்பட்டாலும் குடும்பத் தலைவர் ஒருவரே! தன்மைகளுக்கேற்பச் சிறிது வேறுபாடு காணப்பட்டாலும் மனம் ஒன்றே!

மனமும் அறிவும் :

பகுத்துப் பார்க்க முடியாதவாறு நெருங்கிய தொடர்புடையனவாகக் காணப்படுவனவே மனமும் அறிவும். அந்த அளவு இவ்விரு நிலைகளுக்கும் இருக்கும் உறவு கருதியே இரண்டும் ஒன்றே என்பதுபோல் பலர் எண்ணத் தலைப்பட்டனர். இந் நிலையில் நமக்கும் சில ஐயங்கள் ஏற்படுவது இயல்பே. அறிவு, மனத்தினின்றும் வேறுபட்ட ஒன்றா? அறிவும் மனமும் ஒன்றுதானா? அல்லது மனத்தின் செயல்பாடுகளில் ஒருநிலையைத்தான், அறிவு என்று சொல்கிறோமா?

ஆறாம் அறிவிற்கு விளக்கம் கூற முற்படும் தொல்காப்பியர் ஐந்தறிவுடன் மனம் சேர்வதேயாம்; அந் நிலையே மனிதநிலை என்று கூறிப் போந்தார். அப்படிப் பார்க்கும்போது ஆறாம் அறிவு என்று அவர் குறிப்பிடுவது மனத்தையே. எனவே அறிவும் மனமும் ஒன்றோ என்று எண்ணவேண்டும்போல் தோன்றுகிறது.

பட்டங்கள் பல பெற்று, கூர்த்த மதியினராகத் திகழும் சில. பிறருக்குத் தீங்கிழைப்பதனையும் நோக்கும்போது அவர்கட்கு அறிவுச் சிறப்பு மட்டுமே உண்டு. மனநலம் இல்லை என்றே எண்ணத் தோன்றுகிறது.

'அரம்போலும் கூர்மைய ரேனும் மரம்போல்வர்
மக்கட்பண் பில்லா தவர்' 73

என்று கூறும் வள்ளுவர் மக்கட்பண்பு என்று குறிப்பிடுவது நல்ல மனம் வாய்க்கப் பெறாமையினால் அல்லன செய்தொழிவார் தமைக் கருதியேயாம்.

படித்துப் பட்டம் பெறாத, அறிவு நிலையில் முதிர்ச்சி யடையாத பலர் நல்ல மனம் படைத்த சான்றோர்களாய்த் திகழ் வதையும் காண்கிறோம், இந்நிலைகளை நோக்கும்போது அறிவு வேறு; மனம் வேறு என்பது போல் தோன்றுகிறது.

அறிவு வளர்ச்சியடையாத, அல்லது பாதிக்கப்பட்டவர்களை 'அறிவு நோயாளிகள்' என்று அழைப்பதில்லை; 'மனநோ யாளிகள்' என்றே அழைக்கின்றோம். உண்மையில் நோய் அறிவில்தான்.' அதனை மனத்தின் பேரில் அழைப்பதிலிருந்து அறிவும் மனமும் ஒன்றென்ற பொருளிலேயே இன்று வழங்கப் படுகிறது.

மேற்கண்ட உலக வழக்காற்று நிகழ்ச்சிகளை ஒப்பு நோக்கி ஆராயும்போது அறிவுக்கும் மனத்திற்கும் இருக்கும் நெருங்கிய தொடர்பு நன்கு புலப்படும். அச் செய்திகளிலிருந்து நாம் ஒரு முடிவிற்கு வர முடியும். நெஞ்சம், உள்ளம், சிந்தை போன்று அறிவும் மனத்தின் ஒரு தன்மையினை உணர்த்துவனவேயாம். மனத் தின் ஒரு தன்மையாக அறிவு இருப்பதால்தான் அறிவு பாதிக்கப் படுவதை மனமே பாதிக்கப்பட்டதாக உணர்ந்து 'மனநோய்' என்று அறிவு நோயாளிகளை அழைக்கின்றோம்.

ஒரு மனிதனுக்கு மனத்தின் ஒரு நிலையாகிய அறிவும் சிறந்திருக்கும் போதுதான் அவன் சான்றோனாகும் தகுதியைப் பெறுகிறான். அறிவு நலம் வாய்க்கப் பெறாதபோது மனமும் நற்பயன்களை விளைப்பதில்லை. படித்துப் பட்டம் பெறாத வர்கள் நல்லவர்களாகத் திகழ்வதற்குக் காரணம் பட்டறிவின் மூலமாகவோ நல்வினைப் பயன்களின் காரணமாகவோ அவர்கள் மனம் பக்குவப்பட்டிருக்க வேண்டும்.

தீய மனமுடையவர்கள், தூயமனத்தினராவதற்கு நல்லன வற்றைச் சிந்திக்க வேண்டும்; இறைவனின் தன்மைகளை அறிய வேண்டும்: தங்கள் மனங்களில் 'மறந்திகழும் நிலை ஒழித்து, வஞ்சம் மாற்றி, 'அறந்திகழும்' இடமாக அதை ஆக்கவேண்டும். இதையெல்லாம் செய்வதற்கு அறிவு வேண்டும். எனவே, மன மாசு அகல்வதற்குத் துணைசெய்வது அறிவேயென்பது பெறப்படு கிறது. அறிவாகவும் நின்று தனது மாசுகளை அகற்றிக்கொள்வது மனமே.

பாத்திரங்களில் களிம்பு சேர்ந்து அதன் தன்மைக்குக் கேடு பயப்பது போன்று மனத்தில் மாசுகள் சேர்கின்றன. ஈயம் பூசு வதன் மூலம் களிம்பு அகற்றப் படுவதுபோன்று அறிவின் மூலம் மனமாசு அகற்றப் படுகிறது. ஈயம், பாத்திரத்தின் ஒரு வகையே; அறிவும் மனத்தின் ஒரு நிலையே!

அறிவு நலம் வாய்க்கப் பெறாதபோது மனத்திற்கும் சிறப்பு இல்லை என்ற நுட்பத்தைப் பிரபந்தப் பாசுரம் நன்கு விளக்குகிறது.

''அன்னதே பேசும் அறிவில் சிறு மனத்து'' 74

என்பது அப்பாசுரவரி. அறிவு இன்மையினால் மனத்திற்கு ஏற்படும் இழிவு எத்தகையது என்பதைக் காட்டவே 'சிறுமனம்' என்று அதனைக் குறிப்பிடுகிறார். மேலும், 'அறிவில்சிறுமனம்' என்று மனத்தின் தன்மையை விளக்க முற்படுவது, அறிவும் மனத்தைச் சேர்ந்த, மனத்தின் தன்மையைக் குறிப்பிடும் ஒரு நிலையே யாம் என்பதை உணர்த்தவே! ஆனால் அறிவு என்ற சொல் மனத்தின் தன்மைகள் அனைத்தையும் பெற்ற ஒரு மாற்று சொல் என்றுகொள்ளுவது தவறு என்பதைக் குறிக்கவே இரண்

டையும் வேறுபடுத்திக் காட்டியுள்ளார் இப்பாசுரத்தை அருளிய ஆழ்வார்,

நல்லறிவு வாய்க்கப்பெற்றவர் மனத்தில் இறைவன் உறைவான்; புல்லறிவாளர் மனத்தில் அவன் புகுவது இல்லை. அவனைப் புகச் செய்ய வேண்டுமென்றால் முதலில் நம் புல்லறிவு நம்மைவிட்டு நீங்கவேண்டும். இவ்வுண்மையினை,

'திண்மதியைத் தீர்ந்தார் தம் மனத்துப் பிரியாது' ...75

இறைவன் இருப்பான் என்று விளக்குகிறது பிரபந்தப் பாடல்வரி. 'திண்மதியைத் தீர்ந்தார் தம் மனம்' என்று குறிப்பிடுவது மதி(அறிவு)க்கும் மனத்திற்கும் உள்ள தொடர்பைக் காட்டுவது கருதியேயாம்.

நம்முடைய அறிவு நாம் வாழ்வாங்கு வாழத் துணை செய்வதாய் அமைய வேண்டும்; அப்போதுதான் அறிவுக்கும் பெருமை. அப்படி நல்வாழ்வு வாழத் துணை செய்யாத அறிவால் தீங்குகளே விளையும் என்ற குறிப்பினை,

"வாழ்கில்லா மதியின் மனத்தானை" 76

என்று குறிப்பிடுகிறது பிரபந்தப் பாசுரவரி. மதியின் இழிவு நிலையினை 'வாழ்கில்லா மதி' என்றுகூறும் ஆசிரியர், 'அம்மதியை யுடைய மனம்' என்ற பொருள் படுமாறு 'மதியின் மனத்தானை' என்று குறிப்பிட்டுள்ளார். இதிலிருந்து மனத்திற்கும் அறிவுக்கும் உள்ள தொடர்பு நன்கு விளங்கும்.

எந்தெந்தப் பொருட்களெல்லாம் பேசுவன போலவும், கேட்பன போலவும் அமைத்துச் செய்யுள் செய்வது என்பதைக் குறிப்பிடும் ஆசிரியர் தொல்காப்பியர்,

'ஞாயிறு திங்கள் அறிவே நாணே
கடலே கானல் விலங்கே மரனே
புலம்புறு பொழுதே புள்ளே நெஞ்சே
யனவயல பிறவும் ......' 77

என்று குறிப்பிடுகிறார். இந்நூற்பாவில் அறிவு என்று அவர் குறிப்பிடுவது மனத்தையேயாம். என்னென்றால், நெஞ்சை முன்னிலைப் படுத்திப் பேசும் வழக்கு பெருவழக்கிற்றாக உள்ளது. 'போல' இல்லாவிட்டாலும், சிறு வழக்கிற்றாக வேனும் மனத்தை முன்னிலைப்படுத்திப் பேசும் வழக்கும் உண்டு. ஆனால் அறிவை

முன்னிலைப்படுத்திப் பேசும் மரபு இல்லை யென்பதோடு சிந்தித்துப் பேசுவதற்கும், பிறர் பேசுவனவற்றைக் கேட்பதற்கும் அறிவு பயன்படுமே தவிர, அதற்குப் பேசும் தன்மையும், கேட்கும் தன்மையும் இல்லை என்பதும் தெளிவு. எனவே அறிவு என்று தொல்காப்பியர் குறிப்பிடுவது மனத்தையேயாம்.

ஐம்பொறிகளின் அடிப்படையிலேதான் ஐவகை அறிவுவரை யுள்ள உயிர்களைத் தொல்காப்பியர் வகைப்படுத்திக் காட்டு கிறார். மனிதனைக் குறிப்பிடும்போது ஐம்பொறிகளுடன் மனத்தையும் சேர்த்து அதுவே ஆறாம் அறிவு என்று குறிப்பிடு கிறார். அப்படியென்றால் மனமும் ஒரு பொறியா என்ற ஐயமும் தோன்ற வாய்ப்புண்டு. ஐம்பொறிகளையும் இயக்கும் ஆற்றல் பெற்றது மனம். ஐம்பொறிகளின் தன்மையினையும் அறிவது மனமே. எனவேதான் வலிமையான உடலைப் பெற்ற யானை அதன் உடல் வலிமையை உணராமையினால், அதைக் காட்டிலும் உடல் வலிமை குன்றிய மனிதனுக்கு அஞ்சி நடக்கிறது. யானைக்கு மனம் இல்லை; மனிதனுக்கு அது உண்டு.

மேலும், பொறிகள் நன்னிலையில் இயங்கினாலும் மனமும் துணை நிற்கும்போதுதான் அப் பொறிகளினால் ஆய பயன் நமக்குக் கிடைக்கிறது. கண்கள் ஒரு பொருளை உற்று நோக்கு கிறது; ஆனால் மனம் எங்கோ பறந்து செல்கிறது. விளைவு? உற்று நோக்கியதால் ஒரு பயனும் இல்லை. எனவே அறிவு உண்டாக மனம் தேவை. இதிலிருந்து அறிவு யென்பது மனத்தின் செயல்பாடுகளில் ஒன்றாகிய அறியும் தன்மையினை உணர்த்துவ தாகும் என்பது புலப்படும்.

மனமும் ஞானமும் :

மனத்திற்கும் அறிவுக்கும் உள்ள தொடர்பைக் கண்டோம். அறிவின் முதிர்ந்த நிலையினையே ஞானம் என்று குறிப்பிடு கின்றோம். அத்தகு சிறப்பிற்குரிய ஞானம் உடைய பெரிய வர்கள் ஞானிகள் என்று அழைக்கப்படுகின்றனர். தனக்கென வாழாது, பிறருக்காக வாழும் பெருந்தன்மையும், பிற உயிர் களிடத்தும் அன்பு காட்டுகின்ற தன்மையும் வாய்க்கப் பெற்ற வர்களே ஞானியர் ஆவர். அந்த ஞானமும்கூட மனத்திலிருந்து தான் உண்டாகிறது. இந் நுட்பத்தினை,

"மனஞ் செய் ஞானத்தின் பெருமை" 78

என்று குறிப்பிடுகின்றார் ஆழ்வார். ஞானத்தை, "மனஞ்செய் ஞானம்" என்று அவர் குறிப்பிடுவது, மனத்திலிருந்து தான் ஞானம் உண்டாகிறது என்ற உண்மையினை விளக்குகிறது. மனநலம் நன்கு வாய்க்கப் பெற்றால் சிறந்த ஞானியர்களாகத் திகழ முடியும். ஞானியர்களாவதற்குத் தவங்கள் போன்ற பிற வழிகளில் முயலவேண்டும் என்பது அவசியமல்ல. வேதங்களை யெல்லாம் கற்று வித்தகர்களாக வேண்டும் என்ற தேவையும் இல்லை. நம்முடைய மனத்தை மாசற்றதாக வைத்து; உயர்ந்த சிந்தனைகளால் அதை அலங்கரித்தால் போதும். ஞானம் தானாகவே கைவரப் பெறும். எனவே, எவர் வேண்டுமானாலும் ஞானியாக உயர முடியும் என்ற தமிழ் நெறி இங்கு உணரக் கிடக்கிறது.

மனம் நினைத்தல், அறிதல், உணர்தல், வருந்துதல், மகிழ்தல் போன்ற நிலைகளில் தொழிற்படுவதோடன்றி ஞானத்தைத் தோற்றுவிக்கும் தன்மையும் அதற்கு உண்டு என்பது மேற்கண்ட பாசுர வாயிலாக விளங்கும்.

அத்தன்மை மனத்திற்கு எப்படி அமைகிறது என்பதனையும் ஆழ்வார்கள் அறுதியிட்டுக் காட்டியுள்ளனர். இறைவன் உறையும் ஆலயமாக மனம் இருப்பதால், இறைவனின் அருளால் மனத்திற்கு அத்தகைய ஆற்றல் ஏற்படுகிறது.

'மயர்வற என் மனத்தே மன்னினான்' 79

திருமால் என்று கூறும் அதே ஆழ்வார், மயர்வறும் விதம் அவன் யாது செய்தான் என்பதனை,

'மயர்வற மதிநலம் அருளினன்' 80

என்றும் கூறுகிறார். எனவே மயக்கமுடைய மனம் அவன் வருகையினால் அது நீங்கி, அவனருளும் மதிநலத்தைப் பெற்றுச் சிறக்கிறது என்பது தெளிவாகிறது.

மனமும் கனவும்:

கனவு காணுதல் என்பது மனிதர்களுக்கு மட்டுமே உரியது. ஏனெனில் இது மனத்தினால் நிகழக் கூடியது. மனமில்லாத பிற

உயிரினங்களும் கனவுகண்டதாகக் கூறியிருப்பது தற்குறிப் பேற்றமேயாம்.

"நமக்கு விழிப்பு நிலை, கனவு நிலை, உறக்கநிலை என்று மூன்று நிலைகள் உண்டு. கனவிலே மூன்றுவகை உண்டு. ஒன்று பகலிலே கண்டவை விட்டும் தொட்டும் வரும்: ஒன்று பித்த மயக்கத்தால் வருவது; ஒன்று எதிர்காலத்தில் விளையக்கூடிய நிகழ்ச்சிகளை விளக்குவது"[81] என்று குறிப்பிடுகிறார் கிருபானந்தவாரியார்.

அவர் குறிப்பிட்ட மூன்று நிலைகளில் உறக்கநிலை தவிர எஞ்சிய இரு நிலைகளிலும் மனம் தொழிற்படவே செய்கிறது. உறக்க நிலையின்போது மனம் ஓய்ந்துகிடக்கிறது. பகலிலே கண்டகாட்சிகள் மனத்தில் பதிந்திருப்பதால் இரவில் உறங்கும் போது அவை மறுபடியும் காட்சிகளாக மலர்கின்றன. அதுவே கனவு எனப்படுகிறது. பித்தத்தால் மனம் மயங்கிய நிலையில், ஏற்கெனவே மனத்தில் பதிந்துள்ள காட்சிகளே வெளிப்பட்டுக் கனவு களாகின்றன. மூன்றாம் வகைக் கனவு எதிர்காலத்தில் விளையக் கூடிய நிகழ்ச்சிகளை விளக்குவது என்று அவர் குறிப்பிடுவதும் ஓர் உண்மையினை உணரச் செய்கிறது. உயர்ந்த மனமுடைய ஞானிகள் பின்னால் நிகழப் போவதையும் முன்கூட்டியே உணரும் ஆற்றல் பெற்றிருப்பர். 'அறிவுடையார் ஆவது அறிவார்' ......82 என்ற குறளும் இந்நுட்பத்தினையே உணர்த்தும். ஆவது அறியும் ஆற்றலையும் மனம் பெற்றுள்ளது என்பதே இதனால் பெறப்படும் உண்மையாகும். எனவேதான் அம் மனத்தின் தன்மையினால் தோன்றும் கனவும் எதிர்காலத்தில் விளையக் கூடிய நிகழ்ச்சிகளை விளக்குவதாக அவர் குறிப்பிடுகிறார்.

"இந்தத் தூய உடம்புக்குள் இன்னும் ஓர் உடம்பு இருக்கிறது. அது சூட்சும சரீரம் எனப்படும். அதற்குக் கண் காது முதலிய அவயவங்கள் உண்டு. மெல்லிய பட்டுச் சட்டைக்கு மேல் கோட்டுத் தரித்திருப்பது போல், ஆன்மா சூட்சும சரீரத் துக்குமேல் இந்தத் தூல சரீரத்தைத் தாங்கிக் கொண்டிருக்கிறது. சூட்சும சரீரந்தான் கனாவில் தொழிற் படுகிறது" 83

என்றும் வாரியார் குறிப்பிடுகிறார். கனவுகளுக்குக் காரணமாக அவர் குறிப்பிடும் சூட்சும சரீரம் என்பது மனத்தோடு தொடர்

புடையதாகத்தான் இருக்கவேண்டும்.

தன் கனவில் காதலனைக் காண்கிறாள் ஒருத்தி; அவன், அவள் மனம் மகிழுமாறு இன்பம் தருகிறான்; பின் அதை நினைத்துப் பார்க்கும்போது அவ்வின்பம் உள்ளத்திலும் புகுந்து இனிக்கிறதாம். இத்தகைய இனிய அனுபவத்தை,

''கனவிலிவன் தந்த மனஞ்செயின்பம் வந்துள்புக'' 84

என்று ஓர் ஆழ்வார் குறிப்பிடுகின்றார். மனம் விளைக்கும் இன்பத்தை அம்மனத்தால் உண்டாகிய கனவில் கண்டு மகிழ்ந்ததாக அவர் குறிப்பிடுவது சிந்தித்தற்குரியது.

மனமும் ஐம்பொறிகளும் :

உயிரினங்களை வகைப்படுத்துதற்குக் காரணமாக அமைந்ததே அவற்றிற்கு அமைந்த பொறிகள்தாம். ஒவ்வொருபொறியும் ஒருவகை அறிவிற்குக் காரணமாய் உள்ளது. மூன்று பொறிகள் நன்னிலையில் செயல்படுகின்றன என்றுகொண்டால் மூவகை அறிவே உண்டு என்றுதான் பொருள். இந்நிலையில் வேறோர் உண்மையினையும் நாம் உணரவேண்டும். தீக்குச்சியின் நுனியில் நெருப்பை வெளிப்படுத்தும் தன்மை வாய்ந்த மருந்து இருந்தாலும் அது தீப்பெட்டியின் பக்கத்தில் உள்ள மருந்துடன் உரசும் போதுதான் நெருப்புப் பற்றுகிறது. பொறிகள் நன்னிலையில் இருந்தாலும் அப்பொறிகளை இயக்குதற்கு மனம்வேண்டும். இல்லையேல் பயனில்லை. தீக்குச்சிகள் பொறிகள்; அவைகள் உரசும் பக்கம் மனம். பொறிகள் இயங்கினாலும் மனமும் துணை நிற்கும்போதுதான் அறிவு பிறக்கிறது. இதனை இக்கட்டுரையின் முன்னர்க் காட்டியுள்ளோம்.

இந்நிலையில் இரண்டு செய்திகள் சிந்தித்தற்குரியன. 1.ஏனைய பொறிகள் நன்னிலையில் செயல்பட, மனமும் நன்னிலையில் துணை நிற்க, நல்லாற்றல் வாய்க்கப் பெற்றவர்களாக விளங்கும் சிலர் கண் அல்லது காது போன்ற ஏதேனும் ஒன்று குறையுடையவர்களாக விளங்குகின்றனர். இத்தகைய ஒன்று அல்லது இரண்டு பொறிகள் இயங்கா நிலையிலும்கூட அவர்கள் சிறந்த வித்தகர்களாகவே விளங்குகின்றனர்; பல சாதனைகளையும் புரிந்து வரலாற்றில் இடம் பெற்றுள்ளனர்.

ஏரியிலிருந்து ஐந்து வாய்க்கால்களின் வழியாக நீர் வருகிறது. அதில் இரண்டு வாய்க்கால்களை அடைத்து விட்டால் அதில் சென்ற அளவு நீர் குறைந்து விடுவதில்லை. மற்ற மூன்று வாய்க்கால்களிலும் ஏற்கெனவே சென்ற அளவைக் காட்டிலும் அதிக அளவு நீர் இப்போது செல்கிறது. இவ்வுண்மை பொறிகள் விஷயத்திலும் பொருந்தும். இரண்டு பொறிகள் செயல்படவில்லை யென்றால் அதற்குள்ள ஆற்றல்கள் மற்ற பொறிகளை மேலும் கூர்மையாக்கத் துணை செய்கின்றன. ஐந்து வாய்க்கால்களிலும் ஒரேவித நீர் ஓடுவதுபோல் ஐம்பொறிகளுக்கும் ஒரேவித ஆற்றல் இல்லையே எனலாம். பொறிகளின் வாயிலாகப் பெறும் அறிவல் வேறுபாடு இருந்தாலும் அவைகளை இயக்கும் ஆற்றல் ஒன்றேயாம்.

அடுத்து, ஒன்று முதல் ஐந்து பொறிகள் வரையில் உள்ள உயிரினங்கள் விலங்கு, மற்ற வகையினவே. மனம் சேரும்போது தான் மனிதன் என்ற நிலை தோன்றுகிறது. எனவே, மனம் நன்னிலையில் செயல்படவில்லையென்றால் அவன் விலங்கு அல்லது பிறவகை உயிரினங்களில் ஒன்றாகத்தான் கருதப் படுவான். இந் நுட்பத்தினையே,

> ''பொறியின்மை யார்க்கும் பழியன்று; அறிவறிந்து,
> ஆள்வினை யின்மை பழி'' 618

என்றார் திருவள்ளுவர். 'அறிவறிந்த ஆள்வினை' என்று அவர் குறிப்பிடுவது மனத்தின் செயற்பாட்டினையேயாம். மனம் ஒழுங்காகச் செயற்பட்டு, அதனால் நல்வினைகள் பல நடைபெறு மென்றால் பொறிகளில் குறைபாடு இருந்தாலும் அக்குறை பழித்தற்குரியது அல்ல என்கிறார் வள்ளுவர்.

இன்றைய உலகில் கண், காது போன்ற பொறிகளில் குறை பாடு இருந்தால் 'குருடன்', 'செவிடன்' போன்ற பழிச் சொற் களைப் பட்டங்களாக அவர்கட்குச் சூட்டுகிறோம். ஆனால் மனம் நன்னிலையில் அமையாது அழிவுப் பணிகளைப் புரிவோரைப் பற்றிக் கவலைப் படுவதில்லை. உண்மையில் பழிச் செயல்களைப் புரிபுவர்கள் அவர்கள்தாம் அன்றோ? உலகம் பழிக்க வேண்டியது அவர்களைத்தானே! என்னே முரண்பாடு!

பொறிகள் தத்தமக்குரிய நன்னெறியில் இயங்க வேண்டும் மனம் அதற்குத் துணை நிற்க வேண்டும் என்ற குறிப்பினைப் பிரபந்தப் பாசுரங்களில் பல இடங்களில் காண்கிறோம்.

'மன முருகி மலர்க் கண்கள் பனிப்ப' 86

'வாயினார் பாடி மனத்தினார் சிந்திக்க' 87

என்பன போன்ற பல வரிகளைக் காட்டலாம். பொறிகள் நன்னிலையில் இயங்கக் காரணம் இறைவன், மனத்தில் இருப்பதுபோல் அப்பொறிகளிலும் இருந்தான்; அல்லது அவனருளால் அப்பொறிகள் இயங்கின என்று ஆழ்வார்கள் நம்பினர். பொறிகள் தரும் அறிவும் இறைவன் அருளால் வருவனவே என்பது அவர்கள் தம் கொள்கை.

'கண்ணகத்தும் மனத்தும் அகலாக் கொற்றவன்' 88

'செய்வளவிலென் மனமும் கண்ணு மோடி' 89

'அடித்தாமரை வாயுள்ளும் மனத்துள்ளும் வைப்பார்' 90

என்ற வரிகளிலிருந்து மேற்கண்ட கொள்கை உறுதிப்படுகிறது.

ஐம்பொறிகளால் நாம் அறியக்கூடிய சுவை, ஒளி, ஊறு, ஓசை, நாற்றம் என்ற ஐந்தும் ஐம்புலன்களாம். ஐம்புலன்களும் நமக்கு நன்மைபயப்பனவே; இன்பம் விளைவிப்பனவே! எப்போது என்றால் நெறிவழி அவைகள் நிற்கும்போது! அப்புலன்கள் நன்மை பயக்க வேண்டுமென்றால் அவைகளை மனம் நல்லாற்றுப் படுத்த வேண்டும். புலன்களின் போக்கிலேயே மனமும் போகுமென்றால் தீங்குகள் தாமே விளையும்!

'ஐம்புலன் கருதும் கருத்துளே திருத்தினேன்
மனத்தை' 91

என்று ஓர் ஆழ்வார் தன்னிலைக் கிரங்கி வருந்துகின்றார்.

அத்துயர் நிலை மாறுவதற்கு ஒரேவழி தம் மனத்தை இறைவன் எழுந்தருளும் ஆலயமாக மாற்றுவதே! அப்படி மாற்றும் போது அவனருளால் அம்மாசுகள் மறைகின்றன; மனமாசுகள் மறையும்போது அம்மனம் புலன்களை நன்னெறியில் மட்டுமே இயக்கும் அல்லவா?

"பொய் வண்ணம் மனத்தகற்றிப்
புலனைந்தும் செலவைத்து" 92

இறைவன் தமக்கு அருள்புரிந்ததாகக் கூறுகிறார் ஆழ்வார் ஒருவர். புலன்கள் தம் போக்கில் செல்லத் தொடங்கினால் பொய்மைகள் தாம் மனத்தில் நிறையும் என்ற குறிப்பினைப் 'பொய் வண்ணம்' என்று குறிப்பிடுகிறார்.

ஐம்புலன்களின் இயல்புகளையும் அவற்றை இயக்கிக்கொண்டிருக்கும் மனத்தின் நுட்பத்தினையும் உணரும் பேராற்றல் வாய்க்கப்பெற்றவன் கண்ணதே உலகம் என்பதனை,

"சுவையொளி யூறோசை நாற்றமென் றைந்தின்
வகைதெரிவான் கட்டே உலகு" 93

என்று குறிப்பிடுகிறார் திருவள்ளுவர். "வகை தெரிவான் கட்டென உடம்பொடு புணர்த்ததனால், தெரிகின்ற புருடனும் அவன் நெரிதற் கருவியாகிய மான் அகங்கார மனங்களும் அவற்றிற்கு முதலாகிய மூலப்பகுதியும் பெற்றாரும்"[94] என்று விளக்கம் தருகின்றார் பரிமேலழகர்.

ஐம்புலன்களால் நைந்துழல்கின்ற நிலையினை ஐந்து மனங்களால் நைந்துழல்வதாக ஆழ்வார் ஒருவர் பாடிய குறிப்பும் பிரபந்தப் பாசுரத்தில் கிடைக்கிறது.

"மனமைந்தொடு நைந்துழல்வார்" 95

என்பது அப்பாசுரவரி. புலன்களால் விளையும் தீங்கினை எண்ணி ஒவ்வொரு புலனும் ஒரு மனத்திற்குச் சமம்; ஐம்புலன்களும் ஐந்து மனத்திற்குச் சமம் என்று கருதி அப்படிப் பாடியிருத்தல் வேண்டும்.

மனம், வாக்கு, கருமம் :

ஒரு மனிதன், குறைகளேதும் அற்ற முழுமனிதனாக நிறைவுடன் விளங்க வேண்டுமென்றால் அவனது மனம், சொல், செயல் மூன்றும் தூய்மையுடன் விளங்க வேண்டும். இதில் ஏதேனும் ஒன்றில் குறையிருந்தாலும் மற்றவை இரண்டும் தாமாகவே கெட்டுவிடும். ஒன்றன் இயல்பிலிருந்து மற்றவற்றின் இயல்புகளை உய்த்துணரும் அளவிற்கு இம் மூன்றும் நெருங்கிய தொடர்புடையன.

மனம் ஒரு நுண்பொருள். அதனை நாம் எவ்விதக் கருவி கொண்டு ஆய்ப்புகினும் அறிய முடியாது. அப்படியிருந்தும் ஒரு மனிதனின் மனம் எத்தன்மையது என்ற முடிவிற்கு நம்மால் எப்படி

வரமுடிகிறது? புகையைக்கொண்டு நெருப்பிருப்பதனையும், நறுமணத்தைக்கொண்டு நன்மலர் இருப்பதனையும் அறிகிறோம். அதுபோன்று ஒரு மனிதன் பேசக்கூடிய பேச்சிலிருந்தும் செய்யக்கூடிய செயல்களிலிருந்தும் அவனது மனம் எத்தன்மைத்து என்பதனை உய்த்துணர்கின்றோம்.

தொட்டியில் இருக்கும் நீரைத்தான் குழாயின் வழியாகப் பெறுகிறோம். அசுத்தமான தண்ணீரைப் உள்ளே தேக்கிவைத்துவிட்டு நன்னீரைக் குழாயில் எதிர்பார்க்க முடியுமா? மனம் தூயதாக இருந்தால் வாயின் வழிவெளிப்படும் சொற்களும் சிறந்தனவாகவிருக்கும். தீயசொற்களையே ஒருவன் பேசுகின்றான் என்றால் அவன் மனம் தூயதாக இல்லை என்பதே பொருள். தீய சொற்களைப் பேசுபவனைவிடப் பேசும் சக்தி இல்லாதவன் உயர்ந்தவன். ஏனென்றால் அவன் வாயினால், பிறருக்குத் துன்பம் ஏதும் இல்லையே!

பேசும் பேச்சுக்களை விடச்செய்யும் செயல்கள் தூய்மையாய் இருக்கவேண்டுவதே பெரிதும் இன்றியமையாதது. ஏனென்றால், பேசும் சொற்கள் காற்றோடு கலந்து போய்விடலாம். ஆனால் செய்யும் செயல்களும், அதனால் விளையும் பயன்களும் என்றும் நிலைத்துவிடும் நிரந்தரத் தன்மை வாய்ந்தவை. அச்செயல்கள் சிறந்து விளங்கவேண்டுமாயின். நம்முடைய மனம் உயர்ந்தனவாகத் திகழவேண்டும்.

திவ்வியப்பிரபந்தம் அருளிய ஆழ்வார்கள் இவ்வுண்மைகளை உணர்ந்து எடுத்துக் காட்டியுள்ளார்கள்.

'வாக்கும் மனமும் கருமமும் நமக்கு ஆங்கதே' 96
'மனமும் வாசகமும் செய்கையும் யானுநீ தானே' 97
'எனதுயரே, மனமே, வாக்கே, கருமமே' 98
'வாக்கினால் கருமம் தன்னால் மனத்தினால் சிரத்தை தன்னால் வேட்கை மீதூர' 99

மேற்கண்ட சான்றுகளிலிருந்து மனம், சொல், செயல் ஆகிய மூன்றனுக்கும் உள்ள நெருங்கிய தொடர்பினை நன்குணர்கிறோம். மனத்தை முதலில் குறிப்பிடாமல் சில விடங்களில் 'வாக்கை' முதலில் குறிப்பிடக் காரணம், பலரது மனங்களை உடனே நாம் உணர்ந்து கொள்ளத் துணைசெய்வது அவர்களது

வாக்குகளே என்பது கருதியேயாம். செயல்கள் தோன்றுவதற்கும், அதன் தன்மைகளை யுணர்வதற்கும் சிறிது காலம் ஆகக்கூடுமே! இறைவனைத் தமது மனமாகவும் சொல்லாகவும், செயலாகவும் கண்டவர்கள் தம் உயிராகவும் கண்டுள்ளனர். மனம், சொல், செயல் மூன்றிலும் தூய்மையுடன் திகழ்ந்தால்தான் உயிர் வாழ்ந்ததாகக் கருதப்படுவர் என்பதே அதன் குறிப்பு. மூன்றிலும் தூய்மை வேண்டும் என்று கருதியே அம்மூன்றிலும் இறைவன் இருப்பதாகக் கூறிப் போந்தனர்.

மனமும் வினைகளும் :

நாம் முற்பிறவியில் செய்த வினையின் பயன்களை இப் பிறவியில் தவறாது அனுபவித்தே தீரவேண்டும் என்ற உறுதியான நம்பிக்கை இந்நாட்டுச் சமயச்சான்றோர்களிடம் பொதுவாகவே காணப்படுகிறது. இவ்வுண்மையினை அடித் தளங்களாகக் கொண்டு பல காப்பிய மாளிகைகளையும் கட்டிய பெருமை இந் நாட்டுப் புலவர்களைச் சேரும்.

'இப் பிறவியில், யானறிந்தவரை எத்தீங்கினையும் நீ செய்ய வில்லையே, பின்பு ஏன் உனக்கு இச் சோதனைகளெல்லாம் வருகின்றன' என்று கோவலனைப் பார்த்து அனுதாபப்படும் மாடலமறையோன் கடைசியில்வரும் முடிபும் மேற்கண்ட உண்மை யினையே உறுதிப்படுத்துகிறது.

"இம்மை செய்தன யானறி நல்வினை;
உம்மைப் பயன்கொல்" 100

என்பார் இளங்கோ அடிகள். எனவே, இப்பிறவியில் நாம் நன்னெறியில் நடக்கவேண்டும் என்று முற்பட்டாலும், நம் மனத்தை மாசற்றதாகப் பேணிப் பாதுகாத்தாலும், பொறி, புலன்கள் சீரிய வழிகளில் செயல்பட்டாலும் முற்பிறவியில் செய்த வினை அதற்குரிய பயன்களைத் தந்தே தீருகிறது. தீவினை இழைத்திருந்தால் அதற்குரிய தண்டனையையும், நல்வினை இழைத்திருந்தால் அதற்குரிய பரிசினையும் பெறும் நிலையினை இப்பிறவியில் காண்கிறோம்.

செல்வமும் செல்வாக்கும் மிக்கிருக்கும் காரணத்தால் எண்ணியவாறெல்லாம் சென்று பிறர்க்கு இன்னல் விளைப்போர்

அதற்குரிய தண்டனையினையும், நேர்மையுடன் வாழ்ந்து இடர்ப் படுவோர் அதற்குரிய பரிசினையும் இப்பிறவியில் அடைய வில்லையே; இறைவனின் கருணை இதுதானா என்று ஐயுறுவோர்க்கு ஆறுதல் அளிக்கும் விதத்திலும் வினைகள்பற்றிய கருத்து அமைந்துள்ளது. இறைவனின் தீர்ப்புகளுக்குத்தான் வினைகள் என்று பெயர் போலும்!

நாம் நல்வழியில் நடக்க முற்பட்டும் சோதனைகள் வந்து வருத்துகின்றனவே, ஏன என்று தடுமாறும் மனிதன் முடிவில் மாடல மறையோனின் முடிபுக்கே வந்துவிடுகிறான், முற்பிறவியில் செய்த வினைப் பயன் இது என்று எண்ணி வேதனைக்கிடையிலும் ஆறுதலைக் காண்கிறான், அதனால்தான் பலர் தங்களை, 'வல்வினையேன்', 'தீவினையேன், 'தீவினையாட்டி' என்றெல் லாம் கூறிக்கொள்கின்றனர். இப்போக்கு திவ்வியப் பிரபந்தம் அருளிய ஆழ்வார்களிடத்தும் காணப்படுகிறது.

'வல் வினையேன் மனமுருக்கும் வகை' 101
'வல் வினையேன மனமுருக்கும் மகனே' 102
'மனமே, உனை வல்வினை யேனிரந்து' 103

என்றெல்லாம் பாடியுள்ளனர். தீவினையின் காரணமாக முன்பு உருகாதிருந்த மனம் இப்போது உருகும் நிலையெண்ணி வியந்து பாடுமாறு முன்னிரண்டு பாசுர வரிகள் அமைந்துள்ளன. வேறு ஒரு ஆழ்வார், தனக்கு நல்லருள் தருமாறு தன் மனத்திடமே குறையிரந்து நிற்பதனையும் காண்கிறோம். வினையின் காரணமாகத்தான் செய்யும் தவறுகளிலிருந்து தன்னை மீட்டு நன்னெறிப்படுத்துமாறு மனத்தை அவர் வேண்டுகிறார்.

''நீர்வழிப் படூஉம் புனைபோல ஆருயிர்
வினைவழிப் படூஉம்'' 104

என்பதுவே உண்மையாயினும், நீரிலிருந்து புணையை வெளிக் கொணர்வது போன்று வினையின் போக்கிலிருத்தும் உயிர்களை மீட்க முயலவேண்டும். அதற்குத் துணை செய்வது நம் மனமே. இத் நுட்பத்தை உணராமல், மீட்கச்செல்பவரும் ஆற்றில் மூழ்குதல் போன்று, மனத்தையும் வினைப்பயன்களின் வழி நடக்கச் செய்தால் உய்தி ஏது?

''வல்வினைப் பயன்றனில் மனந்தனை நாட்டிவைத்து'' 105

இடர்ப்படும் தமது இழிந்த நிலையினை எண்ணி வருந்துகின்றார் ஆழ்வார் ஒருவர்.

மன வலிமையினால்தான் வெவ்வினைகளை வேரறுக்க முடியும் என்ற உண்மையினை,

'வெவ்வினையும் நீங்க விலங்கா மனம் வைத்தான்' 106

இறைவன் என்று குறிப்பிடுகிறார் ஆழ்வார் ஒருவர். வினைகள் எத்தகைய கொடிய இயல்புகளைப் பெற்றவைகள் என்பதனை 'வெவ்வினைகள்' என்ற சொல்லாலும், அதனையும் நீக்குதற்கு உறுதியான, வளையாத மனம் வேண்டும் என்பதனை 'விலங்கா மனம்' என்ற சொல்லாலும் விளக்குகிறார். மனத்தில் குறையிருந் தால் வினைகளை எப்படிப் போக்க முடியும்?

'கோடிய மனத்தால் சினத்தொழில் புரிந்து' 107

கெட்டதாகத்தான் பிரபந்தப் பாசுரம் கூறுகிறது. எனவே, கோடாத மனம் வேண்டும் வினைகளைப் போக்குதற்கு.

வினைகளை விரட்டுமளவிற்கு நம் மனத்திற்கு வலிமையை இறைவன் தருகிறான். நாம் என்ன செய்ய வேண்டும்? எப்படிச் செய்தால் அத்தகைய வலிமையை அவன் நமக்குத் தருவான்? இக் கேள்விகளுக்கும் பிரபந்தப் பாசுரம் பதில் கூறுகிறது.

'புயல் வண்ண னாரை மருவியென் மனத்து வைத்து' 108

ஆழ்வார் ஒருவர் வழிபட்டதுபோல் வழிபடவேண்டும். ஏனென்றால் இறைவன் நமக்கு மனத்தைத் தந்ததே அவனைத் தொழுவதற் காகவேதான் என்பதல்லவா ஆழ்வார்கள் முடிபு!

'மருவித் தொழும் மனமே தந்தாய்' 109

என்றல்லவா பாசுரம் பேசுகிறது! அப்படி நம் மனத்தில் புயல் வண்ணனை வைத்துப் போற்றுவோமென்றால்,

'மன மாசு தீரும்: அருவினையும் சாரா' 110

என்கிறது பிரபந்தப் பாடல் வரி. எனவே இறைவன் அருளால் அடையும் மன வலிமையினால் வெவ்வினைகளையும்கூட விரட்ட முடியும் என்ற உண்மை புலப்படுகிறது.

மனமும் பற்றுகளும் :

"பற்றற்ற கண்ணே பிறப்பறுக்கும்" 111

என்பது வள்ளுவர் வாக்கு. எனவே பற்றுகள் நம் மனத்தில் இருப்பதன் பயன் மீண்டும் பிறவியெடுக்கச் செய்வதேயாம். அப்பற்றுகளை நம் மனத்தினின்றும் என்று அகற்கின்றோமோ அன்றுதான் பிறவிப் பிணி நம்மைவிட்டு நீங்கும். பற்றுதல் என்பது மனத்தின் தன்மைகளில் ஒன்று.

பற்றுகள், அகப்பற்று, புறப்பற்று என்று இருவகைப்படும். யான் என்பது அகப்பற்று; எனது என்பது புறப்பற்று. இவ்விருவகைப் பற்றுகளுமே நமக்குத் தீங்கு பயப்பனவே! இவ்விரண்டில் ஒன்று இருப்பினும் அதனால் கேடு சூழ்ந்து பல பாவங்களைச் செய்யச் செய்கிறது. தனி மனித வாழ்விலும் சரி; சமுதாய வாழ்விலும் சரி; பற்றுகளே சங்கிலித் தொடர்போல பல பாவச் செயல்கள் செய்யத் தூண்டுகின்றன. அப்பாவச் செயல்களின் விளைவு அதற்குரிய தண்டனையைப் பெறும்பொருட்டு மீண்டும் பிறக்க நேரிடுகிறது.

பற்றுகளை விடுதலென்பது எளிய செயல் அன்றுதான். ஆனால், பிறவித் துன்பத்தினின்றும் விடுபட வேண்டுமென்றால் அவைகளை விட்டுத்தான் ஆகவேண்டும். அவ்வரிய செயல்களைச் செய்தால் வானவருக்கும் மேலான முத்தி வீடு கிடைக்கும் என்கிறார் திருவள்ளுவர்.

"யானென தென்னுஞ் செருக்கறுப்பான் வானோர்க்
குயர்ந்த வுலகம் புகும்" 112

என்பது குறள். பற்றுகளைவிட வேண்டும் என்று வலியுறுத்துபவர்களே ஒருவிதப் பற்றுத் தேவையென்றும் கூறுகின்றனர். அப்பற்று நம் மனத்தில் இருக்க வேண்டுவது மிகவும் அவசியம் என்றும் கூறுகின்றனர். ஏனென்றால், அப்பற்றின் துணைகொண்டுதான் நம்மைத் துன்பத்திற்காளாக்கும் இருவகைப் பற்றுகளையும் அகற்ற முடியும் என்பது அவர்கள் கருத்து.

"பற்றுக பற்றற்றான் பற்றினை; அப்பற்றைப்
பற்றுக பற்று விடற்கு" 113

என்பது வள்ளுவர் வாக்கு. பற்றற்றான் பற்றினைப் பற்ற

வேண்டும்; அதனால் நம்மைப் பற்றிய பற்றுகள் நீங்கும். அப்படி யென்றால் யார் அந்தப் பற்றற்றான்? இறைவனைத் தவிர வேறு யார் இவ்வுலகில் பற்றற்றவர்களாக இருக்க முடியும்? அவனருளால்தான் நம் மனப்பற்றுகள் நீங்க வேண்டும். அதனால் அவனை நம்மனம் பற்றுமாறு செய்ய வேண்டும்.

நாராயணனைத் தவிர யாரையும் தம் மனம் பற்றாது என்ற உறுதிப்பாட்டை ஆழ்வார்களிடம் அழுத்தமாகக் காண்கிறோம்.

'வேறொருவ ரோடென் மனம் பற்றாது' ...114

என்று அறுதியிட்டுக் கூறுகிறார் ஆழ்வார் ஒருவர். எதிர்மறையாக அவர் கூறுவது தமது வழிபடு தெய்வத்தின்மீது அவர்வைத்திருந்த உறுதிமிக்க பற்றினையே உறுதிப்படுத்தும்.

திருமாலின் திருவடிகளைப் பற்றாது அலையும் தமது மனத்தினை எண்ணி நொந்து வேறு ஓர் ஆழ்வார்,

'தம்மையே பற்றா மனத்தென்றும்' 115

இடர்ப்பட்டதாகக் கூறுகிறார். எனவே, இறைவனை நம் மனம் பற்றச்செய்வது, மனத்தின் மாசு நீங்குவதற்கும், இருவகைப் பற்று களும் அகல்வதற்கும் துணைசெய்யும் என்பது திவ்வியப்பிரபந்தம் உணர்த்தும் உண்மையுமாகும்.

'எ தி யானும் வேறாகி எவரும் யாதும் யானாகும்
இதய பாவனா தீதம் அருள்வாயே'......116

என்று ஆறுமுகச் செவ்வேளிடம் வேண்டுகிறார் அருணகிரிநாதர். பற்றுகள் நீங்கி, யாவினையும் பொதுவாக நோக்கும் மனப் பாங்கைத் தருமாறு அவர் வேண்டுவது, மனத்தின் மூலம்தான் பற்றுகள் வளர்கின்றன; அதை அகற்ற இறையருள் தேவையென் பதையே உணர்த்தும்.

மனமும் பக்தியும்:

பராசக்தியிடம் மிகுந்த பற்றுதல் வைத்திருந்தவன் பாரதி. தனக்குப் பாடும் ஆற்றலைத் தந்தது முதல், தான்செய்யும் அனைத்துச் செயல்களுக்கும் அவளே காரணம் என்று நம்பியவன் அவன். அதுமட்டுமன்றி, நாட்டு விடுதலைக்கும் அவள் அருள்புரிய வேண்டும் என்று எண்ணிப் பாடிய கவிஞன் அவன். உருசிய நாட்டில் ஏற்பட்ட புரட்சிக்குக் காரணம், மாகாளி பராசக்தி

அங்குக் கடைக்கண் வைத்ததுவே என்று நம்பூமளவிற்குச் சக்தியிடம் அவனுக்குப் பக்தி இருந்தது. அதனால்தான்,

''மனம், சக்தி தனக்கே கருவி யாக்கு'' 117

என்று கூறினான். இறைவனை அல்லது இறைவியைப்பற்றி எண்ணுதற்குரிய ஒரு கருவியாகவே மனத்தை ஆக்கிவிட வேண்டும் என்பது அவனது கட்டளை. அப்படி ஆக்கிய பெருமைக்குரியவர்கள் ஆழ்வார்கள். திருமாலைப் பற்றி நினைப்பதற்காகவே தங்கள் மனங்களைப் பயன்படுத்திய பாங்கை அவர்களது அருட்பாசுரங்கள் அழகுற எடுத்துரைக்கின்றன. அவர்களது ஒவ்வொரு பொறியும் கண்ணனையே வலம் வந்தது. கண் அவனது மேனியையே கண்டது; வாய் அவன் புகழினையே பேசியது; மனம் மாண்புகளையே சிந்தித்தது: இப்படித் தங்கள் வாழ்வையே திருமாலுக்காக்கி யிருந்த தன்மையைப் பிரபந்தப் பாசுரங்களில் பல இடங்களில் காணமுடிகிறது.

''கண்ணனுக் கன்றி என்மனம் தாழ்ந்து நில்லாதே'' 118

''மணிக் குன்றனையன்றி என்மனம் போற்றி
யென்னாதே'' 119

என்று கூறும் அவர்கள் உறுதிப்பாட்டை நோக்கும்போது அவர்களது பக்தியின் மேன்மையை நினைந்து நாமும் பரவசமடைகிறோம். ஆனால் குறிப்பிட்ட ஒரு சமயக் கடவுளுக்காக அவர்கள் காட்டும் பக்தியின் தீவிரம் பிறசமயக் கடவுளரை வெறுக்கும் விதத்தில் அமைந்திருப்பது சிந்தித்தற்குரியது. 'யான் எனது' மன்பன போன்ற பற்றின் சாயல் இங்கும் இருப்பது போலவே தெரிகிறது. ஆழ்வார்களின் மனத்துத் தீவிர பக்தி, பாசுரங்களில் பல இடங்களிலும் காட்டப்பட்டுள்ளது.

'மனமும் வாசகமும் செய்கையும் யானுநீ தானே' 120

'வாக்கும் மனமும் கருமமும் நமக்காங்கதே' 121

'முந்நீர் வண்ண, நின்னீரடி ஒன்றிய மனத்தால்' 122

'கண்ணகத்தும் மனத்தும் அகலாக் கொற்றவன்' 123

'வாயினாற் பாடி மனத்தினாற் சிந்திக்க' 124

என்பன போன்ற பல இடங்களைச் சான்று காட்டலாம். பாரதி கூறியதைப் போன்று, ஆழ்வார்கள் தங்கள் மனங்களைத்

கண்ணன் தனக்குக் கருவியாக்கிவிட்ட திறம் எண்ணி வியத்தற்குரியது.

கண்ணனிடத்துத் 'தூராத மனக்காதல் தொண்டர்களாக'[125] அவர்கள் விளங்கினார்கள். அதே சமயம், கண்ணன் என்கின்ற கடவுளின் உண்மை இயல்புகளையும் உணர்ந்து, தெளிந்த மனத்துடன் பக்தி செலுத்தியுள்ளார்கள்.

பொதுவாக, இறைவன் மனத்தால் தொட முடியாதவன்; பொறிகளாலும் உணராவகையில் இருப்பவன். இந்நுட்பத்தினை.

'மனனுணர் அளவிலன்; பொறியுணர் வகையிலன்' 126

என்று குறிப்பிடுகிறது பிரபந்தப் பாடல்வரி. மனத்தை இறைவனுக்குக் கோயிலாக்கு; மனத்தில் அவனைப் பற்றிச் சிந்தனை செய் என்றெல்லாம் முன்பு சொல்லப்பட்டதே! மனத்தால் உணர முடியாத தன்மை வாய்ந்த ஒருவனுக்கு எப்படிக் கோயில் கட்டுவது? என்பன போன்ற ஐயங்கள் எழுதுவது இயல்பே!

மனத்தாலும் பொறிகளாலும் உணரமுடியாத நிலையில் இறைவன் இருக்கின்றான் என்பது பொதுவான உண்மை. ஆனால் தீராக் காதலோடு அவனைச் சேரத் துடிப்போர்கள் தங்கள் மனங்களைத் தேடி அவன் வந்து அருள்புரிவான் என்பது தான் தமிழ்ச் சமயச் சான்றோர்கள் கண்ட முடிபு. அந்நிலையினையே பிரபந்தப் பாசுரங்களிலும் காண்கிறோம்.

''ஆவலன் புடையார் தம் மனத்தன்றி மேவலன்'' 127

என்று கூறும் முறையில் நமக்கு இரண்டு உண்மைகள் புலப்படுகின்றன. உண்மையான அன்போடு அவனைத் தொழுவோர் மனங்களை அவன் தேடிவருவான். அப்படிப்பட்ட மனம் இல்லாதவர்களை அவன் தேடிச் செல்வதில்லை. எனவே, இறைவன் தேடிவருமளவிற்கு இருக்க வேண்டுமென்றால் அம் மனம் 'ஆவலன்புடைய' மனமாக இருக்க வேண்டும் என்பதும் உணரத்தக்கது. மனத்திற்கு அன்பு எவ்வளவு இன்றியமையாதது என்பது நினைத்தற்குரியது.

''வாக்கினால் கருமம் தன்னால் மனத்தினால்
சிரத்தை தன்னால் வேட்கை மீதூர'' 128

இறைவனை வழிபட வேண்டும்; அப்போதுதான் அவன் நம்மனங்

களைத் தேடிவருவான் என்று பக்திசெய்யும் பாங்கும் திவ்வியப் பிரபந்தத்தில் தெளிவாகக் காட்டப்பட்டுள்ளது.

அப்படி இறைவனைப் பரவுவோர் தாம் பக்தர்கள் என்னும் தகுதியைப் பெற்றவராவர். அப்படிப்பட்ட பக்தர்களை,

'பாடு மன முடைப் பத்தர்' 129
'பரவு மன முடைப் பத்தர்' 130

என்றெல்லாம் போற்றும் இயல்புகளையும் திவ்வியப்பிரபந்தப் பாசுரங்களில் ஆங்காங்குக் காண்கிறோம்.

இதுகாறும் மனத்தின் பல்வேறு தன்மைகளையும், அம் மனத்தில் ஏற்படும் விளைவுகளையும் தனித் தனியாக ஆய்ந்தோம். உருவகங்கள் வாயிலாகவும் வேறு பிற முறை களிலும் மனத்தைப் பற்றிய சில நுட்பங்களை விளக்கியுள்ளனர் ஆழ்வார்கள். அப்படி விளக்கும்போது மனத்தின் நல்ல தன்மை களும் புலப்படுகின்றன; தீய தன்மைகளும் புலப்படுகின்றன. அவைகளைத் தனித் தனியாக இனி ஆராய்வோம்.

மனக்கடல் :

மனத்தைக் கடலாக உருவகிக்கும் பாங்கினைப் பல நூல் களிலும் பார்க்கிறோம். அம்முறையினில் ஆழ்வார்களும் பாடி யுள்ளனர். பொதுவாக, கடல் பெருமையினைக் குறிப்பதே! உலகிற்குக் காவலாய் அமைந்ததோடு விலையுயர்ந்த முத்துக் களையும் அது தன்னகத்தே கொண்டுள்ளது; உலகிற்கு நீரையும் உப்பையும் கொடுத்து உதவுகிறது. அவ்வளவு பெருமையும் மனத்திற்கும் பொருந்தும். மனமில்லையேல் பொறிபுலன்களால் பயனில்லை; அறிவில்லை; நினைவாற்றல் இல்லை; சிந்தனை யில்லை; மனித நிலையே இல்லை என்று கூறிவிடலாம்.

அதே கடல்பொங்கி எழுந்தால் எந் நிலப்பகுதியைக் காத் திருக்கின்றதோ அதனை அழித்தும்விடும்; நலம் பயக்கும் மனம் நன்னெறியில் செல்லாமல் தீ நெறியில் சென்றால் அம்மனிதனையே அழிவிற்குள்ளாக்கிவிடும். கடலில் அலைகள் ஆர்ப்பரிப்பது போன்று மனத்திலும் நினைவலைகள் ஆரவாரிக்கின்றன. அமைதி யாகக் கடல் இருந்தால் நலம் பயக்கும்; மனத்திற்கும் அதே

நிலைதான். இதையெல்லாம் உணர்ந்துதான்,

'மனக்கடலில் வாழ வல்ல' 131

ஆற்றலைக் கண்ணனிடம் வேண்டிப் பாடுகிறார் ஆழ்வார். 'மனக் கடலுள் அழுந்தி'[132] விடாமல் தன்னைக் கரையேற்றிக் காக்கு மாறும் கண்ணனை மன்றாடி வேண்டுகிறார் அவர். கடலினின்றும் கரையேறத் தெப்பம் பயன்படுவது போல மனக்கடலினின்றும் கரையேற இறைவனாகிய தெப்பம் தேவையென்பதும் புலப்படும்.

மனக்கோயில் :

இறைவன் எழுந்தருளி இருக்கும் இடமே கோயில். இறைவ னால்தான் கோயிலுக்குப் பெருமை. ஆனால் கோயிலைக் காணும்போதே இறைவனைக் காண்பது போன்ற உணர்வு நம்முள் எழுகிறது. அதுபோன்றதே மனமும். இறைவன் விரும்பு கின்ற உண்மையான கோயில்கள் மனித மனங்களே! மனங்களில் இறைவன் எழுந்தருள முடியாதவாறு மாசு படிந்திருப்பதனால் பலருடைய மனக்கோயில்கள் தெய்வமில்லாத வெறுங் கோயில் களாகவே காட்சியளிக்கின்றன. கோயில்களைப் போலவே நம் மனங்களையும் தூய்மையாக வைத்திருக்க வேண்டும் என்ற குறிப்பும் இங்கு நினைந்தற்குரியது.

இறைவனை எவர் அன்புடன் நினைக்கின்றார்களோ அவர்கள் மனங்களாகிய கோயில்களில் அவன் எழுந்தருளுவான் என்பதனை,

'நினைத்தவர் மனங்கொண்ட கோயில்' 133

என்று குறிப்பிடுகிறது பிரபந்தப் பாசுர வரி. மனத்தைக் கோயி லாக உருவகப்படுத்தியது மனத்தின் பெருமைகளைக் குறிப்பதற் காகவேயாம்.

கதவு மனம் :

உருவகங்கள் வாயிலாக விளக்கியது போன்று உவமைகளின் வாயிலாகவும் மனத்தின் தன்மைகளை ஆழ்வார்கள் விளக்கி யுள்ளனர். அவ்வுவமைகளில் குறிப்பிடத்தக்கது கதவு உவமை யாகும். வீட்டிற்குள் நுழையும் வாசற்படியில் இருப்பது கதவு. அக் கதவு திறந்திருந்தால்தான் உள்ளே நுழைய முடியும். அது போன்ற அமைப்பு மனத்திற்கும் உண்டு. மனக் கதவு மூடப் பட்டிருந்தால் உள்ளே இறைவன் அல்லது எவருமே நுழைய

முடியாது. கதவுகள் சரியாகப் பொருத்தி வைக்கப்படா விட்டாலும், அல்லது அவைகள் பழுதடைந்துவிட்டாலும் வீட்டிற்குப் பாதுகாப்பு இல்லை. அது போன்று, மனம் சரியாக இயங்கவில்லை, அல்லது நோய்வாய்ப்பட்டுவிட்டது என்றால் அம் மனத்தையுடைய மனிதனின் வாழ்வே பாதிக்கப்பட்டுவிடும். இதனையெல்லாம் உணர்ந்துதான்,

"கதவு மனமென்றும் காணலா மென்றும்" 134

பாடி வைத்தார் ஆழ்வார் ஒருவர். இவ்வுவமை மனத்தின் பொதுத் தன்மையினை உணர்த்தும்.

மனக்கேதம் :

"உனக்கேஎன் ஆவியும் உள்ளமும் தந்தேன்;
மனக்கேதம் யாவினையும் மாற்றி" அருள்க 135

என்று விநாயகரிடம் வேண்டி நின்றார் பாரதியார். தனது மனத்துக் குறைபாடுகள் நீங்கி, அது தூய்மையடைவதற்காகத் தனது ஆவியைக்கூடக் கொடுப்பதாக அவர் பாடியிருப்பதன் நோக்கம் உயிரைக் காட்டிலும் மனத்தூய்மை பெறுவது முக்கியம் என்பதை வலியுறுத்தவே. மனமாசுகளுடன் உலகில் வாழ்ந்து பாவங்களைப் பெருக்கிக் கொண்டிருப்பதைக் காட்டிலும் இறந்து விடுவது பன்மடங்கு நலம் பயக்குமே! மேலும்,

'மாசற்றார் மனத்துளானை' 136

என்றல்லவா இறைவனைக் குறிப்பிடுகின்றார்கள்! எனவே நம் மனத்துக் குறைபாடுகள் எல்லாம் மாறவேண்டுவது அவசியம்.

'மனக்கேதம் சாரா மதுசூதன் றன்னை' 137

என்று திருமாலின் பெருமையைப் பேசுகிறார் ஆழ்வார். மதுசூதனனாகிய திருமாலின் மனத்து எவ்விதக் குறைபாடுகளும் சாரமாட்டா. குறைபாடுகள் இல்லாத மனத்தை அவன் பெற்றிருப்பதனால்தான் குறைபாடுகள் உள்ள மனங்களையுடைய மனிதர்களை அவனால் காக்க முடிகிறது. நோயிலிருந்து விடுபட்ட, அல்லது அந்நோயின் தாக்குதலுக்கே ஆளாகாத ஒரு மருத்துவரால்தான் அந்நோயினால் பாதிக்கப்பட்ட ஒரு மனிதனைக் காக்க முடியும். இந் நுட்பத்தினையே அப் பாசுர வரி குறிப்பிடுகிறது.

மனக்கேதம் உடைய ஒரு மனிதன் மதுசூதன் திருவடிகளைச் சாரமுடியாது என்று அவ்வரிக்குப் பொருள் கொண்டாலும் அமையும். மனத்தைப்பெற்றதன் பயனே இறைவனைப் பற்றி நினைக்கவும், அதை அவன் உறையும் கோயிலாக்க் ஆக்கவும் தானே!

'மாதவனே யென்னும் மனம்படைத்து' 138

என்றல்லவா பாசுரம் கூறுகிறது! எனவே மனத்தில் உள்ள குறைபாடுகள் அனைத்தையும் நீக்கி அதைத் தூய்மையோடு வைத்திருத்தல் வேண்டும் என்பது பெற்றாம்.

மனப்போர் :

போர்கள் வெளியுலகில்தான் நடக்கும் என்பதல்ல: மனத்திற்கு உள்ளேயும் அது நடப்பதுண்டு. வெளியுலகில் நடக்கும் போர்களால் அப்போரை நடத்துவோர்க்கும் பிறர்க்கும் கேடு சூழ்வது போன்று மனப் போரினால் அம் மனத்தைப் பெற்றவனுக்கும் அவனால் பிறனுக்கும் கேடு சூழ்வது உறுதி. மனத்தில் யார் யாருக்குப் போர் நடக்கும்? தலைவனுக்கும் அவனுக்குக் கீழ்ப் படித்து நடப்போர்க்கும் போர் நடப்பது போன்று, தந்தைக்கும் மக்களுக்கும் போர் நடப்பது போன்று மனத்துக்கும் அதற்குக் கீழ்ப்படிந்து நடக்க வேண்டிய (பொறிகளுக்கும்) புலன்களுக்கும் தான் போர் மூள்கிறது. மனம் ஒன்றைப் பார்க்கக்கூடாது என்று நினைக்கும். அதற்குரிய காரணத்தை அது அறியும். ஆனால் கண், அதைமீறி ஒரு காட்சியைக் காணத்துடிக்கும். அதுபோல், தீயசொற்களைப் பேசக் கூடாது என்பதை மனம் அறியும். ஆனால் வாய் அதை மீறிப் பேசித் துன்பங்களை விளைவிக்கும். இதனை உணர்ந்துதான் 'ஐம்புலக் கள்வர்கள்' 'ஐம்புலக் காம வேடர்கள்' என்றெல்லாம் அப்புலன்களைப் பிற நூலாரும் இழித்துரைத்துள்ளனர். சில சமயங்களில் மனத்திற்குள்ளாகவே உள்நாட்டுப் போர் போன்று நடப்பதுண்டு. ஒரு ஒரு செயலைச் செய்யலாமா? வேண்டாமா? என்று நாமே குழம்பும் நிலையும் உண்டு. அது சிந்திக்கத் தொடங்கி, முடிவு காண்பதற்கு இடைப்பட்ட மனநிலையாகும். அதனையும் மனப் போராட்டம் என்று சொல்வதுண்டு. அத்தகைய போராட்டங்

களில் நம்மால் அதற்குத் தீர்வுகாண முடியாதபோது இறைவன் மீது பாரத்தைப் போட்டுவிடுகிறோம். அப்போரை முடிக்கும் வகையினை அவனே அறிந்துள்ளான் என்பது சமயச்சான்றோர் தம் கொள்கை.

'மனப்போர் முடிக்கும் வகை' 139 யினைத் திருமால் மட்டுமே அறிவான்; எனவே அவனிடமே சரணடைவோம் என்று கூறுகிறது திவ்வியப் பிரபந்தப் பாசுர வரி.

மனச்சுடர் :

மனத்தால் நன்மைகளும் விளைகிறது; தீமைகளும் விளைகிறது. அதில் உயர்ந்த சிந்தனைகள் தோன்றுவதும் உண்டு; தீய நினைவுகள் அரும்புவதும் உண்டு. எனவேதான் அது ஒளி வீசும் ஆலயமாகவும் திகழ்கிறது; சிலபோது இருட் குகையாகவும் இருக்கிறது. எல்லோர் மனத்திலும் சுடர் இருக்கிறது; ஆனால் பலர் மனங்களில் அது ஒளிகுன்றிக் காணப்படுகிறது. சுடர் ஒளிவீசி எரிவதற்கு எண்ணெய் வார்க்க வேண்டும்; தூண்டுகோல் வேண்டும். உயர்ந்த எண்ணங்கள், நல்ல நினைவுகள் போன்றவை எண்ணெயாக அமையலாம். ஆனால், அதற்குத் தூண்டுகோலாக இருப்பது இறைவன் கருணையே! இவ்வுண்மையை,

''வேங்கடமே வானோர் மனச்சுடரைத் தூண்டும் மலை'...140

என்று கூறுகிறது திவ்வியப் பிரபந்தம். வானோர் மனச்சுடரைத் தூண்டுவதற்கே தூண்டுகோல் தேவைப்படுகிறது என்றால் மனித மனங்களைப் பற்றிக் கூறத் தேவையில்லை. வேங்கட மலையிலே எழுந்தருளியிருக்கும் திருமால் தேவர்கள், மனிதர்கள் ஆகிய அனைவரின் மன இருளையும் போக்கி அவர்களது மனச்சுடர் ஒளி வீச வழி செய்கிறான் என்பது ஆழ்வார்களது நம்பிக்கை.

மனத்'தேன்' :

மனக் கோயிலில் குடிகொண்டு நம்மை வாழ்விக்கும் இறைவன் நம் மனச் சுடரைத் தூண்டி ஒளி வீசச் செய்வது போலவே இனிக்கும் தேனாகவும் மனங்களில் திகழ்கிறான்.

'அருள் பழுத்த பழச் சுவையே, கருப்பே, தேனே
ஆரமிர்தே...... 141

என்று இறைவனைப் போற்றிப் பரவினார் இராமலிங்க அடிகளார். வாயினால் உண்ணப்படும் தேனாக அவன் பெருங் கருணை விளங்கும் விதத்தை அவர் காட்டினார். ஆனால் அவன் மனத்தினால் அருந்தப்படும் தேனாகவும் விளங்கும் நுட்பத்தைப் பிரபந்தப் பாசுரம் விளக்கக் காண்கிறோம்.

தேன் தித்திப்பானது; மேலும் பருக வேண்டும் என்ற விருப்பத்தைத் தோற்றுவிப்பது. அதே சமயம், உடம்பிலுள்ள நோய்களைப் போக்கிக் குணப்படுத்தும் தன்மையினையும் கொண்டது. அது போலத்தான் இறைவனும். அவன் திருநாமத்தை உச்சரிக்கும்போது வாய்மட்டுமல்ல; மனமும் இனிக்கிறது. அவன் அருளால் உடல் நோய்கள் மட்டுமல்ல; மன நோயும் மறைகிறது. இவ்வுண்மையினை ஆழ்வார்கள் உணர்ந்திருந்தனர்.

'தன்னடியார் மனத்தென்றும் தேனாகி'[142] த் திருமால் விளங்குகின்றார் என்று கூறுகிறது திவ்வியப் பிரபந்தப் பாசுர வரி. ஈண்டு, 'தன்னடியார்' என்ற சொல் சிந்தித்தற்குரியது. அவன்மீது மாறாக் காதல் கொண்டு அவனது அன்பிற்குரிய அடியவர்களில் ஒருவராக ஆகவேண்டும்; அப்போதுதான் நம் மனத்தில் அவன் தேனாக இனிப்பான்.

மூவர் மனங்கள் :

நாலாயிரத் திவ்வியப் பிரபந்தம் நாரணனின் பெருமை பேசுவது; அவனருளை வேண்டித் தொழுதும் அழுதும் பாடிய ஆழ்வார்கள் மன நிலைகளைப் பிரதிபலித்துக் காட்டுவது. மனங்களை எப்படியெல்லாம் தூய்மையுடன் போற்றிப் பாதுகாப்பது? தீய மனங்கள் திருந்திக் கடைத்தேறும் வழிகள் யாவை என்பனவற்றை விளக்கிக் கூறுவது. எனவே இந்நூலில் பெரும்பாலும் பேசப்படுவது மனித மனங்களைப் பற்றியே! ஆனால் இடையிடையே திருமால் மனநிலையினையும் தேவர்கள் மனங்களைப் பற்றியும்கூட ஆழ்வார்கள் குறிப்பிட்டுள்ளார்கள்.

"ஆர்அறிவார் அவன்தன் கள்ளமாய மனக்கருத்தே" 143
"வெகுளாது மனக்கொள் எந்தாய்" 144

போன்ற இடங்களில் திருமாலின் மனநிலையினைப் பற்றிப் பேசி

யுள்ளதையுணர்கிறோம்.

'வேங்கடமே வானோர் மனச்சுடரைத்
தூண்டும் மலை' 145

என்று குறிப்பிடும் இடத்தில் தேவர்கள் மனத்தைப்பற்றிய குறிப்பு வருகிறது.

நூலில் பல இடங்களில் மனித மனங்களைப் பற்றிய குறிப்பு வந்துள்ளது. மனித மனங்களின் பல்வேறு தன்மைகளையும், அத் தன்மையினை அம்மனங்கள் அடைவதற்கான காரணங் களையும் தெளிந்து கூறியுள்ள ஆழ்வார்கள், தீயமனம் தூய்மை யடைதற்குரிய நெறிகளையும் காட்டியுள்ளார்கள். தாம் அறியாத வானோர் மனங்களைப் பற்றியும் திருமாலின் மனநிலை யினைப் பற்றியும்கூட அவர்கள் சிந்தித்திருப்பது மனத்தைப்பற்றி யறியும் அவர்களது ஆர்வத்தினையே புலப்படுத்தும். தாம் தம்முடைய வாழ்க்கை அனுபவத்தில் தம்மினும் உயர்ந்தவரிடம் 'வெகுளாது மனக்கொள்ளும்' என்று வேண்டுவது போலவே இறைவனிடமும் வேண்டியுள்ள போதிலும் இறைவன் மனத்தை அறியும் ஆற்றல் தமக்கில்லை என்பதனையும் உணர்ந்தே யுள்ளனர். அதனால்தான் "ஆர்அறிவார்" என்ற கேள்வியையும் எழுப்பி ஒருவராலும் அறிய முடியாது என்ற குறிப்பினையும் காட்டியுள்ளார் ஆழ்வார்.

'திரு' மனமும் 'சிறு' மனமும் :

மனத்தைப் பெற்றிருப்பவன் மனிதன். மனம் என்ற சொல்லி லிருந்தே மனிதன் என்ற சொல் அமைந்திருத்தல் வேண்டும். எனவே, பிற உயிரினங்களுக்கில்லாத மனம் மனிதனுக்கு மட்டுமே தனிச் சொத்தாக விளங்கி அவன் மாண்படையத் துணை செய்கிறது. ஆறறிவு உயிராக மனிதனை வகைப்படுத்திய தொல்காப்பியர், 'பிறவும் உளவே' என்று கூறியதால் அப் பட்டியலில் தேவர்களையும்கூட உரையாசிரியர்கள் சேர்த்துக் கொண்டார்கள். ஆனால் எந்தத் தெய்வத்திற்கும் மனம் இருப்ப தாகவோ, அது எப்படி இருக்கும் என்றோ எவரும் அறிந்து கூறிய தில்லை. தெய்வத்திற்கு இருப்பதாகத்தாம் கருதும் மனம் மனித மனங்களிலிருந்து வேறுபட்டது என்பதை யுணர்த்த நினைத்

திருக்கவேண்டும். அதனால்தான் திருமாலின் மனத்தைக் குறிப்பிடும் ஓர் இடத்தில், "நின் திருமனத்து"[146] என்று 'திரு' என்ற அடைச் சொல்லை மனத்துடன் சேர்த்துக் குறிப்பிடுகிறார். நுண் பொருளாகிய மனத்திற்குத் 'திரு' என்ற அடைச் சொல்லைச் சேர்த்திருப்பது அம்மனத்தின் சிறப்பினைக் காட்டவே என்றுதான் நாம் கருதமுடிகிறது.

'திரு'மனத்தை ஓர் ஆழ்வார் குறிப்பிடுவது போலச் 'சிறு' மனத்தையும் வேறோர் ஆழ்வார் குறிப்பிடுகிறார். மனத்தின் அளவில் சிறியது என்றோ பெரியது என்றோ பகுத்துப் பார்க்க முடியாது. அதன் தன்மையைப் பொறுத்தே சிறியது என்றும் பெரியது என்றும் பேசப்படுகிறது. இங்கு மனத்தின் சிறுமைக்கு ஆழ்வார் காட்டும் காரணம், அறிவற்ற தன்மையேயாகும். மனிதனுக்குள்ள ஆறாம் அறிவே, அவனது மனத்தின் துணையால் அவன்பெறுவது என்றுதானே தொல்காப்பியம் கூறுகிறது! அந்த மனம் மட்டும் இல்லை என்றால் ஐந்தறிவுடைய விலங்கிற்குச் சமமாகத்தானே மனிதனும் இருந்திருப்பான்? எனவே, மனத்தையுடைய மனிதன் ஆறாம் அறிவின் உயர்வு தோன்றுமாறு சிறந்து விளங்கவேண்டும். அந்நிலையில் குறை ஏற்படும்போது அக்குறை அம் மனிதனது மனத்திற்குத்தான் போய்ச் சேருகிறது. அதனால் தான் அப்படிப்பட்ட மனமுடையோரைக் குறிப்பிடும் விதத்தில் 'அறிவில் சிறு மனத்து'[147] என்ற சொற்றொடரைப் பயன்படுத்தியுள்ளார், நுட்பமுணர்ந்த ஆழ்வார்

மனஒருமைப்பாடு :

மனத்திற்கும் அறிவிற்கும் உள்ள நெருங்கிய தொடர்பினைக் கண்டோம். நாம் அறிவு பெறுவதற்கு மூலகாரணம் நம் மன ஒருமைப்பாடுதான். மனஒருமைப்பாடு காணார் எவ்விதத்திலும் அறிவுபெற முடியாது. 'ஒரு மனிதன் அறிவில் உயர்ந்திருப்பதற்கும் மற்றொருவன் தாழ்ந்திருப்பதற்கும் காரணம், அவ்விருவரது மனஒருமைப்பாட்டில் உள்ள ஏற்றத்தாழ்வுகளே' என்று கூறுகிறார் சுவாமி விவேகானந்தர். மனத்தை ஒருமுகப்படுத்தும் போதுதான் எதனையுமே நம்மால் சரிவரச் செய்யமுடியும். கண்மாயிலிருந்து ஒரு வாய்க்கால் வழியாக நீர் வரும்போது குறிப்பிட்ட வயலில் பாய்ந்து பயிர்செழித்து வளர்கிறது. பலவாய்க்கால்

களிலும் நீர் சிதறியோடும்போது எவ்வயலும் பயனடைவதில்லை, அது போலத்தான் மனஒருமைப்பட்டால் நாம் அடையும் பயன்களும்,

மன ஒருமைப்பாடு ஏற்படும் போதுதான் இறைவன் அம்மனத்தில் எழுந்தருளுகிறான் என்ற ருட்பத்தை,

'ஒருமை மனத்தினுள் வைத்து உள்ளம் குழைந்து
எழுந்தாடி' 148

என்று குறிப்பிடுகிறது திவ்வியப் பிரபந்தம்.

மன ஒருமைப்பாடு ஏற்படும் போது இறையனுபவமும் ஏற்படுகிறது; அந்நிலையில் உள்ளமும் குழைகிறது; அம்மகிழ்ச்சியால் எழுந்து ஆடியதாக அப்பாசுரவரி புலப்படுத்துகிறது.

மன ஒருமைப்பாடு காண்பதற்கு அதைக் கட்டுப்படுத்தும் ஆற்றல் கைவரவேண்டும். அது எப்படி இயலும் என்று விளக்குகிறார் சுவாமி விவேகானந்தர். ''மனம் எவ்வளவு தூய்மையாக இருக்கிறதோ அவ்வளவு அதைக் கட்டுப்படுத்துவது எளிது. மனமானது, அதில் எழும் ஒவ்வொரு சிந்தனையையும் பற்றிக் கொள்கிறது; அச்சிந்தனையை வளர்ந்துக் கொண்டே போகிறது. எவ்வளவுக் கெவ்வளவு கீழான நிலையில் மனம் இருக்கிறதோ, அவ்வளவுக்கவ்வள்வு அதைக் கட்டுப்படுத்துவது கடினமாகும். ஒழுக்கமற்ற மனிதன் மனோ தத்துவ சாஸ்திரத்தைக் கற்பதற்குத் தனது மனத்தை ஒருக்காலும் ஒருமித்து ஈடுபடுத்த முடியாது'[149] என்று அவர் விளக்குகிறார்.

நம்முடைய மனத்தை நாம் கட்டுப்படுத்தி, அதனால் அரிய பயன்களை அடைய வேண்டுமென்றால் மனத்திலுள்ள மாசுக்களைப் போக்க வேண்டும். அப்போதுதான் மன ஒருமைப்பாடும் எளிதில் ஏற்படும்.

அடிக்குறிப்பு விளக்கம்

1. நாலாம் ஆயிரம்
2. பாரதியார் கவிதைகள்
3. தொல்காப்பியம் – மரபியல்
4. திருநாவுக்கரசர் தேவாரம்

5.	இரண்டாம் ஆயிரம்		9–8–4
6.	,,		9–10–1
7.	நாலாம் ஆயிரம்		8–1–8
8.	,,	,,	
9.	அண்மைக் காலத்து இந்திய மெய்ப்பொருளியல் –		பக்; 141
10.	இரண்டாம் ஆயிரம்		3–8–9
11.	,,		5–10–9
12.	,,		3–2–6
13.	திருக்குறள் – கடவுள் வாழ்த்து		
14.	இரண்டாம் ஆயிரம்		7–3–6
15.	,,		7–8–5
16.	,,		10–4–10
17.	நாலாம் ஆயிரம்		6–4–7
18.	,,		10–7–8
19.	முதல் ஆயிரம்		4–2–10
20.	,,	பெருமாள் திருவந்தாதி	1–7
21,	,,	,,	
22.	திருச்சந்த விருத்தம்		78
23.	பெருமாள் திருவந்தாதி		6–3
24.	இரண்டாம் ஆயிரம் – பெரிய திருமொழி		1–6–6
25.	,,	,,	2–6–6
25.	,,	,,	3–10–7
27,	,,	,,	5–10–1
28.	,,	,,	7–9–1
29.	,,	,,	9–1–1
30.	,,	,,	11–3–6
31.	மூன்றாம் ஆயிரம் – 3ஆம் திருவந்தாதி		79
32.	,,	நான்முகன் ,,	81
33.		பெரிய திருமடல்	
34.	நாலாம் ஆயிரம்		3–6–7
35.	,,		5–2–6
36.	,,		6–1–7

37.	இரண்டாம் ஆயிரம்		4-3-5
38.	,,		11-8-2
34.	நாலாம் ஆயிரம்		10-3-6
40	,,		10-5-1
41.	முதலாயிரம்		4-2-10
42.	,,	பெருமால் திருமொழி	1-7
43.		திருச்சந்த விருத்தம்	78
44.	திருக்குறள் – ஊக்கமுடைமை		
45.	மூன்றாம் ஆயிரம்—3-ஆம் திருவந்தாதி		79
46.	இரண்டாம் ஆயிரம்		4-3-5
47.	பெருமாள் திருமொழி		1-7
48.	2ஆம் ஆயிரம்		1-6-6
49.	,,		3-10-7
50.	,,		4-3-5
51.	நாலாம் ஆயிரம்		5-2-7
52.	இரண்டாம் ஆயிரம்		11-3-5
53.	நாலாம் ஆயிரம்		10-3-6
54.	முதல் ஆயிரம்		3-6-3
55.	,,		5-1-2
56.	,,	திருப்பாவை	-5
57.	,,	நாச்சியார் திருமொழி	12-7
58.	,,	திருச்சந்த விருத்தம்	-21
59.	இரண்டாம் ஆயிரம்–பெரியதிருமொழி		1-1-1
60.	,,		3-7-10
61.	,,		3-10-5
62.	மூன்றாம் ஆயிரம் – திருவிருத்தம்		34
63.	,,	பெரிய திருமால்	
64.	நாலாம் ஆயிரம்		1-1-1
65.	முதலாயிரம் – நாச்சியார் திருமொழி		4-8
66.	,,	திருமாலை	22
67.	இரண்டாமாயிரம் – பெரிய திருமொழி		1-1-3
68;	,,		7-5-4
69.	நாலாமாயிரம்		3-5-10

70. மூன்றாமாயிரம் – பெரிய திருமடல்
71. நாலாமாயிரம் 9–8–1
72. இரண்டாமாயிரம் 7–3–5
73. திருக்குறள் – பண்புடைமை
74. மூன்றாம் ஆயிரம் – பெரிய திருமடல்
75. நாலாம் ஆயிரம் 2–3–8
76. முதல் ஆயிரம் 10–2–7
77; தொல்காப்பியம் – செய்யுளியல் 200
78. நாலாம் ஆயிரம் 1–5–2
79. ,, 1–7–4
80. ,, 1–1–1
81. வாரியார் விருந்து – கனவு
82. திருக்குறள் அறிவுடைமை
83. வாரியார் விருந்து–கனவு
84. இரண்டாம் ஆயிரம் 8–5–9
85. திருக்குறள்
86. முதல் ஆயிரம் 3–6–3
87. ,, திருப்பாவை –5
88. இரண்டாம் ஆயிரம் 9–5–10
89. ,, (திருநெடும்) 22
90. நாலாம் ஆயிரம் 3–3–9
91. இரண்டாம் ஆயிரம்–பெரிய திருமொழி 1–1–8
92. ,, ,, 5–6–9
93. திருக்குறள்–நீத்தார் பெருமை
94. ,, பரிமேலழகர் உரை
95. இரண்டாமாயிரம் 2–4–9
96. நாலாம் ஆயிரம் 9–5–4
97. ,, 8–1–8
98. ,, 10–7–8
99. இரண்டாம் ஆயிரம் (திருக்குறுந்) 4
100. சிலப்பதிகாரம்
101. முதல் ஆயிரம்–பெருமாள் திருவந்தாதி 9–3
102. ,, ,, 9–4

103.	நாலாம் ஆயிரம்	9-3-5
104.	புறநானூறு	
105.	முதல் ஆயிரம்–திருச்சந்த விருத்தம்	99
106.	மூன்றாம் ஆயிரம்–நான் முகன் திருவந்தாதி	77
107.	இரண்டாம் ஆயிரம்–பெரிய திருமொழி	1–6–6
108.	,, திருக்குறுந்தொகை	5
109.	நாலாம் ஆயிரம்	2–8–3
110.	மூன்றாம் ஆயிரம்–முதல் திருவந்தாதி	43
111.	திருக்குறள்	
112.	,,	
113.	,,	
114.	முதல் ஆயிரம்–பெரி–திருமொழி	5–1–2
115.	இரண்டாம் ஆயிரம்	11–3–5
116.	திருப்புகழ்	
117.	பாரதியார் கவிதைகள்	
118.	முதலாயிரம்	7–3–4
119.	,,	7–3–9
120.	நாலாம் ஆயிரம்	8–1–8
121.	,,	9–5–4
122.	மூன்றாம் ஆயிரம் - திருவெழுகூற்றிருக்கை	
123.	இரண்டாம் ஆயிரம்	9–5–10
124.	முதல் ஆயிரம் - திருப்பாவை	5
125.	,, பெருமாள் திருவந்தாதி	1–9
126.	நாலாம் ஆயிரம்	1–1–2
127.	முதல் ஆயிரம் - நாச்சியார் திருமொழி	4–8
128.	இரண்டாம் ஆயிரம் – திருக்குறுந்தொகை	4
129.	முதல் ஆயிரம் - திருப்பாவை	4
130.	,,	4–2–10
131.	,,	5–4–9
132.	,,	5–3–7
133.	இரண்டாம் ஆயிரம்	9–8–4
134.	மூன்றாம் ஆயிரம் - நான்முகன் திருவந்தாதி	81
135.	பாரதியார் கவிதைகள்	
136.	முதல் ஆயிரம் - திருச்சந்த விருத்தம்	22

137.	மூன்றாம் ஆயிரம் – நான்முகன் திருவந்தாதி	61
138.	,, இரண்டாம் திருவந்தாதி	44
139.	நான்முகன் திருவந்தாதி	24
140.	முதல் திருவந்தாதி	26
141.	திருவருட்பா	
142.	இரண்டாம் ஆயிரம்	5–6–3
143.	நாலாம் ஆயிரம்	2–2–8
144	இரண்டாம் ஆயிரம்	6–2–7
145.	மூன்றாம் ஆயிரம் - முதல் திருவந்தாதி	26
146.	இரண்டாம் ஆயிரம்	2–3–7
147.	மூன்றாம் ஆயிரம் – பெரிய திருமடல்	
148.	நாலாம் ஆயிரம்	3–5–10
149.	அண்மைக் காலத்து இந்திய மெய்ப்பொருளியல்	

நெஞ்சம்

முன்னுரை :

மனத்தின் நிலைகளில் ஒன்றனை யுணர்த்தும் இச்சொல் ஆழ்ந்த பொருளுடையது. 'மனம்' என்ற சொல்லைக்கூட வட சொல்லின் அடியாகப் பிறந்தது என்று வாதிடுவோர் உண்டு. ஆனால் இச்சொல் தூய தமிழ்ச் சொல். தமிழரின் மனம் எத்துணைப் பண்பட்டது என்பதனையும் அம்மனத்தின் உயர் வினையும் இச்சொல் உணர்த்துகிறது. மனத்தின் கசிந்த, உருகிய அல்லது நைந்த நிலையினை இச்சொல் உணர்த்தி நிற்கிறது. இச் சொல்லை ஆக்கியிருக்கும் நுட்பமும், ஏற்ற இடங்களில் பயன்படுத்தும் பாங்கும் தமிழர் மனத்தின் இரக்க உணர்வினையும், பிறருக்காக வாழும் பெருந்தன்மையினையும், மென்மைத் தன்மை யினையுமே வெளிப்படுத்துகிறது. ஒரு மொழியில் உள்ள சொல்லின் அமைப்பு, தன்மையினைக் கொண்டும், அச் சொல்லை எந்த அளவு இலக்கியங்களில் பயன் படுத்துகின்றனர் என்பதனைக் கொண்டும் அம் மொழி பேசும் மக்களின் மாண்புகளை உய்த்துணர முடியும். அதற்கு 'நெஞ்சம்' என்ற தமிழ்ச் சொல்லும் ஓர் சான்று.

மனத்தின் நைந்த நிலையினையே இச்சொல் உணர்த்துகிறது. நைந்து, நைஞ்சு, நெஞ்சு என்ற அடிப்படையில் இச்சொல் அமைந்திருக்க வேண்டும்.

'நைஞ்சு நைஞ்சு நின்றுள் குளிர்வார்க்கெலாம்' 1

'நைஞ்சேன் நாயேன் ஞானச் சுடரே' 2

என்றெல்லாம் பிற இலக்கியங்களில் எடுத்தாளப்பட்டுள்ள நிலை இச் சொல்லின் அமைப்பையும், தன்மையினையும் அறியத் துணை செய்கிறது. மெழுகு உருகும்போதுதான் ஒளியைப் பெற

முடிகிறது. மனம் நைந்து உருகும்போதுதான் அன்பு, அருள் போன்ற இனிய பண்புகள் வெளிப்படுகின்றன. தன்னைப் போலப் பிறரை நேசிக்கும் தன்மை உருகும் மனமுடையவர்கட்கே உண்டு. தமிழில் 'நெஞ்சம்' என்ற சொல் புலப்படுத்தும் மன நிலை உலக மாந்தர் அனைவர்க்கும் இருக்குமென்றால் அன்பால் இவ்வையம் தழைத்து ஓங்கும்; போரும் பூசலும் நேரவேண்டிய நிலை உருவாக மாட்டாது.

மனம் உருகிய நிலையினைத்தான் நெஞ்சம் என்ற சொல்லால் திவ்வியப் பிரபந்தமும் குறிப்பிடுகிறது.

'நெஞ்சுருகிக் கண்பனிப்ப நிற்கும்' 3

'கேட்குந் தோறுமென்னெஞ்சம் நின் தனக்கே
கரைந்துருகும்' 4

'என்நெஞ்சை யுருக்குங்களே' 5

என்பன போன்ற பல சான்றுகளைக் காணமுடிகிறது.

'அன்பிற்கும் உண்டோ அடைக்குந்தாழ்? ஆர்வலர்
புன்கண்நீர் பூசல் தரும்' 6

என்று குறிப்பிடுகிறார் திருவள்ளுவர். மனத்தில் அன்பு இருக்கும் நிலையினை, கண்ணிலிருந்து வெளிப்படும் நீரே புலப் படுத்திவிடுமாம். கண்ணிலிருந்து எப்போது நீர் சிந்துகிறது? நெஞ்சு உருகும் நிலை ஏற்படும்போதுதான் என்று விளக்குகிறது திவ்வியப் பிரபந்தம். எனவே, நெஞ்சம் உருகும் நிலையுடையோர் களே அன்புடைய சான்றோர்களாகத் திகழ்வர் என்பது உண்மை.

தண்ணீரைக் கொண்டு உப்பைக் கரைப்பதுபோல் எதனையும் கொண்டு நெஞ்சைக் கரைக்க வேண்டுவதில்லை. பிறர் துன்பத் தைக் காண்கின்ற பொழுதே நெஞ்சம் கரையத் தொடங்கி விடுகிறது. காணக்கூட வேண்டுவதில்லையாம்; கேட்டாலே போதுமாம்; நெஞ்சம் கரைந்து உருகிவிடுமாம். திருமாலின் திருநாமங்களைப் பிறர் கூறக் கேட்ட அளவிலேயெ தமது நெஞ்சம் கரைந்து உருகியதாகக் குறிப்பிடும் ஆழ்வாரின் அனுபவத்தை மேற்கண்ட சான்றின் மூலம் உணர்கிறோம்.

தமது நெஞ்சம் உருகவேண்டு மென்பதே ஆழ்வார்களின் ஆசை. எனவேதான் உருகாத நிலையிலுள்ள தமது நெஞ்சை உருக்க வேண்டுமென்று உருகி வேண்டுகிறார் ஆழ்வார் ஒருவர்.

நெஞ்சம் என்ற இச்சொல் நெஞ்சு, நெஞ்சகம் என்று திரிந்த நிலைகளிலும் திவ்வியப் பிரபந்தத்தில் எடுத்தாளப் பட்டுள்ளது.

(எ-டு) 'நில்லாதென் னெஞ்சம்' ...7

'நேமிசேர் தடங்கையினானை நினைப்பிலா வலிநெஞ்சு' ...8

'என்னெஞ்சகம் கோயில் கொண்ட பேரருளாளன்' ...9

நெஞ்சம் மென்மைத் தன்மையுடையதே. ஆனால் அதை வலிய நெஞ்சம் என்று குறிப்பிடுவதற்குரிய காரணத்தையும் அதே பாசுரவரியில் காணமுடிகிறது. நெஞ்சத்தின் தன்மைகளில் ஒன்று, நினைப்பது. அந்நினைவும் இறைவனைப் பற்றியதாக இருக்கும் போதுதான் நினைவிற்கும் சிறப்பு; அந்நெஞ்சத்திற்கும் சிறப்பு. அச்சிறப்பினை அடையாத நெஞ்சம் வலிய நெஞ்சமே என்பது ஆழ்வார்களது கருத்து.

'நெஞ்சகம்' என்ற சொல் திவ்வியப் பிரபந்தத்தில் பயன்படுத்தப் பட்டுள்ள முறை பிற இலக்கியங்களினின்றும் வேறுபட்டுள்ளது. இறைவன் எழுந்தருளிய இடமாக நெஞ்சம் குறிப்பிடப் பெறும் இடங்களில் மட்டுமே நெஞ்சகம் என்ற சொல்வழக்கு உள்ளது. மனத்தின் நிலைகளில் ஒன்றனை யுணர்த்தும் நுண்பொருளாக நெஞ்சம் இருந்தாலுங்கூட அதில் இறைவன் எழுந்தருளும் போது அது பெறும் சிறப்பினைப் புலப்படுத்தும் விதத்தில் 'அகம்' என்ற சொல் சேர்க்கப் பெற்று நெஞ்சு+அகம்=நெஞ்சகம் என்று வழங்கப்பட்டிருக்கிறது. இங்கு 'அகம்' என்ற சொல் இறைவன் எழுந்தருளியுள்ள இடம் என்ற பொருளினையே தந்து நிற்கின்றது. நெஞ்சிலிருந்துதான் அருள் பிறக்கிறது, எனவேதான் நெஞ்சில் எழுந்தருளியுள்ள இறைவனையும் 'பேரருளாளன்' என்று குறிப்பிடுகிறது திவ்வியப் பிரபந்தம். மனிதர்கள் காட்டும் அருள் சாதாரணத் தன்மையது என்பதனையே, 'பேரருள்' என்று இறைவனைக் குறிப்பிடுமாறு புலப்படுத்தியுள்ளார் ஆழ்வார்.

நில்லாத் தன்மையினையுடையது நம் நெஞ்சம். அது எங்காவது ஓடிக்கொண்டுதான் இருக்கும். அப்படி ஓடுவதால் நன்மையும் விளைவதுண்டு. ஓடித் திரும்பும்போது பல உண்மைகளையும் அறிந்து கொண்டுதான் வருகிறது. நல்ல இடங்களைத் தேடிச்செல்லும்போது நற்செய்திகளையும் தீய இடங்களைத் தேடிச் செல்லும்போது தீயனவற்றையும் அறிந்து மீள்கிறது. அறிந்து

பெற்ற செய்திகளுக்கேற்ப அதன் தன்மைகளும் அமைகின்றன. அதனால்தான் நெஞ்சத்தை நல்வழிப்படுத்தி நல்லனவற்றை அறிய வேண்டும் என்று முயல்கின்றோம்.

இறைவனைப்பற்றி யறிந்து, அவன் திருவடிகளைத் தேடியோடும் நிலைக்கு நெஞ்சம் ஆகிவிடுமென்றால் துன்பம் நீங்கும் என்று கருதினர் மெய்யடியார்கள். அப்போக்கினையே திவ்வியப் பிரபந்தத்திலும் காண்கிறோம்.

'எம்பிரானைத் தொடராய் மடநெஞ்சமே...[10] என்று குறிப்பிடு கிறார் ஆழ்வார் ஒருவர். இறைவன் திருவடிகளைத் தொடராமல், பிறவிடங்களுக்கு ஓடியலைந்து அல்லற்படும் நெஞ்சம் மடநெஞ்சமே என்பது அவர் தம் கருத்து.

அறிதற் கருவியாகத் திகழ்கின்ற நெஞ்சம் மனத்தின் உருகிய நிலையாகவும் விளங்குகின்ற நுட்பத்தினை யுணர்ந்துதான் திவ்வியப் பிரபந்தத்தில் பிற சொற்களை யெல்லாம்விட நெஞ்சம் என்ற சொல்லினையே அதிக இடங்களில் ஆழ்வார்கள் எடுத்தாண்டுள்ளனர். இறைவன் அருள்பெறத் துடிக்கும் மனம் உருகிய நிலையில் தானே இருக்கும்?

நெஞ்சத்தின் தன்மைகளை நேரடியாகவும் மறைமுகமாகவும் ஆங்காங்குச் சுட்டிக்காட்டியுள்ளார்கள் ஆழ்வார்கள். பல்வேறு உவமை, உருவகங்களைக் கொண்டு விளக்கியிருப்பதுடன் நெஞ்சம் என்ற சொல்லுடன் சேர்த்துப் பயன்படுத்திய அடைச் சொற்களாலுங்கூட அதன் தன்மைகளை நன்கு விளக்கியுள்ளார்கள். அது பற்றிக் கீழே காண்போம்.

அடைச்சொற்களுடன் நெஞ்சம்:

1. நில்லா நெஞ்சம் 11
2. நினைப்பிலா வலி நெஞ்சு 12
3. வன்னெஞ்சம் 13
4. காதல் செய் நெஞ்சம் 14
5. வஞ்சமேவிய நெஞ்சம் 15
6. இரும்பு நெஞ்சம் 16
7. பேதை நெஞ்சம் 17
8. மடநெஞ்சம் 18

9. உருகும் நெஞ்சம் 19
10. பரவு நெஞ்சம் 20
11. நெறி நின்ற நெஞ்சம் 21
12. விடநெஞ்சம் 22
13. தாழ்கின்ற நெஞ்சம் 23
14. மெலியும் நெஞ்சம் 24
15. சூதறியா நெஞ்சம் 25
16. இளைக்கும் நெஞ்சம் 26
17. குழையும் நெஞ்சம் 27
18. நினைக்கும் நெஞ்சம் 28
19. கசிந்த நெஞ்சம் 29
20. ஏழை நெஞ்சம் 30

மேற்கண்ட சான்றுகளிலிருந்து நெஞ்சத்தின் பல்வேறு தன்மைகளையும் எவ்வாறு பகுத்துக் காட்டியுள்ளார்கள் என்பது நன்கு புலப்படும். பொது நிலையில் அத்தன்மைகளை மூன்று பிரிவாகப் பகுக்கலாம். 1. நெஞ்சத்தின் நல்ல தன்மைகள், 2 தீயதன்மைகள். 3. பொதுத் தன்மைகள். அம்மூன்று நிலைகளையும் சற்று விரிவாகக் காணலாம்.

நல்ல தன்மைகள் :

உயிரோடு உலவுகின்ற அனைவருமே மனிதர் என்ற சிறப்பிற் குரியவராகக் கருதப்படமாட்டார்கள். எவரெவர் நெஞ்சில் அன்பு இருக்கின்றதோ அவர்களே அச்சிறப்பிற்குரியவர்கள். மற்றவரெல்லாம் எலும்பும் தோலும் சேர்த்து ஒன்றாய்க் கட்டப்பெற்ற கூடுகளே என்று கூறுகிறார் திருவள்ளுவர்.

'அன்பின் வழிய துயிர்நிலை; அஃதிலார்க்கு
என்புதோல் போர்த்த உடம்பு' 31

என்பது குறள். எனவே 'வெறும் உடம்பு' நிலையிலிருந்து உயர்ந்து மனித நிலையினை அடைவதற்கு நம் மனத்தில் அன்பு இருத்தல் அவசியம். அன்பின் முதிர்ச்சியினையே 'காதல்' என்ற சொல் உணர்த்தும். ஆண், பெண் இடையில் அரும்பும் தூய அன்பும் காதலே; ஆண்டவன், அடியவரிடை அரும்பும் உயரிய அன்பும் காதலே! காதல் செய்வது என்பது மாசற்ற நல்ல நெஞ்சின் தன்மை

களில் தலையாயதாகும். 'காதல்' என்ற தூயசொல் காலப்போக்கில் பொருட் சிறப்புக் குறைந்து காணப்பட்டாலும் உண்மையான காதல் நல்ல தன்மையுடைய நெஞ்சத்தின் வெளிப்பாடேயாம். அப்படிப்பட்ட காதலைத் தமது நெஞ்சமும் செய்ததாகக் குறிப்பிடு கிறார் ஆழ்வார்.

'காதல் செய்யுமென் நெஞ்சமே 32

என்பது அப்பாசுரவரி.

காதல் வயப்பட்ட நெஞ்சின் நிலை எப்படி யிருக்கும்? மெழுகைப் போன்று கசிந்த நிலையில் தான் இருக்கும். புஞ்சைக் காடாகக் கிடந்த நிலத்தில் நீர்பாய்ச்சி, ஏர்பூட்டி உழும் போது அந்நிலம் கசிந்து மென்மைத் தன்மையடைகிறது. அதன் பிறகுதான் அந் நிலத்தில் நாற்றுகளை நட்டுப் பயிர் வளர்க்கின்றோம். மனிதர் களது நெஞ்சமும் பண்பட்ட நஞ்சை நிலத்தைப் போன்று ஆகும் போதுதான் உயர்ந்த கருத்துகளாகிய நாற்றுகளை அங்கு நடமுடி கிறது. அப்படிப்பட்ட நெஞ்சினது தன்மையினையே 'கசிந்த நெஞ்சு' என்று பேசுகிறது திவ்வியப் பிரபந்தம்.

'காதலாகிக் கசிந்து கண்ணீர் மல்கி' 33

என்ற தேவாரப் பாடல் வரியும் இங்கு சிந்தித்தற்குரியது. காத லாகி விட்டாலே நெஞ்சம் கசிந்துவிடுமாம்; நெஞ்சம் கசியும் போது கண்களில் கண்ணீர் சொரிகிறது. இரக்கமற்ற நெஞ்சையுடையவர் களது கண்கள் கண்ணீர் சிந்துவதில்லை; ஏனென்றால் பிற உயிர் கள் மீது அவர்கட்குக் காதல் இல்லை; அதனால் அவர்கள் நெஞ்சம் கசியவில்லை; அப்படிப் பட்டவர்களது கண்களில் நீர் சுரப்பது மில்லை.

கசிந்த மெழுகு உருகத் தொடங்குகிறது; அதுபோலத்தான் கசிந்த நெஞ்சமும் உருகுவது. உருகும் நிலையினை அந்நெஞ்சம் அடையும் போதுதான் அந்நெஞ்சத்தின் சிறப்பே புலப்படுகிறது. ஒரு மனிதனது துயர்கண்டு மற்றவன் கண்ணீர் சிந்தும் நிலையி னின்றும் உயர்ந்து புல், பூண்டு, பயிர், கொடி போன்ற ஓரறிவு உயிர் களது துன்பத்திற்காகவும் வருந்திக் கண்ணீர் சிந்தும் நிலையினை அடைவது, நெஞ்சம் உருகும் போதுதான்.

'நெஞ்சுருகிக் கண்பனிப்ப நிற்கும்' 34

என்று அந்நிலையினைக் குறிப்பிடுகிறது திவ்வியப் பிரபந்தம் எனவே, நெஞ்சம் உருகும் தன்மையும் அதன் நல்ல தன்மையே யாம்.

நமக்கு அமைந்துள்ள ஐம்பொறிகளும் உயர்ந்த குறிக்கோட் பயன்களை நாம் அடையத் துணை செய்யும் வகையில்தான் அமைந்துள்ளன. நம்முடைய மனம், அறிவு முதலியன ஒழுங்காக அமையாதபோதுதான், ஐம்பொறிகளால் அடையும் பயன்களும் கேடு பயக்கும் விதத்தில் அமைந்து விடுகின்றன. நல்லனவற்றைக் கேட்கவும், நல்லனவற்றைப் பேசவும், நறுமனத்தினை நுகரவும், நற்காட்சிகளைக் காணவுமாக நாம் பழகிவிடுவோமென்றால் துயரேது? அந் நோக்கத்திற்காகத்தானே அவைகள் உள்ளன? கண்டனவற்றை யெல்லாம் பேசுவதனால்தானே துன்பத்தை விலை கொடுத்து வாங்கும் நிலை உருவாகிறது? அதிலும், தகுதி யறியாது ஒருவரைப் போற்றிப் பரவுவதும் தவறு; தூற்றிப் பழிப் பதும் தவறு. நம்முடைய வாய் இறைவன் புகழையே பேச வேண்டும்; அவனையே போற்றிப் பரவவேண்டும் என்பது ஆழ்வார்கள் கருத்து. எனவேதான்,

'நாவின் பரவி நெஞ்சில் கொண்டு' 35

என்று குறிப்பிடுகிறது திவ்வியப் பிரபந்தம். இறைவனை நாவினால் போற்றித் துதித்தால் மட்டும் போதாதாம்: நெஞ்சினா லும் பரவ வேண்டுமாம். அந்நிலையே உயர்ந்த பக்தர் நிலை.

'பரவி நெஞ்சே தொழுது மெழுபோய்' 36

என்று தம் நெஞ்சிற்குக் கட்டளையிடுகிறார் ஆழ்வார் ஒருவர். நெஞ்சின் சிறந்த தன்மையினையே இது உணர்த்தும்.

ஓரிடத்தில் நிலைத்து நில்லாது அங்குமிங்கும் அலை பாய்ந்து கொண்டிருப்பது நெஞ்சின் இயல்பான தன்மைகளில் ஒன்று. அப்படிப்பட்ட நெஞ்சைக் கட்டுப்படுத்தி நன்னெறிப் படுத்துவது நல்லறிவும், மனத் திட்பமும் உடையவர்கட்கு மட்டுமே இயலக் கூடியது. நன்னெறிகளை அறிதல் என்பது வேறு; அறிந்தவற்றிற்கேற்ப நின்று ஒழுகுதல் என்பது வேறு. முதல் நிலை எல்லோராலும் எளிதில் செய்யக்கூடியது. இரண்டாம் நிலை சிலருக்கு மட்டுமே இயலக்கூடியது; அந்தச்

சிலரே சான்றோர் என்னும் சிறப்பைப் பெறுகின்றனர். நல்லன வற்றை நெஞ்சம் அறிந்தால் மட்டும் போதாது; அறிந்த நெறியில் நிற்கவும் வேண்டும்.

'கற்க கசடறக் கற்பவை; கற்றபின்
நிற்க அதற்குத் தக' 37

என்றல்லவா வள்ளுவர் வலியுறுத்துகிறார்! அறிந்த நன்னெறி யில் நின்ற நெஞ்சத்தின் நல்லியல்பினை,

'நெறிநின்ற நெஞ்சமே' 38

என்று விளித்து வாழ்த்தும் பாங்கினைத் திவ்வியப் பிரபந்தத்தில் காண்கிறோம்.

வாச மலர்களைச் சுமந்திருக்கும் கூடையும் நறுமணம் பெற்றுப் பெருமை யடைகிறது; குப்பைகளால் நிரப்பப்பட்ட கூடையோ துர்நாற்றத்தையடைந்து சிறுமையடைகிறது. நம் முடைய நெஞ்சமும் அப்படித்தான். நல்லுணர்வுகளால் பெருமை யினையும், தீய உணர்வுகளால் சிறுமையினையும் அது அடைகிறது. தீய உணர்வுகள் இல்லாத நெஞ்சம் சிறந்ததுவே. அதிலும், அந்நெஞ்சம் தீயனவென்றால் என்னவென்றே அறி யாத நிலையில் இருக்குமென்றால் அது மிகச் சிறந்த தன்மையினையுடைய நெஞ்சமே. அப்படிப்பட்ட நன்னெஞ்சினை நோக்கி,

'சொல்லிற் குறையில்லை சூதறியா நெஞ்சமே' 39

என்று குறிப்பிடுகிறது திவ்வியப் பிரபந்தம். நல்லனவற்றை மட்டுமே அறிவது நெஞ்சின் நல்ல தன்மை தானே!

தீய தன்மைகள் :

சூதையறியாத அளவிற்கு நல்ல தன்மைகளையுடைய நெஞ்சங்கள் உள்ள போதிலும், பல தீயதன்மைகளையுடைய நெஞ்சங்களும் உண்டு. நாம் எவ்வளவுதான் முயன்று கட்டுப் படுத்தினாலும் நம்மை மீறிச்செல்லும் தன்மையினையும் நெஞ்சம் பெற்றுள்ளது. அது நெஞ்சத்திற்கு இயல்பாகவே அமைந்துள்ள பேராற்றல். பண்பட்ட தன்மைகளையுடைய ஆழ்வார்களே தங்கள் நெஞ்சம் நில்லாது ஓடும் நிலைகண்டு இரங்கிப் பாடியுள்ளனர்.

'நில்லாதென் னெஞ்சம்' 40

'நில்லா நெஞ்சினை யுடையேன்' 41

என்பன திவ்வியப்பிரபந்த வரிகள். அவர்கள் நெஞ்சங்களே அப்படி யென்றால் சாதாரண மனிதர்களின் நெஞ்சங்கள் எப்படி அலையும் என்பதனைச் சொல்லத் தேவையில்லை. எனவே, எந்த ஒன்றிலும் நிலைத்து நில்லாது ஓடியலைவது நெஞ்சத்தின் தீயதன்மைகளில் ஒன்று என்றே குறிப்பிட வேண்டும்.

புதியனவற்றை அறியும் தன்மை நெஞ்சிற்கு இயல்பாக அமைந்திருப்பது போன்று ஒன்றனை நினைத்துப் பார்க்கும் தன்மையும் நெஞ்சிற்கே உண்டு. நினைவாற்றல் என்பது மனிதனுக்கு அமைந்துள்ள பேராற்றல்களில் ஒன்று. பல வருடங் கட்கு முன்னால் நிகழ்ந்தனவற்றைக்கூட இன்று நினைத்துப் பார்க்கின்றோம். அப்போது நடந்தது சரியா, தவறா என்று இப்போது சீர்தூக்கிப் பார்க்கின்றோம். இதற்கெல்லாம் மூல காரணமாகவிருப்பது நம்நெஞ்சமே. மனநோயாளிகள் நினைத்துப் பார்க்கும் ஆற்றலை இழந்துவிடுகின்றனர். பழைய சம்பவங்களை முறைப்படுத்திக் கூறக்கூடிய சக்தி அவர்களிடம் இருப்பதில்லை. அதனால் அப்போது என்ன நடக்கிறது என்பதும் அவர்கட்குத் தெளிவாகப் புரிவதில்லை. அதற்கெல்லாம் காரணம் அவர்களது நெஞ்சம் சரியாகத் தொழிற்படவில்லை என்பதேயாம். அவர்கட்கு ஏற்பட்ட ஏதோ ஓர் அதிர்ச்சி அவர்களது நெஞ்சத்தைப் பாதித் துள்ளது. அது ஒரு நிலை.

நினைக்கும் தன்மையினை நெஞ்சம் பெற்றிருந்தும் கூட நினைக்க வேண்டுவனவற்றை நினைக்காமல் பிறவற்றை நினைத் துத் துன்பத்திற்காளாவதும் உண்டு. இரண்டாம் நிலையாகிய இதுவே வருந்தற்குரியது. கண்டவற்றையெல்லாம் நினைத்து அல்லற்படுபவர்களை விட எதையுமே நினைக்க முடியாத நிலை யில் உள்ள மன நோயாளிகள் எவ்வளவோ மேல். நெஞ்சம் இயல் பாகவே மென்மைத் தன்மையுடையது. ஆனால் நினைக்க வேண் டாதனவற்றை நினைக்கும் போது அதன் இயல்பான தன்மைமாறி வன்தன்மையினை அடைந்து விடுகிறது என்பதனை,

'நேமிசேர் தடங்கையினானை நினைப்பிலா
வலி நெஞ்சு' 42

என்று குறிப்பிடுகிறது திவ்வியப் பிரபந்தம். சக்கரப்படையினைத் திருக்கரத்தில் ஏந்தியுள்ள திருமாலை அந்நெஞ்சம் நினைக்காதிருப்பதால் அதை 'வுலி நெஞ்சு' என்று இகழ்ச்சிக் குறிப்புத் தோன்றக் குறிப்பிட்டுள்ளார்.

நெஞ்சத்தின் இயல்பான தன்மை, பின்னர் அது வேறுபட்ட நிலை ஆகிய இரண்டனையும் இணைத்துப் பார்க்கின்றார் ஆழ்வார் ஒருவர். கமலமலர் போன்றிருக்க வேண்டிய நெஞ்சம் வன்னெஞ்சமாக மாறி விட்டதையுணர்கிறார். அந்நிலையிலும் கூட அந்நெஞ்சிற் புகுந்து இறைவன் அருள் செய்தான் என்ற குறிப்பினை,

'போதிற் கமல வன்னெஞ்சம் புகுந்து' 43

என்று குறிப்பிடுகின்றார். இயல்பாகவே அந்நெஞ்சம் போதிற் கமலமாக விளங்கியுள்ளது; ஆனால் இறைவனை மறந்துவிட்டதால் அதை வன்நெஞ்சம் என்று இகழ்ந்து கூறுகிறார். தம்மை மறந்தாரையும் தாம் மறவாக் கருணைக் கடல் அல்லவா இறைவன்! அதனால், அந்நெஞ்சிலும் புகுந்து அருள்பாலித்துள்ளான். இறைவனை மறந்த நெஞ்சின் வன்தன்மை தீய தன்மையேயாம்.

நெஞ்சம் நல்லனவற்றையறிந்து, அறிந்ததைப் பின்பற்றும் போது தூய நெஞ்சமாகத் திகழ்கிறது. தீயனவற்றையறிந்து, அவ்வுணர்வுகளால் அலைமோதும் நிலை உருவாகும்போது வஞ்ச மேவிய நெஞ்சமாகவும் ஆகிவிடுகிறது. இறைவனை மறந்து, பாவ நினைவுகளில் மூழ்கித் திளைக்கும் நெஞ்சமே வஞ்சமேவும் நெஞ்சமாகிறது. ஒளி இல்லாத வீட்டில் இருட்டுதானே இருக்கும்? இறையருளாகிய ஒளி இல்லாத நெஞ்சங்களில் வஞ்சக உணர்வுகளாகிய இருள் பரவத்தான் செய்யும் என்பது திவ்வியப் பிரபந்தம் காட்டும் முடிபு. வஞ்ச உணர்வு உள்ள நெஞ்சம் மனித நிலையினின்றும் தாழ்ந்து, பேய்த் தன்மையினை அடைந்து விடுகிறது என்பதனை,

'வஞ்ச மேவிய நெஞ்சுடைப் பேய்ச்சி' 44

என்று ஓர் அரக்கியின் நெஞ்சத்தைக் குறிப்பிடும் பாங்கில் பொது உண்மையாக உரைத்து விடுகிறார்.

கமலம்போல் மென்மையாகத் திகழ வேண்டிய நெஞ்சம், சிலபோது இரும்புபோல் வலிய தன்மையுடனும் திகழ்கிறது. அப்படிப்பட்ட நெஞ்சுடையோர்தான் அஞ்சாது பழி, பாவச் செயல்களைப் புரிகின்றனர். பயிருக்காகவும், கொடிக்காகவும் வருந்திய நெஞ்சம் கமலம் போன்றது; கொலை, கொள்ளைகளில் ஈடுபட்டுப் பிற மனித உயிர்களை இரக்கமின்றிப் போக்கத் துணியும் நெஞ்சம் இரும்பு போன்றது. இரும்பை உருக்கி மென்தன்மையாக்குவது போன்று, கொடிய நெஞ்சங்களையும் உருக்கி மென்தன்மையுடையதாக்க வேண்டும். இரும்பை அவ்வளவு எளிதில் உருக்கிவிட முடியாது. அதிக சக்தியுள்ள நெருப்பால்தான் அதை உருக்க முடியும். இரும்பு நெஞ்சினையும் அவ்வளவு எளிதாக உருக்கி விட முடியாது. பேரருட் பெருஞ்சுடராகத் திகழும் இறைவன் கருணையினால் தான் அந்நெஞ்சத்தின் வன் தன்மை நீங்கி மென்தன்மை அமைகிறது.

அறிதற் கருவியாகத் திகழும் நெஞ்சம், விரைந்து செல்லக் கூடியது மட்டுமல்ல; மனம் நினைப்பதைப் பிறரிடம் சொல்லக் கூடிய வாயிலாகவும் இதுவே விளங்குகிறது. எனவேதான் பெரும்பாலும் நெஞ்சை முன்னிலைப் படுத்தியும் விளித்துப் பேசியும் செய்யுள்கள் செய்யப்பட்டிருப்பதைக் காண்கிறோம். நெஞ்சைத் தூதுவிட்டு 'நெஞ்சு விடுதூது' என்ற பெயரில் ஓர் இலக்கியமே தோன்றியிருக்கக் காண்கிறோம். மனத்திற்கோ, அன்றி அதன் பிற நிலைகளுக்கோ இத்தன்மை கிடையாது. நாலாயிரத் திவ்வியப் பிரபந்தத்திலும் பெரும்பாலும் நெஞ்சை முன்னிலைப் படுத்திப் பேசி யிருப்பதையே காண்கிறோம். பேசும் தன்மையுடைய நெஞ்சம் சிலபோது தன் பேதமை தோன்றவும் பேசி விடுவதுண்டு. அது அந் நெஞ்சத்தின் தெளிவற்ற நிலையினையே புலப்படுத்தும், அத்தன்மையினையே 'பேதை நெஞ்சம்', 'மடநெஞ்சம்', 'ஏழை நெஞ்சம்' போன்ற சொற்களால் குறிப்பிடுகிறார்கள்.

(எ-டு) 'பேதை நெஞ்சே நீ சொல்லாய்' 45
'வைகுந்த விண்ணகரம் வணங்கு மடநெஞ்சே' 46
'மருளொழி நீ மடநெஞ்சே' 47
'ஏழை நெஞ்சாளும்' 48

மேற்கண்ட சான்றுகளிலிருந்து சொல்ல வேண்டியதைச் சொல்லாது நிற்கும் நெஞ்சினையே 'பேதை' என்ற சொல்லாற்

குறிப்பிடுகிறார்; வைகுந்த விண்ணகரத்தை வணங்காது வாளா விருக்கும் நெஞ்சத்தை இடித்துக்கூறி வணங்கச் சொல்கிறார்; அப்படி இதுகாறும் வணங்காதிருந்த நெஞ்சின் தன்மையை 'மடமை' என்கிறார். மெய்ம்மைக்கும் பொய்மைக்கும் வேறுபாடு தெரியாது மருள் நிறைந்திருந்த தனது நெஞ்சைத் தெருட்டுவான் வேண்டி 'மருள் ஒழி' என்று கட்டளையிடுகிறார். மருள் நிறைந் திருந்ததால் அந்நெஞ்சை 'மட நெஞ்சம்' என்று குறிப்பிடுகிறார்.

பொருளாதாரக் குறையுடையோரை 'ஏழை' என்று குறிப் பிடுவதுபோல், எல்லாவகையிலுமே தாழ்ந்த நிலையில் உள்ள நெஞ்சை 'ஏழைநெஞ்சு' என்று குறிப்பிடுகிறார். மடநெஞ்சத்தால் விளையும்கேடுகள் குறைவே; அந்நெஞ்சம் தூய்மையடையும்போது கேடுகளையும் போக்கிவிட முடியும். ஆனால் உண்டார் உயிர் கவரும்விடம் போன்ற தன்மையுடைய நெஞ்சமும் உண்டு என்று குறிப்பிடுகிறது திவ்வியப்பிரபந்தம். அத்தகைய நெஞ்சில்தோன்றும் நினைவுகளெல்லாம் விடம் தோய்ந்த அம்புகளாகவே காணப்படும். அத்தகையோர் சொல்லாலும், செயலாலும் பிறருக்குத் துயர் விளைத்துக் கொண்டுதான் இருப்பர். பிறர் துன்பத்தில் இன்பம் காணும் இயல்பு விடநெஞ்சமுடையோர்க்கே உள்ள தனித்தன்மை யாகும். இதுவும் நெஞ்சத்தின் தீய தன்மையேயாம்.

நெஞ்சம் உயர்ந்திருக்கும் போதுதான் உயர்ந்த கருத்துக்கள் தோன்ற முடியும். அது தாழ்வடையும்போது அந்நெஞ்சையுடைய மனிதனும் தாழ்ந்துவிடுகிறான்.

'தீவினைக்கே தாழ்வுறுவர் நெஞ்சினார்' 49

என்று நெஞ்சம் தாழ்வடைவதற்குத் தீவினைகளே காரணம் என்று கூறினாலும் அதுவும் நெஞ்சத்தின் இழிநிலையினையே புலப் படுத்தும். 'சூதறியா நெஞ்சம்' என்று நெஞ்சத்தின் நல்ல தன்மை பற்றிக் குறிப்பிட்டாலும்,

'சூதாவதென் னெஞ்சத்து எண்ணினேன்' 50

என்றும் ஓர் பாசுரவரி காணப்படுகிறது. எனவே நெஞ்சில் சூது போன்ற தீய எண்ணங்களை யெண்ணி இடர்ப்பட்ட நிலையும் குறிப்பிடப்பட்டுள்ளது. தூய நெஞ்சம் ஆழ்கடலைப் போல் அமைதி யுடன் காணப்படும். பூம்பொய்கை போன்ற குளிர்ச்சியை, தெளிந்த

நிலையினை அங்குக் காண முடியும். எப்போதும் தீய உணர்வு களால் தடுமாறிக் கொண்டிருக்கும் நெஞ்சில் தான் நெருப்பு எரிவது போன்ற வெம்மைத்தன்மை காணப்படும். அவர்கள் பேசும் பேச்சு களும் தீய சொற்களாகவே காணப்படும். அடைய முடியாத, தேவை யற்ற ஆசைகள் அந்நெஞ்சில் கனன்று கொண்டிருக்கும். புகை வண்டியில் உள்ளே நெருப்பு எரியும் போது வெளியில் புகை வெளிப் படுவது போன்று வேகும் நெஞ்சையுடையோர்க்குப் பெருமூச்சு வெளிப்படுகிறது, இந்நிலையினை,

'நெஞ்சம் வேவ நெடிதுயிர்க்கும்' 51

என்று விளக்குகிறது ஆழ்வார் பாசுரம். இதுவும் தீய தன்மையே!

நல்லனவற்றையே நினைக்க வேண்டும்; நல்லனவற்றையே செய்தல் வேண்டும். அதற்குத் துணை செய்யும் போதுதான் நெஞ்ச மும் நல்ல நெஞ்சமாகத் திகழ்கிறது. அதை விடுத்து, தீய வழி சென்று, தீயனவற்றை எண்ணி, அதனை அடைய முற்பட்டு அல்லற்படுவது தீய நெஞ்சத்தின் இயல்பாகிவிடும். அந்நிலை ஏற்படக் கூடாது என்பதனை,

'பயன் அல்லன செய்து பயனில்லை நெஞ்சே' 52

என்று கூறுவதன் மூலம் வலியுறுத்துகிறது திவ்வியப் பிரபந்தம்.

பொதுத் தன்மைகள் :

நெஞ்சத்தின் தன்மைகளை நல்லனவென்றும் தீயனவென்றும் பாகுபாடு செய்தோம். அப்படிப் பகுக்க முடியாத சில பொதுத் தன்மைகளும் நெஞ்சத்திற்குண்டு. அவை பொதுவானவை; இயல் பானவை. அத்தன்மைகளை அடைச்சொற்களாலும் ஆங்காங்கு மறைமுகமாகவும் தம் பாடல்களில் எடுத்துக் காட்டிச் சென்றுள்ளார்கள் ஆழ்வார்கள். அத்தன்மைகளை ஈண்டுக் காண்போம்.

உடல் மெலிந்து இளைப்பதைப் போன்று நெஞ்சமும் மெலிவ தாகவும் இளைப்பதாகவும் குறிப்பிட்டுள்ளார். நோய்வாய்ப் படுவதனாலோ, அன்றி வளர்ச்சிக்குத் தேவையான உணவு கிடைக்காமையினாலோ, சில சமயங்களில் மனக் கவலைகளாலோ உடல் மெலிவு ஏற்படும். உடம்பிற்கும் மனத்திற்கும் நெருங்கிய தொடர்பு இருப்பதனால்தான் மனக்கவலை உடம்பையும் பாதிக்

கிறது. தீய உணர்வுகளாகிய நோய்வாய்ப்படுவதனாலோ, அன்றி நெஞ்சம் உயர்வதற்குத் தேவையான இறைவன் அருள் கிடைக்காமையினாலோ நெஞ்சம் ஏங்கி இளைக்கிறது. அதன் பயனாய் மெலிவும் அடைகிறது. எல்லா நெஞ்சமும் மெலிவதில்லை; இளைப்பதில்லை. உண்மையினை அறியாது மயங்கி அலை மோதும் மடநெஞ்சமே மெலிகிறது என்று கூறுகிறது திவ்வியப் பிரபந்தம்.

(எ-டு) 'மெலியும் மடநெஞ்சே' 53

'இளைப்பாய்; இளைப்பாய் நெஞ்சமே' 54

மேற்கண்ட சான்றுகளிலிருந்து நெஞ்சம் மெலிவதற்கும் இளைப்பதற்கும் காரணம் இறைவன் அருள்பெறாமையே என்பதும், அப்படிப் பெறும் அருளினால் அத்தன்மைகள் அகலும் என்பதும் நன்கு விளங்கும்.

இளைப்பதைப் போன்று 'குழைதல்' என்பதும் நெஞ்சத்தின் பொதுத் தன்மைகளில் ஒன்றாகும். பக்குவமாகச் சோறு வடிக்கின்றோம். சிலபோது அதிக நேரம் அடுப்பில் அச்சோறு தங்கிவிடும் போது அது குழைந்து விடுகிறது. பக்குவப்பட்ட நெஞ்சமும்கூடக் குழைந்து விடுவது இயல்பு. அளவுக்கு மிஞ்சிய பக்தி அல்லது காதல் போன்ற உணர்வுகள் நெஞ்சத்தைக் குழையச் செய்து விடுகின்றன. அந் நிலையில், குழைந்த நெஞ்சத்தால் நைந்து வாடும் நிலை உருவாகிறது.

'நெஞ்சம் குழைந்து நையாதே' 55

என்று குறிப்பிடுகிறது ஆழ்வார் பாசுரவரி. இதுவும் நெஞ்சத்தின் பொதுத் தன்மையேயாம்.

நினைதல் என்பதும் நெஞ்சத்தின் பொதுத் தன்மையே. அத் தன்மையே மனிதனின் சிறப்பிற்கும் காரணமாகிறது. கடந்த காலத்தில் நிகழ்ந்ததை நினைத்துப் பார்க்கும் போதுதான் நிகழ் காலத்தை ஒழுங்காக அமைத்துக் கொள்ளவும், எதிர்காலத்தை எப்படி அமைப்பது என்று எண்ணவும் முடிகிறது. தான் யார்? இந்த உலகம் எத்தகையது? உலகை இயக்கும் இறைவன் எப்படிப்பட்டவன் என்பதை யெல்லாம் நினைத்துப் பார்க்கும்

போதுதான் நாம் நம் பிறவியின் பெருமையை யுணர்ந்து வாழ்ந்து பயனடைகின்றோம். மனிதனைக் காட்டிலும் பன்மடங்கு வலிமையுடைய விலங்கு யானை. ஆனால் மனிதனுக்குள்ள நெஞ்சம் யானைக்கில்லை. அதனால்தான் தன்னுடைய ஆற்றலை யறிந்து, நினைத்துப் பார்க்கும் தன்மை அதற்கில்லை. தன்னைக் காட்டிலும் வலிமையிற் குறைந்த மனிதன் ஆட்டி வைப்பதற் கேற்ப அது ஆடுகிறது. மனிதனின் ஆற்றலுக்கு அடிப்படையே நினைதல்தான். அந்நினைவு இறைவனைப் பற்றியதாக இருக்க வேண்டுமென்று அடியார்கள் விரும்புவர். திருமாலின் திரு நாமங்களை எவன் நெஞ்சினால் நினைக்கின்றானோ அவன் உய்வடைவான் என்பது ஆழ்வார்கள் எண்ணம்.

'நெஞ்சினால் நினைப்பான் எவன்' 56

என்று குறிப்பிடுகிறது திவ்வியப் பிரபந்தம்.

மிகுந்த துயரத்தைத் தரக்கூடிய இறப்பு போன்ற நிகழ்ச்சி களைத் துக்க நிகழ்ச்சியாகக் குறிப்பிடுவோம். அந்நிகழ்ச்சி பற்றிக் கேட்பதைத் துக்கம் விசாரித்தல் என்று சொல்வது உலக இயல்பு. ஆனால் அப்படிப்பட்ட துக்கத்தை நெஞ்சமும் செய்து விடுகிறது என்றசெய்தி திவ்வியப்பிரபந்தப் பாடலால் அறிய முடிகிறது.

'நெஞ்சு துக்கஞ் செய்யப் போந்தாய்' 57

என்பது அப்பாசுரவரி. நாம் வாழ்வுபெறத் துணைசெய்யும் கருவி யாகத் திகழ வேண்டிய நம்நெஞ்சம் மிகுந்த துயரத்தில் நம்மைச் சிலபோது ஈடுபடுத்தி இடர்ப்படுத்திவிடுகிறது என்ற குறிப் பினையே 'நெஞ்சு துக்கம் செய்து' என்ற சொற்றொடர் விளக்கு கிறது.

நினைதலைப் போன்று வாழ்த்துதல், வணங்குதல் போன்ற தன்மைகளும் நெஞ்சத்திற்குரியனவே. யாரை வாழ்த்த வேண்டும்? யாரை வணங்க வேண்டும் என்ற முறையினையும் நாம் இங்குக் காணமுடிகிறது

(எ-டு) தொண்டர் சேவடி வாழ்த்துமென்
நெஞ்சமே' 58

'வைகுந்த விண்ணகரம் வணங்கு மடநெஞ்சே 59

தொண்டர்களை வாழ்த்த வேண்டும்; இறைவனை வணங்க வேண்டும் என்பது ஆழ்வார்கள் கருத்து. இறைவனின் மெய் யடியார்களையும் இறைவடிவாகக் கண்டுதொழும் மரபைச் சைவத் திலும் காண்கிறோம்; வைணவத்திலும் காண்கிறோம்.

'அங்கமெலாம் குறைந்தழுகு நோய ரேனும்
ஆவுரித்துத் தின்றுழலும் புலைய ரேனும்
கங்கைதலைக் கரந்தார்க்கு அன்ப ராகில்
அவர்கண்டீர் நாம் வணங்கும் தெய்வ மாமே' 60

என்றார் திருநாவுக்கரசர். அது சைவ சமய மரபு.

''நெஞ்சில் தொழுவாரைத் தொழுவாயென்
தூய் நெஞ்சே'' 61

என்பது திவ்வியப் பிரபந்தம் காட்டும் வைணவ மரபு. இறைவனை நெஞ்சாரத் தொழும் அடியார்களும் தொழுவதற்குரியவர்களே என்று தமது தீய நெஞ்சிற்கு உணர்த்துகிறார். 'நெஞ்சார வாழ்த்து' 'நெஞ்சார வணங்கு' என்ற உலக வழக்குகளும் நெஞ்சினது இத் தன்மைகளை உணர்த்தும்.

மிகுந்த மகிழ்ச்சியால் களிப்படைதலும் நெஞ்சத்தின் பொதுத் தன்மையாகும். நல்லுணர்வுகளால் நிரம்பிய நெஞ்சில்தான் மகிழ்ச்சியுண்டாகும். அம் மகிழ்ச்சி மேம்பாட்டால் நெஞ்சம் களிப்படைவதுதான் இயல்பு. ஆனால் கண்களும் களிப்படைந்த தாகக் கூறுகிறது திவ்வியப் பிரபந்தம். நெஞ்சத்தோடு, பிறபொறி களுக்கு உள்ள உறவைவிடக் கண்களுக்கு நெருங்கிய உறவுண்டு. நெஞ்சத்தினது இரக்கவுணர்வு கண்களின் மூலம்தான் பிறருக்குப் புலப்படுகிறது. அதனால்தான் இரக்க உணர்வினைக் 'கண்ணோட்டம்' என்று குறிப்பிடுகிறார் திருவள்ளுவர். அது போல் கொடிய நெஞ்சத்தினது தன்மையினையும் அந்நெஞ்சை யுடைய மனிதனது கண்களால் உணர்ந்துவிட முடியும். இந் நுட்பத் தினை யுணர்ந்துதான்,

'என்னெஞ்சும் கண்ணினையும் களிக்கு மாறே' 62

என்று நெஞ்சும், கண்ணும் சேர்ந்து களித்ததாகக் குறிப்பிடுகிறது திவ்வியப் பிரபந்தம்,

மிகுந்த மகிழ்ச்சியால் களிப்பது போன்று, மிகுந்த துயரத்தால் வருந்துவதும் நெஞ்சத்தினது பொதுத் தன்மையே! களிப்படைவது நெஞ்சத்திற்கு நலம் பயக்கும்; வருந்துவது நெஞ்சத்திற்குத் துயர் விளைக்கும். எப்போதும் மகிழ்ச்சியால் சிரித்துக் கொண்டிருப்பவனது நெஞ்சம் மலர்கிறது; துயரால் வருந்திக் கொண்டிருப்பவனது நெஞ்சம் வாடிச் சோர்கிறது. நமக்குத் துன்பம் வந்துவிட்டால் உடனே அதை நினைத்து வருந்தத் தொடங்குகிறோம். அப்படி வருந்துவதால் அத்துன்பம் தீர்ந்து விடுகிறதா என்றால் இல்லை; மென்மேலும் துன்பமே பெருகுகிறது. எனவே, அதைத் தீர்க்கும் பொறுப்பை இறைவனிடம் விட்டுவிட்டு அடுத்த கடமையைச் செய்யமுற்படுவதே அறிவுடையோர் செயல். அப்படிச் செய்யாமல் எப்போதும் அத் துன்பத்தையே எண்ணி வருந்துவது மடமை என்று உணர்த்துகிறது திவ்வியப் பிரபந்தம்.

'வருந்தாதிரு நீ மடநெஞ்சே' 63

என்பது ஆழ்வார் திருவாக்கு.

மேற்கண்ட பொதுத் தன்மைகளைப் போன்று அஞ்சா திருத்தல், பணிதல், திறம்பா திருத்தல், மறவா திருத்தல், ஏத்துதல், விரும்புதல், பூரித்தல், சார்தல், முந்துறுதல் போன்ற தன்மைகளும் நெஞ்சத்திற்கு உண்டு என்று கூறப்பட்டுள்ளது.

பல்வேறு உணர்வுகளுக்கும் ஊற்றிடமாகத் திகழ்வது நெஞ்சமே! எனவேதான், மனத்தின் பிறநிலைகளில் காண முடியாத நுண்ணிய தன்மைகள் பலவும் இங்குக் காட்டப்பட்டுள்ளது. ஒரு மனிதனது பண்பட்ட வாழ்வு அவனது நெஞ்சத்தினது சிறப்பைப் பொறுத்துத்தான் அமைகிறது.

தீயநெஞ்சம் திருந்தும் வழி :

நெஞ்சத்தினுடைய பல்வேறு தன்மைகளையும் அதன் உயர்வு, தாழ்விற்கேற்ப மூன்று நிலைகளில் பகுத்து ஆய்ந்தோம். அந்தந்த நிலைகளில் அதற்கான காரணங்களையும் ஆழ்வார்கள் காட்டிய வழிநின்று நோக்கினோம். எந்தெந்தத்தன்மைகள் பொதுவானவை? எவை எவை நல்ல தன்மைகள்? எவை எவை தீயதன்மைகள் என்பதைக் கண்ட நாம் தீய நெஞ்சங்கள் திருந்துவதற்கான வழிகளை ஈண்டுக் காணப்போகிறோம். அதற்கான புது வழிகள் எவை

யென ஆராய்ந்தறிய வேண்டிய அவசியமில்லை. எந்தெந்தத் தன்மைகள் நல்ல நெஞ்சத்திற்குக் காட்டப்பட்டுள்ளனவோ அவைகளைப் பின்பற்றினாலே தீய நெஞ்சங்கள் திருந்திவிடும்.

நெஞ்சத்தின் தீய தன்மைகள் பலவற்றையும் ஆழ்வார்கள் காட்டியுள்ள போதிலும் அத்தீய தன்மைகள் நெஞ்சில் இடம் பெற்றதற்கு அவர்கள் கருதும் காரணம் ஒன்றுதான். சமுதாயத்தில் பல்வேறு குறைபாடுகளைக் காண்கிறோம். கொலை, கொள்ளை போன்ற பல பாவச் செயல்களைப் புரிபவர்களையும் காண் கிறோம். ஆனால், அக்குறைபாடுகளுக்கும் பாவச் செயல் களுக்கும் பொதுவான காரணம் ஒன்றினை மட்டுமே நாம் கூறிவிட முடியாது. ஒவ்வொரு செயல்களுக்கும் பின்னணியாக வெவ்வேறு காரணம் மறைந்திருப்பதை யுணர்கிறோம். இது சமுதாய நோக்குடையோரின் பார்வை. ஆனால் இறையடியார்களாகிய ஆழ்வார்களது பார்வை முற்றிலும் வேறுபட்டது. நெஞ்சத்தின் தீய தன்மைகள் பலவாக விருக்கும்போது அத்தன்மைகளுக்கான காரணமும் பலவே. ஆனால் அப்படிப்பட்ட பல காரணங்களுக்கும் மூல காரணம் ஒன்றே என்பது அவர்கள்கண்ட முடிபு. இறைவ னருள்பெற்ற நெஞ்சத்தில் எவ்விதத் தீய தன்மைகளும் இடம் பெறுவதில்லை. இறையருள் பெறாத போதுதான் பல்வேறு தீய தன்மைகள் ஒன்றன்பின் ஒன்றாகத் தோன்றுகின்றன என்பது அவர்கள் கருத்து. எனவே, கொலை செய்வதற்கும், கொள்ளை யடித்தற்கும் சமுதாய நோக்கில் வேறுபட்ட காரணங்களிருந் தாலும் இருவரது நெஞ்சமும் இறையருள் பெறவில்லை என்ற ஒரே காரணத்தைத்தான் அவர்கள் கூறுவர். இறையருள் பெற்ற நெஞ்சம் எவ்விதத் தீங்கினையும் புரிவதில்லை என்பது திவ்வியப் பிரபந்தம் காட்டும் முடிபு. இம்முடிபு பெரும்பாலும் எல்லாச் சமயங்கட்கும் உடன்பாடானவையே!

'நன்னெஞ்சே நம் பெருமான் நாளும் இனிதமரும்[64]' கோயில் என்று குறிப்பிடும் திவ்வியப் பிரபந்தப்பாசுரம், இறைவன் இனித மரும் ஆலயமாகத்திகழும் நெஞ்சினையே 'நன்னெஞ்சம்' என்று சிறப்பித்துக் கூறுகிறது. அதே சமயம் இறைவனைப்பற்றி நினைக் காத நெஞ்சம் எப்படிப்பட்டது என்பதனை,

'நேமிசேர் தடங்கையினானை நினைப்பிலா வலி நெஞ்சு' ...65

என்று குறிப்பிடுறது. இங்கு 'வன்னெஞ்சம்' என்ற இழிநிலையினை நெஞ்சம் அடையக் காரணம் இறையருள் பெற நினையாமையே! எனவே, வன்னெஞ்சம் நன்னெஞ்சமாக மாற வேண்டுமென்றால் தேவைப்படுவது இறையருளே என்பது நன்கு விளங்கும்.

நெஞ்சிலுள்ள தீய தன்மைகளால் நெஞ்சம் இடர்ப்படுகிறது போதிய அறிவின்மையாலும், பொறிகளின் போக்கில் சென்று இடர்ப்படுவதாலுமே நெஞ்சில் தீய தன்மைகள் தோன்றி இடர்ப்படுத்துகின்றன. நம்முடைய அறியாமைகளாலும், ஒழுக்கக் கேடுகளாலும் நம் உடம்பில் நோய் உண்டாகின்றது. நோய் உண்டாவதற்குக் காரணமாக இருந்த நாமே அதைப் போக்கி விட முடியாது. அந்நோயைப் போக்கும் வல்லமையுடைய மருத்துவரையே நாம் அடைய வேண்டும். அதுபோல் நம் அறியாமையால் நெஞ்சில் தோன்றும் இடர்களை நாமே போக்கி விடமுடியாது. இடர்தீர்க்கும் மருத்துவனாகிய இறைவனின் அருள் பெற்றே அதனைப் போக்க முடியும். அப்படி இறைவன் அருளால் நெஞ்சிடர் நீங்கிய அனுபவத்தைக் குறிப்பிட்டு அவனது இணையடிகளைப் பணியுமாறு நெஞ்சிற்குக் கூறும் பாங்கினை இங்குக் காண்கிறோம்

'நெஞ்சிடர் தீர்த்தருளிய என் நிமலன்' 66
'இடர் கெடுத்த திருவாளன் இணையடியே
பணிநெஞ்சே' 67

என்று குறிப்பிடும் திவ்வியப் பிரபந்தப் பாசுரவரிகள், இறைவனை 'நிமலன்' 'திருவாளன்' என்று சிறப்பித்துக் கூறும் பாங்கும் சிந்தித்தற்குரியது.

நாம் இவ்வுலகில் முறையோடு நல்வாழ்வு வாழ வேண்டுமென்றால் அதற்கு இறையருள் ஒன்றே துணை செய்யும். அந்த இறைவனை என்றும் மறவாமல் வாழ முற்பட வேண்டும். அப்போதுதான் அவனருள் தொடர்ந்து கிட்டும். தேவைப்படும் போது மட்டும் கோயிலைத் தேடிச் செல்வது உண்மையான பக்தியாகாது. இறைவனை எப்போதும் நெஞ்சில் இருத்தி வழி பட வேண்டும். இவ்வுண்மையினை,

'மறவாதென்றும் வாழுதியேல் வாழலாம்
மடநெஞ்சமே' 68

என்று குறிப்பிடுகிறது திவ்வியப் பிரபந்தம். இறைவனை மறந்து வாழ்வது வாழ்வல்ல என்ற உண்மையினையே,

'...வாழுதியேல் வாழலாம்' என்று உறுதியாகக் குறிப்பிட்டு, இல்லையேல் வாழமுடியாது என்ற எச்சப் பொருளையும் தந்து நிற்கிறது அப்பாசுர வரி.

இறைவனை மறத்தால் வாழ முடியாது என்ற அளவோடு நிற்கவில்லை. இறைவனை நினைக்கா விட்டால் அத்தகையோருக்கு நெஞ்சம் என்ற ஒன்றே இல்லை என்றும் கூறுகிறது திவ்வியப் பிரபந்தம். எனவே நாம் நெஞ்சைப் பெற்றிருப்பதன் பயன் இறைவனை நினைந்து வணங்குவதே! அதைச் செய்ய மறந்துவிட்டோ மென்றால் நாம் நெஞ்சற்றவர்கள்; அதாவது, விலங்கு நிலையுடையவர்கள் என்பதையே,

'நினையாதார் நெஞ்சென்றும் நெஞ்சல்ல'

என்ற ஆழ்வார் திருவாக்கு உணர்த்துகிறது.

பொய்மைகளைத் தேடி நெஞ்சம் அலையும் போதுதான் தீய தன்மைகள் பல அதில் உருவாகின்றன. அது தெளிவில்லாத நெஞ்சத்தின் நிலை. எது உண்மைப் பொருள் என்பதனை உணரக்கூடிய பக்குவம் நெஞ்சத்திற்கு அமைந்துவிட்டால் அது நல்லவனவற்றை மட்டுமே அறியும்; நல்ல இடங்களை மட்டுமே நாடியோடும். எனவேதான் பொய்மையாகிய மாயையில் சிக்குண்டு அலையும் நெஞ்சினை நோக்கி,

'நெஞ்சமே, மெய்ம்மையைக் காணவிரும்பு' 70

என்று ஓர் ஆழ்வார் அறிவுறுத்துகிறார். மெய்ம்மையைக் காணும் ஆற்றலும் தகுதியும் உடனேயே எல்லோருக்கும் அமைந்துவிடாது. காலப்போக்கில் நம்முடைய நெஞ்சம் பெறும் பயிற்சிகளுக்கேற்பவே அது அமையும். எனவே, உடனேயே மெய்ம்மையை, மெய்ம்மைப் பொருளாகிய இறைவனைக் காண முடியாவிட்டாலும், காண வேண்டும் என்ற விருப்பத்தினையேனும் உடனேயே வளர்த்துக் கொள் என்று வலியுறுத்துகிறார். குழந்தைகளால் அறம் செய்ய முடியாவிட்டாலும், செய்ய வேண்டும் என்ற விருப்பத்தினையேனும் அந்த இளம்வயதிலே வளர்த்துக் கொள்வது நல்லது என்ற கருத்தில்,

'அறம் செய விரும்பு' 71

என்றுகூறிய ஔவை மூதாட்டியின் கருத்து இங்கு ஒப்புநோக்கு தற்குரியது.

மேலே காட்டிய சான்றுகளிலிருந்து உண்மைப் பொருளாகிய இறைவனை நினைந்து போற்றி அவனருள் பெற்று வாழ்ந்தால் நம் நெஞ்சிலுள்ள மாசுகளெல்லாம் நீங்கும்; நெஞ்சிடர் தீர்க்கும் நிமலன் அருள் பெற்றால்தான் நல்வாழ்வு வாழ முடியும் என்ற உண்மை பெறப்படுகிறது.

நெஞ்சமென்னும் அன்பு :

அன்பு தோன்றுவதற்கும், அந்த அன்பின் குழவியாகிய அருள் பெருகுவதற்கும் இடமாகத் திகழ்வது நெஞ்சமே! எவ்வுயிரையும் தம் உயிர்போல எண்ணுகின்ற பொது நோக்கும், பிறருக்காகத் தியாகம் செய்யும் பேரருளும் அன்புடைய நெஞ்சத்தினருக்கே இயலக்கூடியது. வாடிய பயிருக்காக வாடிய அன்பு நிலையும் கசிந்த நெஞ்சுடையோர்கட்கே உரியது. அன்பு நெஞ்சுடையோர் களையே 'வள்ளல்கள்' என்று அன்று அழைத்தனர். ஒருவன் வள்ளல் நிலைக்கு உயர்வதற்கும் கருமி என்னும் நிலைக்குத் தாழ்வதற்கும் அளவுகோலாகவிருப்பது அவனது நெஞ்சமே!

நெஞ்சத்தின் சிறப்பு அந்நெஞ்சத்திலுள்ள அன்பைப் பொறுத்தே அமைகிறது. நெஞ்சமென்றாலே அன்பின் உறைவிடம் என்பது பொருள். எனவே, அன்பில்லாரை நெஞ்சமில்லாதவன் என்று பழித்துக் கூறும் பாங்கினையும் உலகியலில் காண்கிறோம். அந்நுட்பத்தினை உணர்த்தும் விதத்தில்தான் 'நெஞ்சமென்னும் அன்பு' என்று குறிப்பிடுகிறது திவ்வியப் பிரபந்தம்.

அன்பின் வடிவாக இறைவனைக் காண்பது தமிழர் நெறி. அந்நெறியினைச் சைவத்திலும் காண்கிறோம்; வைணவத்திலும் காண்கிறோம். அன்பு வடிவாக இறைவனைக் கண்டதுபோலவே அன்புவடிவில் தம் நெஞ்சினையும் கண்டுள்ளனர். எனவே, அன்பின் சிறப்பால் நெஞ்சம் சிறப்படைகிறது; நெஞ்சம் சிறக்கும்போது அது இறைவன் உறையும் ஆலயமாகிறது. அன்பின் வடிவாக இறைவன் இருப்பதனால்தான் நெஞ்சில் அன்போடு அவன் திருநாமங்களைச் சொல்லி வணங்க வேண்டும் என்று கூறியுள்ளனர்.

'நெஞ்ச மன்பாய் ஆயிரம்நாமம் சொல்லி' 72

என்பது திவ்வியப் பிரபந்தப் பாசுர வரி. நெஞ்சில் அன்பில்லாமல் செய்யப்படும் பூசனைகள் பொருளற்றவை; அப்படிச் செய்வதால் இறையருளைப் பெறமுடியாது என்ற உறுதிப்பாட்டைத் திவ்வியப் பிரபந்தம் காட்டுகிறது. 'நெஞ்சினால் நினைந்து' என்று கூறிய ஆழ்வார்கள்,

'நினையாதார் நெஞ்சென்றும் நெஞ்சல்ல' 73

என்றும் கூறியதன் நோக்கம் அன்போடு இறைவனை நினையாதவர்கட்கிருக்கும் நெஞ்சம், சிறந்த நெஞ்சமாகக் கருதப்படமாட்டாது; அப்படிப்பட்ட நெஞ்சம் இருப்பதனால் எப்பயனும் இல்லை என்பதேயாம்.

அன்புடைய நெஞ்சில் எவ்வித மாசுகளும் இருக்க முடியாது. அன்புடையார் எவ்விதத் தீங்குகளையும் பிறருக்குச் செய்ய எண்ணமாட்டார். அதனால், நெஞ்சில் அன்போடு வாழ முற்பட்டாலே நமது நெஞ்சம் தூய்மையடைந்து விட்டது என்பது பொருள். அந்த அன்பைப் பிறவழிகளில் பெறமுடியாதபோது இறையருளாலேனும் பெறவேண்டும் என்பதே ஆழ்வார்கள் உணர்த்தும் உண்மை.

கனிந்த நெஞ்சமுடையார்களே ஞானியராகவும் திகழ்வர்; கல் நெஞ்சினர்க்கு ஒருபோதும் ஞானம் ஏற்படமாட்டாது. இனிய நெஞ்சம் என்ற ஊற்றில் சுரக்கும் நீரே ஞானம். கருங்கற் பாறையில் நீர் சுரக்குமா? தனது அன்பு நெஞ்சமாகிய ஊற்றில் சுரந்த ஞானமென்ற நீரால் இறைவனை நீராட்டுவேன் என்று கூறுகிறார் ஆழ்வார்.

'என்னுடை நெஞ்சமென்னும் அன்பினால்
ஞானநீர் கொண்டாட்டுவன்' 74

என்பது அப்பாசுரம்.

நெஞ்சப் பெருஞ்செய்:

அன்பு வடிவாக நெஞ்சத்தைக் கண்டது போன்று நெல் விளையும் செய்யாகவும் நெஞ்சத்தைக் கண்டுள்ளனர் ஆழ்வார்கள். செய்யில் விதைகளை விதைக்கிறோம். அது வளர்ந்து செழித்துப் பயிராகிக் கதிர் தாங்கிப் பயனளிக்கிறது. அவ்வயலில் விளைந்த

கதிரால் நமது பசிப்பிணி நீங்குகிறது. நம்மை உயிர் வாழச் செய்யும் சிறப்பு வயலுக்குண்டு.

அப்பெருமை நம் நெஞ்சத்திற்கும் உண்டு. நெஞ்சமாகிய வயலில் உணர்வுகளாகிய விதைகளை விதைக்கின்றோம். அவ்வுணர்வுகள் வளர்ந்து செழித்து நற்பண்புகளாகிய கதிர்களை நல்குகின்றன. அக்கதிர்களால் நெஞ்சம் சிறப்படைகிறது. மண் வயலில் விளைந்த நெற்கதிர்கள் உடம்பு வளரத் துணை செய்கின்றன. நெஞ்ச வயலில் விளைந்த நற்பண்புகளாகிய கதிர்கள் உயிர் சிறக்கத் துணை செய்கின்றன; பிறவிப்பயன் ஈடேறத் துணை செய்கின்றன. மண் வயலில் விளைந்த விளைச்சல் தற்காலிகப் பயனளிக்கக் கூடியது; நெஞ்ச வயலில் விளைந்த விளைச்சல் நிரந்தரமாகப் பயனளிக்கக் கூடியது.

விளைச்சல் நற்பயனளிக்கவேண்டுமென்றால் விதைகள் தரமானவையாய் இருத்தல் வேண்டும்; நிலம் பண்பட்டிருக்க வேண்டும்; நீர் பாய்ச்ச வேண்டும்; இடையில் முளைக்கும் களைகளைக் அகற்றி எறியவேண்டும். இத்துணைச் செயல்களும் நெஞ்ச வயல்களிலும் உண்டு. ஏற்கெனவே நல்ல நெஞ்சமாக இருக்கும் போது அதில் தீய உணர்வுகள் விதைக்கப்படுமென்றால் தீய பண்புகள்தான் அந்நெஞ்சில் வளரும். நல்லுணர்வுகள் விதைக்கப் பட்டபோதுங்கூட களைகளைப் போன்று சில தீய பண்புகள் முளைத்து விடுவதுண்டு. அறிவு என்ற களைக் கோட்டால் அத்தீய பண்புகளைக் அகற்றி எறியவேண்டும். ஈரமாகிய நெல் விதைக்கப்பட்டு, அவ்விதை பயிராக வளர்ந்து செழித்திருக்கும் நெஞ்சமாகிய பெருஞ்செய் என்று கூறுகிறார் ஆழ்வார்.

"ஈரநெல் வித்தி முளைத்த நெஞ்சப் பெருஞ்செயுள்" 75

என்பது திவ்வியப் பிரபந்தப் பாடல். ஒவ்வொருவரின் நெஞ்சமும் எப்படியிருக்கவேண்டும் என்பதை மேற்கண்ட உருவகம் நன்கு விளக்குகிறது. பிற செய்களினும் நெஞ்சமாகிய செய்யினுக்குள்ள பெருமை கருதி, 'நெஞ்சப் பெருஞ்செய்' என்று கூறியுள்ளார்.

நெஞ்சென்னும் உட்கண் :

நெஞ்சத்திற்கும் கண்ணிற்கும் உள்ள நெருங்கிய தொடர்பை ஏற்கெனவே காட்டியுள்ளோம். 'அகத்தின் அழகு முகத்தில்

தெரியும்' என்ற பழமொழி, நெஞ்சத்தின் தன்மையினை, முகத்திலுள்ள கண்களின் மூலம் தெரிந்து கொள்ளலாம் என்ற கருத்தினையே விளக்கும் புறத்தே புலப்படாத நுண்பொருளாகிய நெஞ்சத்தின் தன்மையைப் பிறர் புரிந்துகொள்ளத் துணை செய்வனவே கண்கள்.

புறக்கண்களின் மூலம் நன்மை வெளிப்படுத்தும் நெஞ்சமும் ஓர் அகக்கண்ணாகத் திகழ்கிறது என்ற நுட்பத்தைத் திவ்வியப் பிரபந்தம் காட்டுகிறது. கண்கள் வெளியுலகைப் பொதுவாகக் காண்கின்றன. அதை நுணுகிக் காணக்கூடிய ஆற்றல் நெஞ்சமாகிய உட்கண்ணிற்கே உண்டு. புறத்தே இருக்கின்ற கண்கள், அவைகளின் எதிரில் உள்ள பொருட்களை அப்படியே காணுமேயன்றி அவைகளின் தன்மைகளைப் பகுத்தறியும் ஆற்றல் அவைகளுக்கில்லை; அவ்வாற்றல் நெஞ்சத்திற்கே உண்டு. நெஞ்சமாகிய உட்கண் சரியாகத் தொழிற்படவில்லையென்றால் புறக்கண்கள் இரண்டும் நன்னிலையில் இருந்தும் பயனில்லை.

நம்மிரு கண்களும் ஒளியிழந்து போய்விடுவதனால் ஏற்படும் இழப்புக்குறைவே! வெளியுலகைப் பார்க்க முடியாது; அவ்வளவே! ஆனால், நெஞ்சமாகிய உட்கண் ஒளியிழந்து போய்விடுமென்றால் நாம் மனிதர் நிலையிலிருந்தே தாழ்ந்துவிடுவோம் என்பது உறுதி. புறக்கண்களை இழந்த நிலையிலுங்கூட சிலர் அறிவு மிக்க சான்றோர்களாய் விளங்கியுள்ளனர். அப்படிப்பட்டவர்கட்கு, 'ஊனக் கண்கள் இல்லை; ஞானக்கண்தான் உண்டு' என்று கூறும் உலக வழக்கினை யறிவோம். ஞானக்கண் என்று உலகோர் குறிப்பிடுவது நெஞ்சமாகிய உட்கண்ணையே என்று எண்ணுதற்கிடமுண்டு. ஏனென்றால், 'நெஞ்சமென்னும் அன்பினால் ஞானநீர் கொண்டாட்டுவன்' என்று கூறியுள்ளதையும் நோக்குமிடத்து நெஞ்சில்தான் ஞானம் பிறக்கிறது என்ற உண்மையும் புலப்படுகிறது.

பசியால் துடிக்கும் ஒருவனை நாம் செல்லும் பாதையோரத்தில் காண்கிறோம். நம் கண்கள் அவன் கோலத்தைக் காண்கின்றன. ஆனால் நாம் போகவேண்டிய இடத்தை நோக்கிச் சென்றுவிடுகிறோம். நமக்குப் பின்னால் வருபவரின் கண்களும் அக்காட்சியைக் காண்கின்றன. ஆனால் நம்மைப்போலவே அவரும்

அவர் போகவேண்டிய இடத்தை நோக்கிச் செல்லவில்லை. அம் மனிதனின் நிலைகண்டு துடிக்கிறார்; அவன் பசி போக்கும் முயற்சியில் ஈடுபடுகிறார். நமக்கும் அம்மனிதருக்கும் உள்ள வேறுபாடு என்ன? நம்முடைய புறக்கண்கள் மட்டுமே அக்காட்சியைக் கண்டன. நம் நெஞ்சம் அக்காட்சியைக் காணவில்லை. ஆனால் அம் மனிதரின் உட்கண்ணாகிய நெஞ்சமும் அத்துயர்க் காட்சியைக் கண்டது. அதனால்தான் அவன் பசி மாற்ற அது முனைந்தது. எனவே புறக்கண்களால் பொதுவான காட்சிகளை மட்டுமே காணமுடியும்; எதனையும் கூர்ந்து நோக்கும் ஆற்றல் நெஞ்சத்திற்கே உண்டு. பிறர் துன்பங் கண்டு இரங்கும் பேரருளாளராக விளங்கியவர்களெல்லாம் நெஞ்சமென்னும் வட்கண் உடையவர்களே!

கண்ணால் காண்பது எல்லோர்க்கும் எளிது; நெஞ்சத்தால் காண்பது அவ்வளவு எளிதான ஒன்றல்ல. அதற்கு மிகுந்த பயிற்சியும் பக்குவமும் வேண்டும். நெஞ்சால் காணும் ஆற்றல் பெற்றோர்தான் ஞானிகளாக விளங்கி முக்காலத்தையும் உணரக்கூடிய ஆற்றல் பெற்றுத் திகழ்ந்துள்ளார்கள். எதிர்காலத்தில் என்ன நிகழும் என்பதை உணர்ந்து யூகித்தறியும் ஆற்றல் நெஞ்சமாகிய உட்கண்ணிற்கு மட்டுமே உண்டு. புறக்கண்களால் கவனச்சிதைவு ஏற்படுவதுண்டு. எனவேதான் தவம், யோகம் முதலியன செய்வோர் கண்களை மூடிய நிலையில் தான் செய்கின்றனர். புறக் கண்கள் மூடப்படும்போது அகக்கண் திறந்து கொள்கிறது. மறந்து போன ஒன்றை நினைவிற்குக் கொண்டு வரமுயலும் போது கண்களை மூடிக்கொண்டு சிந்திக்கின்றோம். அப்போது நெஞ்சமாகிய உட்கண்ணின் மூலம்தான் அதையறிய முடிகிறது.

நெநசமாகிய உட்கண்காணும் என்று கூறியவர், அது எப்படிக் காணும் என்பதனையும் கூறத் தவறவில்லை.

'நெஞ்சென்னும் உட்கண்ணேற் காணு முணர்ந்து' 76

என்பது திவ்வியப் பிரபந்தம். நெஞ்சமாகிய உட்கண் அதற்குள்ள ஆற்றலால் உணர்ந்து காணுமாம். 'உணர்ந்து காணுதல்' என்பது நெஞ்சத்தின் தனித்தன்மை.

'காணும் நெஞ்சுடையேன்' 77

'என் நெஞ்சினால் நோக்கிக் காணீர்' 78

என்ற ஆழ்வார் திருவாக்குகளும் நெஞ்சினது மேற்கண்ட ஆற்றலி னையே உறுதிப்படுத்தும். 'நோக்கிக் காணீர்' என்ற சொற் றொடர் சிந்தனைக்குரியது. காணுதல் என்பது வேறு; நோக்கு தல் என்பது வேறு. புறக்கண்கள் காணும்; உட்கண்ணாகிய நெஞ்சம் ஆழ்ந்து நோக்கிக் காணும்.

நெஞ்சே, கல்!

நெஞ்சின் பல்வேறு தன்மைகளையும் நுட்பமாக உணர்ந்து கூறியவர்கள் ஆழ்வார்கள். மனத்தின் பிறநிலைகளைவிட நெஞ்சைப் பற்றியே அதிகமாகச் சிந்தித்துப் பல்வேறு உண்மை களைத் தெளிந்துரைத்த பெருமை இவர்களுக்குண்டு. அதனால்தான் நெஞ்சம் என்ற சொல்லை அதிக இடங்களில் எடுத்தாண்டுள்ளனர். பிறர் இச் சொல்லைப் பயன்படுத்தியுள்ள முறைக்கும் இவர்கள் பயன்படுத்தியுள்ள முறைக்கும் வேறுபாடு உண்டு. நெஞ்சை ஒரு நுண்பொருள் என்ற நிலையினின்று உயர்த்தி தன்னைப் போல ஒரு மனிதனாக அதை நினைந்து அதனிடம் உறவாடும் விதம் எண்ணி மகிழுதற்குரியது. 'அதைச் செய்; இதைச் செய்யாதே' என்று கட்டளையிட்டும், அச்சுறுத்தி யும், அன்போடு வேண்டியும் நெஞ்சோடு அவர்கள் பேசும் பாங்கு நெஞ்சைப் பற்றியும் நாம் அதிகமாகத் தெரிந்து கொள்ளத் துணை செய்கின்றது.

'நீ மறவேல் நெஞ்சே நினை' 79
'அஞ்சா தென் னெஞ்சே' 80
'மதிக் கண்டாய் நெஞ்சே' 81

என்றெல்லாம் தம் நெஞ்சிடம் அவர்கள் கூறியது போன்று,

'மடநெஞ்சே, கண்ணன் தாள் வாழ்த்துவதே கல்' 82

என்றும் கூறுகின்றார் ஓர் ஆழ்வார். கல்வி என்ற பெயரில் நாம் எவ்வளவோ செய்திகளைக் கற்று வருகின்றோம். அச் செய்திகளில் பல நம் வாழ்விழ்குத் துணையாக இருப்பினும் இம்மையில் நாம் நலமுடன் வாழ அவை துணை செய்யலாம். ஆனால் மறுமைப் பயனையும் நாம் பெற்று இறைவன் திருவடி யடைய வேண்டுமென்றால் அதற்கு இத்தகு கல்விகள் பயனளிக்க மாட்டா. நாம் கற்க வேண்டிய அனைத்துக் கல்வியின் சார

மாகவும், முழுப் பயனாகவும் இருப்பவன் முழுமுதற் கடவுளாகிய திருமால். அவனது பெருமைக்குரிய திருவடியை அடைந்தோர், கற்கவேண்டிய அனைத்தையும் கற்றுப் பெறவேண்டிய அரும்பயன் களையும் பெற்றுமகிழ்வர். எனவே, பிறவற்றையெல்லாம் கற்றுக் காலங்கழிப்பதைவிட, பிறவிப் பிணி போக்கும் மருத்துவனின் திருவடிகளை வாழ்த்தும் விதத்தினைக் கற்றுக்கொள் என்று தம் நெஞ்சிற்குக் கட்டளையிடுகிறார்.

அதுவரை அவர் நெஞ்சம் பிற செய்திகளைக் கற்று நற்பயன் ஏதும் காணாமல் அலைமோதியிருக்க வேண்டும். அதனால்தான் 'மடநெஞ்சே' என்று விளிக்கின்றார். கற்க வேண்டியதைக் கற்காமல் தேவையற்றதையெல்லாம் கற்றுத் திரிபவன் மடையன் தானே! பிற கல்விகளைப் கற்பதால் பெறும்பயன் ஒன்றுமில்லை: அதனால் நீ கற்கவேண்டிய ஒரே கல்வி கண்ணன் திருவடிகளை வாழ்த்துவதே என்பதை உணர்த்துவதற்காகவே, 'கண்ணன் தாள் வாழ்த்துவதேகல்' என்று தேற்றேகாரம் போட்டுக் கூறுகின்றார்.

'கற்றதனா லாய பயனென்கொல் வாலறிவன்
நற்றாள் தொழாஅர் எனின்' 83

என்ற தமிழ்மறைக் கருத்தும் இங்கு சிந்தித்தற்குரியது. பிற கல்வி களைக் கற்பதால் உண்டாகும் பயன் இறைவன் திருவடிகளை வணங்குவதே என்பது வள்ளுவர் கருத்து. ஆனால் கற்கவேண்டிய கல்வியே இறைவன் திருவடிகளை வாழ்த்துவதுதான் என்பது ஆழ்வார் கருத்து.

'கண்ணன் தாள் வாழ்த்து' என்று கூறாமல் 'வாழ்த்துவதே கல்' என்று கூறியிருப்பதிலிருந்து கண்ணனை வாழ்த்துவதுடன் நில்லாமல் அவன் திருவடிப் பெருமைகளையெல்லாம் கற்று நெஞ்சின் மாசு நீங்கி நிலைபேறடைய வேண்டும் என்ற நுட்பமும் உணர்த்தப்பட்டுள்ளதை யுணர்கிறோம்.

நெஞ்சே, உண் !:

நாமெல்லாம் வாயினால் உண்ணுதற்கே அறிவோம்; அப்படி உண்ணும் உணவால் உடம்பை வளர்க்கமுயல்வோம். இவ்வுலகில் மனிதனாகப் பிறந்து வாழ்வதன் நோக்கமே வயிறு நிறைய உண்டு திரிவது என்று நினைப்பவரே நம்மில் பலர் 'நாழி

அரசிக்கே நாம்', 'உண்பது நாழி; உடுப்பது நான்கு முழம்', 'திரைகடலோடியும் திரவியம் தேடு' போன்ற செய்திகளெல்லாம் நமக்கு உணர்த்தக் கூடிய அரிய உண்மையும் அதுவாகவேதான் இருந்துவந்துள்ளது. 'எப்படியாவது வயிற்றை நிரப்ப வேண்டும்' என்ற எண்ணத்தினால்தான் சிலர் களவு, கொள்ளை போன்ற குறுக்கு வழிகளிலும் ஈடுபட்டு வருகின்றனர். மொத்தத்தில், வயிற்றை நிரப்பும் முயற்சிகளின் எதிரொலியால் மனித நெஞ்சங்களும்கூட கருங்கற் பாறையாக, இரும்பாக மாறியுள்ளன என்பதை வரலாறு உணர்த்துகிறது.

வயிற்று உணவை மட்டுமே அறிந்திருந்த மாந்தர்க்கு இரண்டாவது வகை உணவு ஒன்றையும் அறிமுகம்செய்து வைத்தார் திருவள்ளுவர். அவ்வுணவு வாயின் வழியாகச் செலுத்தப்பட்டு வயிற்றை அடைவதல்ல; செவிகளின் வழியாகச் செலுத்தப்பட்டு மனத்தை அடைவது. அவ்வுணவை உண்ணும் தகுதியுடையவர்களே மக்கள் என்று போற்றுதற்குரியவர்கள்; மற்றவர்கள் விலங்குகட்குச் சமமானவர்களே என்பது வள்ளுவர் கருத்து.

'செவியிற் சுவையுணரா வாயுணர்வின் மாக்கள்
அவியினும் வாழினும் என்' 84

என்பது திருக்குறள். வாயுணர்வை மட்டுமே அறிந்தவர்கள் விலங்குகள் என்று சாடும் திருவள்ளுவர், அப்படிப் பட்டவர்கள் இருந்தும் பயனில்லை; இறந்தும் பயனில்லை என்று கூறுகிறார். அத்தகையோர் மீது அவருக்குள்ள ஆத்திரம் புலப்படுமாறு 'அவியினும்' என்று முதலில் குறிப்பிடுகிறார். விலங்கு நிலையில் உணவுக்காகப் போராடிக் கொண்டிருந்த மனிதனை உணர்வுகளால் உயரச் செய்யச் செவியுணவு தேவையென்பது வள்ளுவர் கருத்து.

வாய், செவி ஆகியவற்றால் உண்ணும் உணவை விடச் சிறந்த வேறோர் உணவினைத் திவ்வியப் பிரபந்தம் நமக்கு அறிமுகப் படுத்துகிறது. அதுதான் நெஞ்சால் உண்ணப்படும் உணவு. வாயினால் உண்பது உடம்பை வளர்க்கும்; செவியினால் உண்பது உணர்வுகளைச் செழுமைப் படுத்தும்; பண்பட்ட மனிதனாக இம்மையில் வாழச் செவியுணவு துணைசெய்யும்; ஆனால் மறுமைப் பயனையும் நாம் பெற்று நிலையான பேரின்பமடைய வேண்டுமென்றால் அதற்கு வேண்டுவது நெஞ்சால் உண்ணப்படும் உணவே!

நாவினால் சுவையறியப்பட்டு வாயினால் உண்ணப்படும் உணவில் நாம் காட்டும் ஆர்வம், செவிகளால் உண்ணப்படும் உணவில் காட்டுவதில்லை. சுவையானவற்றைமட்டுமே உண்ணத் தெரிந்த நமக்கு, பயன் தரத்தக்க செய்திகளை மட்டுமே கேட்டுப் பழகவேண்டும் என்ற விருப்பம் இருப்பதில்லை, அதனால்தான்,

'எனைத்தானும் நல்லவை கேட்க' 85

என்று ஓர் வரையறையினையும் செவியுணவிற்குக் கொடுத்தார் திருவள்ளுவர். நெஞ்சத்தால் உண்ணப்படும் ஊண் நம் ஆன்மா சிறக்கச் செய்கிறது; பிறவிப் பிணியைப் போக்குகிறது; நிரந்தர மான பயனை நம் உயிர்க்கு நல்குகிறது. இளைத்த உடல் உணவால் வலுப்பெறுவதுபோன்று இளைத்த நெஞ்சமும் அவ்வுண வால் வலுவடைகிறது. அதனால் அத்தகைய இறையனுபவமாகிய உணவினை இடைவிடாது உண்ணவேண்டும் என்று வலியுறுத்து கிறார். வாயுணவு கிடைக்காதபோது உடல் சோர்வதை நாம் உணர்கிறோம்; நெஞ்சின் மூலம் பெறப்படும் உணவு கிடைக்காத போது ஆன்மாவும் உயிரும் சோர்வடைவதை ஞானியர் உணர்வர். எனவே நாமும் ஞானம் பெறவேண்டுமென்றால் நெஞ்சினால் உணவு உண்ணும் ஆற்றலைப் பெறவேண்டும்.

'நன்னெஞ்சே, ஓவாத ஊணாக உண்' 86

என்று கட்டளையிடுகிறார் ஆழ்வார்.

'ஒல்லும் வகையான் அறவினை ஓவாதே
செல்லும்வா யெல்லாம் செயல்' 87

என்று குறள் கூறுவதுபோன்று இறையனுபவமாகிய உணவினை ஓவாது உண்டு பயன்பெற வேண்டும் என்று தமது நன்னெஞ் சிற்குக் கட்டளையிடுகிறார் ஆழ்வார்,

நெஞ்சே, சொல்!

மனத்தின் பிற நிலைகளுக்கில்லாத ஒரு தனித்த ஆற்றல் நெஞ்சிற்கு உண்டு. வாய் பேசுவது போன்று நெஞ்சிற்கும் பேசும் ஆற்றல் உண்டு. இவ்வாற்றல் நெஞ்சிற்கிருப்பதைப் பலரும் நன்கு உணர்ந்துள்ளனர். அதனால்தான் வாயுடைய மனிதனிடம் பேசுவது போன்று நெஞ்சை முன்னிலைப்படுத்திப் பேசியுள்ளனர். நெஞ்சைத் தூதாக அனுப்பித் தாம் நினைத்ததைச் சொல்லி

வருமாறு வேண்டியுள்ளனர். 'நெஞ்சுவிடு தூது' என்ற இலக்கியமும் இவ்வுண்மையை உறுதிப்படுத்தும்.

பறவைகளும், விலங்குகளும் கூடத்தான் வாயினால் ஒலிகளை எழுப்புகின்றன. அறிவுடைய மனிதன், தான் எழுப்பும் ஒலிகளுக்குப் பொருள் கற்பித்து அதை மொழியாக்கிச் செழுமைப்படுத்திக் கொண்டான். எனவே. வாயினால் பேசும் நிலையைப் பொறுத்த வரையில் பறவைகள், விலங்குகள் போன்றதுவே மனிதனின் நிலையும். ஆனால், அவைகளுக்கில்லாத தனிச் சிறப்பு வாய்ந்த நெஞ்சம் மனிதனுக்குண்டே; அந்நெஞ்சத்தால் பேசும் ஆற்றலே மனிதனது பேராற்றலாகும்.

காதல் வயப்பட்ட இருவர் தம் வாய்களால் பேசுவதைவிட நெஞ்சத்தால்தான் அதிகம் பேசுகின்றனர்.

''கண்ணொடு கண்ணிணை நோக்கொக்கின் வாய்ச்சொற்கள்
என்ன பயனும் இல'' 88

என்று வள்ளுவர் குறிப்பிடுவது, 'இருவரது கண்களும் பார்த்துக் கொண்டால் என்ற பொருளில் அல்ல; இருவரது நெஞ்சங்களும் கண்கள் மூலம் பேசிக்கொண்டால்' என்றபொருளையே தரும். நெஞ்சங்களுக்குக் கண்கள் வாயில்களாக விளங்குகின்றன; அவ்வளவே!

இறைவனிடம் முறையிடும் போதும் வாயினால் தம் குறைகளைக் கூறிக்கொண்டிருப்பது குழந்தைத்தனமான நிலை. அங்கு வாயையும் கண்களையும் மூடிவிட்டு நெஞ்சத்தால் பேசுவதே பக்தியால் சிறந்த அடியார்களது நிலை, நெஞ்சம் பேசத் தொடங்கிவிட்டாலே வாய் செயலிழந்துவிடுகிறது. ஏனென்றால் வாயினால் சில உணர்வுகளை மட்டுமே சொல் வடிவில் வெளிப்படுத்தமுடியும். ஆனால் நெஞ்சினால் எவ்வளவு நுட்பமான உணர்வுகளையும் எளிதில் வெளிப்படுத்திவிட முடியும். வாயினால் பேசும் வார்த்தைகளால் தீங்குகளும் விளைய வாய்ப்புண்டு. அதனால்தான்,

'யாகாவா ராயினும் நாகாக்க' 89

என்று வள்ளுவர் எச்சரித்தார். ஆனால் நெஞ்சம் பேசுவதால்

என்றுமே நன்மைதான் விளையும். வாய்பேசா ஊமைகளும், சொல் வடிவம் அமையா மழலைப் பூச்சிந்தும் குழந்தைகளும் தம் நெஞ்சால் பேசித் தானே நினைப்பதை உணர்த்துகின்றனர்.

'பேதை நெஞ்சே நீ சொல்லாய்' 90

என்று குறிப்பிடுகிறது திவ்வியப் பிரபந்தம். 'மௌனமாய் இருத்தல்' 'சும்மா விருத்தல்' என்றெல்லாம் சான்றோர் குறிப் பிடுவது வாயினால் பேசும் நிலையொழித்து நெஞ்சினால் பேசும் நிலையை யடைவதையேயாம்.

நீ கதியாம் நெஞ்சே!

ஆற்றைக் கடப்பதற்குப் படகு பயன்படுகிறது. பிறவியாகிய பெருங்கடலைக் கடப்பதற்குத் தெப்பமாகத் திகழ்வது இறைவன் திருவடிகளே!

'பிறவிப் பெருங்கடல் நீந்துவர்; நீந்தார்
இறைவ னடிசேரா தார்' 91

என்பது தமிழ்மறை. இறைவன் திருவடிகளை யடைந்தால் பிறவித்துயர் நீங்கும். அதை அடைவதற்குரிய வழிஎது என்பதைச் சிந்திக்க வேண்டும். 'வஞ்சமேவிய நெஞ்சி'னராக நாம் இருந்தால் இறைவன் திருவடிகளை ஒருபோதும் அடைய முடியாது. கண்களைத் திரையிட்டு மூடிவிட்டால் நம் எதிரில் இருப்பவரைக் கூட நாம் அறிய முடியாது. அது போன்று இறைவன் திருவடி நமக்கு அருகிலிருந்தாலுங்கூட நம் நெஞ்சில் இருள் பரவியிருந்தால் அவனை அறிய முடியாது. அன்பு மணங்கமழும் தூய நெஞ்சினராக நாம் விளங்கும்போதுதான் இறைவன் திருவடிகளை நெருங்கும் தகுதி நமக்கு ஏற்படுகிறது.

'இம்மையே உனை நான் சிக்கெனப் பிடித்தேன்
எங்கெழுந் தருளுவ தினியே' 92

என்று உறுதியோடு திருவடிகளைப் பற்றுகின்ற நிலை தூய அன்பு நெஞ்சினர்க்கே உரியது.

இறைவன் திருவடிகளை அடைவதற்கு முன்னர், அவனருள் பெற்ற மெய்யடியார்களது திருவடிகளையடைதல் வேண்டும் என்ற உண்மையினையும் திவ்வியப் பிரபந்தம் உணர்த்துகிறது,

குருவின் மூலம் உபதேசம் பெற்றுப் பின்னர் இறைவனை அடைய முயலும் படி நிலையினை இங்குக் காண்கிறோம்.

'தொண்டர் சேவடி வாழ்த்துமென் நெஞ்சமே' 93

'நிற்பவர் தாளிணைக் கொரு வாரமாகு
மென் நெஞ்சமே' 94

என்ற திவ்வியப் பிரபந்தப் பாடல்கள், தொண்டரின் பெருமை களை நன்கு எடுத்துக் காட்டுகின்றன. அத்தகைய தொண்டர் களை வாழ்த்திப் போற்றுவதாலும், அவர்கள் திருவடிகளுக்கு நம் நெஞ்சங்களை மாலையாகச் சூட்டுவதாலும் இறையருளை நாம் பெறமுடிகிறது. அதன் பிறகே இறைவன் திருவடிகளைச் சேரும் தகுதியை நம் நெஞ்சம் பெறுகிறது.

மேற்கண்ட செய்திகளை நோக்குமிடத்து நாம் பிறவிப் பெருங் கடலைக் கடப்பதற்கு மூலகாரணமாகவிருப்பது நமது நெஞ்சமே என்பது புலப்படும். அந்நெஞ்சம் தூயதாக இல்லையென்றால் மீண்டும் பிறந்து, அல்லது கொடிய நரகினையடைந்து அல்லற்படும் துயர்நிலை உருவாகும். இந் நுட்பத்தினை யுணர்ந்துதான் நெஞ்சமே தமக்குக் கதியென்று கூறியுள்ளார் ஆழ்வார்.

'நீ கதியாம் நெஞ்சே நினை' 95

என்ற அவர் கூற்றிலிருந்து நெஞ்சமே கதியென்பதை அவர் நன்கு உணர்ந்து, தம் நெஞ்சிற்கும் அதனை உணர்த்துகிறார் என்பது விளங்கும். இறைவனின் பெருமைகளை நாம் உணர்வதற்கும் துணை செய்வது நம்முடைய நெஞ்சமே!

'நின்னை நெஞ்சில் உய்யும் வகை யுணர்ந்தேன்' 96

என்று குறிப்பிடுவதிலிருந்து நாம் உய்வடைய இறைவன் கருணையை உணரவேண்டும் என்பதும், அப்படி உணர்வதற்கு நம் நெஞ்சமே துணை செய்கிறது என்பதும் புலப்படும். எனவே தான் நெஞ்சமே நமக்குக் கதியென்று கூறுகிறது திவ்வியப் பிரபந்தம்.

நெஞ்சக் கோயில் :

இரும்பு நெஞ்சம், கருங்கற் பாறை நெஞ்சம், வன்னெஞ்சம், வஞ்சநெஞ்சம் என்றெல்லாம் நெஞ்சத்தின் இழிந்த தன்மைகள்

கருதி அந்நெஞ்சங்களுக்கு அடைச்சொல் கொடுத்த ஆழ்வார்கள் நெஞ்சத்தைக் கோயிலாகவும் கண்டு மகிழ்ந்துள்ளார்கள். கோயிலாக நம் நெஞ்சத்தை ஆக்கி, அங்கு இறைவன் எழுந்தருளச் செய்வதே நெஞ்சத்தைப் பெற்றதன் நிறைவான பயனாகும்.

இறைவன் உண்மையில் விரும்புவது நெஞ்சக் கோயில்களையே! நாம் கட்டித்தரும் கற்கோயில்களையும், பொற்கோயில்களையும் விடத் தூய நெஞ்சங்களை நாடி அங்கு எழுந்தருளுவதே அவனுக்கு இன்பமூட்டும். பல்லவ மன்னன் தன் செல்வச் சிறப்புத் தோன்றக் கட்டிய கற்கோயிலை விட பூசலார் தம் தூய நெஞ்சில் கட்டிய கோயிலைத்தான் சிவன் விரும்பியதாகச் சேக்கிழார் கூறுகிறார்.

நெஞ்சில் கோயில் கட்டுதற்குப் பொன்னும் பொருளும் வேண்டுவதில்லை; அரசனாகவோ, செல்வனாகவோ இருக்க வேண்டிய அவசியமில்லை. யார் வேண்டுமானாலும் கட்டலாம். ஆனால் அத்தகைய கோயில்களைக் கட்டுவதுதான் உலகில் இன்று அரிதினும் அரிதாகவிருக்கின்றது. தெருவிற்கு ஒரு கோயிலை இப் புண்ணிய பூமியில் காண்கின்றோம். இறைவனைப் பற்றி அதிகமாக ஆங்காங்குப் பேசப்படுவதனையும் கேட்கின்றோம். ஆனால் விளைவு என்ன? கோயில்கள் பெருகியுள்ள அளவிற்கு, இறைவனைப் பற்றிப்பேசும் அளவிற்கு உண்மையான பக்தி இம்மண்ணில் வளரவில்லையே! அறப்பயிர் வளர வேண்டிய திருநாட்டில் அநீதிகளல்லவா களைகளாகப் பல்கிப் பெருகி வளர்ந்துள்ளன? ஏனிந்த முரண்பட்ட நிலை? இதற்குரிய காரணம் ஒன்றுதான். நெஞ்சில் இறைவனைக் காணும் நிலையில் நாம் இல்லை. அங்கு தீய நினைவுகள் கொலுவிருக்கின்றன. அந்த வீட்டில் இறைவன் தங்குதற்கு இடமில்லாததுடன் அங்கு அவன் தங்குவதை உண்மையில் நாமும் விரும்புவதில்லை. அதனால்தான் ஊர்ப்புறங்களில் கோயில்களைக் கட்டி அங்கு அவன் எழுந்தருள வேண்டிக் கும்பாபிடேகம் செய்கின்றோம். அவன் விரும்பும் கோயிலில் இடம்தர முடியாத நாம், நாம் விரும்பும் கோயிலில் அவன் எழுந்தருள வேண்டும் என்று எதிர்பார்க்கின்றோம். என்னே பேதமை!

நம் நெஞ்சத்தைக் கோயிலாக்கி அங்கு இறைவனை எழுந்தருளச் செய்ய வேண்டுமென்றால் முதலில் அது தூய்மையுடன்

திகழவேண்டும். அது முதல்நிலை. இறைவன் நம் நெஞ்சில் இருக்கின்றான் என்ற நினைவுடன் நாம் வாழும்போது தீயசெயல் களைச் செய்ய அஞ்சுகின்றோம். எனவே, இறைவன் தொடர்ந்து அங்கு இருக்க வேண்டும் என்ற கவலையினாலாவது தொடர்ந்து நெஞ்சத்தையும் தூய்மையுடன் பாதுகாத்து வரமுற்படுவோம். இது இரண்டாம் நிலை.

நெஞ்சில் இறைவன் இருக்கின்றான்; அவன் அறியும்விதத்தில் பொய் சொல்லக் கூடாது; அப்படிச் சொன்னால் உரிய தண்டனையை அவன் உனக்கு வழங்கிவிடுவான் என்பதை யுணர்த்தி எச்சரிக்கவே,

'தன்னெஞ் சறிவது பொய்யற்க; பொய்த்தபின்
தன்னெஞ்சே தன்னைச் சுடும்' 97

என்று கூறினார் திருவள்ளுவர். 'தன்னெஞ்சறிவது' என்று அவர் குறிப்பிடுவது, 'நெஞ்சிலுள்ள இறைவன் அறியும் விதத்தில்' என்ற பொருளையே தரும். 'தன்னெஞ்சே தன்னைச் சுடும்' என்று குறிப் பிடுவது, 'பொய் சொன்னதற்குரிய தண்டனையைப் பிறர்தரா விட்டாலும் நெஞ்சிலிருக்கும் இறைவனே தந்து விடுவான்' என்ப தனையே உணர்த்தும்.

பிறரைத் துன்புறுத்திப் பல பாவச்செயல்களைச் செய்தவர் கள் இறுதியில் மரணப்படுக்கையில் போராடுவதைப் பார்க்கின் றோம். அதுவரை அவர்கள் மறந்திருந்த அப்பாவக்காட்சிகள் ஒன்றன்பின் ஒன்றாக நெஞ்சத்திரையில் நிழலாடுகின்றன. அச் செயலைப் புரிந்தபோது அதன் பின் விளைவு பற்றி அவர்கள் எண்ணிப்பார்க்கவில்லை; எண்ணினாலும் வருந்தும் நிலையில் அப்போது அவர்கள் இல்லை. ஆனால் இறுதிக் காலத்தில்?... அவர்கள் புரிந்த பாவங்களே அவர்களை அச்சுறுத்துகின்றன என்று சொல்வதைவிட, அதுவரை நெஞ்சிலிருந்து வேடிக்கை பார்த்துக் கொண்டிருந்த இறைவன், இறுதி நேரத்தில் அம்மனிதன் மறந்ததை யெல்லாம் நினைவிற்குக் கொண்டுவந்து வருத்து கிறான். அதனையே நெஞ்சு சுடுவதாக வள்ளுவர் கூறியுள்ளார் என்று எண்ண இடம்தருகிறது அத்திருக்குறள்.

'அங்கிங்கெனாதபடி எங்கும்' இருப்பவன் இறைவன்,

அதனால், நம் நெஞ்சத்தைத் தூய கோயிலாக ஆக்காமல் இருட்குகையாகவைத்திருந்தாலும்அங்கும் நிச்சயம் அவன்இருக்கத்தான் செய்வான். ஆனால் அது நமக்குத் தெரியாத, நம்மால் உணர முடியாத நிலை. நம் நெஞ்சைக் கோயிலாக்கி அங்கு அவனை எழுந்தருளச் செய்தால் நாம் அறிந்து, உணரக்கூடிய நிலையில் நின்று அவன் அருள் பாலிப்பான்.

'என்னெஞ்சகம் கோயில் கொண்ட பேரருளாளன்'

என்று கூறுகிறது திவ்வியப் பிரபந்தம். பேரருள் வடிவில் இறைவன் தம் நெஞ்சக் கோயிலில் உறைவதை உணர்ந்து கூறுகிறார் ஆழ்வார்.

'என்னப்பன் என்னெஞ்சி லுளானை' 99
'இப்போதென் னெஞ்சில் புகுந்தானை' 100
'நெஞ்சிற் பிரியா திடங்கொண்ட' 101
'என்னெஞ்சம் இடமாகக் கொண்ட இறை' 102

போன்ற சான்றுகளை நோக்கு மிடத்துத் தம் நெஞ்சக் கோயிலில் திருமாலை எழுந்தருளச் செய்து அன்பால் வழிபட்ட ஆழ்வார்களது இறையுணர்வு நன்கு புலப்படும். 'என் னெஞ்சில் உளான்' 'என்னெஞ்சம் இடமாகக் கொண்டான்' என்ற சொற்றொடர்கள் அவர்களது உதுதிப் பாட்டையும், 'இப்போதென் னெஞ்சில் புகுந்த' என்பது இறையனுபவத்தையும் தெற்றென விளக்கும். தமது நெஞ்சம் என்றுமே இறைவனுறையும் கோயிலாக விளங்கு மென்பதால் அதைவிட்டு என்றுமே அவன் பிரிவதில்லை என்பதனை 'நெஞ்சிற் பிரியா' என்ற சொற்றொடர் உறுதிப்படுத்தும். நான் அவனுக்குக் கோயில் கட்டு முன்பு அவனே தான் தங்குமிடமாக விரும்பி என்னெஞ்சை ஏற்றுக் கொண்டு விட்டான் என்பதையே, 'இடமாகக் கொண்ட' என்ற சொற்றொடர் உணர்த்தும்.

'தனி நெஞ்சம்' :

'தனி' என்ற அடைச்சொல் பல்வேறு சிறந்த பொருளைத் தந்து நிற்பது. 'தனி மனிதர்' என்று குறிப்பிடும்போது தனியென்பது ஒருமை என்ற பொருளைத் தரும். 'தனித்தன்மை' என்று குறிப்பிடும்போது பிறருக்கில்லாத ஆற்றல் என்ற

பொருள் தரும். 'தனிப்பிறவி' என்று ஒருவரைச் சிறப்பிக்கும்போது ஒப்பற்ற சிறந்த மனிதர் என்ற பொருள் தோன்றும். 'ஒருதனியுழந்து' என்று குறிப்பிடப்படும் இடத்தில் மிகுந்த துயரால் வருந்தி என்ற பொருள் தொனிக்கும். இப்படிப் பல பொருள்களைத் தரும் 'தனி' என்ற அடைசொல்லைச் சேர்த்துத் 'தனி நெஞ்சம்' என்று குறிப்பிடுகிறார் ஆழ்வார்.

'நான் இத்தனி நெஞ்சம் காக்கமாட்டேன்' 103

என்பது திவ்வியப் பிரபந்தம். 'தனி' என்ற அடைச் சொல்லிற்குரிய அனைத்துப் பொருளும் தொனிக்கும் விதம் பாடல்வரி அமைந்துள்ளதை யுணர்கிறோம். தமது நெஞ்சம் ஒப்பற்ற தனித்தன்மை வாய்ந்ததுவே. ஏனென்றால் திருமாலின் அருள்பெற்ற நெஞ்சம் இதுவென்னும் உணர்வு இங்கு பிரதிபலிக்கக் காண்கின்றோம். இந் நெஞ்சம் இப்போது தனியாக இருக்கிறது; இது சென்று சேர வேண்டிய இடம் திருமாலின் திருவடிகளே என்ற ஏக்க உணர்வும் இங்கு தொனிக்கக் காண்கிறோம். இதுவரை இந்நெஞ்சத்தை நான் காத்துக் கொண்டிருந்தேன்; இனியும் இதை என்னால்காக்க முடியாது. ஏனென்றால் இது திருமாலுக்கு உரியது என்ற குறிப்பினை,

'நங்கள் பிரானுக் கென்னெஞ்சம் தோழி' 104

என்று கூறுவதிலிருந்து உணரமுடிகிறது. திருமாலை அடையத் துடிக்கும் இந் நெஞ்சத்தின் தன்மைகளும் தனிப்பட்டனவே. திருமாலை நினைத்து இந் நெஞ்சம் உருகுவதை இவர் அறிவார். யாரை நினைந்து இது உருகுகின்றதோ அவரை நேரில் கண்டபோது இதன் நிலைமையை விளக்கிக் கூறலாம் என்று இவர் நினைக்கின்றார். ஆனால் அந்நிலையிலும் தடை விதித்து ஏதும் கூறவொட்டாமல் தடுப்பதும் இந்நெஞ்சமே!

'நெஞ்சு மொன்று மொழிய வொட்டாது' 105

என்று அதன் நிலையினைப் புலப்படுத்துகின்றார். அதன்நிலையினுக்காகப் பரிந்துரை செய்யவிடாமல்தான் மறுக்கின்றது; அடக்கமாக அடங்கிக் கிடக்கின்றதா என்றால் அதுதான் இல்லை. யார் இதுவரை அந்நெஞ்சத்தைப் பாதுகாத்து வந்தாரோ, அவரையே பகைத்துக் கொண்டு ஓடவும் துணிகின்றது.

'என்னெஞ்சு என்னை நின்னுடையே னல்லே
னென்று நீங்கி' 106

ஓடுகின்றதாம். நம்முடைய நெஞ்சம் நமக்குத்தானே சொந்தம்; நம்மைவிட்டு அது வேறெங்கும் ஓடுவது முறையா வென்று நாம் பொதுவாக நினைக்கலாம். அந்நெஞ்சம் தவறான இலக்குகளை நோக்கி ஓடவில்லை. இறுதியில் எங்கு போய்ச் சேரவேண்டுமோ அங்குதான் ஓடத் துடிக்கின்றது. அந்நெஞ்சம் நமக்குச் சொந்த மானது என்று நாம் நினைப்பதே தவறு. அதற்குச் சொந்தக் காரன் இறைவனே! நாம் அந்த நெஞ்ச வீட்டின் காவற்காரனே! அந்நெஞ்சத்தின் உதவியால்தான் நாம் இறைவனை யடை கின்றோம். எனவே அது 'தனி நெஞ்சம்' தான்!

நெஞ்சங் கவர்தல் :

நமக்குச் சொந்தமான பொருள் பிறிதோரிடத்தில் உள்ளது. முறைப்படி அது நம்மை வந்து சேரவேண்டும். ஆனால் அதை வேறொருவர் தனதாக்கிக் கொண்டுள்ளார். அவர் தரும் நிலை யில் இல்லை. அப்போது அதைக் கவர்ந்து வருவது குற்றமாக மாட்டாது. நமக்கு வேண்டிய ஒருவர் எதிரியினிடம் சிக்கித் தவிக்கின்றார். அவர்மீது நமக்கு அன்பு உண்டு. அதனால் அவர் துன்பப்படுவதைப் பார்த்து நம்மால் சகிக்க முடியவில்லை. எதிரியோ அவரை நம்மிடம் விடக்கூடிய நிலையில் இல்லை. அப்போது எதிரியிடமிருந்து அவரைக் கவர்ந்து வந்து காப்பாற்று வது குற்றமாகாது.

நம்முடைய நெஞ்சம் திருமாலைச் சேரவேண்டியது. இதைத் திருமாலும் அறிவார். ஆனால் மாயை, வினைகள் போன்ற எதிரிகளிடம் சிக்கி இது உழன்று கொண்டிருக்கின்றது. இந்தத் துன்பச் சிறையிலிருந்து இதை விடுவித்துத் தனதாக்கிக்கொள்ள இறைவன் நினைக்கின்றார். அப்போது வேறு வழி யில்லையெனின் நம் நெஞ்சத்தைக் கவர்ந்து சென்று விடுகிறார். அது குற்றமாகாது. நெஞ்சத்தைக் காக்கவேண்டும் என்ற கடப்பாடே அதற்குக் காரணம். தன்னை நாடும் மெய்யடியார் கள் எந்நிலையில் எங்கிருந்தாலும் இறைவன் அவர்களைக் காப்பாற்றுவான் என்ற உண்மை இங்கு உணர்த்தப்படுகிறது.

'வினையேனை நெஞ்சங்கவர்ந்த' 107

'என்னெஞ்சங் கவர்ந்தெனை யூழியானே' 108

என்பன திவ்வியப் பிரபந்த வரிகள்.

தீவினையின் காரணமாக இறைவனையடைய முடியாமல் தவித்துக் கொண்டிருந்த என் நெஞ்சத்தைக் கவர்ந்துசென்று இறைவன் என்னை வாழ்வித்தான் என்ற உண்மையை இங்கு தெளிவுபடுத்துகிறார் ஆழ்வார்.

திருமாலால் நெஞ்சங் கவரப்பட்ட ஒருவர் வேறொருவரைச் சந்திக்கின்றார். அவரது நிலையும் தன்னைப் போன்றதுதான் என்பதை யூகித்தறிகிறார். உடனே அவரைப் பார்த்து,

'நீயும் திருமாலால் நெஞ்சம் கோட்பட்டாயோ' 109

என்று கேட்கின்றார். தன்னை நெஞ்சார விரும்புபவர்கள் எந் நிலையில், எங்கிருந்தாலும் அவர்களைத் தவறாமல் காப்பவன் திருமால் என்பதனையே இது உணர்த்துகிறது.

நெஞ்சிடிதல் :

நம் வாழ்க்கையில் அன்றாடம் எத்தனையோ நிகழ்ச்சிகள் நடைபெறுகின்றன; சிலவற்றால் நம்நெஞ்சம் மகிழ்கின்றது; சில வற்றால் நெஞ்சம் வருந்துகின்றது. எதிர்பாராது நடக்கும் சில நிகழ்ச்சிகள் அல்லது கேள்விப்படும் செய்திகள் நம் நெஞ்சத்தை வெகுவாகப் பாதித்துவிடுகின்றன. அந்நிலையில் நெஞ்சில் ஏற்படும் தாக்குதலையே 'நெஞ்சிடிதல்' என்று கூறுகின்றோம். நெஞ்சு இடிந்த நிலையில் உள்ள ஒருவனால் எதைப்பற்றியும் சிந்திக்க முடியாது. நெஞ்சம் செயல்படாதநிலை என்று அதனைக் குறிப்பிடலாம். ஆனால் அந்நிலை நிரந்தரமான ஒன்று அல்ல; சில நிமிடங்களோ அல்லது சில நொடிகளோதான் அந்நிலை நீடிக்கும். அதிர்ச்சி ஏற்படுவதாகச் சொல்வது நெஞ்சிடிதலையே குறிக்கும்.

நெஞ்சிடிவதற்குப் பல காரணங்கள் உண்டு. இறைவன் அருள் பெறத் துடிக்கின்றது ஒரு நெஞ்சு. தீவினை வயத்தால் இன்னும் அதற்கு இறையருள் கிடைக்கவில்லை. ஆனால் அந்நெஞ்சின் துடிப்பு ஓயவில்லை; மென்மேலும் அதிகரித்துக்கொண்டே

போகின்றது. அந்நிலையில், இறைவனைப்பற்றி நினைத்தாலும் சரி, அவன் திருப்பெயர்களை உச்சரித்தாலும் சரி, உடனே ஏக்கத்தின் எதிரொலியாய், இன்னும் இறைவனை அடைய முடிய வில்லையே என்ற தவிப்பால் நெஞ்சம் இடியத் தொடங்குகிறது. இந்நிலையினை,

'நினைதொறும் சொல்லுந்தொறும் நெஞ்சிடிந்து' ...110

என்று குறிப்பிடுகின்றது திவ்வியப் பிரபந்தம். பொதுவாகப் பிற காரணங்களுக்காக நெஞ்சம் இடிதல் நல்லதல்ல எனினும் இறையருள் பெறவேண்டி நெஞ்சம் இடிதல் அந்நெஞ்சத்தின் சிறப்பினையே காட்டும்.

நெஞ்சு நிறைதல் :

நிறைவு என்பது மனிதன் வாழ்வில் அடையத் துடிக்கின்ற, ஆனால் கடைசிவரை கைக்கு அகப்படாத ஒன்றாகவே இருந்து வருகின்றது. எல்லா நிலையிலும், எல்லோருமே நிறைவு காண வேண்டுமென்றுதான் தினமும் போராடுகின்றனர். ஆனால் வாழ்வின் இறுதிவரை சிலருக்கு அது கிடைப்பதே இல்லை.

தேவையான அளவு உண்டபின் வயிறு நிறைந்துவிடு கின்றது. ஆனால் நெஞ்சு நிறைவுயென்பது அவ்வளவு எளிதில் ஏற்பட்டுவிடுவதல்ல. ஒவ்வொருவரும் ஒவ்வொரு வகையில் நிறைவு காண நினைக்கின்றனர். சிலர் செல்வத்தால் நிறைவு காண நினைப்பர்: சிலர் வறுமையிலும் நிறைவு காண்பர். பிறருக்கு உதவுவதில் நிறைவு காண்பவர்களும் உண்டு; பிறருக்குத் துயரிழைத்து அதில் நிறைவு காண்பவர்களும் உண்டு. ஒரேவகை உணவு பலருக்கு வயிற்று நிறைவை உண்டாக்கும். ஆனால், ஒரே வகையான காரணத்தால் நெஞ்சு நிறைவைப் பலரும் காண்பதில்லை. மனிதருக்கு மனிதர் காரணங்கள் வேறு படுகின்றன.

அடியார்கள் நெஞ்சு நிறைவைக் காணும் நிலையே வேறு. அவர்கள் 'ஓடும் செம்பொன்னும் ஒக்க' நினைப்பவர்கள். அவர் களுக்கு அரசாளும் நிலையும் ஒன்றுதான் ; இரந்துண்டு உயிர் வாழும் நிலையும் ஒன்றுதான். அவர்களுக்கு எல்லாமே இறைவன் தான். இறையருள் ஒன்றின் மூலம்தான் அவர்களால் நெஞ்சு

நிறைவைக் காணமுடியும். அவ்வகையில் நெஞ்சு நிறைவைக் காணவே அவர்கள் முயன்று முடிவில் வெற்றி பெறுகின்றனர். உலகில், பிற காரணங்களால் மனிதர் காணமுடியாத நெஞ்சு நிறைவை அவர்கள் கண்டு களிப்படைகின்றனர்.

'திருமால் வந்தென் னெஞ்சு நிறையப் புகுந்தான்' ...111

என்று கூறுகிறார் ஆழ்வார் ஒவவர்.

'நீலமேனியும் நான்கு தோளும் என்னெஞ்சம்
நிறைந்தனவே' 112

என்பது வேறோர் ஆழ்வார் பெற்ற அனுபவம். வேறு எதனாலும் நிறையாத அவர்கள் நெஞ்சில் திருமால் புகுந்ததும் நிறைவு ஏற்பட்டு விடுகிறது. அதற்குக் காரணம், அவர்கள் நிறைவு காண விரும்பியது திருமாலின் திருவருளைப் பெறுவது ஒன்றன் மூலமேதான்.

'என்னெஞ்சு நிறையக் கைகூப்பி' 113

திருமாலை வணங்கியதாக வேறோர் ஆழ்வார் குறிப்பிடுகிறார். வாழ்வில் எவ்வகையிலும் நிறைவு காணாதபோது நெஞ்சு நிறைவு மட்டும் எப்படி ஏற்பட்டுவிடும்?

''நெஞ்சு நிறைவும் எனக்கிங்கில்லை' 114

என்றும் வேறொருவர் குறிப்பிடுகிறார். இறையருளால்தான் அதனைப் பெற முடியும் என்பது ஆழ்வார்கள் கருத்து.

நெஞ்சமும் கண், வாயும் :

மனத்தின் தொழிற்பாடுகள் பற்றிக் குறிப்பிட்டபோது ஐம்பொறிகளுக்கும் மனத்திற்கும் உள்ள தொடர்பு விளக்கப் பட்டது. பொறிகளின் போக்கில் மனம் செல்லாமல் அவைகளை அடக்கியாள வேண்டியதன் அவசியம் வலியுறுத்தப்பட்டது. இங்கு நெஞ்சத்திற்கும் பொறிகளுக்கும் உள்ள தொடர்புபற்றி ஆராயப்படும். மனத்திற்கு ஐம்பொறிகளுடனும் தொடர்பு இருப்பதுபோல் நெஞ்சத்திற்கு இருப்பதில்லை. நெஞ்சத்துடன் நெருங்கிய தொடர்புடையது கண்களே! ஏனென்று இதே பகுதியில் முன்னர்க் குறிப்பிட்டுள்ளோம். அதற்கடுத்த நிலையில் நெஞ்சத்துடன் தொடர்புடைது வாய்தான். செவிகளுக்கோ, மூக்கிற்கோ,

உடலிற்கோ நெஞ்சத்துடன் நேரடித் தொடர்பிருப்பதாகக் கூற முடியாது. நெஞ்சம் வருந்தும்போது உடல் மெலிவு தோன்றலாம்; செவிகள் செயலிழந்ததுபோல் தோன்றலாம்; மணம் எதனையும் நுகரும் விருப்பின்றி மூக்கும் அடங்கி இருக்கலாம். பல்வேறு உணர்வுகளுக்கும் பிறப்பிடமாக நெஞ்சம் விளங்குவதால் ஐம் பொறிகளுடனும் மறைமுகமாக வேனும் தொடர்பிருப்பது இயற்கையே! எனினும் நெஞ்சத்தின் நிலைகளைப் பிரதிபலித்துக் காட்டும் கண்ணாடிகளாகத் திகழ்வன கண்களும் வாயும்தான்.

கண்களும் வாயும் இல்லாவிட்டால் ஒருவர் நெஞ்சத்தின் இயல்பு என்ன என்பதையே பிறர் புரிந்துகொள்ள முடியாது. இவ்விரண்டில் ஒன்றேனும் அவசியம் இருத்தல் வேண்டும். இவ்விரண்டு பொறிகளிலும் மிகுந்த சக்திவாய்ந்தது கண்களே' உலகியல் நடைமுறைகளைப் பொறுத்தவரையில் கண்களைவிட ஆயிரம் மடங்கு சாதிக்கும் ஆற்றல் வாயினுக்கே உண்டு. 'உதடு அசைந்தால் ஊர் அசையும்; நாவசைந்தால் நாடே அசையும்! என்பது வாயின் ஆற்றலுக்குத் தக்கசான்று. ஆனால் நெஞ்சத்தின் தொழிற்பாடுகளைப் பொறுத்தவரையில் மிகுந்த ஆற்றல் கண் களுக்கே உண்டு. கண்கள் தொழிற்படும்போது வாய் தன் ஆற்ற லினையே இழத்துவிடுகிறது.

'கண்ணொடு கண்ணினை நோக்கொக்கின் வாய்ச் சொற்கள்
என்ன பயனும் இல' 115

என்ற திருக்குறள் இவ்வுண்மையினை உறுதிப்படுத்தும்.

நெஞ்சத்தின் தன்மையைப் பெரும்பாலும் கண்கள் வெளிப் படுத்துகின்றன. சில போது, ஒருவர் பேசும் பேச்சின் தன்மையி லிருந்தும் அவர் நெஞ்சம் எப்படிப்பட்டது என்பதை ஊகித்தறி கின்றோம். சில சமயங்களில் இம்முயற்சியில் நாம் தோற்று விடுவதுமுண்டு. சிலர் நெஞ்சிலே கள்ளம் வைத்து, நாவிலே வெல்லம் வைத்திருப்பதும் உண்டு. இந்நிலை விதிவிலக்குகளே! பொதுவாக, இருவர் கலந்து பேசும் போதுதான் ஒருவர் நெஞ்சத்தை மற்றொருவர் புரிந்து கொள்ள முடியும். கண்கள் மூலமாக வித்திடப்பட்ட காதல் பயிர் செழித்து வளரத் துணை செய்வது வாய் பேசும் வார்த்தைகளே! பார்வைகள் ஒரு பல்லவி யென்றால் வார்த்தைகள் தாம் அநுபல்லவியாகின்றன. இத்தகு தொடர்புநிலை பிற பொறிகட்கு நெஞ்சுடன் இருப்பதில்லை.

மேற்கண்ட உண்மைகளை நாம் உணரத்துணை செய்வன ஆழ்வார் பாசுரங்களே!

என்னெஞ்சும் கண்ணிணையும் களிக்குமாறே' 116

'என்னெஞ்சுள்ளும் கண்ணுள்ளும் நின்று நீங்கா 117

'கண்ணுள் நீங்கா, நெஞ்சுள்ளும் நீங்காவே' 118

'கண்ணும் நெஞ்சும் வாயும் இடங்கொண்டான்' 119

நெஞ்சிலும் அதனுடன் தொடர்புடைய கண், வாயிலும் திருமால் தங்கி அருள் புரிந்தான் என்று தாம் பெற்ற அனுபவத்தைக் கூறு முகத்தான் அப்பொறிகளுடன் நெஞ்சிற்குள்ள தொடர்பைப் புலப் படுத்தியுள்ளனர்,

நெஞ்சமும் வினையும் :

முற்பிறப்பில் நாம் செய்யும் நல்வினை, தீவினைகளுக்கேற்ற பயனை இப்பிறவியில் அடைகின்றோம். எனவே, பிறவிப் பிணி யான்து நம்மைத் தொடர்வதற்குக் காரணமாகவிருப்பது நாம் செய்யும் வினைகளே! இக்கருத்து சைவ சமயத்திற்கும் உடன் பாடுடையதே! ஆன்மாவைப் பிடித்த அழுக்குகள் என்று சொல்லப் படுவன, மும்மலங்களாகிய ஆணவமும், கன்மமும் மாயையுமே.

"கன்மம் என்பது வினை. நல்வினை, தீவினை இரண்டும். கன்மமே பிறவிக்குக் காரணம். எல்லா உயிர்களும் ஒரேவிதமான பிறவி எடுப்பதில்லை. பிறவியின் தன்மையும் ஆற்றலும் அதில் விளங்கும் அறிவும் வெவ்வேறு வகையாக இருக்கின்றன. இதற்குக்காரணம் மூல கன்மம் என்று சொல்லப்படும். கேவல நிலையில் ஆணவத்தில் அழுந்திக் கிடந்த உயிர்களுக்கு ஆணவத் தொடர்பில் வன்மையும் மென்மையும் உண்டு. இப்படியே திருவருள் தொடர்பிலும் உயர்வு குறைவு உண்டு. இவற்றால், உடலெடுக்குமுன் உயிருக்கு அனாதியாகவே நல்வினை தீவினை கள் பொருந்துகின்றன. இனி, பிறவி எடுத்தபின் செய்கின்ற வினைகளும் உள்ளன. இந்தக் கன்மமானது வித்தும் முளையும் போல நாசத்தையும் தோற்றத்தையும் உண்டாக்குவது. ஆன்மாக் கள்தோறும் சூக்குமமாய் உள்ளது. மனம், வாக்கு, காயம் மூன்றினாலும் கன்மம் விளையும். உயிர்கள்தோறும் இது இன்ப துன்பங்கள் விளைவதற்குக் காரணமாகிய புண்ணிய பாவங்களாகப் பொருந்தும்'',[120] எனவே பிறவிகள் தொடரக் காரணமா

யிருக்கின்ற நல்வினை தீவினைகள், நம்முடைய மனம், வாக்கு, காயம் ஆகியவற்றாலும் விளைகின்றன என்பது புலப்படுகிறது.

உயிர்கள்தோறும் நல்வினையும், தீவினையும் இன்ப துன்பங்கள் விளைவதற்குக் காரணமாகிய புண்ணிய பாவங்களாகப் பொருந்துகின்றன என்ற கொள்கையை ஆழ்வார்களிடமும் காண்கின்றோம். தீவினைகள் பாவங்களாகப் பொருந்தி வருத்துவதையுணர்ந்து,

'தீவினைக்கே தாழ்வுறும் நெஞ்சினார்' 121

என்று குறிப்பிடுகிறார். தீவினை வருத்துவதால் நெஞ்சின் தன்மையும்கூடத் தாழ்ந்து விடுகிறது என்பதை இங்கு உணர்த்துகிறார்.

இப்பிறவியில் நாம் செய்யும் பாவச் செயல்கள் அடுத்த பிறவிக்கு வித்தாய் அமைகின்றன. எனவே, பாவங்களைச் செய்யாது புண்ணியம் செய்து வாழ்ந்தால் தொடரும் பிறவித் தளையை அறுத்தெறிய முடியும். அதற்குத் தேவை மெய்ஞ்ஞானம். அந்த மெய்ஞ்ஞானமின்றி வினையால் பிறப்பழுந்தி வாடும் நிலையினை,

'நெஞ்சே, மெய்ஞ்ஞானமின்றி வினையால் பிறப்பழுந்தி' ...122

வாழ்வது முறையோ என்று கேட்கிறார் ஆழ்வார். இறையருளால் மெய்ஞ்ஞானம் அடையப் பெற்றால், எது நெறி, எது நெறியற்றசெயல் என்பதையுணர முடியும். நெறியுணர்ந்து நடக்க முற்பட்டால்பிறவித்துயர் மாறும் என்ற உண்மையினை,

'நெறிகொண்ட நெஞ்சனாய் பிறவித்துயர் கடிந்தே' ...123

வாழ முடியும் என்று கூறுகிறது திவ்வியப் பிரபந்தம்.

எவ்வளவுதான் நாம் முயன்று நெறியுணர்ந்து நேர்வழி சென்று புண்ணிய காரியங்களைப் புரிந்து பிறவித்துயர் கடிய முற்பட்டாலும் இறையருள் துணை புரிதல் வேண்டும். ஏனெனில் தீய, வல்வினைகளை மாற்றும் ஆற்றல் அவன் ஒருவனுக்கே உண்டு என்ற நுட்பத்தினை,

'வல்வினையை மாற்றானோ' 124

என்று கூறுவதிலிருந்து புலப்படும்.

'இருள்சேர் இருவினையும் சேரா; இறைவன்
பொருள்சேர் புகழ்புரிந்தார் மாட்டு. 125

என்ற குறட் கருத்து இங்கு நினைத்தற்குரியது.

நெஞ்சும் உயிரும் :

நெஞ்சின் பல்வேறு தன்மைகளையும், அது தொழிற்படும்முறையினையும், நெஞ்சிற்கும் பிறவற்றிற்கும் உள்ள தொடர்பினையும் இதுவரை கண்டோம். இப்போது நெஞ்சுடன் உயிருக்கு உள்ள உறவு பற்றிக் காண்போம். உயிர் என்றாலும் ஆன்மா என்றாலும் ஒன்றுதான். இறைவனைப் போலவே உயிரும் அனாதியாக உள்ளது; அது நித்தியமானது; அழிவற்றது.

"நான் நான் என்று பேசும் போது அந்த நான் என்ற சொல்லாற் குறிப்பிடப்படும் பொருளாக உள்ளது உயிர். இது பிராணவாயுவினும் வேறானது. ஐம்புலன்களாலும், மனம் புத்தி போன்ற காரணங்களாலும் அறிவது உயிர். உயிருக்கு நினைப்பும் மறப்பும் உண்டு; இறைவன் ஒருவனே முற்றுணர்வினன்."[126] ஐம்புலன்களாலும், மனத்தாலும் அறியப்படும் நிலையில் உள்ள உயிர், மனத்தின் ஒரு நிலையாகிய நெஞ்சத்தில் கலப்பதாகக் குறிப்பிடுகிறது திவ்வியப் பிரபந்தம்.

(எ-டு) 'நெஞ்சும் உயிரும் உள்கலந்து' 127

கலந்து என்று குறிப்பிடாமல் 'உள்கலந்து' என்று குறிப்பிடுவது சிந்தித்தற்குரியது. இது போன்று 'உள்ளுருகி' 'உள்கனிந்து' என்றும் வேறு இடங்களில் குறிக்கப்பட்டிருப்பதை யுணர்கிறோம்.

(எ-டு) 'உவகையால் நெஞ்ச முள்ளுருகி' 128
'ஏன்பி லெள்கி நெஞ்சுருகி உள்கனிந் தெழுந்த' ...129

நெஞ்சும் உயிரும் உள்கலந்தது போன்று, இறையருள் பெற்ற உவகையால் நெஞ்சம் உள்ளுருகியதாகவும், நெஞ்சுருகியபின் உள்கனிந்த தாகவும் கூறப்பட்டுள்ளதை யுணர்கிறோம். இங்கு 'உள்' என்று குறிப்பிடப்படுவது நெஞ்சினுள் எழுந்தருளியுள்ள இறைவனையே என்று எண்ண இடமுண்டு. ஏனெனில்,

'அரியானை உள்ளறியாய் நெஞ்சே' 130

என்று நெஞ்சை நோக்கிக் கூறும் ஆழ்வார், 'உள்' என்ற சொல்லைப் பயன்படுத்தியுள்ள நுட்பம் நெஞ்சினுள்ளே உள்ள இறைவனை யுணர்த்தும் விதத்தில் தான் அமைந்துள்ளது.

'யானும் என் நெஞ்சும் இசைந்தொழிந்தோம்' 131

என்ற இடத்தில் 'யான்' என்று அவர் குறிப்பிடுவதும் உயிரையே யாம்.

செம்பிலுள்ள களிம்பு நீங்குவது போன்று ஆன்மாவாகிய உயிரிலுள்ள ஆணவம் நீங்கும் நிலையில் அது இறைவன் திருவடியில் இரண்டறக் கலந்து இன்பம் அனுபவிக்கும் என்று கூறப்படுகிறது. இங்கு 'நெஞ்சும் உயிரும் உள்கலந்து' என்று கூறப்படுவதால் ஆன்மாவாகிய உயிர் இறைவனுடன் கலக்கும் நிலைதான் காட்டப்பட்டுள்ளது என்று கருத முடிகிறது.

ஆழ்வார்களின் பக்தி நெஞ்சம் :

இதுகாறும் நெஞ்சத்தைப்பற்றி விரிவாக நாம் நோக்கியதிலிருந்து நமக்குப் புலப்படும்' உண்மை ஒன்றுதான். அதாவது, மனத்தின் ஒரு நிலையாகிய நெஞ்சத்தின் தன்மைகளை மிகவும் நுட்பமாக ஆழ்வார்கள் உணர்ந்து பாடியுள்ள போதிலும், நெஞ்சம் என்பது இறைவனை நினைப்பதற்காகவும், அவனை வணங்குவதற்காகவும் மட்டுமே உள்ள ஒரு அரியவாய்ப்பாகவே அவர்கள் எண்ணியுள்ளார்கள். அதனால்தான் இறைவனை நினையாதவர்கட்கு நெஞ்சமென்ற ஒன்றே இல்லை என்ற பொருளில், 'நினையாதார் நெஞ்சென்றும் நெஞ்சல்ல'[132] என்று கூறியுள்ளனர். எனவே நெஞ்சிற்குச் சிறப்பே இறைவனை நினைப்பது என்பது அவர்கள் உறுதியான முடிபு.

மனிதனாகப் பிறந்தது ஓர் அரிய வாய்ப்பு. ஏனென்றால் மனிதனுக்கு மட்டுமே நெஞ்சம் உண்டு. அதனால் மனிதனால் மட்டுமே தான் இறைவனைப் பக்தியுடன் நினைக்க முடிகிறது என்ற உண்மையினை,

'வாய்ப்போ இது ஒப்ப மற்றில்லை வா நெஞ்சே' 133

என்று கூறுகிறார். இவ்வரிய வாய்ப்பை நன்கு பயன்படுத்திப் பலன்பெற வேண்டாமா என்ற தவிப்புடன் அவர் நெஞ்சையழைப்பதை நம்மால் உணர முடிகிறது. ஆனால் இதுவரை அத்தகைய அரிய முயற்சியில் ஈடுபட்டு எவ்விதப் பலனையும் அடையவில்லையே என்ற ஏக்கமும் வாட்டத்தான் செய்கிறது. அதனால் தான்,

'பிழைக்க முயன்றோமோ நெஞ்சமே' 134

என்று நெஞ்சுடன் தன் ஆற்றாமையைப் பகிர்ந்து கொள்கிறார். 'பிழைத்தல்' என்றால் உயிர் வாழ்தல் என்ற சாதாரணப் பொருளில் இங்குக் கூறவில்லை. இறையருளைப் பெறுதல் ஒன்றே பிழைத்தல் என்று கருதும் உறுதிப்பாட்டை நோக்குமிடத்து அவ்வருள் பெறாதார் அனைவரும் 'பிழைக்காதவர்கள்', அதாவது மனிதராகப் பிறந்த பயன்பெறாதவர்கள் என்பதே ஆழ்வார்கள் கருத்து.

இறைவன் அடியார்கள் நெஞ்சை விரும்பி வந்து உறைவான்; ஆனால் தீயவர்கள் நெஞ்சினுக்கு அவனே கூற்றமாகவும் ஆகின்றான் என்பதனை,

'தொண்டர்கள் நெஞ்சினில் உறைவாய்' 135

'கொடுங்கஞ்சன் நெஞ்சினின் கூற்றே' 136

என்ற வரிகளால் உணரமுடிகிறது.

அன்பு வடிவாகத் திகழ்பவன் இறைவன்; அவனை அடைய வேண்டுமென்றால் நம் நெஞ்சில் அன்பு சுரக்க வேண்டும். அவனது ஆயிரம் நாமங்களை வாயாரச் சொல்லி வணங்க வேண்டும்.

'நெஞ்ச மன்பாய் ஆயிரம் நாமம் சொல்லி' 137

அவனருள் பெறவேண்டும். திருமாலை எண்ணிவிட்டாலே நெஞ்சம் அனலில்பட்ட மெழுகுபோல் உருகுமாம்; அவன் புகழைப் பிறர்கூறக் கேள்விப்பட்ட அளவிலேயே நெஞ்சம் கரைந்துருகுமாம்.

'எண்ணுந் தோறு மென்னெஞ்சு எரிவாய்
மெழுகொக்கும்' 138

'கேட்குந் தோறு மென்னெஞ்சம் நின் தனக்கே
கரைந்துருகும் 139

என்பன ஆழ்வார் பாசுர வரிகள்.

அத்தகைய உயர்ந்த பக்தியுணர்வு அவர்களிடமிருந்ததனால் தான்,

'மாயனென் னெஞ்சி னுள்ளானே' 140

என்று உறுதியுடன் கூறமுடிந்தது.

ஆழ்வார்கள் திருமாலிடம் காட்டிய பேரன்பும், உறுதிப்பாடு மிக்க தூய பக்தியுணர்வும் எண்ணி வியத்தற்குரியது. தங்கள் நெஞ்சங்களையெல்லாம் மாயவனுறையும் கோயில்களாகவே மாற்றிவிட்ட அவர்களது பேராற்றல் மனிதப் பிறவிக்கே பெருமை யளிக்கிறது. ஆனால் அவர்களது ஒப்பற்ற பக்தியுணர்ச்சி திருமால் ஒருவனை மட்டுமே வணங்கவேண்டும் என்ற வட்டத் திற்குள் நின்றுவிட்டது.

'நெஞ்சமே, மொய்பூ மழிசைப் பரனடியே வாழ்த்து' ...141

என்று தேற்றேகாரம் போட்டுக் கூறி, பிற தெய்வங்களை வணங்க லாகாது என்ற குறிப்பினையும் உணர்த்தியுள்ளதை யிங்கு உணர்கிறோம். ஆழ்வார்களின் நெஞ்சம் திருமால் உறையும் கோயில்களாகவே திகழ்ந்துள்ளன. அவர்களது பக்தி நெறி திருமாலை மட்டுமே தெய்வமாகக் கண்டு வழிபடத் துணை செய்துள்ளது.

நெஞ்சுடையார் எவர் ?

மனத்தைப்பற்றிக் குறிப்பிட்டபோது மனித மனங்களே யன்றித் தேவர் மனங்களையும் திருமால் மனத்தினைப்பற்றியும் கூடக் குறிப்பிட்டதை யுணர்ந்தோம். ஆனால் நெஞ்சம் என்ற நிலையை நோக்கும்போது அந்நிலை முற்றிலும் மாறுபட்டுள்ளது. நெஞ்சத்தினுடைய தன்மைகளுக்கேற்ப அதன் வகைகள் கூறப் பட்டிருப்பினும் நெஞ்சம் என்பது மனிதப் பிறவிக்கு மட்டுமே உரியது என்ற தன்மையில்தான் காட்டப்பட்டுள்ளது.

இறைவனை அறிதற்குத் துணை செய்யும் வாயிலாகவும், அவனுக்குக் கோயில் கட்டிக் கும்பிடத்தக்க இடமாகவுமே நெஞ்சத்தைக் கண்டுள்ளனர். மனிதனுக்கு நெஞ்சம் என்ற ஒரு நிலையினை இறைவன் தந்ததே அவனைப் பற்றி நினைப் பதற்குத்தான் என்பது ஆழ்வார்கள் கருத்து.

'இரணியன் நெஞ்சை இருபிளவாகமுன் கீண்டாய்' 142

'வஞ்சமேவிய நெஞ்சுடைப் பேய்ச்சி'...... 143

என்ற இடங்களில் அரக்கர் நெஞ்சினைக் குறிப்பிட்டுள்ளார். அரக்கர் என்பவர் நெஞ்சில் இரக்கமற்ற, மனித நிலையில் தாழ்ந்தவர் என்பதுதான் உண்மை நிலையே யன்றி, அவர்கள்

ஓர் தனிப் பிறவிகள் என்று எண்ண வேண்டியதில்லை. எனவே, மனிதர்கள் மட்டுமே நெஞ்சுடையவர் என்பதும், இறைவனை நினைக்கும் போதுதான் அந்த நெஞ்சும் சிறப்படைகிறது என்பதும் புலப்படும்.

'யானையின் நெஞ்சிடர் தீர்த்தபிரான்' 144

என்று ஓர் இடத்தில் யானைக்கும் நெஞ்சிருப்பதாகக் கூறியிருப்பது, பிறவியால் அது விலங்காக இருப்பினும் இறைவனை யுணருமளவிற்கு உணர்வால் சிறந்திருந்ததை யுணர்த்தும்.

நெஞ்சினார் :

மனிதர்களது பெயர்களுக்குப் பின்னால் 'ஆர்' என்ற சிறப்பு விகுதி சேர்த்து வழங்குவது இயல்பு. அது அம்மனிதரது பெருமையினைக் குறிக்கும். ஆனால் நுண்பொருளாகிய நெஞ்சத்துடனும் 'ஆர்' என்ற சிறப்பு விகுதி சேர்த்து வழங்கியிருக்கும் பாங்கினைத் திவ்வியப் பிரபந்தம் காட்டுகிறது.

(எ-டு) 'என்னெஞ்சி னாரு மங்கே யொழிந்தார்' 145

இங்கு நெஞ்சத்தின் பெருமை குறிக்கும் விதத்தில் கூறப்பட்டுள்ளதாக நினைக்க முடியவில்லை. தன்னை மீறித் தனது நெஞ்சம் எங்கோ சென்றுவிட்டதை எண்ணி நொந்துகூறும் நிலையைத்தான் இங்குக் காண்கிறோம். 'நரியார், நாயார்' என்று நரி, நாய்களுக்கும்கூட 'ஆர்' விகுதி கொடுத்துச் சித்தர்கள் பாடியுள்ளது போன்று தனக்கு அடங்காத நெஞ்சத்தை இம்முறையில் இகழ்ந்து கூறியுள்ளதாகவே நினைக்கத் தோன்றுகிறது.

நெஞ்சம் பிளத்தல்!

நெஞ்சினது பல்வேறு தன்மைகளையும், அது எவ்வாறெல்லாம் மாற்றமடைகிறது என்பதனையும் நுட்பமாக விளக்கிய ஆழ்வார்கள், நுண்பொருளாகிய நெஞ்சத்தைப் பிளப்பதுபற்றியும், அதை ஊடுருவுவது பற்றியும்கூடக் கூறியுள்ளனர்.

'இரணியன் நெஞ்சை இருபிளவாக முன்கீண்டாய் 146

'நெஞ்சூடுருவவே வுண்டு நிலையும் தளர்ந்து' 147

'பைம்பூண் நெஞ்சிடந்து குருதியுக' 148

என்றெல்லாம் அவர்கள் கூறியிருப்பது சிந்தனைக்குரியது. இங்கு 'நெஞ்சு' என்ற சொல்லால் அவர்கள் குறிப்பிடுவது நெஞ்சத்தைத்

தானா அல்லது மார்புப் பகுதியையா என்று ஐயுறவேண்டியுள்ளது. ஏனெனில், பிளத்தல், ஊடுருவுதல், குருதி சிந்துதல் இவையெல்லாம் மார்புப் பகுதியினுக்கே பொருந்தும். அப்படிப் பார்த்தால், நெஞ்சு என்ற சொல்லால் மார்பினையும் ஆழ்வார்கள் குறிப்பிட்டுள்ளார்கள் என்பது விளங்கும்.

அடிக்குறிப்பு :

1.	திருநாவுக்கரசர் தேவாரம்		
2.	திருவாசகம்		
3.	இரண்டாம் ஆயிரம்–திருநெடும்		12
4.	நான்காம் ஆயிரம்		5–10–9
5.	,,		5–10–3
6.	திருக்குறள்–அன்புடைமை		74
7.	முதலாமாயிரம்–பெரி. திரு.		2-4–3
8.	,,	,,	4–4–5
9.	இரண்டாமாயிரம்		9–5–10
10.	நான்காம் ஆயிரம்		1—10-3
11.	முதலாமாயிரம்–பெரி. திரு.		2-4-3
12.	,,	,,	4–4–5
13.	,,	,,	5-2–8
14.	,,	பெரு. திரு.	2–6
15.	,,	,,	7–10
16.	,,	திருமாலை	17
17.	,,	,,	22
18.	இரண்டாம் ஆயிரம்–பெரிய. திரு.		3–9–9
19.	,,	,,	9–3–2
20.	,,	,,	9–3–7
21.	மூன்றாம் ஆயிரம்–முதல் திருவந்		85
22.	,,	திருவிருத்தம்	
23.	,,	,,	72
24.	,,	,,	78
25.	,,	பெரிய திருவந்	19
26.	,,	,,	23
27.	நான்காம் ஆயிரம்		3–5–7

28.	,,	,,	3-6-9
29.	,,	,,	7-8-2
30.	,,	,,	8-7-2
31.	திருக்குறள்-அன்புடைமை		80
32.	முதலாயிரம்-பெருமாள்		2-6
33.	சம்பந்தர் தேவாரம்		
34.	இரண்டாம் ஆயிரம்-திருநெடும்		12
35.	,,	பெரிய திருமொழி	6-10-10
36.	,,	,,	9-3-7
37.	திருக்குறள்-கல்வி		391
38.	மூன்றாம் ஆயிரம்-முதல் திருவந்		85
39.	,,	பெரிய திருவந்	19
40.	முதலாமாயிரம்-பெரி. திரு.		2-4-3
41.	இரண்டாமாயிரம்	பெரிய. திரு.	1-1-4
42.	முதலாமாயிரம்	பெரிய. திரு.	4-4-5
43.	,,	,,	5-2-8
44.	,,	பெருமாள்	7-10
45.	,,	திருமாலை	22
46.	இரண்டாமாயிரம் –	பெரிய. திரு.	3-9-9
47.	நான்காம் ஆயிரம்		10-6-1
48.	,,	,,	8-7-2
49.	மூன்றாமாயிரம் –	பெரிய. திருவந்.	32
50.	,,	நான். திருவந்.	65
51.	நான்காமாயிரம்		2-5-1
51.	,,	,,	3-1-4
53.	மூன்றாமாயிரம்.திருவிருத்		78
54.	,,	பெரிய திருவந்.	23
55.	நான்காமாயிரம்		3-5-7
56.	,,		3-6-9
57.	முதலாமாயிரம்-நாச்சியார்		3-9
58.	,,	பெருமாள்	2-4
59.	இரண்டாமாயிரம்	பெரிய. திரு.	3-9-9
60.	திருநாவுக்கரசர் தேவாரம்		
61.	இரண்டாமாயிரம்	பெரிய. திரு.	2-6;7-8-9

62.	,,		,,	7-4-6
63.	,,		,,	8-6-6
64.	,,		,,	11-3-9
65.	முதலாமாயிரம்	–	பெரி. திரு.	4.4.5
66.	இரண்டாமாயிரம்	–	பெரிய. திரு.	7-8-9
67.	,,		,,	6-9-9
68.	,,		திருநெடும்	4
69.	,,		பெரிய. திரு.	11-7-7
70.	மூன்றாமாயிரம்	–	3ஆம் திருவந்.	22
71.	ஆத்திசூடி			
72.	இரண்டாமாயிரம்		பெரிய. திரு.	1-3-3
73.	,,		,,	11-7-7
74.	,,		திருக்குறுந்	15
75.	நான்காமாயிரம்			5-3-4
76.	மூன்றாமாயிரம்		பெரிய. திருவந்.	28
77.	நான்காமாயிரம்			6-4-8
78.	,,			5-5-2
79.	மூன்றாமாயிரம்		இரண். திருவந்.	41
80.	,,		,,	49
81.	,,		,,	51
82.	,,		பெரிய. திருவந்.	67
83.	திருக்குறள்-கடவுள் வாழ்த்து			2
84.	,,		கேள்வி	413
85.	,,		,,	416
86.	மூன்றாமாயிரம்		பெரிய திருவந்.	78
87.	திருக்குறள்		அறன் வலியுறுத்தல்	37
88.	,,		குறிப்பறிதல்	1100
89.	,,		அடக்கமுடைமை	127
90.	முதலாமாயிரம்–திருமாலை			22
91.	திருக்குறள்		கடவுள் வாழ்த்து	10
92.	திருவாசகம்			
93.	முதலாமாயிரம்		பெருமாள்	2-4
94.	,,		,,	2-7
95.	மூன்றாமாயிரம்		பெரிய திருவந்	46

96.	இரண்டாமாயிரம்	பெரிய திரு	6-3-6
97.	திருக்குறள்-வாய்மை		293
98.	இரண்டாமாயிரம்	பெரிய. திரு.	9-5-10
99.	,,	,,	1-10-6
100.	,,	,,	7-2-9
101.	,,	,,	10.4-10
102.	மூன்றாமாயிரம்	2ஆம் திருவந்	98
103.	நான்காமாயிரம்	,,	7-3-2
104.	,,	,,	7-3-8
105.	,,	,,	8-2-8
106.	,,	,,	8-2-10
107.	,,	,,	6-8-5
108.	,,	,,	7-3-10
109.	,,	,,	2-1-1
110.	,,	,,	9-6-2
111.	,,	,,	10-8;1-2-6
112.	,,	,,	5-5-6
113.	இரண்டாமாயிரம்	பெரிய. திரு.	7-5-8
114.	நான்காமாயிரம்		9-3-9
115.	திருக்குறள்	குறிப்பறிதல்	1100
116.	இரண்டாமாயிரம்	பெரிய. திரு.	7-4-6
117.	,,	,,	9-1-8
118.	நான்காமாயிரம்	,,	5-5-8
119.	இரண்டாமாயிரம்	பெரிய திரு.	7-3.7
120.	சைவசமயம்		
121.	மூன்றாமாயிரம்	பெரிய. திருவந்	32
122.	நான்காமாயிரம்		3-2-7
123.	,,	,,	1-3-10
124.	மூன்றாமாயிரம்	பெரிய. திருவர்.	57
125.	திருக்குறள்	கடவுள் வாழ்த்து	5
126.	சைவசமயம்		
127.	நான்காமாயிரம்		10-7-1
128,	,,	,,	6-2-9
129,	முதலாமாயிரம்-திருச்சதகம்		76

130.	மூன்றாமாயிரம்	பெரிய. திருவந்;	14
131.	,,	,,	26
132.	இரண்டாமாயிரம்	பெரிய. திரு.	11-7-7
133.	மூன்றாமாயிரம்	பெரிய. திரு.	40
134.	,,	,,	39
135.	முதலாமாயிரம்	பெரி. திரு.	2.7-9
136.	,,	,,	2-8-8
137.	இரண்டாமாயிரம்	பெரிய. திரு.	1–3–3
138.	நான்காமாயிரம்	,,	5-10–5
139.	,,	,,	5–10–9
140.	,,	,,	1–9-5
141.	மூன்றாமாயிரம்	நான். திருவந்.	1
142.	முதலாமாயிரம்	பெரி. திரு.	2–6-7
143.	,,	பெருமாள்	7–10
144.	நான்காமாயிரம்		7–8-10
145.	,,	,,	7–3-4
146.	முதலாமாயிரம்	பெரி. திரு.	2–6–7
147.	,,	நாச்சியார்	10–3
148.	இரண்டாமாயிரம்	பெரிய. திரு.	3–4-5

உள்ளம்

முன்னுரை :

மனத்தின் நிலைகளுள் ஒன்றனைக் குறிப்பிடும் இச்சொல் பெரும்பாலும் நல்ல தன்மைகளை வெளிப்படுத்தும் இடங்களில் மட்டுமே பயன்படுத்தப் பட்டுள்ளது. நெஞ்சம் என்ற சொல்லைப் போல இதுவும் தூய தமிழ்ச் சொல்லே. இச் சொல்லைப் புலவர்கள் இலக்கியங்களில் பயன்படுத்தியுள்ள நுட்பமே மனத்தைப் பற்றிய தமிழரின் நுட்பமான எண்ணங்களைப் புரிந்து கொள்ளத் துணை செய்கின்றது.

மனம் என்ற மாளிகையின் வாயிலாக நெஞ்சத்தைக் குறிப் பிட்டால் அதன் உள் அறையாக உள்ளத்தைக் குறிப்பிடலாம். நெஞ்சத்தால் அறியப்படும் செய்திகள் சிந்தனைகளாக மாற்றம் பெற்றுப் பின்பு செயல் வடிவம் பெறுவதற்கும் உள்ளம்தான் துணை செய்கின்றது. வாயிலில் ஓரளவு மாசு படிந்திருக்க வாய்ப்புண்டு. காற்றினாலோ, வெளியிடங்களில் கிடக்கும் குப்பைகளாலோ நமது வீட்டின் வாயில்களும்கூட அசுத்தம் அடைய வாய்ப்புண்டு. ஆனால் வீட்டின் உள் அறையும் அசுத்தம் அடையும் நிலையில் வீட்டைப் பாதுகாப்பற்றதாக எவரும் வைத்திருப்பதில்லை. நெஞ்சமும் உள்ளமும் அப்படித்தான். ஒருசிலர் வீட்டின் உள் அறைகளையும் அசுத்தம் படியச் செய்துவிடுவது போன்று உள்ளத்தையும் மாசு படியச் செய்து விடுவதுண்டு. விதிவிலக்குகள் எங்கும் உண்டு.

'மனத்தின் உள் நிலை' என்ற பொருளில்தான் உள்ளம் என்ற சொல் பயன்படுத்தப்பட்டு வருகிறது. தத்துவ அறிஞர்கள் 'உள்ளுணர்வு' என்ற சொல்லால் குறிப்பிடப்படுவதும் தமிழ்ப் புலவர்கள் 'உள்ளம்' என்ற சொல்லால் குறிப்பிட்டு வருவதும் ஒப்பு நோக்கும் தன்மைகளையுடையன.

'மனிதன் மூன்று படி நிலைகளில் அறிவைப் பெறுகின்றான். அவை புலனறிவு, சிந்தனை, உள்ளுணர்வு ஆகும். முதலிரண்டும் மூன்றாவதில் முழுமை பெறுகின்றன'.[1] புலனறிவால் அறிவு பெறும் நிலையை மனம் என்றும், சிந்தனையால் அறிவு பெறுவதை நெஞ்சம் என்றும், உள்ளுணர்வால் அறிவு பெறும் நிலையினை உள்ளம் என்றும் குறிப்பிடலாம். நெஞ்சம் பெரும்பாலும் செய்திகளை அறியும் கருவியாகவே திகழ்ந்தாலும் நினைக்கும் தன்மையும் அதற்கிருப்பதனால் ஓரளவு சிந்தனையின் மூலம் அறிவு பெறும் ஆற்றலும் அதற்கிருப்பதற்கு வாய்ப்புண்டு.

மேற்கண்ட மூன்று படி நிலைகளையும்பற்றி டாக்டர் இராதா கிருஷ்ணன் தரும் விளக்கம் பின்வருமாறு :

'மனிதன் புறஉலகை அறிகின்றபோது மூவகைகளில் அறிவைப் பெறுகின்றான். புலக்காட்சி (Perceptual) முதல் நிலையாகும். அடுத்து, அளவைநெறியின் மூலம் (Logical) அறிகிறோம் இதனை அடுத்து அமைவதே அகவுணர்வாகும். இவ்வறிவு வகைகள் முறையே மனம், விஞ்ஞானம், ஆனந்தம் ஆகியவற்றால் அறியப் பெறுகின்றன. ஆனந்தம் என்பது ஆன்மீக உள்ளுணர்வு (Spritual intuition) எனலாம். இவையனைத்தும் மனித உணர்வின்பாற் படுவன. மனம் பகுதி பகுதியாகத் தொழிற்படுவதின்று. புலக்காட்சியிலும் உள்ளுணர்வு தொழிற்படுதலுண்டு. உள்ளுணர்வில் அறிவாற்றல் தொழிற்படுதலுமுண்டு. உள்ளுணர்வை முழுமையான நுழை புலக்காட்சியென்று விளக்கும் போது மனம் முழுமையாகத் தொழிற்படுகின்றது என்று பொருள். ஆகவே, உள்ளுணர்வு, பொருள்களைப்பற்றிய முழுக்காட்சியைத் தருகின்றது'.[2] இவ்விளக்கம் உள்ளத்தின் தன்மை, தொழிறபடும் நிலைகளுக்குப் பெரும்பாலும் பொருந்தும் நிலையில்தான் அமைந்துள்ளது. "உள்ளுணர்வு மேலான உயர்ந்த அறிவாகும். உட்பொருளை முழுமையாக நமக்கு இவ்வுணர்வே உணர்த்துகிறது. அறிவாற்றலும் உள்ளுணர்வும அகத்திற்கு உரியன. முன்னது குறித்ததொரு பகுதியாகும்; பின்னது ஆன்மாவை முழுமையாகப் பயன்படுத்தும். இவ்விரண்டும் ஆன்மா தொழிற்படும்போது இணைகின்றன"[3] என்ற தத்துவ விளக்கம் நெஞ்சம், உள்ளம் என்ற இரு நிலைகளுக்குமுள்ள தொடர்பினையும், அவ்

விரண்டும் ஆன்மா தொழிற்படும்போதுதான் இணைகின்றன என்ற உண்மை யினையும் உணரத் துணை செய்கின்றன.

மனம் தொழிற்படும் நிலைகளுக்கேற்ப அதை இரு பிரிவாகப் பிரித்து ஆய்கிறார் அரவிந்தர். ஒன்று மனத்தின் புறநிலை. மற்றது அதன் அகநிலை அல்லது அடிமனம். "மனம், மனித நிலையில் உடலோடு ஒன்றிய நிலையில் தொழிற்படுகின்றது. உடலை, மூளை, நரம்பு மண்டல அமைப்பு ஆகியவற்றை இடை யறாது தொழிற்படுத்தியே மனம் மனித நிலையில் அறிகின்றது. மனம், மூளை முதலியவற்றைப் பயன்படுத்தித் தன்னை வெளிப் படுத்திக்கொள்ள முற்படுகிறது. உடல் முதலிய கருவிகளைக் கொண்டு மனம் தனது தூய நிலையை அறிய எப்போதும் முயன்றவண்ணம் உள்ளது. இவ்வுண்மை மனத்தின் புற நிலைக்குப் பெரிதும் பொருந்தும். ஆனால் மனத்தின் ஆழத்தில் பிறிதொரு நிலையுண்டு. அதனை அடிமனம் (Subliminal mind) என்று கூறுகிறோம். இவ்வடிமனம் உடல் முதலியவற்றால் கட்டுறாது தொழிற்படும். இவ் வடிமனம் புறமனத்தை உந்தி மேலும் உயர்நிலையடையத் தூண்டுகிறது"[4] என்பது அடிமனத் திற்கு அவர் தரும் விளக்கம். மனத்தின் ஆழத்தில் உள்ளதாக அவர் குறிப்பிடும் அடிமனம் உள்ளம் என்ற நிலையினையே உணர்த்துவதாகக் கருதமுடிகிறது. மனத்தின் பிற நிலைகளையே அவர் பொதுவாகப் புறமனம் என்ற சொல்லால் அடக்கிவிடுகிறார்.

மனம், நெஞ்சம் போன்ற நிலைகள் ஐம்பொறிகளின் உதவி யாலும் மூளையின் உதவியாலும் தொழிற்படுகின்றன. ஆனால் உள்ளம் அவைகளால் கட்டுறாது தொழிற்படும் தன்மையுடையது. மேலும், உள்ளம்தான் மனத்தின் பிற நிலைகள் உயர்வடையத் துணை செய்கின்றது.

'வெள்ளத் தனைய மலர்நீட்டம்; மாந்தர்தம்
உள்ளத் தனைய துயர்வு' 5

என்ற திருக்குறளும் இவ்வுண்மையினை உறுதிப்படுத்தும். எனவே, டாக்டர். இராதாகிருஷ்ணன் 'உள்ளுணர்வு' என்று குறிப் பிடுவதுவம், அரவிந்தர் 'அடிமனம்' என்று குறிப்பிடுவதும் உள்ளத் தையே உணர்த்துகின்றன என்ற முடிவிற்கு வரமுடிகிறது.

உள்ளம் என்ற சொல்லின் அமைப்பும் சிந்தனைக்குரியது. 'உள்மனம்' என்ற பொருளில் 'உள்' என்ற வேர்ச் சொல்லி

லிருந்தே இச் சொல் அமைந்திருக்க வேண்டும். 'உள்' என்ற சொல்லே உள்ளம் என்ற நிலையினை விளக்கும் விதத்தில் இலக்கியங்களில் எடுத்தாளப்பட்டுள்ளது,

'உள்ளிலோர்க்கு வலியாகுவன்' 6

என்பது புறநானூறு. திவ்வியப் பிரபந்தத்திலும் அந்நிலையினைக் காண்கின்றோம்.

'உன்னைக் கொண் டென் உள்வைத்தே' 7
'உள்மகிழ்ந்த நாதனூர்' 8
'என்னுள் புகுந்தான்' 9

இவைபோன்று பல சான்றுகளைக் காட்டலாம். இந்த 'உள்' என்ற வேர்ச் சொல்லுடன் 'அம்' சாரியை சேர்கின்றபொழுது 'உளம்' என்று அமைகின்றது. 'உளம்' என்ற சொல்லும் உள்ளத்தின் நிலையினைப் புலப்படுத்தும் விதத்தில் இலக்கியங்களில் எடுத்தாளப்பட்டுள்ளது.

'வளன்வலி யுறுக்கும் உளமி லாளரே' 10
'சாந்தா ரகல முளங்கழிந் தன்றே' 11

என்பன புறநானூற்றுப் பாடல் வரிகள். திவ்வியப் பிரபந்தத்திலும் அந்த அமைப்பினைக் காண்கின்றோம்.

'உளந்தொட்டிரணியன் ஒண்மார்பகலம்
பிளந்திட்ட கைகளால்' 12
'உளங்கனிந்திருக்கு முன்னையே' 13
'உளங்குளிர அமுது செய்து' 14

போன்ற பல சான்றுகளைக் காட்டலாம்.

உளம் என்ற சொல்லே பின்னர் உள்ளம் என்று ஆகியிருத்தல் வேண்டும். இலக்கண அமைப்பில் இதற்குக் காரணம் காண முடியாமற் போனாலும் பேச்சு வழக்கிலேயே இம்மாற்றம் ஏற்பட்டிருக்க வேண்டும் என்று நினைக்கத் தோன்றுகிறது.

உளது - உள்ளது, உளோம் - உள்ளோம், உளேன் - உள்ளேன் என்று ளகர ஒற்று இரட்டித்து வழங்கப்படுவது போன்று உளம் என்பதும் உள்ளம் என்று ஆகியிருத்தல் வேண்டும். உள்ளம் விரும்பி ஒருவரை வாழ்த்தும்போது 'உளமார' என்று குறிப்பிடும்

உலக வழக்கினையே இன்றும் காண்கிறோம். எனவே, உள், உளம், உள்ளம் என்ற வகையிலேயே இச்சொல் அமைந்திருக்க வேண்டும். தத்துவ நோக்கில் உள்ளுணர்வாகவும், அடிமனமாகவும் உள்ளம் என்றநிலை எவ்வாறு அமைந்துள்ளது என்பதைக் கண்டோம். ஆனால் இச்சொல் தமிழ் இலக்கியங்களில் எப் பொருளில் பயன்படுத்தப்பட்டுள்ளது என்பதனையும் காண வேண்டும்.

உள்ளம் என்ற சொல்லை, மனத்தை உணர்த்தும் பொது நிலைச் சொல்லாகவும், நினைத்தல், ஆழ்ந்துசிந்தித்தல் போன்ற தன்மைகளையுணர்த்தும் சொல்லாகவும் சிலர் பயன்படுத்தி யுள்ளனர். இறைவன் உறையும் ஆலயமாக உள்ளத்தைப் பக்திப் பாசுரங்கள் காட்டுகின்றன. எனினும் 'மனவலிமை' என்ற ஓர் தன்மையினை இச்சொல் உணர்த்தும் விதத்தில்தான் பலரும் பயன்படுத்தியுள்ளனர்.

'உள்ளம் உடைமை உடைமை' 51

என்று குறிப்பிடும் திருவள்ளுவர், உள்ளம் என்ற சொல் ஊக்கத்தைக் குறிப்பதாகவே காட்டியுள்ளார்.

'உள் இலார்க்கு வலியாகுவன்' என்ற புறப்பாடல் வரி, உள் என்பது மனவலிமையை உணர்த்துவதாகவே காட்டுகிறது.

'உள்ளியது முடிக்கும் உரனுடை உள்ளத்து' 16

என்ற புறப்பாடல் வரியும்,

'ஊக்கம் உள்ளத்து உடைய முனிவரால்' 17

என்ற கம்பராமாயணமும்,

'உளத்திலே உறுதி கொண்டாய்' 18

என்ற பாரதியின் பாடல் வரியும் உள்ளம் என்றசொல் 'மன வலிமை'யை உணர்த்துவதாகவே காட்டுகின்றன. மனத்தின் பிற நிலைகளால் அறியப்படும் செய்திகள் சிந்தனைகளாக உருப் பெற்றுச் செயல் வடிவம்பெறத் துணைசெய்யும் உள்ளம் உறுதி யாகத்தானே இருக்க முடியும்? அவ்வுள்ளத் தன்மைகளைத் திவ்வியப்பிரபந்தம் எவ்வாறு விளக்குகின்றது என்பதை இனிக் காண்போம்.

ஆழ்வார்களும் உள்ளமும்:

உள்ளத்தைப்பற்றி இதுகாறும் நாம் கண்ட பல்வேறு சிந்தனைகளையும் ஆழ்வார்கள் நன்குணர்ந்து கூறியிருப்பதை அவர்தம் பக்திப் பாசுரங்கள் காட்டுகின்றன. 'உள்' என்ற சொல்லினாலேயே உள்ளத்தைக் குறிக்குமாறு அவர்கள் பாடியிருப்பதை முன்னர்க் காட்டினோம். வேறு பல இடங்களில் 'உள்ளம் உள்குளிர' என்றும் அவர்கள் பாடியிருப்பது சிந்தனைக்குரியது. மனத்தின் உட்பகுதியாக, அடிமனமாக அமைந்திருப்பதே உள்ளம். அந்த உள்ளமும் உள்குளிரும் நிலை பேரின்ப நிலையேயாகும்.

கண்ணனது குழந்தைப் பருவ விளையாட்டுக்களைக் காணும் நற்பேறில்லாத அவன் தாய் தேவகி, அதை எண்ணி ஏங்குகின்றாள். அதைக் காணும் வாய்ப்புப் பெற்றிருந்தால் ஏற்படக்கூடிய பேரின்பத்தை எண்ணிப் பார்க்கின்றாள். அப்போது அவ்வுள்ளத்தின் நிலை எப்படியிருக்கும் என்பதைக் குறிப்பிடும் இடத்தில்தான் 'உள்ளம் உள்குளிர' என்று குறிப்பிடுகிறார் குலசேகர ஆழ்வார்.

'மருவுநின் திருநெற்றியில் சுட்டி யசைதர
மணிவாயிடை முத்தம்
தருதலும், உன்றன் தாதையைப் போலும் வடிவுகண்டு
உள்ளம் உள்குளிர' 19

என்றும்,

'குன்றினால் குடைகவித்ததும் கோலக் குரவை கோத்ததும்
குடமாட்டும்
கன்றினால் விளவெறிந்ததும், காலால் காளியன்
தலைமிதித்ததும் முதலா
வென்றிசேர் பிள்ளைநல் விளையாட்டம் அனைத்திலும்
அங்கென் உள்ளம் உள்குளிர
ஒன்றுங் கண்டிடப் பெற்றிலேன் அடியேன் காணுமாறினி
யுண்டெனி லருளே' 20

என்றும், உள்ளம் உள்குளிர்வதாக ஆழ்வார் குறிப்பிடும் இடங்கள் பிறரால் எய்தற்கரிய பேரின்ப நிலையினையே உணர்த்துகின்றன.

'உள்ளம் குளிர்தல்' என்ற சாதாரண, மாந்தர் நிலையினின்றும் வேறுபடுத்திக் காட்டவே 'உள்ளம் உள்குளிர்தல்' என்று குறிப் பிட்டுள்ளார். மேலும், உள்ளத்தின் உள்ளேதான் இறைவன் இருக்கின்றான் என்ற குறிப்பினையும் திவ்வியப் பிரபந்தம் காட்டுகிறது.

'உள்ளத்தி னுள்ளே உளன் கண்டாய்' 21

என்பது ஆழ்வார் திருவாக்கு. எனவே உள்குளிர்தல் என்பது உள்ளத்தின் உள்ளேயிருக்கின்ற இறைவனே குளிர்தல் என்ற பொருளையே தருகின்றது. நாம், அதாவது நமது ஆன்மா குளிரும் நிலையினை 'உள்ளம் குளிர்தல்' என்றும் உள்ளத்தில் உள்ள இறைவன் குளிரும் பேரின்ப நிலையினை 'உள்ளம் உள் குளிர்தல்' என்றும் குறிப்பிடும் நிலையினைத் திவ்வியப் பிரபந்தம் காட்டுகிறது. திருமாலின் அவதாரமாகிய கண்ணனின் குழந்தைப் பருவ விளையாட்டுகளை எண்ணிப் பெருமிதமடைய நினைக்கும் தேவகியின் உள்ளத்திலும் இறைவன் இருக்கின்றான். அதனால் தான் இறைக்குழந்தையின் திருவிளையாடல்களை எண்ணும் போது அவள் உள்ளம் 'உள்குளிர்'கிறது.

பூதனை என்ற அரக்கி பெண்வடிவம் தாங்கி வந்து கண்ண னுக்குப் பாலூட்டுகின்றாள். அவள் ஊட்டியது அமுதனைய பால் அல்ல; ஆலகாலவிடம். குழந்தையைக் கொன்றுவிட வேண்டு மென்பது கொடியவளின் நோக்கம். ஆனால், பிறரைக்காக்கும் பெருமானுக்குத் தன்னையும் காத்துக் கொள்ளத் தெரியாதா? கண்ணனின் வயது குழந்தைப்பருவம்; மழலை பேசும் நிலை. மற்றவர் தன்மையைப் புரிந்து கொள்ள முடியாத சூழல். அந்தச் சூழ்நிலைகளைச் சாதகமாக எண்ணியே அரக்கியும் தீது செய்ய முற்படுகின்றாள். கண்ணனின் புறக்கண்களால் அவளைப் புரிந்து கொள்ள முடியாதுதான். ஆனால், அகக்கண்போன்ற உள்ளம் இருக்கின்றதே, அதற்கு இளமைப் பருவம் என்ற ஒன்று இல்லை யே! அதனால் அந்த உள்ளத்தினால் கூர்ந்து நோக்கி அவளது இழிதகைமையினைக் கண்ணன் உணர்ந்து கொண்டான் என்று கூறுகிறார் பெரியாழ்வார்.

"தள்ளித் தளர்நடை யிட்டிளம் பிள்ளையாய்
உள்ளத் தினுள்ளே அவளையுற நோக்கி

கள்ளத் தினால் வந்த பேய்ச்சி முலையுயிர்
துள்ளச் சுவைத்தானாலின்று முற்றும்'' 22

என்பது அவர்தம் திருவாக்கு. தள்ளித் தளர்நடையிடும் இளம் பிள்ளையாய்க் கண்ணன் இருந்தாலும் உள்ளத்தினால் அவளை யறிந்து கொண்டான் என்பதனை,

'உள்ளத் தினுள்ளே அவளையுற நோக்கி' என்று அவர் கூறும் பாங்கு உள்ளத்தின் தன்மையை உணர்த்தும் விதம் அமைந் துள்ளது. 'உள்ளத்தினால் நோக்கி' என்று குறிப்பிடாமல், 'உள்ளத்தின் உள்ளே...உறநோக்கி' என்று குறிப்பிட்டிருப்பது குழந்தையின் தெய்வத் தன்மை பொருந்திய உள்ளத்தையும், எதிரில் இருப்பவளின் உள்ளம் எத்தகையது என்பதைக் கூர்த்து நோக்கியறியும் அவ்வுள்ளத்தின் சிறப்பினையும் புலப்படுத்து கிறது.

நரசிங்கமாகத் தூணிலிருந்து வெளிப்பட்ட திருமால் இரணிய னின் மார்பைப் பிளந்து உயிர் குடித்த செய்தியைக் குறிப்பிடும் இடத்தில்,

'உளந்தொட்டு இரணியன் ஒண் மார்பகலம் பிளந்து' 23

என்று குறிப்பிடுகிறார் பெரியாழ்வார். இரணியனுடைய அகன்ற மார்பினைப் பிளந்த அளவோடு அவன் உயிர் பிரியவில்லையாம்; அவ்னது உள்ளத்தினையும் தொட்டபோதுதான் உயிர் பிரிந்தது என்று அவர் குறிப்பிடுவதனை நோக்கும்போது உள்ளத்தில்தான் உயிர் உள்ளதோ என்று எண்ண வேண்டியுள்ளது.

திருமாலின் பிறிதோர் அவதாரமாகிய இராமன் போர்க் களத்தில் இராவணனைத் தன் அம்புகளால் உயிர் பிரிய வைக் கின்றான். அக்காட்சியைக் கம்பர் காட்டும் விதமும் இங்கு ஒப்பு நோக்கத் தக்கது. இராமன் விடுத்த அம்பு எந்நிலையில் இராவணனது உயிரைப் பருகியது என்பதனைக் கம்பர் காட்டும் விதமும் பெரியாழ்வார் கூறும் விதத்துடன் ஒத்தே அமைந்துள்ளது.

'முக்கோடி வாழ்நாளும் முயன்றுடைய பெருந்தவமும்
முதல்வன் முன்னாள்
எக்கோடி யாராலும் வெலப்படாய் எனக்கொடுத்த
வரமும் யேனைத்

திக்கோடும் உலகனைத்தும் செருகடந்த புயவலியும்
 தின்று மார்பின்
புக்கோடி உயிர்பருகிப் போயிற்றே இராகவன்றன்
 புனித வாளி! 24

என்பது கம்பர் பாடல். இராவணனின் தவத்தையும், வரத்தையும், புயவலியையும் தின்ற அப்புனிதவாளி இறுதியில் 'மார்பின் புக்கோடி உயிர்பருகி'யது என்று அவர் குறிப்பிட்டிருப்பது எண்ணுதற் குரியது. மார்பைப் பிளந்த அளவோடு இராவணனின் உயிர் பிரியவில்லையாம்; 'மார்பின் புக்கோடி' உயிர் பருகியதாம். எனவே மார்பின் புக்குள்ள உள்ளத்தைத் தேடியோடி அங்குள்ள உயிரை அவ்வாளி கவர்ந்துள்ளது என்பதே கம்பர் உணர்த்தும் உண்மையாகும்.

இராவணன் உயிர் பிரிந்த நிலையில் மண்மேல் கிடக்கும் காட்சி கண்டு அவனருமை மனைவி மண்டோதரி புலம்பியழுகின்றாள். அப்போது அவள்கூறும் கருத்தினிலும் மேற்கண்ட உண்மை உறுதிப்படுகிறது. இராமனது அம்பு இராவணனது அழகிய உடலின் மேலும் கீழும் எள்ளிருத்தற்கு உரிய இடமில்லாமல் உயிரிருக்கின்ற இடத்தைத் தேடியது என்று கூறுகிறாள் மண்டோதரி.

'வெள்ளெருக்கஞ் சடைமுடியான் வெற்பெடுத்த திருமேனி
 மேலும் கீழும்
எள்ளிருக்கு மிடமின்றி யுயிரிருக்கு மிடம்நாடி
 யிழைத்த வாறோ
கள்ளிருக்கு மலர்க்கூந்தல் சானகியை மனச்சிறையில்
 கரந்த காதல்
உள்ளிருக்கு மெனக்கருதி யுடல்புகுந்து தடவியதோ
 ஒருவன் வாளி' 25

என்பது அப்பாடல். இராவணனது அழகிய உடலின் மேலும் கீழும் ஊடுருவிச் சென்ற அந்தப் புனிதவாளி இறுதியில் அவன் உயிரிருக்கும் இடந்தைத் தேடிச் சென்றது. 'மார்பின் புக்கோடி உயிர் பருகி' என்ற அச்சொற்களையும் இங்கு இணைத்து நோக்கும் போது, உயிரிருக்கும் இடமாகிய உள்ளத்தினையே தேடிச் சென்றுள்ளது என்பது புலப்படும்.

'மனச்சிறையில் கரந்த காதல் உள்ளிருக்குமெனக் கருதி' என்று குறிப்பிடுவதும் சிந்தனைக்குரியது. சானகியின்மீது தனக்கிருந்த காதலைத் தனது மனச்சிறையில் மறைத்துவைத்திருந்தான் இராவணன். அக்காதல் ஒரு வேளை உயிரின் இருப்பிடமாகிய உள்ளத்தில் இருக்குமோ என்றெண்ணி அவ்வாளி தேடியது என்ற குறிப்பினையே 'உள்ளிருக்குமெனக் கருதி' என்ற அக்கூற்று உறுதிப்படுத்துகிறது. 'உள்' என்று உள்ளத்தினையே குறிப்பிடுகிறார். எனவே, உள்ளத்தின் உள்ளேதான் உயிர் உள்ளது என்ற உண்மை பெரியாழ்வார் பாசுரத்தாலும், கம்பர் கவியாலும் உணரக் கிடக்கிறது.

மன்மதனையும், பிரம்மனையும் படைத்த திருமாலின் உந்திக் கமலத்தின் மேல்தான் தனது உயிர் உள்ளது என்று கூறுகிறார் திருப்பாணாழ்வார். அப்படியவர் கூறுமிடத்து 'அடியேன் உள்ளத்து இன்னுயிர்' என்று குறிப்பிடுகிறார்.

'மந்தி பாய் வட வேங்கடமாமலை - வானவர்கள்
சந்தி செய்யநின் றானரங் கத்தரவின்னணையான்
அந்தி போல் நிறத் தாடையும் மதன்மேலயனைப் படைத்த தோரெழில்
உந்திமேலதன்றோ அடியேன் உள்ளத்தின்னுயிரே' 26

என்பது அப்பாசுரம். 'உந்தி மேலதன்றோ அடியேனுயிர்' என்று குறிப்பிடாமல் 'உள்ளத்து இன்னுயிர்' என்து குறிப்பிட்டிருப்பது அவரது உயிர் உள்ளத்தில்தான் உள்ளது என்பதனையும், உள்ளத்துடன் சேர்ந்த அவ்வுயிர் திருமாலின் உந்திக் கமலத்தின் மேல் உள்ளது என்பதனையும் அவ்வாழ்வார் உணர்ந்தே கூறியுள்ளார்.

உள்ளத்தில்தான் உயிர் உள்ளது; அவ்வுள்ளம் இறைவன் குடியிருக்குமிடமாகவும் உள்ளது என்ற கருத்துக்களை நோக்கும் போது நமக்கு ஓர் உண்மை புலப்படுகிறது. பரமாத்மா (இறைவன்) என்ற நெருப்பின் ஒரு பொறியாகவே ஜீவாத்மா இயங்கி வருகிறது. இல்வுடலில் அவ்வாத்மா இயங்குவதற்கு ஜீவன் (உயிர்) துணை செய்வதால் அது ஜீவாத்மா என்று அழைக்கப் படுகிறது. இவ்வாத்மாவின் வடிவில்தான் உள்ளத்தில் இறைவன் இருந்து அருள் செய்கிறான். உள்ளத்திலுள்ள ஆத்மா உயர்நிலையடையும் போது பரமாத்மாவுடன் கலந்துவிடு

கின்றது. அவ்வாத்மா மனித உடலில் நிலைத்திருக்க, இவ்வுடல், உயிர், மனம் என்ற மூன்றும் துணை செய்கின்றன. இவ் வுண்மையை உபநிடதங்கள் நமக்கு உணர்த்துகின்றன.

''தொடர்ந்து மூச்சுவிடும்' என்னும் பொருள்படும் 'ஜீவ்' என்னும் வேர்ச் சொல்லிலிருந்து 'ஜீவ' என்னும் சொல் பெறப் படுகிறது. ஆழ்ந்த உறக்கத்தில் மனம் அடங்கியிருக்கும் போதும் நிகழ்வதும், வாழ்க்கையின் இருதிறச் செயல்களுள் ஒன்றானதுமான உயிரியலான அல்லது உணர்வற்ற செயலாக மூச்சிற்கு இப்பெயர் முதன்மை தருகிறது. ஆன்மாவிற்கு வேறு இரு பெயர்களையும் உபநிடதங்கள் தரு கின்றன. அவை யாவன: நுகர்வோன் (போக்தா), செய்வோன் (கர்த்தா). இவை யிரண்டும் சேர்ந்து உயிரின் உள இயலான அல்லது உணர்வு வகையான செயலை வலியுறுத்துகின்றன. உணர்வற்ற செயலின் அடிப்படை 'பிராணன்' என வழங்கப் படுகிறது. உணர்வு வகையான செயலின் அடிப்படை மனம் (Manas) என வழங்கப் பெறுகிறது. வியாவஹார (நடைமுறை) முழு வதிலும் ஒவ்வோர் ஆத்மாவும் இவ்விரு அடிப்படைகளுக்கும் உட்பட்டிருக்கிறது. ஒப்பு முறையில் உபாதிகள் (புற ஒட்டுகள்) என்று சொல்லக்கூடிய இவ்விரண்டுடனும் பருவுடலைச் சேர்க்க வேண்டும். இப்பருவுடல் மட்டும்தான் பிறப்புத் தோறும் புதிதாக் வருகிறது. உடல், மூச்சு, மனம் ஆகிய மூன்றும் ஆத்மாவிற்கு ஒரு வகையான நுகர் நிலையான குடியிருப்பாக (empirical home) அமைகின்றன''.[27]

உயிரின் உணர்வற்ற செயல், உணர்வு வகையான செயல் ஆகிய இவ்விரண்டின் அடிப்படை நிலைகளே 'பிராணன்' என்றும் வழங்கப்படுகிறது என்ற உண்மையை உபநிடதங்கள் நன்கு உணர்த்துகின்றன. உயிர், உள்ளம், ஆகியவற்றுடன் இறைவனுக் குள்ள தொடர்பும், ஆன்மா வடிவில் அவன் ஒவ்வொரு உள்ளத் திலும் நின்றருள் புரிவதும் திவ்வியப் பிரபந்தப் பாசுரங்களால் நன்கு உணர்த்தப்படுகின்றன. உடல், மூச்சு, மனம் ஆகிய மூன்றும் ஆத்மாவிற்கு நுகர் நிலையான குடியிருப்பு என்று குறிப் பிடுவது, இறைவனுக்கு அம்மூன்றும் நுகர்நிலையான குடியிருப் பாக இருப்பதையே உணர்த்தும். 'மனம்' என்று பொது நிலையில் உபநிடதங்கள் குறிப்பிடுவதனையே மனத்தின் உள்நிலையாகிய 'உள்ளம்' என்று ஆழ்வார்கள் குறிப்பிடுகின்றனர்,

உள்ளம், உயிர், ஆன்மா இவைகளிடையேயுள்ள தொடர்பினை இதுவரை கண்டோம். அவ்வுள்ளம் மனத்தின் உள்ளே உள்ளது என்பதைத் தெளிவாகவே உணர்த்தி விடுகிறார் பொய்கையாழ்வார்.

"தாமுளரே தம்முள்ளம் உள்ளுளவே; தாமரையின்
பூவுளதே; யேத்தும் பொழுதுண்டே - வாமன்
திருமருவு தாள்மருவு சென்னியரே, செவ்வே
அருநரகம் சேர்வ தரிது" 28

என்பது அவரது பாசுரம். 'தாம் உளரே' என்று குறிப்பிட்டதுடன், 'தம் உள்ளம் உள்ளுளவே' என்றும் குறிப்பிட்டிருப்பது, மனத்தின் அடிநிலையாக, உள்ளேதான் உள்ளம் இருக்கின்றது என்பதனையே உணர்த்துகிறது. உள்ளம் உள்ளேதான் இருக்கின்றது என்பதனைப் பொய்கையாழ்வார் நினைவு படுத்துவதன் நோக்கம், அவ்வுள்ளத்தில்தான் இறைவன் இருக்கின்றான்; அவனை யேத்தித் தொழுதால் கொடிய நரகம் செல்லவேண்டிய நிலையினின்று மீண்டு இறைவன் திருவடி நிழலையடைந்து பேரின்பம் துய்க்கலாம் என்பதுவேயாம். நம் மனத்தின் உள்நிலையாக உள்ளம் என்ற ஒன்று இருப்பதனையோ, அங்கு இறைவன் இருப்பதனையோ உணராதார் அருநரகம் அடைவர் என்ற மறைமுகமான எச்சரிக்கையினையும் இங்கு உணர முடிகிறது.

உள்ளம் எங்கு இருக்கிறது என்பதனைப் பொய்கையாழ்வார் கூறுவது போன்று இறைவன் உள்ளத்தில்தான் உள்ளான் என்பதை உறுதிப்படுத்தும் விதத்தில், இறைவனைச் சுட்டும் நிலையிலேயே 'உள்ளத்து இறைவன்' என்று குறிப்பிடுகிறார் திருமங்கையாழ்வார்.

'இருந்தானென் னுள்ளத் திறைவன்; கறைசேர்
பருந்தாட் களிற்றுக் கருள்செய்த செங்கட்
பெருந்தோள் நெடுமாலைப்பேர் பாடியாட
வருந்தாதென் கொங்கை யொளிமன்னு மன்னே!' ...29

என்பது அவ்வாழ்வார் பாசுரம். உள்ளத்திலிருக்கின்ற நெடுமாலின் திருநாமங்களைக் கூறி மகிழ்ந்து ஆடினால் நிச்சயம் அவன் அருள் செய்வான். ஏனென்றால் மனித நிலையினின்றும் இழிந்த விலங்குகளில் ஒன்றாகிய யானைக்கே அவன் அருள்

செய்தவன். யானைக்கு உள்ளம் கிடையாது; அதனால் யானை யுடன் அவன் தங்கி அருள் புரியமுடியாது. அப்படியிருந்தும் யானைக்கு அருளியவன் நெடுமால். மனிதனுக்கு உள்ளம் உண்டு; அதனால் அவனுடன் இறைவன் உறைய வாய்ப்புண்டு. உடனுறையும் இறைவனை யுணர்ந்து பயன் பெறுவதே மனிதப் பிறவியின் மாண்பு. அந்நிலையடைய முடியாதோர் யானையினும் இழிந்தவர்கள் என்பதுவே திருமங்கையாழ்வார் உணர்த்துவ தாகும்.

மனிதன் இறையருள் பெற்று முக்தியடையத் துணை செய்யும் விதத்தில் அவனுக்கு அமைந்ததுதான் உள்ளம். அதுபற்றிய பொதுவான கருத்துக்களை ஆழ்வார்கள் கூறியமுறையை யொட்டி இதுவரை சிந்தித்தோம். இனி, அச்சொல்லைப் பயன் படுத்தியுள்ள சூழல்கள், அதன் மூலம் உணர்த்தியுள்ள நுட்பங்கள் ஆகியனவற்றைத் தனித்தனியாக நோக்குவோம்.

அடைச்சொற்களில் உள்ளம் :

ஒரு மனிதனின் பெயருக்கு முன்னால் உள்ள அடைச்சொற் களைக் கொண்டே அவனது ஆற்றல் புகழ் முதலியனவற்றை அறிகிறோம். அதுபோலவே ஒரு நிலையை யுணர்த்தும் சொற் களில் பயன்படுத்தப்படும் அடைச் சொற்களைக் கொண்டே அந்நிலையின் தன்மைகளையும் நாம் உணர முடியும். உள்ளம் என்ற சொல்லுடன் எத்தகைய அடைச் சொற்களைப் பயன் படுத்தியுள்ளார்கள் என்பதையறிந்தால் அதன் மூலம் உள்ளத்தின் தன்மைகளையும் அறிந்து கொள்ளலாம்.

1. மறவாத உள்ளம் 30
2. உவந்த உள்ளம் 31
3. காதலுள்ளம் 32
4. மெலியுமுள்ளம் 33
5. அழியுமுள்ளம் 34
6. நில்லா உள்ளம் 35
7. களிக்கும் உள்ளம் 36
8. உள்ளும் உள்ளம் 37
9. உருகுமுள்ளம் 38
10. கரையுமுள்ளம் 39

11. தெளியுமுள்ளம் 40
12. குளிருமுள்ளம் 41
13. சோரு முள்ளம் 42
14. கனியுமுள்ளம் 43

அடைச் சொற்களே யன்றி உள்ளத்தின் தன்மை யுணர்த்தும் விதம் பயன்படுத்தப்பட்ட வேறு சில சொற்களும் இங்கு ஆராய எடுத்துக் கொள்ளப்பட்டுள்ளன. மேற்கண்ட அனைத்துச் சொற்களையும் நோக்கும்போது ஓர் உண்மை புலப்படுகிறது. பெரும்பாலும் எல்லாச் சொற்களுமே உள்ளத்தின் சிறந்த தன்மைகளை யுணர்த்தும் விதத்தில்தான் அமைந்துள்ளன. மனத்தின் பிற நிலைகளில் இந்நிலையினைக் காணமுடியாது. மனம், நெஞ்சம் போன்ற சொற்களின் அடைச்சொற்களில் அவற்றின் நல்ல தன்மைகளைவிடத் தீய தன்மைகளைத்தான் அதிகம் காண முடிந்தது. இவ்வேறுபாட்டிற்குக் காரணம், உள்ளுணர்வின் இருப்பிடமாகவும், தெளிந்த சிந்தனைகள் தோன்றும் இடமாகவும் உள்ளம் இருப்பதுடன் இறைவன் உறையும் இடமாகவும் இருப்பதனால் பெரும்பாலும் தீய தன்மைகளை உள்ளத்தில் காண முடியாது என்பதேயாம்.

உள்ளத்தினுடைய சிறந்த தன்மைகளுள் ஒன்று மறவாமையாகும். ஏற்கெனவே நடந்த நிகழ்ச்சிகளை மறவாமல் நினைவில் வைத்திருப்பதன் மூலமே நாம் நன்முறையில் வாழமுடிகிறது. அறிவு பெறுவதற்கும் அடிப்படை அறிந்தவற்றை மறவாமல் நினைவில் வைத்திருப்பதே! ஒவ்வொன்றையும் மறந்துகொண்டே சன்றால் எவ்வித அறிவும் நிலைத்திருக்காது. இது ஒருவகையைச் சேர்ந்த மறவாமை.

'எந்நன்றி கொன்றார்க்கும் உய்வுண்டாம்; உய்வில்லை
செய்ந்நன்றி கொன்ற மகற்கு' 44

என்று திருவள்ளுவர் கூறுவதுபோல் ஒருவர் செய்த நன்றியை மறவாமல் இருப்பதும் ஒருவகை. நல்ல உள்ளத்தின் சிறப்பினை அது புலப்படுத்தும்.

நம்முடைய உயிராக நின்று நம்மை நாளும் இயக்கிக்கொண்டிருக்கும் இறைவனை மறவாமல் இருப்பதுவே உள்ளத்தின் மிகச்

சிறந்த தன்மையாகும். அத்தன்மையினையே திவ்வியப்பிரபந்தம் கூறுகிறது.

'..................................

தில்லை நகர்த்திருச்சித்ர கூடம் தன்னுள்
உறைவானை மறவாத வுள்ளம் தன்னை
உடையோம் மற்றுறு துயரமடையோ மன்றே' 45

என்று கூறுகிறார் குலசேகர ஆழ்வார். திருச்சித்ர கூடத்தில் உறைபவனாகிய திருமாலை மறவாத உள்ளத்தைத் தாம் பெற்றிருப்பதாகவும், அதனால் உள்ளத்தை வருத்தக்கூடிய துயரம் எதனையும் தாம் அடையப் போவதில்லையென்றும் உறுதியோடு கூறுகிறார் அவர். எனவே, இறைவனை மறவாத உள்ளத்தோர்க்குத் துயரம் ஏதும் இல்லையென்பதும், அவனை மறந்து அல்லற்படுவோர்க்கே உள்ளத் துயரங்கள் என்பதும் இங்கு உணரக் கிடக்கிறது.

'உள்ளத்தில் இறைவன் இருக்கின்றான்; அவன் விருப்பப் படியே எல்லாம் நடக்கும்' என்ற தெளிவான முடிவிற்கு ஒருவர் வந்துவிட்டாலே இன்பத்தை நினைத்து மகிழ்வது, துன்பத்தை யெண்ணி வருந்துவது போன்ற நிலைகளை அங்குக் காணமுடியாது. அதனால் உள்ளத்தை வருத்தும் துயரம் ஒரு போதும் அவர்களை நெருங்க முடியாது. இவ் வுண்மையினையே மேற்கண்ட பாசுரத்தால் நாம் உணர்கிறோம்.

மறவாதிருத்தல் என்றாலே நினைத்தல் என்பதுதான் பொருள் எனினும் 'உள்ளும் உள்ளம்' என்ற சொற்கள் இடை விடாது நினைத்தல் என்ற பொருளைத் தருகிறது. 'எப்படியிருக் கின்றாய்?' என்ற கேள்விக்கு 'கெட்டுப் போகவில்லை' என்பதும் விடையாகலாம்; 'நன்றாய் இருக்கின்றேன்' என்பதும் விடையாக லாம். எனினும், முந்திய விடையைக் காட்டிலும் இரண்டாம் விடையிலேயே சிறப்பைக் காண்கிறோம். மறவாதிருத்தலைவிட இறைவனை இடைவிடாது நினைத்தலே சிறப்பு. அச்சிறப்புடை யோர் உள்ளத்தில்தான் இறைவனும் உறைகின்றான்.

'ஊனாகப் பேய்முலை நஞ்சுண்டான் றன்னை
உள்ளுவா ருள்ளத்தே யுறைகின்றானைக்

'காணாது திரிதருவேன் கண்டு கொண்டேன்

கடிபொழில்சூழ் கடன்மல்லைத் தலசயனத்தே' 46

என்று கூறுகிறார் திருமங்கையாழ்வார்.

மனித உள்ளத்தின் சிறப்பே அது பிறர்க்கு இரங்கி அருள் புரியும் நிலையில்தான் இருக்கின்றது. அன்பின் ஊற்றாக உள்ளம் திகழும் போதுதான் அன்பே வடிவான இறைவனும் அவ்வுள்ளத்தைத் தேடி வருவான். தாயான அன்பிருக்கும் உள்ளத்தில்தான் 'அன்பீன் குழவி'யாகிய அருளும் இருக்கும்.

'உள்ங் கொள் அன்பினோடு இன்னருள் சுரந்து' 47

இறைவன் அடியவர்களை ஆட்கொள்ளுகின்றான்.

'உளங்கொள் அன்பு' என்று குறிப்பிடுவது, அன்பு என்பது உள்ளத்துடன் இரண்டறக் கலந்திருக்க வேண்டிய இயல்பினையுடையது என்பதை யுணர்த்தும். அந்த அன்புதான் முதிர்ந்த நிலையில் காதலாகப் பரிணமிக்கின்றது. 'காதலாகிக் கசிந்து கண்ணீர் மல்கு'ம் நிலை, அன்பான் முதிர்ந்த உள்ளமுடையோரின் தன்மையாகும். ஆண் பெண்ணிடையில் தோன்றும் தூய அன்பினையும் காதல் என்று குறிப்பிட்டாலும், ஒரு ஆன்மா இறைவனை அடையத் துடிக்கும் அன்பின் நெகிழ்ச்சியினையே பக்தி இலக்கியங்கள் காதல் என்று பேசுகின்றன.

'பெருகு காதலடியேன் உள்ளம்

உருகப் புகுந்த ஒருவர்' 48

என்று குறிப்பிடுகிறார் திருமங்கையாழ்வார். அவருடைய உள்ளத்தில் இறைவனையடையத் துடிக்கும் பேரன்பான காதல், வெள்ளம் போல் பெருகிக் கொண்டிருந்ததாம். அத்தகைய உள்ளம் உருகும் விதத்தில் இறைவன் அவ்வுள்ளத்தில் புகுந்து அருள்செய்தான் என்று உள்ளத்தின் இருதன்மைகளையும் இணைத்துக் கூறுகிறார். நம் உள்ளத்தில் மிகுந்த காதலுணர்வுடன் இறைவனை வழிபட்டால் நம் உள்ளம் உருகும் விதம் இறைவனும் அருள் புரிவான் என்பதே அவ்விரு நிலைகள்.

இறைவன் மீது தாம் கொண்டிருந்த காதலை முன்னர் வெளிப்படுத்திய திருமங்கையாழ்வார், இறைவன் தம்மீது கொண்டிருந்த காதல் நிலையினையும் வேறோர் பாட்டில் வெளிப்படுத்துகிறார்.

பலரும் இறைவனைக் காதலிக்கின்றனர். ஆனால் இறைவனே விரும்பி ஒருவரைக் காதலிக்கின்றான் என்றால் காதலிக்கப்படுப வருக்குப் பெருமிதமும், உறுதி கலந்த நம்பிக்கையும் ஏற்படுவது இயல்புதானே! அவ்வுள்ள நிலையினை அருமையாகக் காட்டு கிறார் திருமங்கை யாழ்வார்.

'இனியெப் பாவம்வந் தெய்தும் சொல்லீர் யெமக்கு?
இம்மையே அருள் பெற்றமையாலடும்
துனியைத் தீர்த்தின்ப மேதரு கின்றதோர் தோற்றத்
தொன்னெறியை, வையம் தொழப்படும்
முனியை, வானவரால் வணங்கப்படும் முத்தினைப்
பக்தர்தாம் நுகர்கின்ற தோர்
கனியைக் காதல்செய் தென்னுள்ளம் கொண்ட
கள்வனை யின்று கண்டுகொண்டேனே' 49

என்பது அவர்தம் அருட்பாசுரம். 'காதல் செய்து என்னுள்ளம் கொண்ட கள்வன்' என்று இறைவனைக் குறிப்பிடும் தகுதி அவருக் கிருந்தமையால்தான், 'இனியெப்பாவம் வந்தெய்தும் சொல்லீர் யெமக்கு?' என்று கேட்கும் உறுதியும் அவருக்கிருந்தது. இறைவ னால் காதலிக்கப்படும் நிலையினுக்கு உயர்ந்துவிட்டால் பாவங்கள் ஏதும் நம்மை நெருங்காது என்பதையுணர்த்துவதுடன் மறுமையில்தான் இறைவன் அருளைப் பெறமுடியும் என்ற பொதுவான கருத்தைமாற்றி இம்மையிலேயே அதனைப் பெற முடியும் என்ற நம்பிக்கையினையும் அப்பாடல் நமக்கு ஊட்டுகிறது.

இறையருளைப் பெறவேண்டும் என்று துடித்த உள்ளம் அதனைப் பெறுகின்றபோது எண்ணியது ஈடேறிய உளநிறைவால் களிப்படைகிறது. உளம் குளிரும் நிலை அவ்வுள்ளத்தின் மிகச் சிறந்த நிலையாகும். பலரது நெஞ்சம் தீய நினைவுகளால் எப்போதும் அனலெனக் காய்ந்து கொண்டிருக்கும். 'அழுக்காறு, அவா, வெகுளி, இன்னாச் சொல்' போன்ற அழுக்குகளால் மாசு படிந்த மனங்களைப் பார்க்கின்றோம். ஆனால் உள்ளம் என்ற நிலையினை நோக்கும்போது அது தூய்மையானதாகவே காட்டப் படுகிறது. ஒருவேளை, நாலாயிரத் திவ்வியப்பிரபந்தம் போன்ற பக்தி இலக்கியங்களில் இறைவன் உறையும் ஆலயமாக உள்ளம் காட்டப்படுவதால் அது தூய்மையுடன்தான் இருக்கும் என்று

எண்ணி இவ்வாறு கூறினார்களோ என்றும் எண்ண வேண்டி யுள்ளது.

மிகுந்த மகிழ்ச்சியும் உளநிறைவும் ஏற்படும்போதுதான் உளம் குளிரும் நிலை தோன்றும். அந்நிலையினை,

'விளங்கனியை யிளங்கன்று கொண்டுதிர வெறிந்து
வேல்நெடுங்கண் ஆய்ச்சியர்கள் வைத்ததயிர் வெண்ணெய்
உளங்குளிர அமுதுசெய்திவ் வுலகுண்ட காளை
உகந்தினிது நாடோறும் மருவியுறை கோயில்' 50

என்று புலப்படுத்துகிறார் திருமங்கையாழ்வார். உளநிறைவும் வயிற்று நிறைவும் சேர்ந்த நிலையில் தோன்றும் மகிழ்ச்சி நிலை யினையே 'உளம் குளிர்தல்' என்று குறிப்பிடும் முறையினை இங்கும் காண்கிறோம்; உலக வழக்கிலும் உணர்கிறோம். வயிறு பசியால் காய்கின்றபோது உளம்குளிர வாய்ப்பேது?

ஆடு மாடுகளால் கலக்கப்பட்ட நீர் குளத்தில் எப்படி யிருக்கும் என்பதனையும், தெளிவடைந்த நிலையில் எந்தவிதச் சலனமுமற்று அக்குளத்து நீர் எப்படி அமைதியாய் இருக்கும் என்பதனையும் அறிவோம். தீய நினைவுகளால் அலைமோதும் உள்ளமும் தூய நினைவுகளால் தெளிந்த உள்ளமும் குளத்து நீரின் அவ்விரு நிலைகளைப் போலவே காணப்படும். தெளிந்த உள்ளத்தின் தன்மையினையும், அவ்வுள்ளம் உடையோர் அடையும் நற்பயனையும் பொய்கையாழ்வார் நன்கு புலப் படுத்துகிறார்.

"தெளிவாக வுள்ளத்தைச் செந்நிறீஇ, ஞானத்
தெளிவாக நன்குணர்வார் சிந்தை-எளிதாகத்
தாய்நாடு கன்றேபோல் தண்டுழா யானடிக்கே
போய்நாடிக் கொள்ளும் புரிந்து" 51

என்பது அவர் அருளிய பாசுரம். சிறந்த உணர்வுகளால் உள்ளத் தைத் தெளிவடையச் செய்து, அவ்வுள்ளம் ஞானத் தெளிவாக விளங்கும் நிலையினைக் காண வேண்டும். அந்நிலையினை நம் உள்ளம் அடைந்து விட்டால் இறைவன் திருவடியை யுணர்ந்து, தாயை நாடிச் செல்லும் கன்று போல் அவனைச் சென்றடையும் என்ற உண்மை இங்கு உணர்த்தப்படுகிறது. உள்ளம் தெளிவடை

வதன் மூலம் ஞானம் அடைகிறது. அந்த ஞானத்தின் உதவியால் இறைவனின் தன்மைகளையும், அவனை அடையும் முறையினையும் புரிந்து கொள்கிறது. 'தண்டுழா யானடிக்கே போய் நாடிக் கொள்ளும் புரிந்து' என்று அவ்வுண்மையை ஆழ்வார் உணர்த்துகிறார். எனவே இறைவனை யுணர்வதற்கு உள்ளத்தெளிவு அவசியம் என்பது பெறப்படுகிறது.

இறையருள் பெற வேண்டி இடைவிடாது அவனை உள்ளத்தால் நினைந்து தொழும் போதுதான் நம் உள்ளம் கரைந்து உருகும் நிலையேற்படும். மெழுகு மென்மையானதுதான். இருப்பினும் அனலில் படும் போதுதான் அது கரைந்து உருகுகின்றது. மெழுகு போன்று நம் உள்ளமும் மென்மையானதாக இருந்த போதிலும் இறைவன் அருளாகிய அனல் அதில் படும் போதுதான் உள்ளமும் கரைந்து உருகுகிறது. மெழுகு பிறர்க்கு ஒளி கொடுப்பது போன்று நம் உள்ளமும் ஞான ஒளிபெற்று அவ்வொளியால் அவ்வுள்ளம் சிறப்பதுடன் பிறரும் ஒளிபெறச் செய்கிறது. உள்ளம் கரைந்து உருகும் நிலை அவ்வுள்ளத்தின் சிறந்த தன்மையினையே புலப்படுத்தும். அந்நிலையினை நன்கு புலப்படுத்துகிறார் நம்மாழ்வார்.

'நினைந்து நைந்துள் கரைந்துருகி யிமையோர் பலரும் முனிவரும்
புனைந்த கண்ணி நீர்சாந்தம் புகையோ டேந்தி வணங்கினால்
நினைந்த வெல்லாப் பொருள்கட்கும் வித்தாய் முதலிற் சிதையாமே! 52

என்பது அவரது பாசுரம். இறைவனை இடையீடின்றித் தொடர்ந்து நினைக்கின்றபோது நம் உள்ளம் நைகின்றது; அந் நிலையில்தான் அது கரைந்து உருகி இறைவனுடன் இரண்டறக் கலக்கின்றது. அவ்வகை யுள்ளமுடையோர் எது வேண்டினும் அதை அவர்கட்கு வழங்கி இறைவன் அருள் செய்வான் என்பதனையும் நம்மாழ்வார் உணர்த்துகிறார்.

மிகுந்த காதலால் உள்ளம் நெகிழ்ந்திருக்கும் நிலையினை 'உளங்கனிதல்' என்று குறிப்பிடுவது மரபு. பிஞ்சு, காயாகிக்

கனிந்து, உண்பதற்கேற்ற பக்குவ நிலையினையடைந்திருப்பது போன்று நம் உள்ளமும் நன்கு பக்குவப்பட்டு முதிர்ந்தநிலையினை அப்போது அடைந்திருக்கும். நீர் பாயும்போது நஞ்சை நிலம் நெகிழ்ந்திருப்பது போன்று அன்பாகிய நீரினால் நம் உள்ளமும் நெகிழ்ந்திருக்கும். அந் நிலையினையே உளங்கனிதல் என்று கூறுவர்.

'களங்கனி வண்ணா! கண்ணனே! என்றன் கார்முகிலே!
யென நினைந்திட்டு
உளங்கனிந் திருக்கு மடியவர் தங்க ளுள்ளத்து
ளூறிய தேனை' 53

என்று உளங்கனிந்த நிலையினை விளக்குகிறார் திருமங்கையாழ்வார். இறைவனின் திருநாமங்களை நினைக்கின்றபோதே உள்ளம் கனிகின்றதாம். கனிந்த உள்ளங்களில் இறைவன் தேனாக இனிக்கின்றான் என்பதனையும் ஆழ்வார் நன்கு தெளிவு படுத்திவிடுகிறார்.

இதுகாறும் உள்ளத்தின் நல்ல தன்மைகளையுணர்த்தும் சொற்களையும் அவையுணர்த்திய பொருட் சிறப்பினையும் கண்டோம். இனிச் சொல்லளவில் நோக்கும்போது தீய தன்மையுடையவைகளைப்போல் தென்பட்டாலும் உள்ளத்தின் நல்ல தன்மைகளையே உணர்த்தும் சில சொற்களையும் காண்போம்.

உள்ளம் எப்போதும் உற்சாகத்துடன் தொழிற்படும் நிலையே சிறப்பிற்குரியது. அதுவே சோர்வடையும் நிலையேற்படுமென்றால் அவ்வுள்ளத்தையுடைய மனிதனும் சோம்பேறியாகி அல்லற்படும் நிலையுருவாகும். உள்ளம் சோர்வதற்குப் பல காரணங்கள் உண்டு. நிறைவேறாத ஆசைகளை எண்ணிச் சோர்வடையும் உள்ளங்களே மிகுதி. அச்சோர்வுகள் நீங்காது நிலைத்திருப்பதுடன் அம் மனிதனின் வாழ்வும் இடையில் முறியும் நிலை உருவாகும். ஓர் ஆசையால் சோர்வுறும் உள்ளத்தின் நிலையினையே இங்கும் காண்கிறோம். ஆனால் இது நிறைவேற முடியாத பேராசையல்ல. நிறைவேறக் கூடியது; அதனால் உளச் சோர்வும் நீங்குதற்குரியது.

'வெள்ளை வெள்ளத்தின் மேலொரு பாம்பை மெத்தையாக
விரித்ததன் மேலே

கள்ள நித்திரை கொள்கின்ற மார்க்கம் காணலாங்கொலென்
றாசையி னாலே 54

உள்ளஞ் சோர உவந்தெதிர் விம்மி'

நின்ற நிலையினைப் பெரியாழ்வார் காட்டுகிறார். இறைவனது அறிதுயில் காட்சியைக் காணத் துடித்த ஓர் பக்தியுள்ளத்தின் சோர்வும்கூட அவ்வுள்ளத்தின் சிறப்பினையே புலப்படுத்துகிறது.

நோய்வாய்ப்படுவதனாலும், போதிய உணவு கிடைக்காமையானும் இன்னும் பிறகாரணங்களாலும் உடல்மெலிவது உலகியற்கை. ஆனால் உள்ளமும் மெலிந்த நிலையினை ஆழ்வார்கள் காட்டுகின்றனர். இறைவன்மீது ஆராக் காதல் வயப்பட்ட கன்னியொருத்தி அவனை அடையத் துடிக்கின்றாள். அவளுக்கு எந்நேரமும் இறைவன் நினைவுதான். இறைவனின் திருநாமங்களை மட்டும்மல்ல; அவனது திருப்பதியின் பெயரைக் கேட்ட அளவிலேயே உள்ளம் உருகி மெலியத் தொடங்குகிறது. இது எவ்வாறு ஏற்பட்டது என்று வியப்புடன் வினவுகிறார் திருமங்கையாழ்வார்.

'பெருகு சீர்க் கண்ண புரமென்று பேசினாள்;
உருகினாள்; உள்மெலிந்தாளிது வென்கொலோ!' 55

என்பது அவ்வாழ்வாரது அருட் பாசுரம். நினைவுகள் வாட்டத் தொடங்கும்போது, அவை நிறைவேறாமல் இருக்கும் நாள்வரை உள்ளம் மெலியத்தான் செய்யும். என்று அந்நினைவுகள் வெற்றியடைகின்றனவோ அப்போது உள்ள மெலிவு நீங்குவதுடன் மகிழ்ச்சியால் உள்ளம் பூரிப்படையவும் செய்யும்.

உள்ளத்திற்கும் உடலிற்கும் நெருங்கிய தொடர்புண்டு. ஒன்று மெலிகின்றபோது மற்றொன்றும் தானாகவே மெலிகின்றது. உள்ளம் மெலியும்போதுதான் உடலும் சேர்ந்து மெலிகின்றது. உடல் மெலிவு உள்ளத்தைப் பாதிக்காது.

உள்ளத்தின் தன்மையே உறுதியுடனிருப்பது. அவ்வுள்ளம் அழிந்து நிலைதடுமாறும் நிலை உருவாகுமென்றால் அங்கு குழப்பமும் கலக்கமும்தான் காணமுடியும். அவ்வுள்ளமுடையோர் எதனையுமே திறம்படச் செய்தலரிது. இது பொதுநிலை. ஆனால், இறைவன்மீது காதல்கொண்ட பெண்ணொருத்தி

அவனருள் கிடைக்கப் பெறாமையால் உள்ளம் அழிந்து துடிக் கின்றாள். அவளதுநிலை கண்டு இரங்கும் தாய் தன் மகளின் அழி கின்ற உள்ளத்திற்கு ஆறுதல் சொல்வாருமில்லை; அவ்வுள்ளம் அழியக் காரணமாயிருந்த கண்ணனும் அருள்பாலிக்கவில்லை என்று நொந்து கூறுகின்றாள். அத்தாயின் மனநிலையினைத் திருமங்கையாழ்வார் உள்ளமுருகி எடுத்துரைக்கின்றார்.

'பேயின் ஆரு யிருண்டிடும் பிள்ளை நம் பெண்ணுயிர்க்
கிரங்குமோ!
தூய மாமதிக் கதிர்சுடத் துணைஇலையிணை முலை
வேகின்றதால்;
ஆயன் வேயினுக் கழிகின்ற துள்ளமு மஞ்சலென்
பாரிலையே!' 56

கண்ணனின் வேய்ங்குழல் இசை கேட்கத் துடிக்கின்றாள் அப் பெண். ஆனால் அவ்வாய்ப்புக்கிட்டவில்லை. அதனால் ஆயன் வேய்ங்குழலிசையைக் கேட்டவுடனேயே உள்ள மழிகின்றாளாம். பக்தியுள்ளத்தின் நல்ல தன்மையினையே இதுவும் காட்டுகிறது.

மனத்தின் தன்மையே, பொதுவாக ஒன்றில் நிலைத்திராமல் அலைந்து கொண்டிருப்பதுதான். அதைக் கட்டுப்படுத்துவதே சிறந்தநிலை. நெஞ்சத்திற்கும் அந்நிலையுண்டு. ஆனால், உள்ளம், பொதுவாக அலைமோதி அங்குமிங்கும் செல்வதில்லை. அது சலனமற்று அமைதியுடனிருப்பது. சிலபோது அந்நிலை மாறுவதுண்டு.

'உள்ளமோ வொன்றில் நில்லாது; ஓசையி னெரிநின்
றுண்ணும்
கொள்ளிமே லெறும்பு போலக் குழையுமா லென்றனுள்ளம்;
தெள்ளியீர்! தேவர்க்கெல்லாம் தேவராயுலகங் கொண்ட
ஒள்ளியீர்! உம்மையல்லா லெழுமையும்
துணையிலோமே'......57

என்று கூறுகிறார் திருமங்கையாழ்வார்.

'உள்ளமோ ஒன்றில் நில்லாது' என்று அவர்கூறுவது பொது நிலையில் உலகோர் உள்ளத்தின் தன்மையினையே. 'ஓசையினெரி நின்றுண்ணும் 'கொள்ளிமே லெறும்புபோல' என்று அவர் குறிப்

பிடுவது தமது உள்ளத்தன் தன்மையினை. நெருப்பின் வாய்பட்டு எரியும் கொள்ளிக்கட்டையில் சிக்கிய எறும்பின் நிலையென்று அவர் கூறும் உவமை சிந்தித்தற்குரியது. கட்டையில்பற்றிய நெருப்பு எறும்பினையும் வருத்தும். அவ்வருத்தத்தினின்று விடுபட்டு வேறிடம் செல்லவும் அவ் வெறும்பால் முடியாது. கட்டையோ எரிந்து கொண்டிருக்கிறது. இன்னும் சிறிதுநேரத்தில் முழுமையாக எரிந்துவிடும். அப்போது எறும்பின்நிலை? உலகியலில் சிக்கிக்கொண்டு அதனின்று விடுபடமுடியாமல் அதில் கிடந்து துன்புறும் ஆன்மாவின் நிலை எறும்பின் நிலையுடன் இணைத்துக் காணும் தகைமையில் உள்ளது. எரிவாய்ப்பட்டு மடியப் போகும் எறும்பின் கதி தமக்கும் நேர்ந்துவிடாமல் தன்னை இறைவன் காத்தருள் புரியவேண்டும் என்று வேண்டுகிறார் ஆழ்வார். தேவர்களுக்கெல்லாம் தலைவனாயிருக்கின்றவனான திருமாலே தன்னை எழுபிறவியிலும் துணைநின்று காக்கவேண்டும் என்று அவர் வேண்டுவது திருமாலிடம் அவர்கொண்டுள்ள உறுதி மிக்க பக்தியினையுணர்த்தும்.

உள்ளத்தின் தன்மைகளையுணர்த்தும் அடைச் சொற்களாலும் அதனுடன் பயன்படுத்தப்பட்ட வேறு சில சொற்களாலும் அதன் பல்வேறு தன்மைகள் எவ்வாறு காட்டப்பட்டுள்ளன என்பதை இது வரை கண்டோம். வேறுபல சூழ்நிலைகளிலும் ஆங்காங்கு அதன் தன்மைகளை ஆழ்வார்கள் காட்டிச் சென்றுள்ளார்கள். அந்நிலை களை இனிக் காண்போம்.

உள்ளத்து இருளற :

நம் உள்ளம் எப்போதும் ஒளிமயமானதாக, தூய்மையுடன் விளங்க வேண்டும். அப்போதுதான் அது இறைவன் உறையும் கோயிலாகவும், தெளிந்த சிந்தனைகள் பிறக்கும் இடமாகவும் அமையும். உள்ளத்தில் மெய்ஞ்ஞான ஒளி வீசும்போதுதான் நன்னெறிகளையுணர்ந்து நடந்து முக்தியடைய முடியும். அதற்கு மாறாக அங்கு அஞ்ஞான இருள் நிறைந்திருக்குமென்றால் பாவச் செயல்களைப் புரிந்து கொடிய நரகடைந்து இடர்ப்படும் நிலைதான் உருவாகும். அந்நிலை நேராவண்ணம் மன்னவன் மதுசூதனன் தம்மைக் காக்கவேண்டுமென்று வேண்டுகிறார் பெரியாழ்வார்.

'தென்ன வன்தமர் செப்ப மிலாதார் சேவதக்குவார்
போலப் புகுந்து
பின்னும் வன்கயிற்றாற் பிணித்தெற்றிப் பின்முன்னாக
விழுப்பதன் முன்னம்
இன்னவன் இனையானென்று சொல்லியெண்ணி யுள்ளத்
திருளற நோக்கி
மன்னவன் மதுசூதன னென்பார் வானகத்துமன்
றாடிகள் தாமே' 58

என்பது அவரது பாசுரம். உள்ளத்து இருள் நீக்கப்படாதிருந்தால் இறுதியில் எமனின் கைகளில் சிக்கி இடர்ப்பட நேரும். அந்நிலை நேராவண்ணம் தனது கருணைவிழிப் பார்வையால் திருமால் தம்மைக் காக்கவேண்டும் என்று வேண்டுகிறார் அவர்.

உள்ளத்தை நைவித்து :

மனத்தின் நைந்த நிலையினையே நெஞ்சம் என்று கூறுகின்றோம். பொதுவாக உள்ளம் திண்மையுடன்தான் காணப்படுமே யன்றி நைவதில்லை. ஆனால் இறைவன் அருள் பெறவேண்டித் துடிக்கும்போது உள்ளமும் நையும் நிலை ஏற்படுகின்றது. அது இயல்பாக நைகின்றது என்று சொல்வதைவிட இறைவனால் நைவிக்கப்படுகின்றது. ஆடையில் உள்ள அழுக்கைப் போக்கிட அதனைத் துவைக்கின்றோம். சிலபோது அந்த ஆடையே நைந்து விடுவதுண்டு. அதுபோல நம்முடைய உள்ளத்தைத் தூய்மைப் படுத்துவதற்காகச் செய்யும் சோதனையில் உள்ளம் நைந்து விடுவதுமுண்டு.

"வெள்ளை விளிசங் கிடங்கையிற் கொண்ட விமலனெனக்
குருக்காட்டான்;
உள்ளம் புகுந்தென்னை நைவித்துநாளும் உயிர்ப்பெய்து
கூத்தாட்டுக் காணும்' 59

என்று கூறுகிறார் ஆண்டாள். திருமாலை நேரில் காணவேண்டுமென்று துடிக்கின்றாள் அவள். ஆனால் மாயக் கலைகளில் வல்லவனாகிய அம் மாயவன் நேரில் அவள் கண்களுக்குத்தான் தனது உருவைக் காட்டவில்லையே தவிர அவள் உள்ளத்தில் புகுந்து அவ்வுள்ளத்தை நைய வைத்து, இனமும் அவனையெண்ணி யேங்கிப் பெருமூச்சு விடவைத்து அதை ஒரு விளையாட்டாகக்

கண்டு ரசிக்கின்றானாம். அவனைக் கண்களால் காணவேண்டு மென்று அப்பெண்ணின் உள்ளம் ஏங்கிப் பெருமூச்சு விடுகின்றது; ஆனால் அவ்வுள்ளம் அவ்வாறு செய்வதற்குக் காரணமாக இருப்ப வனே இறைவன்தான்.

வலிய உள்ளம் :

உள்ளத்தின் தன்மையே திண்மைதான். ஆனால், 'வலிய உள்ளம்' என்று குறிப்பிடுவது, உள்ளத்தின் இரங்காத் தன்மையை; உண்மையை யுணர்ந்தும் அதை ஏற்றுக்கொள்ள இசையாத தன்மையை; ஓரளவு கொடிய தன்மையுடைய நிலையினை. இத்தன்மை நல்ல உள்ளத்தின் தன்மையாக மாட்டாது எனினும் தம் உள்ளத்தை நோக்கி நொந்து கூறுவதாக இப்பாடல் அமைந் திருப்பதால் இறைவனை யுணரவேண்டும் என்ற மிகுந்த நாட்டம் இதில் வெளிப்படுவதாகவே நாம் உணரவேண்டும்.

'வெள்ளநீர் பரந்துபாயும் விரிபொழிலரங்கம் தன்னுள்
கள்வனார் கிடந்தவாறும் கமலநன்முகமும் கண்டும்
உள்ளமே, வலியை போலும் ஒருவனென் றுணரமாட்டாய்;
கள்ளமே காதல்செய்துன் கள்ளத்தே கழிக்கின்றாயே' ...60

என்பது தொண்டரடிப் பொடியாழ்வார் பாசுரம்.

'உள்ளமே வலியை போலும்' என்று வியப்புடன் கூறுகின் றாரேயன்றி வலியையென்று உறுதிப்படுத்தி விடவில்லை. திருவ ரங்கத்தில் திருமால் கிடந்த கோலத்தைக் கண்டு, அவன்தான் ஒப்பற்ற இறைவன்; தேவர்களுக்கும் பிறருக்கும் தலைவன் என் பிதை அறிவுப்பூர்வமாக அறிந்துங்கூட உள்ளம் அதனை உணர வில்லையேயென்று வேதனைப்படுகின்றார் ஆழ்வார். இறை வனின் பெருமைகளைப் பிறர் கூறிக் கேட்கவில்லை; தம் கண்ணா லேயே அவர் கிடந்த கோலம் கண்டும், கண்கள் அறிந்ததைத் தம் உள்ளம் உணரவில்லையே யென்பதுதான் அவர் வேதனை. அறிந் த்தையுணர முடியாமல் அந்த இறைவன்மீது வீண் காதல் செய் வதில் பயனில்லை என்ற எச்சரிக்கை அவரது உள்ளத்திற்கு மட்டு மல்ல; பலருக்கும் பயன்படும். இறைவன் எங்கும் உள்ளான் என் பதையறிந்தும் அவனைத் தம் உள்ளத்தில் காணும் தகுதியில்லாதவர்கள் தாமே இன்று பலராகவிருக்கின்றனர்! 'திருமால் ஒருவரே

தெய்வம்' என்ற உறுதிப்பாட்டினைப் புலப்படுத்தும் விதத்தில்தான் 'ஒருவனென்று உணர்' என்று உணர்த்துகிறார்.

என்கு முள்ளம் :

முதுமையினாலும் நோய்வாய்ப்படுவதனாலும் உடல்மெலிந்து இளைப்பது போன்றநிலை உள்ளத்திற்கும் உண்டு. பெரும்பாலும் உள்ளம் இளைக்கின்றபோது உடம்பும், புலன்களும்கூட நைந்து தளர்கின்றன. முதுமைப் பருவத்தில்தான் இந்த நிலை ஏற்படுமோ என்றும் எண்ண வேண்டியுள்ளது.

''உறிகள் போல் மெய்ந் நரம்பெழுந்து ஊன்தளர்ந் துள்ளமெள்கி
நெறியை நோக்கிக் கண்சுழன்று நின்று நடுங்காமுன் 61

திருமாலின் திருநாமங்களைச் சொல்லி முக்திபெற முயல வேண்டும் என்று கூறுகிறார் திருமங்கையாழ்வார். உள்ளமெள்குவதற்கு முன்பாக, ஊன் தளர்கிறது; உறிகள்போல் மெய்ந் நரம் பெழுகிறது என்று கூறுகிறார். ஊன் தளர்வதும், நரம்புகள் திரைப்பதும் முதுமைப் பருவத்தில் நிகழக் கூடியனவேயாம். இறைவனருளைப் பெறாமல் வீணாகவே வாழ்ந்து முதுமைப் பருவம் எய்தி, இறுதியில் கூற்றத்தின் கொடுமைகளுக் கஞ்சித் தன்னை இறைவன் காக்கவேண்டும் என்று வேண்டும் உள்ளத்தினரது தன்மையை இவ்வாறு எடுத்துக் காட்டுகிறார் ஆழ்வார்.

'புலன்கள் நைய மெய்யில் மூத்துப் போந்திருந்து உள்ளமெள்கிக்
கலங்க......' 62

என்று பிறிதோரிடத்திலும் இந்நிலையினைத் தெளிவுபடுத்துகிறார் திருமங்கையாழ்வார்.

குழையுமுள்ளம் :

இறைவனின் அருள் பெறுவதற்காகத் துடிக்கும் ஒரு தூய உள்ளத்தின் தன்மையே இது. அன்பு மேலீட்டால் உள்ளம் மிகவும் நெகிழ்ந்த நிலையில் இருப்பதனையே உள்ளம் குழைதல் என்கிறோம். இது பக்தர்களது உள்ளத்தில் புலப்படும் ஒரு தன்மையாகவே பக்தி இலக்கியங்களில் காணப்படுகிறது. அதே நிலையைத்தான் ஆழ்வார்களது பாசுரங்களிலும் காண்கிறோம்.

திருமாலின் அருளினைப் பெறவேண்டி ஆர்வமுடன் உள்ளம் குழைந்து வேண்டினால் நிச்சயம் அவன் அருள் பாலிப்பான் என்று கூறுகிறார் திருமங்கையாழ்வார்.

'பிச்சச் சிறுபீலி பிடித்துலகில் பிணந்தின் மடவாரவர்போல் அங்ஙனே
அச்ச மிலர் நாணிலரா தன்மையாலவர் செய்கை வெறுத்தணி மாமலர்தூய்
நச்சி நமனாரடையாமை நமக்கருள்செய் யெனவுள்குழைந்து ஆர்வமொடு
நிச்சம் நினைவார்க் கருள்செய் யுமவற் கிடமா மலையாவது நீர்மலையே'' 63

என்று கூறுகிறார் திருமங்கையாழ்வார். அவமே வாழ்ந்து பாவங்களைப் புரிந்து எமனாரின் கைகளில் வீழ்ந்திடாமல் அருள்புரியென்று உள்ளம் குழைந்து திருமாலை வேண்டுகிறார் ஆழ்வார். ஆர்வமோடு அவனைத் தொழுவோர்க்கு நிச்சயம் அரிள்புரிந்து காப்பவன் திருமால் என்ற உறுதியினையும் பாடலில் காண்கிறோம்.

'பிச்சச் சிறுபீலி பிடித்துலகில் பிணத்தின் மடவார்' என்று ஆழ்வார் சாடுவது, திருமாலை நினையாத மாந்தர்களையா, அல்லது குறிப்பிட்ட புறச்சமயத்தார் எவரையுமா என்று ஐயுற வேண்டியுள்ளது. ஏனெனில் 'பீச்சச் சிறுபீலி' பிடித்திருப்பவர்கள் சமண சமயத்தினர். அவர்கள் திருமால் பெருமையினையுணராத மடவார் எள்று சாடுகின்றார் போலும் நாட்டில் அன்று பரவி வந்த சமண, பௌத்த மதங்களைச் செல்வாக்கிழக்கச் செய்வதையே நோக்கமாகக்கொண்டுதான் சைவ, வைணவ சமயங்கள் செயல்பட்டன என்பதும் வரலாறு காட்டும் உண்மையாகும்.

தாங்கா உள்ளம் :

வருத்தும் துன்பங்கள் எதுவேனும் அதனைத் தாங்கிக் கொள்ளும் தன்மை உள்ளத்திற்குண்டு. மனத்தின் பிறநிலைகளினின்றும் இவ்வகையில் உள்ளம் வேறுபட்டுள்ளது. உலகையே அடக்கியாண்டு சாதனைகள் புரிந்த மாவீரர்கள் முதல், இயக்கங்களைத் தோற்றுவித்து வெற்றி பெற்று நாடாண்ட தலைவர்கள் வரை அனைவரது வெற்றிக்கும் மூலகாரணமாக இருந்தது அவர்கள் உள்ளமே! அகழ்வாரைத் தாங்கும் நிலம் போலவும் நம்

உள்ளம் செயல்பட்டுச் சிறப்படைகிறது. அப்படிப்பட்ட உள்ளமும் சில சூழ்நிலைகளில் துன்பங்களைத் தாங்கமுடியாமல் துவண்டு விடுகிறது.

'தூங்கார் பிறவிக ளின்னம் புகப்பெய்து
வாங்கா யென்று சிந்தித்து நானதற் கஞ்சிப்
பாம்போ டொரு கூரையிலே பயின்றாற்போல்
தாங்கா துள்ளம் தள்ளுமென் தாமரைக் கண்ணா' .. 64

என்று திருமாலை வேண்டுகிறார் திருமங்கையாழ்வார். தொடர்ந்து வரக்கூடிய பிறவித்துயரில் இதுவரை அழுந்தி இடர்ப் பட்டது போன்று இன்னும் இடர்ப்பட வேண்டியிருக்குமோ என்ற அச்சம் ஒருபக்கம் அவரை வருத்துகிறது. அந்நிலை வராமல் இறைவன் தன்னைக் காக்க வேண்டும் என்ற வேண்டுதல் ஒரு பக்கம். பிறவித்துயரைப் பற்றிச் சிந்தித்தாலே அச்சம் ஏற்படுகிறது என்ற குறிப்பினை, 'சிந்தித்து நானதற் கஞ்சி' என்று குறிப்பிடு கிறார் ஆழ்வார். ஒவ்வொரு நாளும் அஞ்சியஞ்சி வாழும் தன் நிலையினை விளக்க ஓர் உவமையினையும் காட்டுகிறார் ஆழ்வார். கொடிய விடப்பாம்பு! அதனைப் பார்த்தாலே பயம். பக்கத்தில் சென்றால் நடுக்கம். அப்படிப்பட்ட பாம்புடன் ஒரே கூரையில் சேர்ந்து வாழும் நிலை எப்படியிருக்குமோ அதுபோலத்தான் இவ் வுலகில் வாழும் வாழ்வு என்று எடுத்துக் காட்டுகிறார். இந்நிலை யில் அவரது உள்ளம் எப்படி அமைதியுடன் இருக்கமுடியும்? பிறவித் துயரைத் தாங்கும் உறுதி அதற்கு ஏது? அத்தன்மையினையே 'தாங்கா உள்ளம்' என்று குறிப்பிடுகிறார் ஆழ்வார்.

மலங்கும் உள்ளம் :

மிகுந்த துயரால் உள்ளம் தவிக்கும் நிலையினையே மலங்கு தல் என்பர். உள்ளம் மலங்கும் நிலையேற்படும் போது பெருமூச்சு வெளிப்படும்; கண்கள் கண்ணீர் மல்கும். அந்நிலையினைக் காதல் வயப்பட்ட ஒரு பெண் அனுபவிப்பதாகக் காட்டுகிறார் நம்மாழ் வார்.

'இலங்கைசெற் றவனே யென்னும்; பின்னும்
வலங்கொள் புள்ளுயர்த்தாய் என்னும்; உள்ளம்
மலங்க வெவ் வுயிர்க்கும்; கண்ணீர்மிகக்
கலங்கிக் கைதொழும் நின்றிவளே' 65

என்பது நம்மாழ்வார் பாசுரம். திருமாலின் திருப்பெயர்களைக் கூற நினைக்கிறாள்; வாய்வரவில்லை. அதனால் அவன் புரிந்த அருஞ்செயல்களை மட்டுமே கூறுகின்றாள். அந்நிலையிலேயே அவள் கண்கள் கலங்கி கண்ணீர் சிந்தத் தொடங்குகிறது; அவள் இதயத்தின் ஏக்கத்தைப் பெருமூச்சு வெளிப்படுத்துகிறது. அவளை யறியாமலேயே அவள் கைகள் தொழத் தொடங்குகின்றன. அத்தகைய நிலையினையே 'உள்ளம் மலங்குதல்' என்று குறிப்பிடுகிறார் நம்மாழ்வார். இந்நிலை பெரும்பாலும் பக்தியுணர்வுடையோர் மாட்டுக் காணக்கூடியதே!

இடர்ப்படும் உள்ளம் :

உள்ளம் படுகின்ற பல்வேறு துயர்நிலைகளையும், அந்நிலைகளால் அவ்வுள்ளத்தின் தன்மைகள் எவ்வாறு வெளிப்படுகின்றன என்பதனையும் மேலே கண்டோம். எண்ணற்ற உணர்வுகளின் பிறப்பிடமாகவிருப்பது உள்ளம். அவ்வுணர்வுகள் அனைத்தையுமே எழுத்துகளால் வடித்துவிட முடியாது. எனவே, எத்தகைய உணர்வுகளால் உள்ளம் இடப்பட்டாலும் சரி; அல்லது மாயை வினைபோன்ற காரணங்களால் உள்ளம் இடர்பட்டாலும் சரி அனைத்திற்கும் பொதுவான மருந்து ஒன்று உளது. அது உள்ளத்தின் இடர்கள் அனைத்தையுமே மாற்றும் ஆற்றலுடையது என்கிறார் நம்மாழ்வார்.

"கொண்மி னிடர்கெட வுள்ளத்துக் கோவிந்தன்
மண்விண் முழுது மளந்த வொண்டாமரை" 66

என்பது அவரது பாசுரம். மண்ணையும் விண்ணையும் அளந்த மாயவனின் திருவடிகளை நினைத்தால் உள்ளத்தை வருத்தும் இடர்கள் அனைத்தும் மறையும்.

உளங்கோயில் :

இதுகாறும் உள்ளத்தின் தன்மைகளை யுணர்த்தும் அடைச்சொற்களாலும், பிற சூழ்நிலைகளில் உள்ளத்தின் தன்மைகள் காட்டப்படும் முறைகளாலும் அதன் தன்மைகளை ஓரளவு உய்த்தறிந்தோம். ஆங்காங்கு சில உவமைகளின் மூலமும் உள்ளத்தின் தன்மைகள் உணர்த்தப்பட்டன. இங்கு, உள்ளம் உருவகிக்கப்படும் முறையைக் கொண்டும் அதன் தன்மைகளை யறிய முற்படுவோம்.

உள்ளத்தின் சிறப்பே அது கோயிலாகத் திகழ்வதுதான். அதைக் கோயிலாக மாற்றி அங்கு இறைவனைக் காணவேண்டு மென்றே ஒவ்வொரு மனிதனும் முயல்கிறான். கோயில் தூய்மை யாகத் திகழவேண்டுமென்பதற்காகவே உள்ளத்தில் தீய உணர்வு கட்கு இடந்தராமல் இறையுணர்வுகளாகிய வாசநன் மலர்களா லேயே அக் கோயில் பக்தி மணங்கமழச் செய்கிறான். மனிதப் பிறவியின் மாண்பு, உள்ளத்தைப் பெற்றதன் உரிய பயன் அதைக் கோயிலாக்கி இறைவனருள் பெற்று இறுதியில் இறைவன் திருவடியில் இரண்டறக் கலந்து விடுவதேயாம்.

புறக் காட்சியால் நாம் பெறமுடியாத உள்ளுணர்வுகளை யெல்லாம் அடிமனமாகத் திகழ்கின்ற உள்ளத்தின் மூலமே பெறு கின்றோம். எனவே, புலன்களாலும் மூளை போன்றவற்றின் உதவியாலும் அறிவு பெறுகின்ற மனத்தின் பிற நிலைகளி னின்றும், புலன்களால், மூளையால் உணரமுடியாத உள்ளுணர்வு களையும் உணர்ந்துவிடும் உள்ளம் வேறுபட்டுள்ளது. அது ஆன்மாவுடன் தொடர்புடையது; உயிர் நிலைபெற்றிருக்கும் இடமாகத் திகழ்வது. எனவேதான் அதனைக் கோயிலாகக் கண்டு அருளடியார்கள் போற்றிப் பரவியுள்ளார்கள். உள்ளத்தையே கோயிலாகக் கண்டு பிறர்தொழுதனர். ஆனால் உள்ளத்திற்குள் ஓரிடத்தில் இறைவனுக்குக் கோயில் கட்டி வணங்குவதாகக் குறிப்பிடுகிறார் பூதத்தாழ்வார்.

'வெற்பென் றிருஞ்சோலை வேங்கடமென் றிவ்விரண்டும்
நிற்பென்று நீ மதிக்கும் நீர்மைபோல்—நிற்பென்
றுளங்கோயி லுள்ளம்வைத் துள்ளினேன் வெள்ளத்
திளங்கோயில் கைவிடே லென்று' 67

என்பது அவர்தம் பாசுரம்

திருமாலிருஞ்சோலை, திருவேங்கடமலை ஆகிய இரண்டு இடங்களையும் நீ தங்குதற்குரிய இடங்களாக மதித்து அங்கு எழுந்தருளியிருக்கின்றாய். அதுபோல் என்னுள்ளத்திலும் உனக்கோர் கோயிலை நான் கட்டித் தினமும் நினைந்து தொழுகின்றேன். மேற்கண்ட அவ்விரண்டு இடங்களையும் போல என்னுளக் கோயிலையும் ஏற்று இங்கும் நீ எழுந்தருள் செய்; என்னைக் கைவிட்டுவிட மாட்டாயென்று நம்புகிறேன் என்று வேண்டுகிறார் ஆழ்வார்.

'உளங்கோயில் உள்ளம் வைத்து உள்ளினேன்' என்பது எண்ணுதற்குரியது. உள்ளத்திற்குள் தாம் கட்டிய கோயிலின் பெயர் 'உளங் கோயில்' என்று குறிப்பிடுகிறார். உளம் என்பதை உள்ளுணர்வு என்றுகொண்டு, அவ்வுள்ளுணர்வுகளால் தம் உள்ளத்தில் கோயில்கட்டி, இறைவனை உள்ளுவதே தாம்செய்யும் வழிபாடாக எண்ணியுள்ளார் என்பதே உண்மையாகும்.

இவ்வாழ்வார் அருளிய இரண்டாந் திருவந்தாதியின் முதற் பாடலே மேற்கண்ட முடிவிற்கு நாம் வரத் துணைசெய்கின்றது.

'அன்பே தகளியா ஆர்வமே நெய்யாக
இன்புருகு சிந்தை இடுதிரியா - நன்புருகி
ஞானச் சுடர்விளக் கேற்றினேன் நாரணற்கு
ஞானத் தமிழ்புரிந்த நான்' 68

என்பது அப்பாடல்.

அன்பும், இறைவனையறியத் துடிக்கும் ஆர்வமும், பிறர்துயர் கண்டு உருகும் உளப்பாங்குமே சிறந்த வழிபாடுகள் என்று உணர்த்தியுள்ள விதம் உணர்ந்து மேற்கொள்ளத் தக்கதாகும்.

உள்ளம் - போது!

உள்ளத்தைக் கோயிலாகக் கண்டது போன்றே மலராகவும் அதனைக் கண்டுள்ள பாங்கினைப் பக்திப் பாசுரங்களில் பரக்கக் காண்கிறோம். திவ்வியப் பிரபந்தத்திலும் அந்நிலையுண்டு மலர் மென்மையானது; நறமணம் கமழக்கூடியது; புனிதமென்று போற்று தற்குரியது; அத்தன்மைகள் உள்ளத்திற்கும் அமைதல் வேண்டு மென்று கருதியே உள்ளத்தை மலராக உருவகித்துள்ளனர்.

மலரைப் போன்று மென்மையாக மட்டுமன்றித் தூய உணர்வு களாகிய நறுமணத்தால் நம் உள்ளம் பிறரைக் கவரவேண்டும். மலரை இறைவனுக்குப் படைப்பது போன்று நம் உள்ளத்தையும் இறைவனுக்குப் படைக்கவேண்டும். மலருக்குள் மணம் எவ்வாறு இயல்பாக அமைந்துள்ளதோ அது போலத்தான் உள்ளத்திற் குள்ளும் உள்ளுணர்வுகள் அமைந்திருப்பது. நம் உள்ளத்தைப் போல மலரும் உள்ள சிறப்பு நோக்கியே மலரால் இறைவனை வழிபடுகின்றோம். அது நம் உள்ளத்தால் அர்ச்சனை செய்வது போலாகும்.

'போதறிந்து வானரங்கள் பூஞ்சுனைபுக் காங்கலர்ந்த
போதறிந்து கொண்டேத்தும் போதுள்ளம்—போது

மணிவேங் கடவன் மலரடிக்கே செல்ல
அணிவேங் கடவன்பே ராய்ந்து' 69

என்பது பூதத்தாழ்வார் பாசுரம்.

வானரங்களுக்கு உள்ளமில்லை. அதனால் பூஞ்சுனையில் அலர்ந்த பூக்களைப் பறித்து அவனைப் போற்றித் தொழுகின்றன. ஆனால் உள்ளமுடைய மனிதன், உள்ளத்தினையே மலராக இறைவனுக்குச் சூட்டித் தொழ வேண்டும் என்று உணர்த்து கின்றார் ஆழ்வார். உள்ளமில்லாத விலங்கினத்தைச் சேர்ந்த குரங்கே இறைவனைத் தொழுகின்றபோது மனிதன் தொழ மறக்கலாகாது என்ற குறிப்பினையும் இங்குக் காண்கிறோம்.

இதுவரை உள்ளத்தின் தன்மைகளைப் பல நிலைகளிலும் ஆய்ந்தோம். இனி உள்ளத்தின் சிறப்பு, அதனால் நாம் அடையக் கூடிய பயன்கள் முதலியவற்றை ஆழ்வார்கள் காட்டிய வழி நின்று நோக்குவோம்.

உள்ளத்துள் சுடர்ச் சோதி:

'அங்கிங்கெனாதபடி எங்கும் ப்ரகாசமாய்[70] இருப்பவன் இறைவன். அவனைச் சோதிவடிவாகவே பலரும் கண்டு தொழுது முக்தியடைந்துள்ளார்கள். சோதியின் இயல்பு ஒளி கொடுப்பதுடன் இருளையும் போக்குகிறது. அதனால் எவை யெல்லாம் இருள் போக்குகின்றதோ அவைகளையெல்லாம் சுடர் வடிவாகக்கண்டுள்ளனர். அறியாமையைப் போக்கும் அறிவினைச் சுடர் என்கிறோம்; அகந்தையைப் போக்கும் அருளையும் சுடர் என்கிறோம். அதுபோன்று நம் உளத்தில் ஒளியூட்டி ஆன்மா இறைவன் திருவடியடையத் துணை செய்யும் இறை வனையும் சோதியெனக் கொண்டு தொழுது வருகின்றோம்.

இறைவனை ஒளிப் பிழம்பாகவும், அப்பிழம்பிலிருந்து வந்த சிறு பொறிபாக நம் ஆன்மாவையும் சமயவாதிகள் கூறுவர். இச்சிறு பொறி மேலும் ஒளி பெற்று இறுதியில் இறையொளியோடு கலந்து விடுகிறது. ஆன்மாவாகிய சுடர்ச் சோதியைத் தம் உள்ளத்தில் இறைவன் வைத்துள்ளான் என்ற பொருளில்தான், 'தூய சுடர்ச் சோதி தனதென்னுள் வைத்தான்' என்று நம்மாழ்வார் கூறியிருக்க வேண்டும். அல்லது தன் கருணையொளியினை என் உள்ளத்தில் வைத்து எனக்கருள் செய்தான் என்றும் கருத இடமுண்டு.

'மாயமயக்கு மயக்கால் என்னை வஞ்சித்து
ஆயனமரர்க் கரியே றெனதம்மான்
தூய சுடர்ச்சோதி தனதென்னுள் வைத்தான்
தேயந் திகழுந்தன் திருவருள் செய்தே' 71

என்பது நம்மாழ்வார் பாசுரம்.

சோதிக்கு அடைச் சொற்களாக சுடர், தூய என்று இரு சொற்களை அவர் சேர்த்திருப்பது பிற சோதிகளினின்றும் இது வேறுபட்டது என்பதுடன் உளத்திலுள்ள இருளைப் போக்கு வதோடு ஒளியூட்டித் தூய்மைப்படுத்தவும் செய்யும் என்ற பொருளையும் தருகிறது. ஏனெனில் சோதியைச் சுடர்ச் சோதி என்று சொல்வது மரபேயன்றி தூய்மையான சுடர்ச்சோதி என்று சொல்வதில்லை.

'என்னை வஞ்சித்து'த் தூய சுடர்ச் சோதியை என் உள்ளத்தில் ஏற்றினான் என்று கூறுமவர், இறுதியில், அப்படிச் செய்ததனால் அவருக்கு அருள் புரிந்ததாகவும் கூறுவது, திருமால் மாயக் கலைகள் புரிவதில் வல்லவன் என்பதையும், ஆனால் எப்படியும் அடியவர்கட்கு அருள் புரிவான் என்பதையும் உணர்த்தும்.

தனது உள்ளத்தில் தூய சுடர்ச்சோதியை இறைவன் ஏற்றியருள் புரிந்ததாகக் கூறும் நம்மாழ்வார், எவரெல்லாம் அச் சோதியைத் தம் உள்ளத்தில் கொண்டிருக்கின்றார்களோ அவர் கட்குத் தாம் என்றும் அடிமையாய் இருக்க விரும்புவதாகவும் வேறோர் பாடலில் குறிப்பிடுகிறார்.

'ஒளிக்கொண்ட சோதியை உள்ளத்துக் கொள்ளுமவர் கண்டீர்
சலிப்பின்றி ஆண்டெம்மைச் சன்மசன்
மாந்தரம்காப்பரே' 72

என்பது அப்பாசுரம். இறையருள் பெற்றவர்களையும் இறைவ னோடு ஒப்பவைத்து நோக்கும் தன்மையினையே இங்குக் காண் கிறோம்.

உள்ளுவார்-உள்ளாதார் உள்ளங்கள்:

உள்ளத்தினுடைய சிறப்பியல்புகளில் ஒன்று இறைவனை உள்ளுதல். இறைவனைப்பற்றி எண்ணுபவர்கள், அவனுக்கு உண்மையிலேயே அஞ்சக் கூடியவர்கள், பாவச் செயல்களைப் புரியவும் அஞ்சுவர். எப்போதும் இறைவனைப் பற்றியே உள்ளம்

நினைக்க வேண்டும் என்று வலியுறுத்துவதன் நோக்கம் தீய நினைவுகள் உள்ளத்தில் அரும்பிவிடக் கூடாது என்பதேயாம். ஒருவரைப் பற்றிய நினைவுகள் எப்போதும் நம் உள்ளத்தில் இருந்துகொண்டிருந்தால் அவர் எப்போதும் நம்மோடு இருப்பதாகவே பொருள். அதுபோன்று நாம் இறைவனை எப்போதும் நினைத்தால் அவனும் நம்முடனே, நம்முள்ளத்தில் இருப்பான் என்பதனை,

'உள்ளுவாருள்ளத்தே யுறைகின்றானை' 73

என்று கூறுகின்றார் திருமங்கை யாழ்வார். இது ஒரு நிலை.

திருமாலை நினையாத உள்ளங்களும் உண்டே! அவ்வுள்ளங்களின் நிலையென்ன என்பதற்கும் அதே ஆழ்வார் பதில் தருகின்றார்.

'புள்ளாயோ ரேனமாய்ப் புக்கிடந்தான் பொன்னடிக்கென்று
உள்ளாதா ருள்ளத்தை உள்ளமாக் கொள்ளோமே!' 74

என்பது அவர் தரும் விளக்கம். திருமாலை உள்ளாத உள்ளங்களை 'உள்ளங்கள்' என்று நாங்கள் ஏற்றுக்கொள்ள மாட்டோம் என்று கூறுவது திருமாலிடத்து அவருக்கிருந்த மிகுந்த ஈடுபாட்டையும் புறச்சமய வெறுப்புணர்ச்சியையுமே புலப்படுத்துகிறது.

திருமால் அவதாரப் பெருமைகளையும் அவரது மகிமைகளையும் பலவாறு உருகிப் பாடும் ஆழ்வார்கள், அவன் அருமைகளை அறியாதோர்க்கு அறிவிக்கும் விதத்திலும் பல பாடல்களைப் பாடியுள்ளார்கள்.

"... ... ... உள்ளத்து
ஓராத வுணர்விலீர், உணருதிரே லுலகளந்த
உம்பர் கோமான்
பேராளன் பேரான பேர்களா யிரங்களுமே
பேசீர்களே' 75

என்று பிறர்க்கு உணர்த்தும் பாங்கில் தவறில்லை; சமயங்கள் தோன்றியதன் நோக்கமே தத்தம் கடவுளது மகிமைகளைப் புறத்தார்க்கும் எடுத்துக்காட்டி அவர்களும் தமது மதங்களை நாடி வரவேண்டும்; தமது கடவுளையே உண்மைத் தெய்வமென்று உணரவேண்டும் என்பதுவே. ஆனால் தமது தெய்வத்தை நினையாதவர்கட்கு உள்ளம் என்ற ஒன்று இருப்பதாகவே ஏற்றுக் கொள்ள முடியாது என்று கூறுவது மிதமிஞ்சிய பக்தியைக் காட்டு

கிறது. ஒரு வேளை, அன்றைய சூழல் அப்படிப் பாட வைத்திருக்க லாம் என்று அமைதியடையலாம்.

ஊனக்குரம்பையின் உள்புக்கு,...

உள்ளத்தின் சிறப்பியல்புகளையும், அரிய தன்மைகளையும் இதுவரை பல நிலைகளில் கண்டோம். ஆனால் உடம்பைப்பற்றிக் குறிப்பிடும்போது 'ஊனம்' என்பதை அடைச் சொல்லாகப் பயன் படுத்தியிருப்பதைக் காண்கிறோம். உள்ளம் தங்குவதற்குரிய இடமாக இருப்பது உடம்பே. உடம்பு இல்லையென்றால் உயிரில்லை: உள்ளம் இல்லை; எதுவுமே இல்லை. அப்படியிருந்தும் 'ஊனக் குரம்பை' என்று ஏன் அதனை இழித்துரைக்கவேண்டும் என்பது சிந்தித்தற்குரியது.

முதலாவதாக, உடம்பு நிலையில்லாதது; பிணி, மூப்பு போன்ற வற்றால் உருவம் மாறக்கூடியது. ஒருகாலத்தில் கண்கள் மயங்கும் அழகாகக் காட்சியளித்த உருவம் பின்னர் பார்ப்பதற்கு அருவருக்கும் நிலையினுக்கும் மாறுவதுண்டு.

உடம்பின் தேவைகளை நிறைவு செய்வதற்காகவே ஒழுக்கக் கேடான செயல்களைச் செய்ய முற்படுகிறோம். உள்ளம் சிறந்திட, ஆன்மா ஒளிபெற நிலையான பணிகள் செய்வதை விடுத்து உடம்பின் இச்சைகளை நிறைவேற்றுவதிலேயே பலர் தங்கள் வாழ்நாளைப் போக்கி விடுகிறார்கள். உள்ளத்தின் அழகைக் காண்பதை விடப் பலர் உடலில் அழகு காணவே துடிக்கின்றனர். எனவே பல நிலைகளிலும் நமக்குக் கேடு பயப்பது நம் உடம்பே. இத் தன்மைகளை நோக்கியே 'ஊனக் குரம்பை' யென்று இதனை இழித்துக் கூறியுள்ளார்.

> 'ஊனக் குரம்பையி னுள்புக் கிருள்நீக்கி
> ஞானச் சுடர்கொளீஇ நாடோறும் 76

திருமால் நம்மை வாழ்விப்பதாகக் கூறுகிறார் பொய்கையாழ்வார்

உடல் நலமும் பொருள் வளமும் மிக்கிருக்கும்போது பொருட் பெண்டிரை நாடிச் செல்கின்றனர். அப்போது உள்ளத்தின் உணர்வுகளைப் புறக்கணித்து உடல் இச்சையை நிறைவு செய்வதே அவர்கட்கு நோக்கமாகப் படுகிறது முடிவில் நோய் வாய்ப்பட்டு, இருமி இளைத்து, உள்ளம் கூசும் நிலை உருவாகிறது. முன்பு ஆசையோடு வரவேற்ற அதே பெண் இப்போது சீச்சீ

யென்று ஏசி இகழ்கின்றாள். இதுதான் 'ஊனக் குரம்பை' யின் மகிமை.

'ஈசி போமி னீங்கி ரேன்மி னிருமி யிளைத்தீர்; உளம்
கூசியிட்டீ ரென்று பேசும் குவளையங்கண்ணியர் பால்
நாசமான பாசம் விட்டு நன்னெறி நோக்க லுறில்
வாச மல்கு தண்டுழாயான் வதரி வணங்குதுமே' ...77

என்று உடம்பின் இழிவினையும் அவ்விழிவு நீங்குவதற்குத் திருமாலை வணங்குதலே நல்வழியென்று கூறுவதும் தீயோர் திருந்தத் துணை செய்யும்.

'குரம்பையின் உள்புக்கு' என்பது உடலாகிய கூட்டிற்குள் இருக்கின்ற உள்ளத்தைக் குறிக்கும். அவ்வுள்ளத்து இருள் போக்கி ஞானமாகிய சுடரையங்கு ஏற்றுவான் திருமால் என்பது கருத்து.

'குடம்பை தனித்தொழியப் புட்பறந்தற்றே;
உடம்போடு உயிரிடை நட்பு' 78

திருக்குறட் கருத்து இங்கு சிந்தித்தற்குரியது. உடம்பை ஊனக் குரம்பையென்று கூறியிருப்பதால் அதனுள்ளிருக்கும் உயிரைப் பறவையென்ற நிலையிலேயே ஆழ்வார்களும் கருதுகின்றனர்.

உள்ளமும் வான், நரகமும் :

'பெருமைக்கும் ஏனைச் சிறுமைக்கும், தத்தம்
கருமமே கட்டளைக் கல்' 79

என்பது வள்ளுவர் வாக்கு. வாழ்க்கையில் நாம் பெருமையடைவதற்கும், பிறர் வெறுக்கும் நிலையில் சிறுமையடைவதற்கும் நம்முடைய செயல்கள் தாம் காரணம். நாம் நற்பணிகளை யாற்றினால் அதனால் விளையும் நற்பயன்கள் கருதிப்பிறர் நம்மைப் போற்றுவர்; தீய செயல்களைப் புரிந்தால் பிறரது வெறுப்புக்காளாகி முடிவில் நாமும் துன்புறுவோம். அதுபோன்று நம்முடைய உள்ளம் தூய்மையுடன் விளங்கினால், அது இறைவன் உறையும் கோயிலாகி முடிவில், அவ்வுள்ளமே நாம் வானுலகை அடைந்து பேரின்பத்தில் திளைக்கத் துணை புரியும். அதற்கு மாறுபட்ட நிலையில் இருட்குகையாக நம் உள்ளம் விளங்கினால் அருநரகை நாம் அடைய அத்தீய உள்ளமே காரணமாகிவிடும். இந்த இரு நிலைகளையும் பொய்கையாழ்வார், பூதத்தாழ்வார் பாசுரங்கள் நன்கு தெளிவு படுத்துகின்றன.

'ஊனக் குரம்பையி னுள்புக் கிருள்நீக்கி
ஞானச் சுடர்க்கொளீஇ நாடோறும்—ஏனத்து
உருவாய் உலகிடந்த ஊழியான் பாதம்
மருவாதார்க் குண்டாமோ வான்?' 80

என்று கேட்கிறார் பொய்கை யாழ்வார்.

'தாமுளரே தம்முள்ளம் உள்ளுளவே தாமரையின்
பூவுளதே யேத்தும் பொழுதுண்டே—வாமன்
திருமருவு தாள்மருவு சென்னியரே செவ்வே
அருநரகஞ் சேர்வ தரிது' 81

என்றுகூறி மற்றையோரெல்லாம் அருநரகம் சேர்வது உறுதி என்று எச்சரிக்கின்றார் பூதத்தாழ்வார். திருமாலின் திருவடிகளை நினைந்து தொழுகின்ற உள்ளமுடையோர் வானுலகை அடைவர். அத்தகைய உள்ளமில்லார் நரகடைவர் என்று பொதுவிதியொன்றினை வகுத்தளிப்பது ஆழ்வார்களின் புறச்சமய வெறுப்புணர்ச்சியினையே புலப்படுத்துகிறது.

உள்ளமும் மதியும்

உள்ளத்தின் தன்மைகள், அதன் பல்வேறு சிறப்புகள், அதனால் அடையக்கூடிய பயன்கள் ஆகிய பலவற்றையும் இதுகாறும் நோக்கினோம். உள்ளச்சிறப்பால் வானுலகையும் அடைய முடியும் என்று கண்டோம். அத்தகைய சிறந்த உள்ளத்தை எப்படிப் பெறுவது? எல்லோருக்கும்தான் உள்ளம் இருக்கிறது; ஆனால் எல்லா உள்ளங்களாலும் அத்தகு சிறப்பை அடைய முடியவில்லையே! இறைவனின் தன்மையையுணர்ந்து வழிபடும் ஆற்றல் அனைவர்க்கும் வருதற்கு என்னவழி என்பதனையும் கூறுகிறார் நம்மாழ்வார்.

'வைத்தேன் மதியாலென துள்ளத் தகத்தே;
எய்த்தே யொழிவே னல்லே னென்று மெப்போதும்;
மொய்த்தேய் திரைமோது தண்பாற் கடலுள்ளான்;
பைத்தேய் சுடர்ப்பாம் பனைநம் பரனையே'' 82

என்பது அவர் பாசுரம். நம்பரனை வைத்தேன் எனதுள்ளத்தே என்று கூறுமவர் வைத்தவிதம் கூறும்போது 'மதியால்' என்று கூறுகின்றார்,

'நன்றின்பா லுய்ப்பது' தானே அறிவிற்கு இலக்கணம். அந்த நல்லறிவு தமக்கிருந்ததால் இறைவனின் பெருமைகளையுணர்ந்து அவனைத்தம் உள்ளத்திலும் தங்கவைத்தேன் என்று கூறுகிறார் நம்மாழ்வார். அந்த மதியை எப்படிப் பெறுவது என்ற கேள்விக்கும் அவரே பதில் கூறுகிறார். வெண்கலத்தில் இயல்பாகவே களிம்பு சேர்ந்திருப்பது போன்று நம் ஆன்மாவிலும் அறியாமையாகிய மயக்கம் சேர்ந்துள்ளது. அந்த மயக்கம் நீங்கி நல்லறிவு தோன்ற வேண்டுமென்றால் அதற்கு இறைவனின் அருள் தேவை. ஆன்மா விலுள்ள களிம்பு அப்போதுதான் அகலும். நம்முடைய மயக்கம் தீர மதியைத் தருபவன் 'அயர்வறு அமரர்கள் அதிபதி'யாகவிருக் கின்ற திருமாலேயென்று கூறுகிறார் நம்மாழ்வார்,

'உயர்வற உயர்நலம் உடையவன் எவனவன்:
மயர்வற மதிநலம் அருளினன் எவனவன்;
அயர்வறும் அமரர்கள் அதிபதி எவனவன்;
துயரறு சுடரடி தொழுதெழென் மனனே' 83

என்ற அவர்தம் திவ்வியப் பிரபந்தத்தில் மதிநலத்தைத் திருமாலே நமக்கு அருள்பவன் என்று உறுதிப்படுத்துகிறார். அந்த மதி நலத்தால் நம் உள்ளத்தைச் சிறப்படையச் செய்து இறைவன் அருள் பெற்று இன்புறுவோமாக.

உள்ளத்து அகம்

மனத்தின் பல நிலைகளுள் ஒன்றனை 'உள்ளம்' குறிப்பது போன்று வேறோர் நிலையினை 'அகம்' என்ற சொல் உணர்த்தும். ஆனால் இங்கு 'உள்ளத்து அகம்' என்ற ஓர் புது வழக்கினைக் காண்கிறோம். இது அந்நிலைகளினின்றும் மாறுபட்டதோ என்று தான் எண்ணத் தோன்றுகிறது. ஆனால் இவ்வழக்கு வந்துள்ள இடங்களை நோக்கும்போது உண்மை புலப்படும்.

'வைத்தேன் மதியா லெனதுள்ளத் தகத்தே' 84
'நெடியான் நிறங்கரியான் உள்புகுந்துநீங்கான்
அடியேன துள்ளத் தகம்' 85

மேற்கண்ட சான்றுகளை நோக்கும்போது 'அகம்' என்ற சொல் 'உள்ளே' என்ற பொருளில்தான் வந்துள்ளது. உள்ளத்தின் உள்ளே இறைவன் எழுந்தருளியுள்ளான் என்பதையே அவ்வாறு குறிப்பிட்டுள்ளார்கள், 'அகம்' என்றால் வீடு என்ற பொருளும்

உண்டு. உள்ளத்திற்குள் இறைவன் எழுந்தருளியுள்ள வீடு என்ற பொருளிலும் அச்சொல் பயன்படுத்தப்பட்டிருக்கலாம்.

உள்ளம் என்ற சொல்வழக்கு :

நாலாயிரத் திவ்வியப் பிரபந்தத்தில் மனத்தின் பல நிலைகளையும் உணர்த்தும் சொற்களை ஏற்ற இடங்களில் பயன்படுத்தி அதன் தன்மைகளை நன்கு விளக்கியுள்ளார்கள் ஆழ்வார்கள். மனம் என்ற சொல்லை மனிதர்களுக்கும் தேவர்களுக்கும் பயன்படுத்தியிருப்பதுடன் திருமாலுக்கும்கூடப் பயன்படுத்தியுள்ளதை யறிந்தோம். நெஞ்சம் என்ற சொல்லை ஒரிரு இடங்களில் விலங்குகட்கும் எஞ்சிய இடங்களிலெல்லாம் மனிதர்களுக்குமே பயன்படுத்தியிருந்தனர், பெரும்பாலும் மனிதர்களது தீய தன்மைகளையே 'நெஞ்சம்' என்ற சொல்லால் விளக்கியிருந்தனர்.

உள்ளம் என்ற சொல் பல இடங்களில் திருமாலுக்கும் பக்தியுணர்வுடைய ஆழ்வார்களுக்குமே பயன்படும் விதம் அமைந்துள்ளது. சில இடங்களில் மட்டுமே புறச் சமயத்தார் உள்ளம் பற்றிய இகழ்ச்சிக் குறிப்பு தென்படுகிறது. உள்ளத்தின் தன்மைகளாக ஆழ்வார்கள் காட்டியனவும் சிறந்தனவாகவே அமைந்துள்ளன. ஒருவருக்கமைந்த உள்ளத்தின் மூலமே உயர்வையும் உய்தியையும் அடைய முடியும் என்பதுவே திவ்வியப் பிரபந்தம் காட்டும் முடிபாகும்.

அடிக்குறிப்பு விளக்கம் :

1.	அண்மைக் காலத்து இந்திய மெய்ப் பொருளியல்		பக்: 315
2.	,,		,,
3.	,,		பக்: 316
4.	,,		பக்: 257
6.	திருக்குறள்	ஊக்கமுடைமை	595
5.	புறநானூறு		
7.	முதலாமாயிரம்	பெரி. திரு.	5-4-7
8.		திருச்சந்த	49
9.	நான்காம் ஆயிரம்		9-6-5
10.	புறநானூறு		
11.	,,		

12.	முதலாமாயிரம்	பெரி. திரு.	1-7-9
13.	இரண்டாமாயிரம்	பெரிய. திரு.	2-7-7
14.	,,	,,	3-9-7
15.	திருக்குறள் –	ஊக்கமுடைமை	592
16.	புறநானூறு		
17.	கம்பராமாயணம்	பூக்கொய்	35
18.	பாரதியார் கவிதைகள்-பெல்ஜியம் நாட்டிற்கு வாழ்த்து		
19.	முதலாமாயிரம்	பெருமாள்	7-5
20.	,,	,,	7-9
21.	இரண்டாமாயிரம் -	பெரிய. திரு.	11-5-10
22.	முதலாமாயிரம் –	பெரி. திரு.	2-10-6
23.	,,	,,	1-7-9
24.	கம்பராமாயணம்-யுத்தகாண்டம்	- இராவணன் வதை	198
25.	,,	,, ,,	239
26.	முதலாமாயிரம்-திருமாலை		3
27.	இந்தியத்தத்துவம்		பக் : 67
28.	மூன்றாமாயிரம் 2 ஆம் திருவந்		21
29.	இரண்டாமாயிரம்-பெரிய. திரு.		11-3-
30.	முதலாமாயிரம்-பெருமாள்		10-9
31.	முதலாமாயிரம்-அமலனாதி		-2
32.	இரண்டாமாயிரம்-பெரிய-திரு		5-2-9
33.	,,	,,	8-2-3
34.	,,	,,	8-5-
35.	,,	திருக்குறுந் :	9
36.	நான்காமாயிரம்		9-2-7
37.	இரண்டாமாயிரம் பெரிய-திரு.		2-5-7
38.	,,	,,	10-4-6
39.	நான்காமாயிரம்		1-5-2
40.	மூன்றாமாயிரம்-முதல் திருவந்		-30
41.	இரண்டாமாயிரம்–பெரிய–திரு		3-9-7
42.	முதலாமாயிரம்–பெரி–திரு		5-1-7
43.	இரண்டாமாயிரம்–பெரிய–திரு		4-3-9
44.	திருக்குறள்–செய்ந்நன்றியறிதல்–		

45.	முதலாமாயிரம்-பெருமாள்-திரு	10-9
46.	இரண்டாமாயிரம்-பெரிய-திரு-	2-5-7
47.	,, ,,	5-8-1
48.	,, ,,	5-2-9
49.	,, ,,	7-3-8
50.	,, ,,	3-9-7
51.	மூன்றாமாயிரம்-முதல்-திருவந்.	30
52.	நான்காமாயிரம்	1-5-2
53.	இரண்டாமாயிரம்-பெரிய-திரு.	4-3-9
54.	முதலாமாயிரம் - பெரி-திரு	5-1-7
55.	இரண்டாமாயிரம்-பெரிய-திரு	8-2-3
56.	,, ,,	8-5-3
57.	,, திருக்குறுந் :	9
58.	முதலாமாயிரம் - பெரி-திரு	4-5-7
59.	,, நாச்சியார்	5-2
60.	,, திருமாலை-	24
61.	இரண்டாமாயிரம் - பெரிய. திரு	1-3-3
62.	,, ,,	1-3-9
63.	,, ,,	2-4-8
64.	,, ,,	11-8-3
65.	நான்காமாயிரம்	2-4-4
66.	,,	8-6-7
67.	மூன்றாமாயிரம் - இரண்டாம் திருவந்.	54
68.	,, ,,	1
69.	மூன்றாமாயிரம் - 2ஆம் திருவந்.	72
70.	திருவருட்பா	
71.	நான்காமாயிரம்	8-7-4
72.	,,	3-7-6
73.	இரண்டாமாயிரம்-பெரிய. திரு.	2-5-7
74.	,, ,,	11-7-6
75.	,, ,,	11-6-5
76.	மூன்றாமாயிரம் - முதல் திருவந்.	91
77.	இரண்டாமாயிரம் - பெரிய திரு.	1-3-8

78.	திருக்குறள் – நிலையாமை	388
79.	,, ,,	
80.	மூன்றாமாயிரம் – முதல் திருவந்	91
81.	,, 2ஆம் திருவந்	21
82.	நான்காமாயிரம்	8–7–10
83.	,,	1–1–1
84.	,,	8–7–10
85.	மூன்றாமாயிரம் – பெரிய திருவந்	68

சிந்தை

முன்னுரை :

மனத்தின் தன்மைகளையுணர்த்தும் இச்சொல் நுண்ணிய ஆழமான பொருளையுடையது. மனத்தின் பிற நிலைகளினின்றும் முற்றிலும் மாறுபட்ட தன்மைகளை யுணர்த்தும் சொல்லாக இது விளங்குகிறது. மற்ற நிலைகள் ஒன்று மற்றொன்றுடன் தொடர்பு கொண்டிருப்பது விளங்கும். எனவே நெஞ்சத்தின் சில தன்மை களை உள்ளத்திலும், உள்ளத்தின் சில தன்மைகளை மனத்திலும் காணமுடிகிறது. ஆனால் சிந்தையின் தன்மைகள் தனிப்பட்டன வாகக் காணப்படுகின்றன.

மனத்தின் பிற நிலைகளைவிட உயர்ந்த நிலையாக உள்ளத் தைக் கண்டோம். அந்த உள்ளத்தினும் உயர்ந்த நிலையாகக் காட்டப்படுகிறது சிந்தை. உள் மனமாகவும், உள்ளுணர்வுகளின் பிறப்பிடமாகவும் திகழ்வது உள்ளம். அந்த உள் மனத்திலும்கூட இருள் பரவும் நிலையினைக் காண்கிறோம். காரணம், மனத்தின் பிற நிலைகளோடு ஓரளவு தொடர்பு கொண்டே உள்ளம் செயல் படுகிறது. அந்த உள்ளத்தை இறைவன் உறையும் கோயிலாக ஆக்குவதற்கு அருளாளர்கள் முனைந்துள்ளனர். அப்படி அது, எவ்வித மாசுமற்ற தூய நிலையையடைந்து ஆலயமாக உயரும் போது அந்நிலையினைச் சிந்தையென்று குறிப்பிட்டுள்ளனர் எனவே உள்ளங்கள்தான் சிந்தைகளாக உயர்நிலையடை கின்றன என்பது புலப்படும்.

உள்ளம் சிந்தையாக உயர்கின்ற நிலை இறையருளை முழுமையாகப் பெற்ற நிலையென்றே சொல்லலாம்.

'சிந்தைய தென்னச் சிவனென்ன வேறில்லை' 1

என்று கூறுகிறார் திருமூலர். எனவே சிந்தையென்பது இறைவ னோடு கலந்த நிலை யென்றே உணர்கிறோம், சிந்தையும்

சிவனும் ஒன்றே யென்று அவர் கூறுவது சிந்தையுள் இறைவன் உள்ள நிலையினையே புலப்படுத்தும். மேற்கண்ட எண்ணங்களின் அடிப்படையில் நோக்கினால் நமக்கோர் உண்மை புலப்படும். இறைவனுக்கும் மனத்திற்கும் உள்ள தொடர்பினைப் புலப் படுத்தும் தன்மையுடைய சொல்லாகவே சிந்தை எடுத்தாளப் படுகிறது. எனவேதான் பிற இலக்கியங்களைக் காட்டிலும் பக்தி இலக்கியங்களிலேயே இச்சொல் அதிகமாகப் பயன்படுத்தப் பட்டுள்ளது. இறையனுபவங்களை விளக்குவதற்கு இச்சொல் ஒன்று மட்டுமே தகுதியுடையது என்று பக்திக்காப்பியங்களைப் படைத்தவர்கள் எண்ணியிருக்க வேண்டும்.

ஆழ்வார்கள் நாயன்மார்கள் அருளிய பக்திப் பாசுரங்களில் பெரு வழக்காகக் காணப்படும் இச்சொல் சங்க இலக்கியங்களில் அருகியே காணப்படுகிறது.

'கெடுக சிந்தை கடிதிவள் துணிவே' 2

என்ற ஓர் இடத்தில்தான் புறநானூற்றில் இச்சொல் காணப்படு கிறது. உறவினர் அனைவரையும் இழந்த நிலையில் உள்ள ஒரு சிறு மகனின் கையிலும் வேல் கொடுத்துப் போருக்கனுப்பும் வீரத் தாயின் (மூதீன் முல்லை) மன நிலையினைச் சிந்தையென்ற சொல் குறிக்குமாறு புறப்பாடல் காட்டுகிறது. உள்ளம் என்ற சொல்லும் மன வலிமையை உணர்த்தும் நிலையில்தான் புறப்பாடல்களில் காட்டப்பட்டுள்ளது. அவ்வுள்ளத்தினும் மேம்பட்ட நிலையாகவே சிந்தையென்ற சொல் உணர்த்தும் நிலையும் காட்டப்படுகிறது. பக்தி இலக்கியங்களில்தான் இச் சொல்லின் நுட்பம் உணருமாறு காட்டப்பட்டுள்ளது.

மனம் என்ற தமிழ்ச் சொல்லின் (அதையும் கூட வட சொல் என்று வாதிடுவோர் உண்டு) தன்மைகளை உணர்த்தும் வட சொல் லாகச் சிந்தையினைக் கருதுவோர் உண்டு. அக்கருத்தும் சரியான தல்ல. மனம் என்ற நிலைக்குச் சில தனித்தன்மைகள் இருந்தாலும் அது ஒரு பொது நிலைச் சொல்லாகவே தமிழில் பயன்படுத்தப்பட்டு வருகிறது. ஆனால் மனம் என்ற சொல் உணர்த்தும் அனைத்துப் பொருளும் சிந்தையென்ற சொல் உணர்த்தும் பொருளுடன் பொருந்தாதுடன் சிந்தையென்பது இறைவனுக்கும் மனத்திற்கும் உள்ள தொடர்பு நிலை ஒன்றையே உணர்த்துவதாகவும் அமைந் ள்ளது. எனவே, சிந்தையென்பது மனத்தின் தெளிந்த நிலை;

இருளற்றநிலை; இறைவனோடு கலந்த நிலையென்பதே சரியான முடிபாகும்.

சிந்திக்கும் சிந்தை :

'சிந்தித்தல்' என்ற தொழிலடியாகப் பிறந்ததே சிந்தையென்ற சொல். நினைதல் என்பதும் சிந்தித்தல் என்பதும் ஒன்றே என்பார் உண்டு. இரண்டு சொற்களும் உணர்த்தும் பொருள்களில் மிகுந்த வேறுபாடு உண்டு. 'ஒரு பொருளைப் பற்றி நினைத்தல்' என்பதற்கும் 'அதுபற்றிச் சிந்தித்தல்' என்பதற்கும் மிகுந்த வேறுபாடு உண்டு. நினைத்தல் என்பது மேலோட்டமான நிலை; சிந்தித்தல் என்பது ஆழமான நிலை. சிந்திப்பதன் தொடக்க நிலையாக நினைப்பதைக் குறிப்பிடலாம். நடந்த நிகழ்ச்சிகளை மீண்டும் கவனத்திற்குக் கொண்டுவரும் முயற்சியே நினைதல். அதன் மூலம் தெளிவு பிறக்கும் என்று சொல்ல முடியாது. சிந்திக்கும் போதுதான் தெளிவு பிறக்கும்; நன்மைகள் புலப்படும். எனவே சிந்திப்பதற்கு நினைதலும் துணை செய்யுமே தவிர சிந்திப்பதும் நினைதலும் ஒன்று அல்ல. சிந்தித்தலை, 'ஆழநினைத்தல்'. 'ஊன்றி நினைத்தல்' என்று குறிப்பிடலாம்.

நினைதல் என்பது மனத்தின் எல்லா நிலைகளுக்கும் பொதுவான தன்மை. மனத்தாலும் நினைக்கலாம்; நெஞ்சத்தாலும் நினைக்கலாம்; உள்ளத்தாலும் நினைக்கலாம். அது போன்று சிந்தையாலும் நினைக்கலாம்.

'சிந்தையால் நினைவார் வினை தேயுமே' 3

என்பது திருநாவுக்கரசர் தேவாரம். ஆனால் சிந்தித்தல் யென்பது சிந்தை யென்ற ஒரு நிலைக்கே யுரிய தனித்தன்மை யாகும்.

'சிந்திக்கும் சிந்தையும்' 4

என்கிறார் தாயுமானவர்.

'சிந்தையுட் சிந்திக்கின்ற ஏனைய பலவுமாகி' 5

'சிந்திப்பார் சிந்தையுள்ளார்' 6

என்பன திருநாவுக்கரசர் தேவாரங்கள். இச்சான்றுகளை ஆழ்ந்து நோக்கினால் சிந்தித்தலின் அடியாகவே சிந்தை அமைந்துள்ளமை தெளிவாகும். 'சிந்தையால் நினைத்தல்', 'சிந்தையுள்

சிந்தித்தல்' என்ற இரு நிலைகளையும் கூர்ந்து நோக்கினால் வேறுபாடு புலனாகும். 'கையால் உண்டான்' என்னும் போது உண்பதற்குக் கருவியாகக் கை பயன்படுவது போன்று, 'சிந்தை யால் நினைவார்' என்னும் போது நினைப்பதற்குக் கருவியாகச் சிந்தை பயன்படுகிறது. ஆனால் 'சிந்தையுள் சிந்திக்கின்ற' என்னும்போது சிந்தையின் தொழிலே சிந்தித்தல்தான் என்ற உண்மை நன்கு தெளிவாகும்.

ஞானச் சிந்தை:

சிந்திக்கத் தொடங்கும்போதுதான் உண்மைகள் வெளிப்படு கின்றன. விஞ்ஞானத்தின் துணையால் புறஉலகைப் பற்றிச் சிந்தித்துப்பல உண்மைகளைக் காண்கின்றனர் விஞ்ஞானிகள். அதுபோன்று மெய்ஞ்ஞானத்தின் துணையால் அக(மன) உலகைப் பற்றிச் சிந்தித்துப் பல அரிய உண்மைகளைக் காண்கின்றனர் மெய்ஞ்ஞானிகள். பக்திப் பாசுரங்களைப் படைத்தளித்தோர் அனைவருமே மெய்ஞ்ஞானச் சுடர்களாகவே விளங்கியுள்ளனர். அப்படி அவர்கள் மெய்ஞ்ஞானம் பெறத் துணைசெய்தது அவர்கள் சிந்தைகளே! அவர்கள் சிந்தையுள் சிந்தித்த சிந்தனைகள் எல் லாமே இறைவனைப் பற்றியே அமைந்திருந்தன. எனவே சிந்தை யென்பது இறைவனைப் பற்றிச் சிந்தித்து, மெய்ஞ்ஞான ஒளி பெறுவதற்குரிய நிலையாகவே பக்திப் பாசுரங்கள் காட்டுகின்றன.

'விழுப்பமும் கேள்வியும் மெய்ந்நின்ற ஞானத்
தொழுக்கமும் சிந்தை யுணர்கின்ற போது' 7

என்பது திருமந்திரம். 'மெய்ந்நின்ற ஞானத்து ஒழுக்கத்'தினையும் சிந்தை யுணர்கின்றபோது இறைவனோடு கலந்து இன்பங் காணும் நிலை உருவாகிறது. எனவே, சிந்தையின் தன்மை மெய்ஞ்ஞானத்தை யுணரத் துணை செய்வதே! இதே கருத்தை ஆழ்வார்களும் உணர்ந்து உணர்த்தியுள்ளார்கள்.

'அன்பே தகளியா ஆர்வமே நெய்யாக
இன்புருகு சிந்தை இடுதிரியா—நன்புருகி
ஞானச் சுடர்விளக் கேற்றினேன் நாரணற்கு
ஞானத் தமிழ்புரிந்த நான்' 8

என்பது பூதத்தாழ்வார் பாசுரம். இன்புருகு சிந்தையை இடுதிரியாக ஏற்றுகின்ற போதுதான் ஞானச்சுடர் ஒளிவீசுகிறது. தகளியும் நெய்யும் திரிக்குத் துணை செய்கின்றன. அது போன்று

அன்பும், இறைவனை யறியும் ஆர்வமும் சிந்தை நன்கமையத் துணை செய்கின்றன. அன்பும், ஆர்வமும் இல்லாரின் சிந்தை தெளிவற்ற இருட்சிந்தையாகவே இருக்கும். திரியின் மூலமே ஒளியைப் பெறமுடிகிறது. அது போன்று சிந்தையின் மூலமே ஞானத்தைப் பெற முடிகின்றது.

உள்ளம் தெளிவடைந்த பின்புதான் ஞானத்தைப் பெற முடியும். அப்படி ஞானத்தை யுணரத் துணை செய்வது சிந்தையே யென்பதை பொய்கையாழ்வார் நன்கு புலப்படுத்து கிறார். உள்ளத்தினின்றும் மேம்பட்ட நிலையே சிந்தை யென் பதனையும் சிந்தை ஞானத்தையுணர உள்ளமும் துணைசெய்கிறது என்பதனையும் ஆழ்வார் வேறுபடுத்தி விளக்கிக் காட்டுகிறார்.

'தெளியாக உள்ளத்தை செந்நிறீஇ ஞானத்
தெளிவாக நன்குணர்வார் சிந்தை—எளிதாக
தாய்நாடு கன்றேபோல் தண்டுழா யானடிக்கே
போய்நாடிக் கொள்ளும் புரிந்து' 9

என்ற அப்பாசுரம் ஞானத்தின் தெளிவினையுணரக் கூடியது சிந்தையே யென்பதனையும், அப்படியுணர்ந்த சிந்தை இறைவன் திருவடியை எளிதாக அடைந்துவிடும் என்பதனையும் நன்கு எடுத்துக் காட்டுகின்றது. 'எளிதாக' என்ற சொல்லை ஆழ்வார் பயன்படுத்தியுள்ள நுட்பம் ஞானமுணர்ந்த சிந்தையின் சிறப்பைக் காட்டுகிறது. ஏனென்றால் இறைவன் திருவடியையடைவது அவ்வளவு எளிதல்ல என்பதைப் பலரும் உணர்த்தியுள்ளனர். அதனால்தான் இறைவன் புகழ் பேசும் பக்திப் பாசுரங்களில் இச் சொல் அதிக அளவில் பயன்படுத்தப்பட்டுள்ளது.

அருள் வடிவானவன் இறைவன்; அடியார்களது பக்தியின் பான்மையறிந்து அவரவர் தன்மைக்கும் பக்குவத்திற்கும் ஏற்ற நிலையில் அருள் புரிந்து காப்பவன் அவன். ஞானத்தெளிவாக உள்ள இறைவன் அடியவர் மேல் சிந்தைவைத்து அச்சிந்தை சிறப் படையுமாறு தன் கருணை விழிகளால் நோக்குகிறான். சூரியனைக் கண்டவுடன் இருள் தானாக ஓடி மறைவது போன்று இறைவனது அருட்பார்வை பட்டதும் சிந்தையிலிருந்த மாயை இருளெல்லாம் ஓடி மறைய, இறைவன் திருவடிக் கமலங்களைக் காணும் தகுதியடைந்து தன்னைப் பற்றிய மெய்யுணர்வினையும் பெற்றதாகக் கூறுகிறார் பூதத்தாழ்வார்.

'அருள்புரிந்த சிந்தை யடியார்மேல் வைத்துப்
பொருள்தெரிந்து காண்குற்ற வப்போது - இருள்திரிந்து
நோக்கினேன் நோக்கி நினைந்தேன தொண்கமலம்
ஓக்கினேன் என்னையுமங் கோர்ந்து' 10

என்பது ஆழ்வார் அருட்பாசுரம். 'அருள் புரிந்த சிந்தை'யென்று இறைவனின் சிந்தையைக் குறிப்பிட்டிருப்பது இறைவன் அடியார் பலருக்கும் அருள்புரிந்து வாழ்வித்தவன் என்ற உண்மையை உணர்த்துவதுடன் சிந்தையின் இயல்பு அது அருட்தன்மையுடைய தாயிருத்தல் என்பதனையும் உணர்த்தும். அருட்தன்மை வாய்ந்த சிந்தையையுடைய இறைவன் தனது தன்மைக்கேற்ப எல்லாரிடத்திலும் அருள்பாலிப்பான் என்ற போதும் மெய்யடியார்களது பக்தியின் ஆழத்தையும் அவர்களது சிந்தையின் தன்மையினையும் அவர்கள் உள்ளக் குறிப்பினையும் புரிந்தே அவர்களைத் தன் கருணை விழியால் காண்கின்றான் என்ற குறிப்பினையே, 'பொருள் தெரிந்து காண்குற்ற' என்றசொற்கள் புலப்படுத்துகின்றன. வேண்டுதல் வேண்டாமையற்றவனாக இறைவன் இருந்தாலும் மனிதர்கள் அனைவரது மனங்களும் ஒரே தன்மையில் அமைய வல்லையே! அம்மனங்களின் தன்மைகளுக்கேற்பத்தானே அவன் அருள்புரிய முடியும்!

ஒரு தாய் தன் மூன்று குழந்தைகளிடமும் ஒத்த அன்பினையே காட்டுகின்றாள். ஆனால் குழந்தைகளின் வயது, அனுபவத்திற்கு ஏற்ப அவர்களிடம் அவள் நடந்து கொள்ளும் முறையில் வேறுபாடு காட்டுகின்றாள். சிறு குழநதையை மடிமேல் தூக்கிவைத்துச் சோறூட்டுகின்றாள்; அடுதத குழந்தைக்குத் தட்டில்சோறு போட்டு வைத்துச் சாப்பிடுமாறு கூறுகின்றாள்; பிறிதோர் குழந்தையைத் தானே சோறு போட்டுச் சாப்பிடுமாறு கூறுகின்றாள். மூன்று குழந்தைகளிடமும் அவள் நடந்து கொள்ளும முறையில் வேறுபாடு தொந்தாலும் மனத்தளவில் மூவரிடமும் அவள் வைத்துள்ள அன்பில் சிறிதுகூட வேறுபாடு காணமுடியாது. மூன்று குழந்தைகளின் வயது, அனுபவம் ஆகியவற்றைத் தெரிந்து அவள் நடந்து கொள்கின்றாளே அது போலத்தான் இறைவனும் 'பொருள் தெரிந்து' அடியார்கள் மேல் அருள் பாலிப்பது. 'பால் நினைந்தூட்டும் தாயினும் சாலப்பரிந்து' அடியார்களிடம் அன்பு காட்டுபவனன்றே இறைவன்!

விழிகளைத் திரைகள் ஏதும் மறைத்துக்கொண்டிருக்கும் வரையில் புறத்திருக்கின்ற பொருட்களைக் கண்களால் காணமுடிவது இல்லை. அறுவைச் சிகிச்சை செய்து அத்திரைகள் அகற்றப்படும் போதுதான் கண்கள் ஒளிபெறுகின்றன. இயல்பாகவே கண்களில் ஒளியிருந்தாலும் அவ்வொளியால் பயன் பெற முடியாமல் செய்துவிடும் திரைகளைப் போன்று இயல்பாகவே சிந்தையில் ஞானமிருந்தாலும் அந்த ஞானத்தினை மாயைத் திரைகள் மறைந்துவிடுகின்றன. இறைவனாகிய மருத்துவனின் பார்வைபடுகின்றபோதுதான் அந்த இருள் நீங்குகின்றது. இருள் நீங்கப்பெற்ற சிந்தையால் நோக்கும்போதுதான் இறைவனின் திருவடிகளாகிய அழகிய கமல மலர்களைக் காணமுடிகின்றது. அந் நிலையில்தான் தன்னையுணரும் பக்குவமும் மனிதனுக்கு ஏற்படுகின்றது.

இறைவனை யுணர்வது எவ்வளவு அரிய செயலோ அது போலத்தான் மனிதன் தன்னை யுணர்வதும்; இவ்வுலகின் தன்மைகளை யுணர்வதும். இறைவனை யுணர்ந்து மெய்ஞ்ஞானம் பெறுகின்றபோதுதான் மனிதன் தான் யார் என்பதனையும், இவ்வுலகம் எத்தன்மைத்து என்பதனையும் உணரத் தலைப்படுகின்றான். தான் யார் என்பதனை உணரவிடாமல் தடை செய்வது அவன் மனத்திலுள்ள அகங்காரம்; தானே பெரியவன் என்னும் செருக்கு. அச் செருக்கே மனிதனை வீழ்த்துகின்றது. அகந்தையைப் போக்காதிருக்கும் வரையில் அவன் தன்னையும் உணரமுடியாது; இறைவனையும் உணர முடியாது. 'அகந்தைக்கிழங்கை அகழ்ந்தெடுக்கும் தொழும்பர் உளக்கோயிற்கேற்றும் விளக்கே'[11] என்பார் குமரகுருபரர். இத்தன்மையினையே 'ஓக்கினேன் என்னையு மங்கோர்ந்து' என்று குறிப்பிடுகிறார் ஆழ்வார். சிந்தையில் ஞானம் பெறுதற்கு இறைவன் அருள்புரியவேண்டும் என்பதனையும் அப்படிப் பெற்ற ஞானத்தின் மூலம்தான் மனிதன் இறைவன் திருவடிகளைக் காண்பதுடன் தன் நிலையினையும் உணர முடியும் என்பதனையும் பூதத்தாழ்வார் நன்கு உணர்த்துகிறார்.

மெய்ஞ்ஞானமும் விடுபேறும் :

பிறவித் துன்பங்களினின்று நம் உயிர் விடுபடும் நிலையே வீடுபேறு ஆகும். அப்போதுதான் ஆன்மாவிற்கு உண்மையான விடுதலை. அடிமைத் தளைகளில் சிக்கித் துன்பமுற்றோர்

உரிமையடைந்த பின் மகிழ்தல் போன்று பல்வேறு பிறவிகள் எடுத்துத் துன்பங்களில் அழுந்திய நம் ஆன்மா நிலையான அமைதியில், பேரின்ப நிலையில் தங்கி இளைப்பாறுதலே வீடு பேறாகும். அவ்வீடு பேறு பெறுதற்குரிய ஒரேவழி நம் சிந்தையில் மெய்ஞ்ஞானம் பெறுதலேயாம். அஞ்ஞான இருளில் சிக்கித் தவிக்கும் போதுதான் பல்வேறு பாவச் செயல்களைப் புரிகின்றோம். அதன் விளைவால் பல பிறவிகளை யெடுத்துத் துன்புறுகின்றோம். அதிகமான பிறவிகளை யெடுத்து அல்லற்படும்போது நமது உயிரும் இளைக்கும் நிலை உருவாகிறது.

'எல்லாப் பிறப்பும் பிறந்திளைத்தேன்' 12

என்று கூறுவார் மணிவாசகர். ஓருயிர்ப் பிறவியாகிய புல்பூண்டிலிருந்து இத்தாவர சங்கமத்திலுள்ள எல்லாப் பிறவிகளையும் எடுத்து இளைத்திருந்த அவர் உயிர், மனிதப் பிறவியில்தான் இறைவன் திருவடிகளையுணரும் பேறு பெற்றது; அதன் பயனாய் வீடு பேற்றினையும் அடையும் தகுதி பெற்றுவிட்டது என்பதனை,

'மெய்யே உன் பொன்னடிகள் கண்டின்று வீடுற்றேன்' ...13

என்று கூறுவார் அவர். மெய்ப்பொருளாயிருக்கின்ற இறைவனின் கருணையால் ஞானம் வரம்பெற்றதனால்தான் இறைவன் திருவடிகளை யுணர்ந்து வீடு பேற்றினைப் பற்றியும் அவரால் சிந்திக்க முடிந்தது. எனவே வீடு பேறடைய மெய்ஞ்ஞானம் பெறுதல் அவசியம் என்பது புலனாகிறது.

இகழத் தக்க இந்த உடன்பின் உள்ளே உள்ளது உள்ளம். அவ்வுள்ளத்தில் உள்ள இருள் நீக்கப்பட்ட நிலையில் இறையருளால் ஞானச்சுடர் அங்கு ஏற்றப்படுகிறது. ஞானச்சுடரால் சிந்தை சிறக்கின்றபோதுதான் வான்பேறடையும் வாய்ப்புக் கிட்டுகின்றது என்று கூறுகிறார் பொய்கையாழ்வார்.

'ஊனக் குரம்பையி னுள்புக் கிருள்நீக்கி
ஞானச் சுடர்கொளீஇ நாடோறும் ஏனத்
துருவா யுலகிடந்த ஊழியான் பாதம்
மருவாதார்க் குண்டாமோ வான்' 14

என்பது அவரது அருட்பாசுரம். உள்ளத்தின் இருள் நீக்கப்பட்டு ஞானச் சுடர் ஏற்றப்பட்ட நிலையினையே சிந்தை யென்று குறிக்கின்றனர். சிந்தையில் ஞானச் சுடர் ஏற்றப்படும் போதுதான் வான்பேறடைய முடியும் என்பதை இப்பாசுரம் வலியுறுத்து

கின்றது. 'ஊனக்குரம்பை' யென்று உடன்பின் தன்மையை உணர்ந்து கூறுவது மெய்ஞ்ஞானம் வரப்பெற்ற நிலையினைக் காட்டும். 'மருவாதார்க்குண்டாமோ வான்' என்று எதிர் மறையில் கேட்பது மெய்ஞ்ஞான மெய்தார்பிற எவ்வழியினும் வீடு பேறடையார் என்பதை யுணர்த்தும்.

மெய்யுணர்வாகிய ஞானம் அடையாதார் புலன்களின் போக்கினைக் கட்டுப்படுத்தி அதனால் அரும்பயன்களை எய்தினாலும் வீடு பேறடையார் என்று கூறுகிறார் திருவள்ளுவர்.

'ஐயுணர்வு எய்தியக் கண்ணும் பயமின்றே
மெய்யுணர்வு இல்லாத வர்க்கு' 15

என்பது குறள். 'செல்லப்படுகின்ற புலன்கள் வேறுபாட்டான் ஐந்தாகிய உணர்வு அவற்றை விட்டுத் தம் வயத்ததாய வழியும் அதனால் பயனில்லையேயாம்; மெய்யுணர்தல் இல்லாதவர்க்கு'[16] என்று விளக்கம் கூறும் பரிமேலழகர் மெய்யுணர்வு உடையார்க்கே வீடு உளது என்று வலியுறுத்துகின்றார். அதனால் மெய்ஞ்ஞானம் பெற்று வீடுபேறடைத் துணை செய்யும் சிந்தையின் சிறப்பு நன்கு வெளிப்படும். 'ஐந்தாகிய உணர்வு-மனம் அஃது எய்தலாவது: மடங்கி ஒருதலைப்பட்டுத் தாரணைக்கண் நிற்றல். அங்ஙனம்நின்ற வழியும் வீடு பயவாமையின் 'பயம் இன்று'[17] என்றார் என்று மேற் கண்ட குறட்பாவிற்கு ஆய்வுரை கூறும் பரிமேலழகர், சிந்தையால் ஞானம் எய்தப் பெறாத போது மனத்தின் துணையால் வீடு பேறடைதல் இல்லை என்று உணர்த்துகிறார்.

சிந்தையும் இறைவனும்:

மெய்ஞ்ஞான ஒளி வீசும் இடமாகத் திகழ்வது சிந்தையே என்பதனையும் அந்த மெய்ஞ்ஞானத்தின் துணையால்தான் வீடு பேறடைய முடியும் என்பதனையும் கண்டோம்.மெய்ஞ்ஞானத்தைப் பெற்று விட்டாலே இறைவனையுணர்ந்து அவனருளையும் பெற்று விட்டாற் போன்றதே! அதனால்தான் சிந்தையையே இறைவ னாகவும் கண்டுள்ளனர்.

'சிந்தைய தென்னச் சிவனென்ன வேறில்லை[18]

என்கிறார் திருமூலர். மெய்ப் பொருளாக இருக்கக் கூடியவன்

இறைவன். அவனையுணரத் துணை செய்யும் மெய்யுணர்வு தோன்றுமிடம் சிந்தை. எனவேதான் சிந்தையையும் சிவனையும் ஒன்றாகக் கண்டு கூறினார் திருமூலர்.

'தெளியறி வாளர் தம் சிந்தையுளானே' 19

'தெளிவுறு ஞானத்துச் சிந்தையினுள்ளே' 20

இறைவன் எழுந்தருளுவான் என்றும் கூறுகிறார் திருமூலர்.

'சிந்தையும் சிவமாய் நின்ற செம்மை' 21

என்று கூறுகிறார் திருநாவுக்கரசர்.

'சிவனவன் என் சிந்தையுள் நின்ற அதனால்' 22

என்று உணர்ந்து ஓதுகின்றார் மணிவாசகப் பெருந்தகை. மேற்கண்ட சான்றுகளை நோக்குமிடத்துச் சிந்தையில் இறைவன் உறைவது நன்கு புலப்படும். எல்லோருடைய சிந்தையிலுமே இறைவன் இருக்கின்றானா என்ற வினாவிற்கு விடையிறுப்பது போன்று, 'தெளியறி வாளவர்தம் சிந்தை', 'தெளிவுறு ஞானத்துச் சிந்தை' என்று விளக்கம் தருகிறார் திருமூலர். எனவே, தெளிந்த மெய்ஞ்ஞானமுடையோர்தம் சிந்தையில் மட்டுமே இறைவன் உறைவான் என்பது திருமூலர் கருத்து. இறைவன் எல்லோரது சிந்தையிலும் உறைவான் எனினும் அவனை உணர்ந்து காணக் கூடிய ஆற்றல் தெளிந்த அறிவுடையோர்கட்கு மட்டுமே இயலு மாதலால் அவர்கள் சிந்தையில் மட்டும் இறைவன் உறைவதாக உரைத்துள்ளார் திருமூலர்.

நம்முடைய கண்ணில் ஒளியில்லாதபோது நமக்கு முன்னால் நிற்பவரையும் நம்மால் காண முடிவதில்லை. அது போன்றது தான் ஞானத் தெளிவற்றவர்களின் நிலையும். நம் கண்களால் காண முடியவில்லை என்பதற்காக முன்னால் நிற்பவரையும் இல்லையென்று சொல்லிவிட முடியாது. ஞானத் தெளிவுடைய சிந்தை நமக்கின்மையால் இறைவனையுணர முடியாத நிலை உருவாகலாமே தவிர சிந்தையில் இறைவன் இல்லை என்பது பொருளல்ல. எனவே ஞானத் தெளிவுடையோர் சிந்தையில் மட்டுமே இறைவன் உறைவான் என்பது, பிறர் அவனையறிய முடியாத, அறியாமையால் அடைய முயலாது இடர்ப்படும் நிலையினர் என்பதை உணர்த்தவேயாம்.

அன்பால் விரும்பித் தொழுகின்ற அடியார்களது சிந்தையை விட்டு என்றும் பிரியாது நின்று அருள் புரிபவன் திருமால் என்ற உண்மையினை நன்கு உணர்த்தியுள்ளார்கள் ஆழ்வார்கள்.

'வண்ணப் பவள மருங்கினிற் சாத்தி மலர்ப்பாதக்
கிண்கிணி யார்ப்ப
நண்ணித் தொழுமவர் சிந்தை பிரியாத நாராயணா
இங்கே வாராய்' 23

என்று அழைக்கின்றார் பெரியாழ்வார். இறைவனைக் காண வேண்டும்; அவனருள் பெறவேண்டும் என்றே அடியார்கள் அன்றாடம் வருந்தித் தொழுகின்றனர்; பலர் அருந்தவம் புரிகின்றனர். அப்படியிருந்தாலுங்கூட அவர்களில் பலரால் அவனருள் பெறமுடியவில்லை. ஆனால் சிலரது சிந்தையைவிட்டு என்றும் பிரியாது நின்று அருள் செய்கின்றானாம் இறைவன். அதற்குக் காரணம், உண்மையான விருப்புடன் அவர்கள் இறைவனை நினைந்து தொழுகின்றனர்; பிறர்மெச்ச வேண்டுமென்பதற்காகக் கோயில் குளங்களைக் கட்டிவைத்தும், ஆடம்பரமாகப் பொருட்செலவுசெய்தும் பக்தியிருப்பதாகக் காட்டிக்கொள்ளும் பக்தர்களைவிடத் தூயமனத்துடன் அன்போடு இறைவனை வழிபடும் பக்தர்களைத்தான் இறைவன் பெரிதும் விரும்பி அருள்புரிந்துள்ளான். இது, உலகிலுள்ள எல்லா மதங்களும் உணர்த்தும் பொதுவான உண்மை.

தொழுதால் மட்டும் போதாது; அது உண்மையான விருப்போடு அமைந்ததாக இருத்தல் வேண்டும். அப்படி அமைந்ததா இல்லையா என்பது மற்றவர்களுக்குத் தெரியாமற் போனாலும் இறைவனுக்குத் தெரியாமற் போக வாய்ப்பில்லை. அவனறிவான் அனைத்தையும். அப்படித் தொழுபவர் சிந்தையை அவன் என்றுமே பிரிவதில்லை. 'சிந்தைய தென்னச் சிவனென்ன வேறில்லை' என்று திருமூலர் கூறுவதுபோன்று 'சிந்தையதென்னத் திருமாலென்ன வேறில்லை' என்று யெண்ணுமளவிற்கு அவன் அச்சிந்தையில் தங்கி அருள்பாலிப்பான்.

விரும்பித் தொழுபவர் சிந்தையில் பிரியாது இறைவன் நின்று அருள் பாலிக்கும் உண்மையினை எத்தனை பேர் உணர்கின்றனர்? சிந்தையில் இறைவன் தங்குவதால் பெறக்கூடிய பேறு

என்ன என்பதை எத்தனைபேர் உணர்கின்றனர்? தற்காலிகப் பயன்களை யெண்ணிச் செயல்புரிபவர்கள் தாமே நம்மில் மிகுதி. எதைச் செய்தால் என்ன கிடைக்கும் என்று எண்ணி எதிர் பார்த்துச் செய்வதே அறிவு பெற்ற மனிதனின் ஆற்றலாய் அமைந்து விட்டதே! அவன் உய்தியடைய இறைவனை நினைந்து தொழுவதற்குச் சொல்லும்போதும்கூட அவன் மனம் மகிழுமாறு சில நற்பயன்களையும் கூறவேண்டிய கட்டாயம் ஆழ்வார்களுக்கு ஏற்பட்டுள்ளது.

'கடைக்குச் சென்று கத்தரிக்காய் வாங்கிவா. நீ மிட்டாய் வாங்கிக் கொள்ளக் காசு தருகிறேன்' என்று சிறிய பையனிடம் அவன் தாய் கூறுகிறாள். இதே நிலையில்தான் வயது முதிர்ந்த மனிதனைப் பார்த்து அருளடியார்கள் கூறியதும். 'உன் சிந்தையில் திருமாலை வைத்துக் காதலோடு நீ வழிபடு' என்று கூற விரும்புகின்ற ஆழ்வாரின் மனத்தில் வேறோர் ஐயமும் எழு கின்றது. அப்படி வழிபட்டால் என்ன பயன் என்று இம்மானிடன் கேட்பானே! 'பிறவிப் பிணி தீரும்; வானுலகை அடையலாம்' என்றும் பதில் கூறலாம். 'இறந்தபின் வானுலகை அடைவது இருக்கட்டும்; இப்போது என் நிலை?...' என்றும் கூட அறிவாற் றல் மிக்க மனிதன் கேட்பானே! அதற்கும் தகுந்த பதில் கூறா விட்டால் திருமாலைச் சிந்தையில் வைத்துத் தொழுவதற்கு இம் மனிதன் சம்மதிக்க மாட்டானே? எனவே, இம்மையிலும், மறுமை யிலும் எய்தக்கூடிய பேறுகள் இவையென்பதைக் கூறியே திரு மாலை வழிபடச் சொல்ல வேண்டிய கட்டாயமான சூழ்நிலை ஆழ்வார்கட்கிருந்துள்ளது.

'ஏதம் வந் தணுகா வண்ணநா மெண்ணி யெழுமி னோ
தொழுது மென்று இமையோர்
நாதன்வந் திறைஞ்சும் நைமிசா ரணியத் தெந்தையைச்
சிந்தையுள் வைத்துக்
காதலே மிகுத்த கலியன் வாயொலி செய்மாலைதான்
கற்றுவல்லார்கள்
ஓதநீர் வைய மாண்டு வெண் குடைக்கீழ் உம்பரு
மாகுவர்தாமே' 24

என்பது திருமங்கையாழ்வார் பாசுரம். திருமாலைச் சிந்தையுள் வைத்து வணங்கினால் இம்மைப் பயனாக இவ்வுலகை ஆண்டு இன்பம் துய்க்கலாம்; மறுமைப் பயனாக வானுலகில் தேவர்களில் ஒருவராகி வெண்குடைக் கீழ் வீற்றிருந்து மகிழலாம் என்று கூறிப்

பிறரை அடியவர்களாக்க முயன்றுள்ள முயற்சி இப் பாசுரத்தில் வெளிப்படுகிறது.

திருமங்கையாழ்வார் அரசனாக வீற்றிருந்து நாடாளும் நற்பேறு பெற்றவர். அப்பேற்றினை அவர் பெறுவதற்குக் காரணம் திருமாலைச் சிந்தையில் வைத்துத் தொழுததுவேயென்று அவர் எண்ணியிருத்தல் வேண்டும். எனவே, தன்னைப் போன்ற நிலை எல்லோருக்கும் ஏற்படும் என்று அவர் எதிர்பார்த்துக் கூறியிருக்கலாம்.

திருமாலின் பெருமைகளை உணர்ந்து, அவரைச் சிந்தையுள் வைத்து மாந்தர் பயன் பெற வேண்டும் என்ற நல்லெண்ணத்தின் பிரதிபலிப்பாக இப் பாசுரம் அமைந்திருந்தாலும், வைணவ சமயத்தைப் பரப்பும் நோக்குடன் திருமாலைப் பணிந்து இம்மை மறுமைப் பயன் பெறப் பிறரை வற்புறுத்தும் பாங்கிலும் இப்பாசுரம் அமைந்துள்ளது.

'கிறித்துவ சமயத்தில் சேருவோர் மட்டுமே மோட்சத்திற்குச் செல்ல முடியும்; பிறரெல்லாம் நரகில் இடர்ப்படுபவர்' என்று அம்மதத்தினர் பிறமதத்தினரை அச்சுறுத்தும் பாங்கினைப் பார்க்கின்றோம். இம்மையில் பல பொருளாதார உதவிகளைச் செய்து அவ்வுதவிகளின் மூலம் பிறரைத் தங்கள் மதத்திற்கு மாற்ற முயல்வோரையும் காண்கின்றோம். இன்றைய சூழலில் நாம் காணும் மதப் போட்டிகளுக்கான சூழல்களை ஆழ்வார்கள் காலத்திலும் காண்கிறோம். சமணம், பௌத்தம் போன்ற மதங்கள் தமிழகத்தில் பரவிவந்த காலம் அது. அம்மதத்தில் தமிழ் நாட்டவரும் சேரும் நிலை உருவாகியதால் அவர்களைத் தடுத்து நிறுத்தித் தாய்ச் சமயத்தை மேலும் வலுப்படுத்த வேண்டிய கட்டாயம் ஆழ்வார்களுக்கு ஏற்பட்டது. அதனால்தான் திருமாலை வணங்குவதால் ஏற்படக்கூடிய பயன்களையும் பாமர மக்களுக்கு எடுத்துக்கூறி வைணவத்தை வளர்க்கும் பணியில் தீவிரமாக ஈடுபட்டுள்ளார்கள் ஆழ்வார்கள். அதற்குத் திருமங்கையாழ்வாரின் பாசுரமும் சான்றாகும்.

காலச் சூழலில் சிந்தை :

பக்தியிலக்கியங்களில் பெருவழக்காகப் பயன்படுத்தப் பட்டுள்ள சொல் சிந்தை. பக்தி இலக்கியமல்லாத பிற சிற்றிலக்கியங்களிலும் கூட பிற்காலத்தில் இச்சொல் அதிகமாக எழுத்தாளப்

பட்டுள்ளது. ஆனால் சங்க இலக்கியங்களில் இச்சொல் மிகக் குறைவாகவே எழுத்தாளப் பட்டுள்ளது. புறநானூற்றில் ஓர் இடத்தில் மட்டுமே இச்சொல் வந்துள்ளது என்பதை முன்னர்க் காட்டியுள்ளோம்.

தொல்காப்பியர் சகரமும் மொழிக்கு முதலாக வரும் என்பதைக் குறிப்பிட்டுள்ளார். எனவே தொல்காப்பியர் விதிப்படி சகர வர்க்கத்தைச் சேர்ந்த சிந்தையென்ற சொல் தமிழ்ச் சொல்தான் என்று கருதவேண்டியுள்ளது. தொல்காப்பியர் அளவுப் பெயர்கள், நிறைப் பெயர்கள் பற்றிக் குறிப்பிடும்போது,

'கசதப என்றா நவம என்றா
அகர உகரமோ டவையென மொழிப' 25

என்றும் குறிப்பிட்டுள்ளார். எனவே சகரம் முதன்மொழியாகத் தமிழில் சொல் உண்டு என்பதற்குத் தொல்காப்பியமே சான்று. மேலும் காலத்தால் முந்திய நூலான புறநானூற்றிலும் இச்சொல் எடுத்தாளப்பட்டிருப்பதால் இது நுட்பமான பொருளுணர்த்தும் தமிழ்ச் சொல்லே என்பது விளங்கும்.

காலந்தோறும் சொற்களின் பொருள் மாறுதலடைவது மொழிகளின் வளர்ச்சி நிலையில் தவிர்க்க முடியாத ஒன்று. முன்னர் சிறப்புப் பொருளை யுணர்த்திய ஒரு சொல் பின்னர் இழிந்த பொருளை யுணர்த்துவதும் அதற்கு மாறுபட்ட நிலையில் அமைவதும் இயல்பு. இதற்குத் தமிழிலும் பல சான்றுகளைத் தரமுடியும். சிந்தையென்ற சொல் புறநானூற்றில் உணர்த்திய பொருள் வேறு; பக்தி இலக்கியங்களில் உணர்த்திய பொருள் வேறு: பிற்காலச் சிற்றிலக்கியங்களிலும் பிற இலக்கியங்களிலும் உணர்த்தும் பொருள் வேறு.

மனத்தின் ஓர் சிறந்த நிலையினை யுணர்த்தும் சொல்லாக இதனை யுணர்ந்திருந்தனரேயன்றி இச்சொல்லுணர்த்தும் பொருளைச் சங்கப் புலவர்கள் சரியாகப் புலப்படுத்தவில்லை. அதன் நுட்பமுணர்ந்து பயன்படுத்தியவர்கள் பக்திப் பாசுரங்களை முதன் முதல் தமிழில் தீட்டிய பெருமைக்குரிய ஆழ்வார்களும் நாயன்மார்களும் அவர்களைத் தொடர்ந்து பக்திப் பாசுரங்களைப் படைத்தளித்தவர்களுமே யாவர். சில உணர்வுகளைச் சில சொற்களால்தான் வெளிப்படுத்த முடியும். வேறு சொற்களால் ஓரளவு தான் அவ்வுணர்வை வெளிப்படுத்த முடியுமே தவிர முழுமையான

வெளிப்பாடாக அது அமையாது. அது போன்றுதான் சிந்தை யென்ற சொல்லின் நிலை. மெய்யுணர்வு பெற்ற மனத்தின் நிலை யினையுணர்த்தும் ஒரு சொல்லாகவே இதனைப் பக்திப் பாசுரங் களில் பயன்படுத்தியுள்ளார்கள். அதுவே இச்சொல்லின் தன்மை யினைச் சரியாகத் தெளிவுபடுத்தும்.

சங்க இலக்கியங்களில் ஒன்றிரண்டைத் தவிர பெரும்பாலான வற்றுள் இறைவனைப் பற்றிய ஆழ்ந்த சிந்தனைகளைக் காண முடியவில்லை. அக்காலச் சூழலும் மக்கள் வாழ்க்கை நிலையும் அப்படியமைந்திருந்தன. எனவேதான் சிந்தையென்ற சொல் வழக்கு அன்றுமிக்கிருக்க வாய்ப்பில்லாமற் போய்விட்டது. முதற் காப்பியங்களில்கூட இச்சொல்லின் முழுத்தன்மை வெளிப்படுமாறு பயன்படுத்தப்படவில்லை. சிலம்பிலும் மேகலையிலும் இச்சொல் குறைந்த அளவில்தான் பயன்படுத்தப்பட்டுள்ளது. பக்திப் பாசு ரங்களில்தான் மெய்யுணர்வு பற்றிய சிந்தனைகள் தோன்றுகின் றன. அந்நிலையில்தான் சிந்தையென்ற சொல்லின் தேவையும் ஏற்படுகிறது. அச்சொல்லின் முழுத்தன்மையும் அப்போதுதான் வெளிப்படுகிறது. தொடர்ந்து வந்த பக்தி நூல்களிலும் அந்நிலை யினைக் காண முடிகிறது. ஆனால் பிற்காலத்தில் தோன்றிய சிற்றிலக்கியங்களில் அந்நிலை மாறிவிட்டதையுணர்கிறோம். சிந்தையென்ற சொல்லின் நுட்பம் உணராமலேயே மனத்தின் பிற நிலைகளையும் அச்சொல்லால் உணர்த்தத் தலைப்பட்டு விட் டனர். இன்றும் அதே நிலையினையே காண்கின்றோம். ஆனால் பக்தி யிலக்கியங்களில் பெரும்பாலும் இச் சொல் சரியான நிலையினைக் காட்டும் விதத்தில்தான் தொடர்ந்து பயன்படுத் தப்பட்டு வருகிறது.

அடைச் சொற்களுடன் சிந்தை :

சிந்தையைப்பற்றிய பொதுவான கருத்துக்களை இதுவரையில் கண்டோம். இனிச் சிந்தையென்ற சொல்லுடன் பயன்படுத்தப் பட்டுள்ள அடைச்சொற்களைக் கொண்டு அவற்றின் தன்மைகளை அறிய முற்படுவோம்.

1. ஆசைவாய்ச் சென்ற சிந்தை 26
2. மால் கொள் சிந்தை 27
3. நோகும் சிந்தை 28

4. பரந்த சிந்தை 29
5- புணர்ந்த சிந்தை 30
6. துளக்கமில் சிந்தை 31
7. நன்குணர் சிந்தை 32
8. இன்புருகு சிந்தை 33
9. பருத்தெழுந்த சிந்தை 34
10. மகிழ்ந்த சிந்தை 35
11. துணிந்த சிந்தை 36
12. அருள்புரிந்த சிந்தை 37
13. இருளாத சிந்தை 38
14. கோட்பட்ட சிந்தை 39
15. மகிழ்வுகொள் சிந்தை 40
16. நுழையுஞ் சிந்தை 41
17. தெளிவுற்ற சிந்தை 42

மேற்கண்ட சான்றுகளை நோக்குமிடத்துப் பெரும்பாலும் சிந்தையின் நல்ல தன்மைகளே அடைச் சொற்களின் மூலம் உணர்த்தப்பட்டுள்ளன. சில அடைச்சொற்களே சிந்தையின் தீய தன்மைகளையுணர்த்தும் விதம் அமைத்துள்ளன. சில பொதுத் தன்மைகளையும் உணர்த்துகின்றன.

தீய தன்மைகள் :

ஞானச்சுடர் ஒளி வீசும் இடமாகத் திகழ வேண்டியது சிந்தை. அச் சிந்தை மெய்யுணர்வுகளைத் தேடியடையும் போதுதான் இறைவன் உறையும் இடமாக விளங்குகின்றது. உண்மையையுணர வேண்டிய சிந்தை பொய்ப் பொருள்களை நாடியலைந்தால் அச் சிந்தையால் தீங்குகள்தானே விளையும்! எவற்றையெல்லாம் தேடியலைந்து சிந்தை மயங்கி மாளுகின்றது என்பதனைத் தெளிவாகக் காட்டுகிறார் பெரியாழ்வார்.

''ஆசைவாய்ச் சென்ற சிந்தையராகி அன்னையத்தனென்
புத்திரர் பூமி
வாசவார் குழலாளென்று மயங்கி மாளு மெல்லைக்கண்
வாய்திறவாதே
கேசவா புருடோத்தமா வென்றும் கேழலாகிய
கேடிலீ யென்றும்
பேசுவா ரவரெய்தும் பெருமை பேசு வான்புகில்
நம்பர மன்றே 33

என்பது அவர் பாசுரம். மாறுபட்ட இரு நிலைகளை இப் பாசுரத்தில் நாம் காண்கிறோம். முன்னது, அன்னை, தந்தை, மனைவி, மக்கள், பூமியென்ற நிலையில்லாத் தன்மையுடைய வைகள். இரண்டாவது நிலையான பேரின்பத்தை நாமடையத் துணைசெய்யும் இறைவன் திருவடி. உண்மையில் நாம் ஆசை யுடன் விரும்ப வேண்டியது இறைவன் திருவடியினையே! ஏனென்றால் அப்பெயரை நாம் உச்சரிக்கும் போதுதான் நம் முடைய பாவங்கள் மறைவதுடன் மறுமையில் வானுலகை அடையும்பேறும் வாய்க்கின்றது. ஆனால் நம்முடைய சிந்தையில் தெளிவு இன்மையால் அது நிலையில்லாச் சொந்த பந்தங்களில் சிக்கி அலைகின்றது என்பதை ஆழ்வார் நன்கு தெளிவுபடுத்து கின்றார். அத்தகையோர் தங்கள் வாணாளை வீணாளாக்கிக் கொள்கின்றனர் என்பதனை, 'மயங்கி மாளுமெல்லை' என்று உணர்த்துகின்றார்.

நிலையான பேற்றினை நல்கும் இறைவன் திருவடியை மறந்து நிலையற்ற சொந்தபந்தங்களை விரும்பிப் பற்றுவைக்கும் நிலையினையே 'மயங்கி மாளு மெல்லை' யென்று குறிப்பிட்டது கண்டோம். அந்நிலையேனும் ஓரளவு பொறுத்தற்குரியது மெய் யுணர்வு தோன்றப் பெறாமையால் ஏற்படும் ஆசைகளின் விளைவு அது. ஆனால் சாதாரண அறிவுடையோரும் கூட தவறு என்று புரிந்து கொள்ளக்கூடிய பாவச் செயல்களைப் பலர் புரிந்து வருகின்றனரே! அதற்குக் கழுவாய் ஏது? அத்தகைய பாவச் செயல்களில் ஒன்றுதான் பெண்வழிச் சேறல். மலர் தாவும் வண்டுகள் போலப் பல பெண்களை நாடும் பேதமை! தன் மனைவி மக்கள் மீது பற்று வைப்பதினும் இது பெரும் குற்ற மாகும்; மன்னித்தற்கியலாத இச் செயலைப் புரிபவர் பற்றி,

'மணங்கள் நாறும் வார்குழலார் மாதர்க ளாதரத்தைப்
புணர்ந்த சிந்தைப் புன்மையாளன்' 44

என்று சாடுகின்றார் திருமங்கையாழ்வார். அம் மாதர்கள் இழி தொழில் புரிபவ ரென்றும், வெறுக்கத்தக்க உடலால் கெட்டழியும் அவர்களின் கூந்தல் மட்டுமே மணம் வீசும் என்றும் உணர்த்தவே 'மணங்கள் நாறும் வார்குழலார் மாதர்கள்' என்று இகழ்ச்சிக் குறிப்புத் தோன்றக் கூறுகிறார். மெய்ப் பொருளை யுணர வேண்டிய சிந்தை அம்மாதர்கள் ஆதரத்தைப் புணர்ந்தது இழிவு.

என்பதை யுணர்த்தவே 'புன்மையாளன்' என்று குறிப்பிடு கின்றார். இதுவும் சிந்தையின் தீய தன்மையாகும்.

மெய்யுணர்ந்து தெளிவு பெற்றிருப்பதே சிந்தையின் சிறப்பு. ஒன்றன்மேல் மிகுந்த விருப்பை வைத்து அதன்மீது மயக்க முற்றிருக்கும் நிலையும்கூட நல்ல தன்மையாக மாட்டாது என்பது ஒரு பொதுவான நியதி.

'பொய்ம்மையும் வாய்மை இடைத்த; புரைதீர்ந்த
நன்மை பயக்கு மெனின்' 45

என்பது வள்ளுவர் வாக்கு. எனவே மயங்கிநிற்கும் சிந்தையின் நிலையும் கூட ஒரு நிலையில் சிறப்பிற்குரியதே என்று கூறுகிறார் குலேசகர ஆழ்வார்.

'தேட்டருந்திறல் தேனினைத் தென்ன ரங்கனைத்
திருமாதுவாழ்
வாட்டமில் வனமாலை மார்வனை வாழ்த்திமால்கொள்
சிந்தையராய்
ஆட்ட மேவி யலந்த ழைத்தயர் வெய்தும் மெய்யடி
யார்கள்தம்
ஈட்டம் கண்டிடக் கூடுமேலது காணும்கண்பய
னாவதே' 46

என்பது ஆழ்வார் பாசுரம். திருமாது வாழ் மார்பனாகிய திருமாலிடத்து மிகுந்த விருப்பம் வைத்து மால்கொள் சிந்தையராய் ஆட்டம் மேவி அவன் திருநாமங்களை அழைத்து அயர் வெய்தும் மெய்யடியார் கூட்டத்தைக் காண்பதனைச் சிறப்பாகக் குறிப் பிடுகிறார் ஆழ்வார். அக்காட்சியைக் காண்பதையே தாம் கண்பெற்ற பயனாகவும் கூறுவது திருமாலிடத்தும், அவனடி யாரிடத்தும் அவர் வைத்திருந்த தீராக்காதலினையே புலப் படுத்தும். மயங்கி நிற்றல் தெளிவற்ற சிந்தையின் நிலையினைக் காட்டினாலும் அது சிறந்ததாக ஆழ்வாரால் அங்கீகரிக்கப் படுவதனை மேற்கண்ட பாசுரத்தால் உணர்கிறோம்.

ஒரு வாய்க்கால் வழியே சென்று வயலில் நீர் பாய்கின்ற போது அவ்வயல் நற்பயனைத் தருகின்றது. அந்நீரே பல இடங் களிலும் உடைப்பெடுத்து ஓடு மென்றால் அந்நீரால் எப்பயனும் விளையாது. சிந்தை ஒன்றில் நிலைத்து நிற்கும்போதுதான் மெய் யுணர்வினைப் பெறமுடியும். அதுவே பலவிடங்களிலும் அலைந்து

திரியுமென்றால் எது உண்மை யென்பதைக் காணு முன்பாகவே வாழ்வு முடிந்துவிடும். இது எல்லா மனிதருக்கும் பொதுவான உண்மை. ஆனால் இறையருள் பெற்ற மெய்யடியாராகிய திருமழிசைப் பிரானே பரந்து திரியும் தம் சிந்தை திருமாலின் திருப்பாத கமலத்தில் ஒன்றிநிற்க அவன் வரந்தர வேண்டும் என்று இறைஞ்சுகின்றார்.

'இரந்துரைப்பதுண்டு வாழி ஏம நீர் நிறத்த! மா
வரந்தரும் திருக்குறிப்பில் வைத்ததாகில் மன்னுசீர்
பரந்தசிந்தை யொன்றி நின்று நின்னபாத பங்கயம்
நிரந்தரம் நினைப்பதாக நீ நினைக்க வேண்டுமே' 47

என்பது அப்பாசுரம். இதையொரு வரமாகத் திருமாலிடம் ஆழ்வார் கேட்கும் முறையில் அவரது பக்தியுணர்வுபளிச்சிடுகிறது. எங்கே தமக்கு அவ்வரத்தை அவன் தராமல் மறுத்துவிடுவானோ என்ற அச்சத்தால் 'இரந்துரைப்பதுண்டு' என்று அவர் தொடக்கத் திலேயே பீடிகை போடுவதும், சிறந்த பல வரங்களை யெல்லாம் அடியார்க்கு அருளும் நீ எனக்கும் ஓர் வரம் தருவதற்கு இசைவா யென்றால் அவ்வரத்தைக் கேட்கிறேன் என்று அடுத்துக் கூறுவதும், நீ தரும் வரம் நிரந்தரமாக என்றும் நிலைத்திருந்து பயன்தருமாறு என்றும் உன் திருவடிகளில் என் சிந்தையொன்றி நிற்க வேண்டும் என்று இறைஞ்சுவதும் அவரது நுண்மாண் நுழை புலத்திற்குத் தக்க சான்றுகளாம்.

பரந்த சிந்தை ஒன்றி நின்று நின் திருவடிகளை நினைக்கு மாறு 'நீ நினைக்க வேண்டுமே' என்று முடிவில் கூறுவது நீ நினைத்தாலன்றி அது நடக்காது என்ற அவர் உறுதிப்பாட்டை யுணர்த்தும். பரந்த சிந்தையுடன் அல்லற்படும் அனைவருக்கும் திருமால் அருள் புரிய வேண்டும் என்பதே ஆழ்வாரது வேண்டுதல்.

நல்ல தன்மைகள் :

சிந்தையின் இயல்பான தன்மைகளையே நல்ல தன்மைகள் என்று கூறுகிறோம். கலப்புப்பால் என்று கூறுமளவிற்குப் பாலின் நிலை வேறுபடும் போதுதான் அத்தகைய பாலினின்றும் வேறு படுத்திக் காட்டுவதற்காக நல்லபால் என்று கூறுகிறோம். கலப்பு நிலையே உருவாகாமல் இருந்திருந்தால் இப்பாகு பாடுகள் தோன்றியிரா. அது போலத்தான் சிந்தையின் நிலையும். சிந்தையின் தீயதன்மைகள் சிலவற்றைக் காட்டிய ஆழ்வார்கள்

நல்ல தன்மைகள் பலவற்றைக் காட்டியுள்ளார்கள் அவைகளைப் பற்றி இனிக் காண்போம்,

சிந்தை தெளிவாக இருப்பது போன்று உறுதியுடனும் இருக்க வேண்டும். தெளிவிற்கே அடிப்படை உறுதிதான். உறுதியுள்ள சிந்தையுடையோரால் தான் உண்மையையுணர்ந்து உணர்ந்த வழி அசையாது நிற்கவும் முடியும். பலருக்குத் திடீரென்று மெய்யுணர்வு தோன்றச்கூடும். ஆனால் தோன்றியது போலவே திடீரென்று மறைய, மீண்டும் பொய்மைச் சேற்றில் புதைந்துவிடுவார்கள். சிந்தையில் உறுதியுடையோரே மெய்ம்மையை யுணர்கின்றனர் என்பதைத் தெளிவுபடுத்துகிறார் திருமங்கை யாழ்வார்.

'இளைப்பினை இயக்கம் நீக்கி யிருந்துமுன்
னிமையைக் கூட்டி
அலைப்பிலைம் புலனடக்கி யன்பவர் கண்ணே வைத்துத்
துளக்கமில் சிந்தை செய்து தோன்றலும் சுடர்விட்டாங்கே
விளக்கினை விதியிற் காண்பார் மெய்ம்மையைக்
காண்கிற்பாரே' 48

என்ற பாசுரத்தில் துளக்கமில் சிந்தை செய்பவர் எய்தக்கூடிய மேன்மையினையும், சிந்தை துளக்க மற்றநிலையில் எப்படி யிருப்பது என்பதனையும் ஆழ்வார் தெளிவுபடுத்தியுள்ளார்.

உயிரியக்கத்தின் இளைப்பினைப் போக்கி, முன்இமைகளில் சக்தியைக் கூட்டி, அலைந்து கொண்டிருக்கும் ஐம்புலன்களையும் அடக்கித் தம் கண்களில் அன்பு வெளிப்படுமாறு செய்கின்றபோது சிந்தையும் துளக்கமற்ற தன்மையை அடைகிறது. அந்நிலையில் மெய்ஞ்ஞானம் சுடர்விடத் தொடங்குகிறது. சிந்தையிலேயே அவ்வொளி தோன்றுகிறது. அவ்வொளியே இறைவனை நாம் காணத் துணை செய்கிறது. கண்களால் விளக்கின் ஒளியை நாம் காண்பது போன்று சிந்தையால் மெய்ம்மையைக் காணமுடிகிறது என்று கூறுகிறார் ஆழ்வார்.

'ஞானத் தெளிவாக நன்குணர்வார் சித்தை', ...49
இறைவன்திருவடிகளை யுணர்ந்து அதையடையும்விதம் முன்னர்க் காட்டியுள்ளோம்.

இருளில் கிடந்துழலும் சிந்தைதான் ஓயாத் துயரில் உழன்று கொண்டிருக்கும். மெய்ம்மையுணர்ந்த சிந்தைக்குத் துயரேது? அது எப்போதும் மகிழ்ந்து கொண்டுதானிருக்கும் என்பதனை,

'மகிழ்ந்தது சிந்தை திருமாலே; மற்றும்
மகிழ்ந்ததுன் பாதமே போற்றி - மகிழ்ந்த
தழலாழி சங்க மவைபாடி யாடும்
தொழிலாகஞ் சூழ்ந்து துணிந்து' 60

என்று விளக்குகிறார் பூதத்தாழ்வார். சிந்தை மகிழ்ந்தது என்று திருமாலிடம் கூறுகின்ற அவர், அது மகிழ்ந்ததற்குக் காரணம் திருமாலின் திருவடிகளைப் போற்றியதுதான் என்பதனையும் கூறி விடுகிறார். மகிழ்ந்ததோடு மட்டுமன்றி வேறோர் தொழிலினையும் அவர் செய்து வருவதாகக் குறிப்பிடுகிறார். திருமாலின் திருக்கரங்களில் சங்கும், சக்கரமும் இருக்கின்றன. சங்கிலிருந்து எழும் ஓமென்ற ப்ரணவ ஒலியால் அவன் எல்லா உயிர்களையும் படைக்கின்றான். சக்கரத்தால் இறுதியில் உலகை அழிக்கின்றான். அத்தகைய பெருமைக்குரிய சங்கையும் சக்கரத்தையும் புகழ்ந்து பாடியாடுவதையே அவர் தம் தொழிலாகக் கொண்டுள்ளார். 'துணிந்து' என்று அவர் இறுதியில் குறிப்பிடுவது, திருமாலின் திருநாமம், அவரது சங்கு, சக்கரம் இவைகளைப் போற்றுவதால் மட்டுமே தமக்கு மகிழ்ச்சியுண்டு என்பதை உறுதியாக அவர் நம்பியே அச்செயல்களைச் செய்கிறார் என்பதைக் காட்டும். அமரகவி பாரதியாரோ, 'நமக்குத் தொழில் கவிதை' என்று கூறுகிறார்.

உண்மையை யுணர்ந்து மகிழும் சிந்தை எதை நினைத்தும் அஞ்ச வேண்டுவதில்லையே! உண்மையையுணராது தவறிழைத்தோர் அல்லவா அஞ்சியஞ்சிச் சாவார். தெளிந்த சிந்தை துணிவுடனும் விளங்கும் என்பதனைத் தெளிவு படுத்துகிறார் பூதத்தாழ்வார்.

'துணிந்தது சிந்தை துழாயலங்கல் அங்கம்
அணிந்தவன்பே ருள்ளத்துப் பல்கால்—பணிந்ததுவும்
வேய்பிறங்கு சாரல் விறல்வேங் கடவனையே
வாய்திறங்கள் சொல்லும் வகை' 51

துழாயலங்கலை அங்கத்தில் அணிந்திருக்கும் திருமாலின் திருவடிகளை நினைந்து தொழுது அவன் திருப்பெயரினைத் தம் உள்ளத்தில் பல்காலும் போற்றிப் பரவுவதால் தம் சிந்தையில் துணிவு பிறந்தது என்று கூறுகிறார். சிந்தையில் தெளிவும் உறுதியும், எவ்விதப் பாவச் செயல்களையும் புரியாத நல்லியல்பும் வாய்க்கப் பெற்ற ஒருவனுக்குத் துணிவு இருப்பது இயல்பே. மேலும், சிறப்பும் செல்வாக்கும் மிக்க ஒருவரின் துணை தனக்கிருக்கு

போது நிச்சயம் சிந்தையில் துணிவு பிறக்கத்தான் செய்யும். ஊரில் பெரிய மனிதனின் துணை தனக்கிருப்பதால் மிகச் சிறிய மனிதரும் கூட துணிவுடன் செயல்படுவதனைக் காண்கிறோம். ஒரு மனிதனின் துணையைப் பெற்ற மற்ற மனிதனுக்கே துணிவு இருக்கு மென்றால் இறைவனின் அருட்துணையைப் பெற்ற ஒரு அடியாருக்குத் துணிவு இருப்பதில் வியப்பில்லையே!

மனிதனில் உயர்நிலையில் வைத்து மதிக்கப்படுபவன் நாடாளும் அரசன். இறைவன் உலகைக் காப்பது போன்று தன் நாட்டு மக்களை அவன் காப்பதால் இறைவன் என்ற சிறப்பு அவனுக்கும் உண்டு. அன்பு, அருள், அறம் ஆகியனவற்றை மண்ணில் காத்துவரும் அவன் நினைத்தால் எதனையும் செய்ய முடியும். அப்படிப்பட்ட மன்னவன் இட்ட கட்டளைக்கும் பணிய மறுத்தார் திருநாவுக்கரசர். 'நீ என் நாட்டின் குடிமகன்; உன்னை ஆளும் உரிமை பெற்றவன் நான்' என்றான் அரசன். 'என்னை யாளும் உரிமை சிவன் ஒருவனுக்கே உண்டு; வேறு எவனுக்கும் கிடையாது; அவனைத் தவிர வேறு யாருக்கும் நான் அடிமை யல்லேன்' என்று மறுப்புரைத்தார் அவர். அதுமட்டுமா? இவ் வுலகினர் அனைவரும் நினைத்தாலே நெஞ்சம் கலங்குவது எமன் ஒருவனுக்கே. அந்த எமனுக்கும் நாம் அஞ்ச மாட்டோம் என்று ஆர்ப்பரித்தார் நாவுக்கரசர்.

'நாமார்க்கும் குடியல்லோம்; நமனை யஞ்சோம்' ...52

என்று கூறும் துணிவு அவருக்கு எப்படி ஏற்பட்டது? சிந்தையில் சிவன் இருக்கின்றான் என்பதை அவர் உணர்ந்திருந்த தன்மை யினால்தான்! சிந்தைத் துணிவில் திருநாவுக்கரசின் வாரிசாக இந்த நூற்றாண்டில் வாழ்ந்த புலவர் பாரதியார். அவரின் கவிகளிலும் அந்த ஆற்றல்களைக் காண்கின்றோம்.

'காலா உனைநான் சிறுபுல்லென மதிக்கிறேன் – என்
காலருகே வாடாசற்றே மிதிக்கிறேன்' 53

என்று கூறும் துணிவு அவர் சிந்தையில் இறைவன் இருந்து அருள் புரிவதை அவர் உணர்ந்திருந்தமையால்தான்!

இறைவனருளால் மெய்யுணர்வு பெற்று, சிந்தையிலுள்ள இருள் நீங்கும்போதுதான் இறைவன் திருவடிக் கமலங்களைக் காணும் தகுதியும், தன்னையுணரும் ஆற்றலும் ஏற்படுகின்றது என்று ஆழ்வார் கூறிய நிலையினை முன்னர்க் கண்டோம்.

தான் பிறந்த குடிமக்களின் மேம்பாட்டிற்காக அரும் பணிகள் பல ஆற்றத் துடிக்கின்றான் ஒருவன். அவனுக்கு மற்ற மனிதர்கள் துணை செய்கின்றார்களோ இல்லையோ இறைவன் நிச்சயம் துணை நிற்பான் என்று கூறுகின்றார் திருவள்ளுவர்.

'குடிசெய்வல் என்னும் ஒருவர்க்குத் தெய்வம்
மடிதற்றித் தான்முந் துறும்' 54

என்பது குறள். வேட்டியை வரிந்து கட்டிக்கொண்டு அவனுக்கு முன்னால் வந்து நின்று, 'என்ன செய்ய வேண்டும், சொல்' என்று தெய்வம் கேட்குமாம். பிறர்வாழ உழைப்போர்க்கு இறைவனருள் உண்டு என்பதனையே அவ்வாறு குறிப்பிடுகிறார் அவர்.

அறியாக் குழந்தையைப்போல் ஆலிலைமேல் பள்ளிகொண்டிருந்தவன் திருமால். உயிர்களுக்கெல்லாம் தாயாக நின்று அருள் சுரக்கும் அவனே அடியார்கள் முன் குழந்தையாகவும் காட்சி தருகிறான். பக்திக் கனலுக்கு உருகும் மெழுகு அவன். இருளில்லாத சிந்தையுடன் திருமாலின் திருவடிகளுக்கு மலர்தூவிக் கைதொழும் மாண்புடைய அடியார்கள் முன்பு அவன் எப்போதும் குழந்தை போலவே காட்சி தருகிறான் என்று கூறுகிறார் பேயாழ்வார்.

'......................................இருளாத
சிந்தையராய்ச் சேவடிக்கே செம்மலர்தூய்க் கைதொழுது
முந்தையராய் நிற்பார்க்கு முன்' 55

இறைவன் நின்று அருள் புரிவானாம். நரசிங்கமாகத் தூணிலிருந்து தோன்றி இரணியன் மார்பினைப் பிளந்த திருமால்தான் இங்கு மெய்யடியார்கள் முன்பு குழந்தையாகக் காட்சி தருகிறான்.

'அன்பெனும் வலையில் அகப்படும் மலையே
அன்பெனும் பிடியில் அடங்குபே ரொளியே' 56

என்று இறைவனின் தன்மைகளாக வள்ளலார் கூறுவது எல்லாத் தெய்வங்களுக்கும் பொருந்தும்.

சிந்தையிலே மெய்யுணர்வு பெற்றுத் தெளிந்து நிற்போர்க்கு வீடு பேற்றைத் தந்தருள்பவன் திருமால். அவன் புகழ் பேசும் திவ்வியப் பிரபந்தத்தில் வல்லாராக விளங்குபவர் மூன்று உலகும் போற்றும் சிறப்பைப் பெற்றுத் திகழ்வார் என்று போற்றுகிறார் திருமாலடியார்.

'தெளிவுற்று வீவின்றி நின்றவர்க் கின்பக் கதிசெயும்
தெளிவுற்ற கண்ணனைத் தென்குருகூர்ச் சடகோபன் சொல்

தெளிவுற்ற ஆயிரத் துள்ளிவை பத்தும் வல்லாரவர்
தெளிவுற்ற சிந்தையர் பாமரு மூவுலகத்துளே' 57

என்பது அப்பாடல். தெளிவுற்ற சிந்தையினர்க்கு 'இன்பக்கதி' யளிக்கும் வண்ணம் திருமாலும் தெளிவுற்றவன் என்பதை இப்பாடல் நன்கு உணர்த்துகிறது.

காதல் வயப்பட்ட ஆணோ, பெண்ணோ தன்னிலையில் இருப்பதில்லை. தீராக் காதலின் வினையால் எதனையும் ஆராய்ந்து காணும் தன்மையினைக்கூட அவர்கள் இழந்துவிடுவதுண்டு. யாரிடம் எதனைப் பேசுகின்றோம் என்பதனைக்கூட அவர்கள் மறந்து மயங்கி நிற்பதுண்டு. தன்னைப் போலவே எல்லோரும் காதல் நோயால் தவிப்பது போன்ற மனநிலை அவர்கட்கு. அந்நிலையில் துடிக்கும் ஒரு பெண்ணின் சிந்தையைச் சித்தரிக்கின்றார் நம்மாழ்வார். எதற்காகவோ வருந்தித் தனித்திருக்கும் அன்றில் பறவையைக் காண்கின்றாள் அப்பெண். அப் பறவையும் தன்னைப் போலத் துடிக்கின்றதோ வென்று எண்ணி அதனை நோக்கிக் கேட்கவும் தொடங்குகிறாள் அவள்.

'கோட்பட்ட சிந்தையாய்க் கூர்வாய அன்றிலே
சேட்பட்ட யாமங்கள் சேரா திரங்குதியால்!
ஆட்பட்ட வெம்மேபோல் நீயும் அரவணையான்
தாட்பட்ட தண்டுழாய்த் தாமம்கா முற்றாயே?' 58

என்பது ஆழ்வார் பாசுரம். அரவணையான் தாட்பட்ட தண்டுழாய்த்தாமத்திற்காக் அப்பெண் காமுற்று நிற்கின்றாள். அதனால் பல இரவுப் பொழுதுகள் அவள் உறங்காமல் வாடிக் கொண்டிருக்கிறாள். அவள் நிலையினை அன்றில் பறவையின் மீது ஏற்றிக் கூறுமுகத்தான் வெளிப்படுத்துகின்றாள். வேறு எதை நினைந்து நீ காமுற்றாலும் உனக்கு இந்நிலை ஏற்படாது; திருமாலின் தாமத்திற்காக ஏங்கும்போதுதான் இந்நிலை உருவாகும் என்பதை உறுதிப்படுத்துபவள் போன்று 'காமுற்றாயே' என்று கூறுகின்றாள். திருமாலுக்கே அப்பெண் அடிமைப் பட்டவள் என்பதை உணர்த்தும் விதத்தில் 'ஆட்பட்ட வெம்மை' என்று கூறுகின்றாள். தனது சிந்தையைப் போலவே அன்றில் பறவையின் சிந்தையும் கோட்பட்டது என்று கூறி அச்சிந்தையின் நிலையினையும் புலப்படுத்துகிறார் ஆழ்வார். பறவைகளில் காதல் வாழ்விற்குச் சிறந்த எடுத்துக்காட்டாக அன்றில் பறவைகளைப் புலவரும் கூறியுள்ளனர்,

'அன்றில் சிறுபறவை ஆண்பிரிய வாழாது' 59

என்று கூறுகிறார் அமரகவி பாரதியார். அப்பறவையின் இப்பண்பினை யுணர்ந்துதான் அதனை நோக்கிக் கூறுமாறு பாடலை அமைத்துள்ளார் நம்மாழ்வார். பெண்ணின் சிந்தையைக் காட்டிய ஆணின் சிந்தையின் சிறப்பைப் பாசுரம் நன்கு வெளிப்படுத்துகிறது.

சிந்தை நோதல் என்பது பொதுவாகச் சிறந்த தன்மை அன்று எனினும் எதற்காக நோகின்றது என்பதைப் பொறுத்தே அதன் தன்மை அமைகின்றது. அடைய முடியாத ஆசைகளுக்காகவும், தீய நினைவுகளுக்காகவும் சிந்தை நோகின்றவர்கள் உண்டு. அது இழிந்த தன்மையே! பிறர் நலத்திற்காக உழைத்தும், பிறர் துயர் போக்கத் தன் சிந்தை நொந்தும் துன்புறுகின்றவர்கள் உண்டு. அப்படி நோதல் சிறந்த தன்மையே!

நல்லது நடக்க வேண்டும் என்று எண்ணுகின்றோம். ஆனால் எதிர்மாறாக நடந்து விட்டால் நம்சிந்தை நோகத்தானே செய்யும்! நோவதற்கான காரணத்தை நோக்கும் போது சிந்தையின் சிறப்பே புலப்படும். இராமன் நாடாள வேண்டும் என்று எதிர்பார்த்தனர் கௌசலையும் சுமத்திரையும். ஆனால் முடிவு வேறாகிவிட்டதை அவர்கள் உணர்ந்த போது சிந்தை நொந்து வாடினர் என்பதை,

'தேனகுமா மலர்க்கூந்தல் கௌசலையும் சுமத்திரையும்
சிந்தை நோவ'......60

என்று கூறுகின்றார் குலசேகர ஆழ்வார். சிறந்த காரணத்திற்காக நொந்ததால் இதுவும் நல்லதன்மையே!

சிந்தையும் தீவினையும்:

முற்பிறப்பில் நாம் செய்யும் தீவினைகள் நம்மைத் தொடர்ந்து வந்து மறு பிறப்பில் அதன் பயன்களை நாம் நுகரச் செய்து விடுகிறது. வினைகளின் பயன்களை அனுபவிக்காமல் எவரும் தப்பிவிட முடியாது. இது பொதுவான நியதி. ஆனால் அவ்வினைகளை வேரறுத்து, அதன் துன்ப விளைவுகளை நாம் அனுபவிக்காமலேயே தப்புவதற்கும் ஒரு வழியுண்டு. அதுதான் திருமாலை இடைவிடாது சிந்தை செய்து அவன் புகழைப் பாடியும் ஆடியும் போற்றித் தொழுவது என்று கூறுகிறார் நம்மாழ்வார்.

'உன்னைச் சிந்தை செய்து செய்துன் நெடுமா மொழியிசை
பாடியாடியென்
முன்னைத் தீவினைகள் முழுவேரரிந்தனன் யான்' 61

என்பது அவரது அனுபவ மொழி. திருமாலின் திருவடிகளை அவர் தொடர்ந்து சிந்தை செய்தார் என்பதனையே 'உன்னைச் சிந்தை செய்து செய்து' என்று மீண்டும் மீண்டும் கூறுவதன் மூலம் உணர்த்துகிறார். இப்பிறப்பில் நல்வினைகளே இயற்றிய போதிலும் முற்பிறப்பில் செய்த வினைகள் வந்து மூள்கிறது என்பதனை, 'முன்னைத் தீவினைகள்' என்று கூறுகிறார். மண்ணுக்கு வெளியிலே தெரிவன மரத்தின் கிளைகள் கொப்புகள் முதலியன. மண்ணுக்கு அடியில் மறைந்திருப்பன அம்மரத்தின் வேர்கள். கிளை முதலியனவற்றை வெட்டுவதால் மரம் அடியோடு அழியமாட்டாது. வேரினையும் அரியவேண்டும். தீவினையின் இயல்புகளும் இத்தன்மையினவே! நம்மால் உணர முடியாதவண்ணம் திடீரென்று அது தன் தன்மையைக் காட்டும். அதன் முழுவேர்களையும் அரிந்துவிட்டால் அதன்பிறகு அது தோன்றவே முடியாது; அப்படி வேர்களை அரிவதற்குரிய வழி திருமாலைச் சிந்தை செய்தல் ஒன்றே யென்பதைத் தம் அனுபவத்தால் உணர்ந்து உரைக்கின்றார் அவர். திருமாலைத் தொடர்ந்து சிந்தை செய்ததால் இவரது தீவினைகளின் வேர்கள் அரியப்பட்டன. ஆனால் திருமாலைச் சிந்தை செய்யாததோடு நிற்காமல் தன் சிந்தையால் அவனை இகழவும் செய்தான் இரணியன். அதனால்தான் அவன் மார்பினைப் பிளந்து உயிர் குடித்தான் திருமால் என்பதனை,

'உன்னைச் சிந்தையினா லிகழ்ந்த இரணிய னகல மார்வம்
கீண்டஎன்
முன்னைக் கோளரியே, முடியாதென் எனக்கே' 62

என்று கேட்கிறார் நம்மாழ்வார். திருமாலைத் தொடர்ந்து சிந்தை செய்பவர் எண்ணியதையெல்லாம் அடையலாம்; அவர்கட்கு முடியாது என ஒன்றுமே இல்லை என்பதனை 'முடியாதென் எனக்கே' என்று கேட்பதன் மூலம் தெளிவுபடுத்துகிறார் ஆழ்வார்.

சிந்தையும் அல்லல் பிறவி முதலியனவும் :

முற்பிறவியில் செய்த தீவினைகள் மறுபிறவியிலும் தொடர்ந்து வந்து துயரிழைக்கும் என்பதனை முன்னர்க் கண்டோம். பிறவிகள்

பல உண்டெனினும் அப்பிறவிகளை அனுபவிப்பவர் தீவினைகள் புரிபவர் மட்டுமே. தீவினைகளின் பயன்களை அனுபவிப்பதற்காகவே பிறவிகள் தொடர்கின்றன. அவ்வினை புரியாதோர்க்குப் பிறவிப் பிணிகளும் இல்லை.

செய்த தீவினையால் பிறவிகள் மட்டும் தானா தொடர்கின்றன? அச்சம், நோய், முதுமைத்துயர் எல்லாமும் தீவினைக்குரிய பரிசில்களாக அமைகின்றன என்பதனை,

'அச்சம் நோயோடு அல்லல் பல்பிறப்பு ஆய மூப்பிவை
வைத்த சிந்தை வைத்தவாக்கை மாற்றி வானிலேற்றுவான்
அச்சுதன் அனந்த கீர்த்தி ஆதிஅந்த மில்லவன்
நச்சு நாகணைக் கிடந்த நாதன் வேத கீதனே' 63

என்று விளக்குகிறார் திருமழிசைப்பிரான்.

அச்சம் என்பது சிந்தையை வருத்தும் நோய்; உடலை வருந்தும் நோயும் உடன் சேர்கிறது அவ்விரண்டு நோய்களும் முதிர்ந்த நிலை முதுமைத் துயர். மொத்தத்தில், பிறந்தது முதல் இறக்கும் வரை துன்ப நிலை. அந்நிலையில் இடப்பட்ட நம் சிந்தையினையும் வாக்கினையும் மாற்றி வானுலகை நாம் அடையச் செய்பவன் திருமாலே யென்றுகூறி அவன் பெருமைகளைப் போற்றிப் பரவுகின்றார் ஆழ்வார்.

நம் சிந்தையும், சிந்தையினின்று வெளிப்படும் வாக்கும் மேற்கண்ட துயர்களையெல்லாம் நாம் அனுபவிக்கும் வண்ணம் செய்தாலும் அவைகளை மாற்றும் வல்லமை திருமாலுக்குண்டு என்று உறுதியோடு கூறுகின்றார் திருமழிசைப்பிரான்.

சிந்தை நோய் :

உடலை வருத்தும் நோய்களைப் போன்று சிந்தையை வருத்தும் நோய்களுமுண்டு. உட்செல்லும் உணவு முறைகளில் குறைகள் நேர்வதனாலும், புறச்சூழல்களாகிய சுகாதாரக் கேடுகளாலும் உடம்பை நோய் தாக்குவதுண்டு. சிந்தையின் உள் தோன்றும் தீய எண்ணங்களாலும், நாம் பழகும் புற உலகின் தாக்குதல்களாலும் சிந்தையில் நோய்கள் வந்து வருத்துவதுண்டு. உடல் நோயை மருந்துகளால் குணப்படுத்தி விடுகிறோம்.

'நோய் நாடி, நோய்முதல் நாடி, அதுதணிக்கும்
வாய் நாடி வாய்ப்பச் செயல்' 64

என்று திருவள்ளுவர் கூறியது சிந்தை நோய்க்கும் பொருந்தும். நோய் எதனால் ஏற்பட்டது என்பதை யுணர்த்து அந்நோய் தீர்க்கும் முயற்சியில் ஈடுபடும் போதுதான் நிரந்தரமான தீர்வினைக் காண முடியும்.

திருமாலிடத்துத் தீராக்காதல் கொண்டு அதனால் சிந்தையில் நோயுற்றுத் தவிக்கும் பெண்களின் நிலையினையே திவ்வியப் பிரபந்தம் காட்டுகிறது.

'உள்ளுருஞ் சிந்தைநோய் யெனக்கே தந்தென்
ஒளிவளையும் மாநிறமும் கொண்டார்' 65

என்று ஓர் பெண் துடிக்கின்றாள்.

'தீராதென் சிந்தைநோய் தீராதென் பேதுறவு' 66

என்று வேறோர் பெண் புலம்புகின்றாள்.

'பெண்பிறந்தா ரெய்தும் பெருந்துயர் காண்கிலனென்று
ஒண்சுடரோன் வாரா தொளித்தான்இம் மண்ணளந்த
கண்பெரிய செவ்வாயெங் காரேறு வாரானால்
எண்பெரிய சிந்தைநோய் தீர்ப்பாரா ரென்னையே' 67

என்று திருமாலை நினைந்து நோகின்றாள் பிறிதோர் பெண்.

உள்ளுருஞ் சிந்தைநோய் வாட்டத் தொடங்கிவிட்டால் கைவளை கழன்று வீழுமளவிற்கு உடல்மெலிவும், நிறமாற்றமும் ஏற்படுவதுடன் அறிவு பேதுற்ற நிலையும் உருவாகிறது. அந்நோயைக் கொடுத்தவன்தான் போக்க வேண்டும்; பிறரால் முடியாது என்பதனையே, 'சிந்தைநோய் தீர்ப்பாரார்?' என்று கேட்பதன் மூலம் புலப்படுத்துகிறார்.

சிந்தை சிதைதல் :

சிதைதல் என்பது அழிதல். அதன் நிலையினின்றும் மாறுபட்டு நிற்றல். செய்த பொருட்களைச் சிதைப்பதுபோன்று நம் சிந்தையையும் சிதைவடையச் செய்யும் நிலையுண்டு. சிந்தை சிதைதல் என்பது சிந்தையால் எதையும் உணரமுடியாதவாறு நிலை குலைந்து நிற்றல். சிந்தையைப் பாதிக்குமளவிற்கு மிகுந்த துயர்நேரும் போதுதான் சிந்தை சிதையும் நிலை உருவாகிறது.

'சிதைவிடத்து ஒல்கார் உரவோர்' 68

என்று குறள் கூறுவது, சிந்தை சிதையும் நிலையேற்பட்டாலும், மனவலிமை யுடையவர்கள் அச் சிதைவால் பாதிக்கப்பட மாட்டார்கள் என்பதனையே உணர்த்தும்.

சிற்றில் கட்டி விளையாடுகின்றனர் சிறுமியர். அச்சிற்றில் களைச் சிதைத்துவிடுகிறான் மாயன். அவன் சிதைத்தது சிற்றில் களை மட்டும்தானா? அவர்கள் சிந்தைகளையும் சிதைத்து விட்டானே!

'முற்றத் தூடுபுகுந்து நின்முகங்காட்டிப் புன்முறுவல் செய்து
சிற்றிலோ டெங்கள் சிந்தையும் சிதைக்கக் கடவையோ?' 69

என்று கோவிந்தனைப் பார்த்துக் கேட்கின்றாள் ஓர் சிறுமி. சிந்தை விரும்பிக் கட்டப்பட்ட சிற்றில் சிதையும்போது சிந்தையும் சேர்ந்து சிதைந்து விடுகின்றது.

சிற்றில் சிதைந்ததால் சிந்தையும் சிதைந்ததைக் கண்டோம். ஆயர்பாடிக் கண்ணன் மேய்த்துவரும் விடையின் கழுத்தில் அசையும் மணியிலிருந்து எழும் ஓசையே தன் சிந்தையைச் சிந்து வித்ததாகக் கூறுகின்றாள் வேறோர் பெண். இது அவனிடத்துக் கொண்ட காதலால் துடிக்கும் பெண்ணின் நிலை.

'சினஞ்செய் மால்விடைச் சிறுமணியோசையென்
சிந்தையைச் சிந்துவிக்கும்' 70

என்று அப்பெண்ணின் நிலையினை வார்த்தைகளாக்குகிறார் திருமங்கையாழ்வார். திருமாலின் அருளே சிந்தைச் சிதைவை மாற்றுவதற்குதவும் என்பது அவர் முடிபு.

சிந்தை, சொல், செயல் :

சிந்தை, சொல், செயல் ஆகிய மூன்றும் நெருங்கிய தொடர் புடையவைகள். ஒன்றனால் மற்றொன்றின் உயர்வும் தாழ்வும் அமையும் வண்ணம் அமைந்தவைகள். ஒன்றனைக் கொண்டே பிறவற்றை யூகித்தறியும் தன்மையன. சிந்தை, சொல், செயல் மூன்றும் ஒரே இலக்கை நாடுமாறு வாழ்வதுதான் சிறந்த வாழ்வு. சிந்தையுள் எண்ணுவது ஒன்று; வாய் சொல்வது மற்றொன்று; முடிவில் செய்வது வேறொன்றாக அமையும் போதுதான் முரண் பாடுகள் தோன்றுகின்றன.

சிந்தையின் தன்மை புறத்தார்க்குப் புலப்படுவது ஒருவரின் பேச்சினாலும் செயலினாலும்தான். சிந்தையுள் தோன்றும் எண்ணங்கள்தாம் சொல்லாக வெளிப்படுகின்றன. எண்ணங்களின் வெளியீட்டு நிலைகளே சொற்கள். அதுபோல் பிறர் நம்மிடம் சொல்லும் சொற்களும் எண்ணங்களாக நம் சிந்தையுள் தங்கு கின்றன.

'சீர்சால் யசோதை திருமாலைச் சொன்னசொல்
சிந்தையுள் நின்று திகழ' 71

வென்று கூறுகிறார் பெரியாழ்வார்.

இறைவனைச் சிந்தையால் வணங்குவதே சிறப்பு. ஆனால், சிந்தையால் அவனை வணங்கும் போதே நாவினால் தீயன வற்றைப் பேசி, மெய்யினால் தீய செயல்களைச் செய்தால் எப் பயனும் விளையாது. அதனால், மூன்று நிலைகளாலும் நாம் இறைவனை வழிபடுதலே சிறப்பு. சிந்தையிலும் அவனை வணங்க வேண்டும்; நாவினாலும் அவன் புகழ் பேசவேண்டும்; செயல்களும் அவனுக்குகந்த திருப்பணிகளாக அமைதல் வேண்டும்.

'சிந்தையாலும் சொல்லாலும் செய்கையினாலும்
தேவ பிரானையே
தந்தை தாயென்றடைந்த வண்குரு கூர வர்
சடகோபன்' 72

என்று கூறும் பாசுரம் சிறந்த வழிபாட்டுநிலையினைக் காட்டும்.

மனிதர்கள் மட்டுமல்ல; தேவர்களுங்கூட அம்மூன்று நிலை களாலும்தான் திருமாலைத் தொழுகின்றனராம். அப்படித் தொழும் போதுதான் திருமால் சிந்தை மகிழ்ந்து அவர்கட்கு அருள் செய்கின்றானாம்.

'சிந்தையினாற் சொல்லினாற் செய்கையா னிலத் தேவர்
குழுவணங்கும்
சிந்தை மகிழ்திரு வாறன் விளையுறை தீர்த்தனுக்
கற்ற பின்னே 73

என்பது நம்மாழ்வார் பாசுரம். தெளிந்த சிந்தையினாற் சிந்தித்து அதனையே பேசி, பேசியபடியே செயல்புரிந்து வாழ்வதே சிறந்த வாழ்வு.

பல்வகைச் சிந்தைகள் :

சிந்தையின் தன்மைகள், அது தொழிற்படும் நிலைகள் ஆகியன பற்றி இதுவரை ஆய்ந்தோம். திருமாலின் பெருமை களையும் அவனருள் பெறத் துடிக்கும் அடியார்கள் நிலை யினையுமே பெரும்பாலும் திவ்வியப் பிரபந்தம் பேசினாலும், பல்வகைச் சிந்தைகளின் இயல்புகளையும் ஆழ்வார்கள் இங்குக் காட்டியுள்ளார்கள்.

திருமாலின் சிந்தையின் தன்மைகளையும், அச்சிந்தை எப்போது மகிழும், எதற்கு வருந்தும் என்பதனையும் காட்டியுள்ளார்கள். தேவர்கள் சிந்தையைப் பற்றிப் பல இடங்களில் குறிப்பிட்டுள்ளார்கள். மெய்யடியார்கள் சிந்தையின் தன்மைகளை நூலில் பல இடங்களில் காண்கின்றோம். எனினும், அதிலும் குறிப்பிட்ட சிலரை அவர்கட்கமைந்த சிறப்புத் தன்மைகளின் அடிப்படையில் சிந்தைகளைக் கண்டு பாகுபடுத்திக் காட்டியுள்ளார்கள்.

நீதியை விரும்பக்கூடிய நல்லோர்களின் சிந்தையுள் இறைவன் எழுந்தருளி அவர்கள் வினைகளைத் தீர்த்தருளுவான் என்பதனை,

'நன்றிருந்து யோக நீதி நண்ணுவார்கள் சிந்தையுள்
சென்றிருந்து தீவினைகள் தீர்த்த தேவ தேவனே' 74

என்று குறிப்பிடுகிறார் திருமழிசைப் பிரான்.

சீலமாதவத்தார் சிந்தையின் சிறப்பினைப் பற்றிப் புகழ்ந்து போற்றுகிறார் திருமங்கை யாழ்வார்.

'நால்வகை வேத மைந்து வேள்வியா றங்கம் வல்லார்
மேலைவா னவரில் மிக்க வேதிய ராதி காலம்
சேலுகள் வயல் திருப்பேர்ச் செங்கண்மாலோடும் வாழ்வார்;
சீலமாதவத்தர் சிந்தை யாளியென் சிந்தை யானே' 75

என்ற அவர் பாசுரத்தில் சீலமாதவத்தர் என்று அவர் போற்றும் வேதியர்களின் சிறப்பும், வானிலுள்ள தேவர்களைக் காட்டிலும் வேதியர்கள் உயர்ந்தோர் என்ற குறிப்பும் காணப்படுகிறது.

இவர் பாடிய பல பாசுரங்களில் அந்தணர்களைப் பற்றி உயர்வாகக் குறிப்பிட்டிருப்பது புலப்படுகிறது.

'அவ்வா யிளமங்கையர் பேசவுந்தான் அருமாமறை
அந்தணர் சிந்தைபுகச்
செவ்வாய்க்கிளி நான்மறைபாடு தில்லைத் திருச் சித்ரகூடம்
சென்று சேர் மின்களே' 76

'மாயனை மதிட் கோவலிடைகழி மைந்தனை யன்றி
அந்தணர் சிந்தையுள்
ஈசனை இலங்குஞ் சுடர்ச் சோதியை யெந்தையை' 77

'அளப்பரிய வாரமுதை யரங்க மேய
அந்தணனை அந்தணர்தம் சிந்தை யானை',.....78

மேற்கண்ட எல்லாப் பாசுரங்களையும் அருளியவர் திருமங்கை யாழ்வாரே! தேவர்களைக் காட்டிலும் அந்தணர்களை உயர்வாகக் குறிப்பிட்டிருப்பதுடன் அந்தணர் வடிவாகவே திருமாலையும் கண்டுள்ளார் ஆழ்வார். இது, அக்காலச் சூழ்நிலையின் பிரதி பலிப்பா, அல்லது அந்தணர்கள்மீது ஆழ்வார்க்கிருந்த மிகுந்த ஈடு பாட்டின் எதிரொலியா என்பது புலப்படவில்லை.

திருமாலின் திருவடித் தாமத்தின்மீது கார்முற்று கோட்பட்ட சிந்தையுடன் தவிக்கும் கூர்வாய் அன்றில் பறவையின் சிந்தை யினையும் கூடக் குறிப்பிட்டுள்ளார்கள். இவ்வாறு பல்வகைச் சிந்தைகளின் தன்மைகளையும் திவ்வியப் பிரபந்தத்தில் காண முடிகின்றது.

சிந்தை என்னும் சொற்பொருள் :

மனத்தின் ஒருநிலையினையே சிந்தையென்னும் சொல் உணர்த்தினாலும் அச்சொல் வேறு பொருள்களை உணர்த்தும் விதத்திலும் ஆழ்வார்கள் பயன்படுத்தியுள்ளார்கள்.

'சேலுகளும் வயல்புடைசூழ் திருவரங்கத் தம்மானைச்
சிந்தை செய்த
நீலமலர்க் கண்மடவாள்...' 79

என்ற பாசுரத்தில் சிந்தை செய்தல் என்பது நினைதல் என்ற பொருளைத் தருகிறது.

'ஐந்து பைந்தலை யாடரவனை மேவிப் பாற்கடல்
யோக நித்திரை
சிந்தை செய்த வெந்தாய்......' 80

என்ற பாசுரத்தில் சிந்தை செய்தல் என்பது விரும்புதல் என்ற பொருளில் அமைந்துள்ளது.

'அருள்புரிந்த சிந்தை அடியார்மேல் வைத்து' 81

என்ற பாசுரத்தில் சிந்தை வைத்தல் என்பது அன்போடு பரிவு காட்டுதல் என்ற பொருள் தருகிறது.

'... ... ... அடியேனுடைச்
சிந்தையாய் வந்து தென்புலர்க் கென்னைச்
சேர்கொடான்' 82

என்ற பாசுரத்தில் சிந்தையென்ற சொல் திருமாலைக் குறிக்கிறது. இவ்வாறு பல பொருட்களை இச் சொல் உணர்த்துகிறது.

அடிக்குறிப்பு விளக்கம் :

1.	திருமந்திரம்	2809
2.	புறநானூறு	279
3.	திருநாவுக்கரசர் தேவாரம்	1-128-8
4.	தாயுமானவர் பாடல்கள்	
5.	திருநாவுக்கரசர் தேவாரம்	4-25-3
6.	,,	4-37-8
7.	திருமந்திரம் (கேள்வி)	
8.	3ஆம் ஆயிரம் 2ஆம் திருவந்	1
9.	,, முதல் திருவந்	30
10.	,, 2ஆம் திருவந்	59
11.	மீனாட்சியம்மை பிள்ளைத் தமிழ்-வருகை	6
12.	திருவாசகம் - சிவபுராணம்	
13.	,, ,,	
14.	3ஆம் ஆயிரம் - முதல் திருவந்:	91
15.	திருக்குறள் – மெய்யுணர்தல்	354
16.	,, ,, பரிமேலழகர் உரை	
17.	,, ,, ,,	
18.	திருமந்திரம்	2809
19.	,, தீர்த்தம்	
20.	,, சிவநிந்தை	
21.	திருநாவுக்கரசர் தேவாரம்	5-162-5
22.	திருவாசகம் – சிவபுராணம்	
23.	முதலாமாயிரம் – பெரி. திரு.	2-3-2
24.	2ஆம் ஆயிரம் – பெரிய. திரு.	1-6-10
25.	தொல்காப்பியம்	
26.	முதலாமாயிரம் – பெரி. திரு.	4-5-1
27.	,, பெருமாள்	2-1
28.	,, ,,	9-10
29.	,, திருச்சந்த	101
30.	2ஆம் ஆயிரம் – பெரிய. திரு.	10-3-4
31.	2ஆம் ஆயிரம் - திருக்குறுந்:	18
32.	3ஆம் ,, முதல் திருவந்:	30

33.	,, 2ஆம் திருவந்:	1
34.	,, ,,	27
35.	,, ,,	32
36.	,, ,,	33
37.	,, ,,	59
38.	,, 3ஆம் திருவந்:	19
39.	4ஆம் ஆயிரம்	2-1-2
40.	,,	3-1-6
41.	,,	6-5-5
42.	,,	7-5-11
43.	முதலாம் ஆயிரம் – பெரி. திரு.	4-5-1
44.	2ஆம் ,, பெரிய. திரு.	10-3-4
45.	திருக்குறள் – வாய்மை	292
46.	முதலாமாயிரம் – பெருமாள்	2-1
47.	,, திருச்சந்த	101
48.	2ஆம் ஆயிரம் – திருக்குறுந்:	18
49.	3ஆம் ஆயிரம் – முதல் திருவந்;	30
50.	,, ,, 2ஆம் திருவந்:	32
51.	,, ,,	33
52.	திருநாவுக்கரசர் தேவாரம்	
53.	பாரதியார் கவிதைகள் – காலனுக்குரைத்தல்	
54.	திருக்குறள் – குடிசெயல்வகை	1023
55.	3ஆம் அயிரம் – 3ஆம் திருவந்:	19
56.	திருவருட்பா	
57.	4ஆம் ஆயிரம்	7-5-11
58.	,,	2-1-2
59.	பாரதியார் – குயிற்பாட்டு	
60.	முதலாமாயிரம் – நாச்சியார்	9-10
61.	4ஆம் ஆயிரம்	2-6-5
62.	,,	2-6-6
63.	முதலாமாயிரம் - திருச்சந்:	117
64.	திருக்குறள் – மருந்து	948
65.	2ஆம் ஆயிரம் – திருநெடும்:	23
66.	3ஆம் ,, சிறிய திருமடல்	18

67.	4ஆம் ,,	5-4-4
68.	திருக்குறள் – ஊக்கமுடைமை	597
69.	முதலாமாயிரம் – நாச்சியார்	2-9
70.	2ஆம் ஆயிரம் – பெரிய. திரு.	2-5-9
71.	முதலாமாயிரம் – பெரி. திரு.	2-3-13
72.	4ஆம் ஆயிரம்	6-5-11
73.	,,	7-10-10
74.	முதலாமாயிரம் – திருச்சந்த:	63
75.	2ஆம் ஆயிரம் – பெரிய. திரு.	5-9-9
76.	,, ,,	3-2-6
77.	,, ,,	7-10-4
78,	,, திருநெடும்:	14
79.	பெரிய. திரு.	5-5-10
80.	4ஆம் ஆயிரம்	2-6-5
81.	3ஆம் ,, 2ஆம் திருவந்:	1
82.	2ஆம் ,, பெரிய திரு.	7-3-3

சித்தம்

முன்னுரை :

மனத்தின் நிலைகளில் ஒன்றையுணர்த்தும் சொல்லாகவே இது பயன்படுத்தப்பட்டு வருகிறது. சிந்தை என்ற சொல்லைப் போன்று இதுவும் பக்தி இலக்கியங்களில்தான் பெரிதும் பயன்படுத்தப்பட்டுள்ளது. மனத்தையுணர்த்தும் சொல்லாகவே இதனையும் சிலர் பயன்படுத்தியுள்ளனர். பக்தியுணர்வுடைய மனத்தைப் பொது நிலையினின்றும் வேறுபடுத்திக் காட்ட இச்சொல்லால் சிலர் குறிப்பிட்டுள்ளனர். மனம் என்ற சொல்லால் பொதுவான மாந்தர் மனத்தினையும் சித்தம் என்ற சொல்லால் இறையுணர்வுடைய மாந்தர் மனத்தினையும் அவர்கள் பகுத்துக் காட்டுமாறு பயன்படுத்தியுள்ளனர். ஆனால் மனத்தின் நிலைகளில் ஒன்றை இச்சொல் உணர்த்துவதாகக் கருதுவதே சரியாகும்.

மனம், புத்தி, சித்தம் அகங்காரம் என்ற நான்கினையும் நாற்கரணங்கள் என்று பகுத்துக் கூறும் தத்துவ வியலார், ஒரு பொருளைப்பற்றி ஐயுறுதல் மனம் என்றும், ஐயுற்றதனை நிச்சயம் செய்தல் புத்தி என்றும், அதனை நினைவிற் கொள்ளுதல் சித்தம் என்றும், நான் என்ற அபிமானத்தை அடைதல் அகங்காரம் என்றும் விளக்கம் கூறுவர். அதன்படி நோக்கினால் மனம் வேறு, சித்தம் வேறு என்று ஆகிறது. அதுவும் சரியான பகுப்பாகக் கொள்ளுதற்கில்லை. மனம் என்பது தொல்காப்பியரானும் எடுத்தாளப்பட்ட தூய தமிழ்ச்சொல். தமிழரின் மெய்ப் பொருளியலறிவிற்குச் சான்றாக அமைந்து, மனிதனின் மாண்பினையே இனங்காட்டும் சொல் அது. ஆனால் ஏனைய புத்தி, சித்தம், அகங்காரம் என்ற மூன்று சொற்களும் பிற்காலத்தில், அதிலும் குறிப்பாகப் பக்தி இலக்கியங்கள் தோன்றிய காலத்தில் இலக்கிய அரியணை ஏறியசொற்களாகும். அதனால் மனத்துடன் இவைகளை

யும் சேர்த்து நாற்கரணங்களாகப் பகுப்பது வடமொழியினர்க்கு (மனம் என்பது வடசொல்லென்று சிலர் கருதுவதால்) ஒத்ததாக இருக்கலாம்; தமிழர்க்கு அது பொருந்தாது. ஐயுறுதல், தெளிதல், நினைதல், அகந்தை கொள்ளுதல் எல்லாமே மனத்தின் தன்மைகள் தாம். அது தொழிற்படும் நிலைகளுக்கேற்பவே நெஞ்சம், உள்ளம் சிந்தை என்றெல்லாம் வெவ்வேறு பெயர்களைப் பெறுகின்றன.

சித்தம் என்பதைத் தமிழ்ச் சொல்லாகக் கொள்ள முடியா விட்டாலும் அது உணர்த்தும் நிலையினைத் தெளிவாக உணர முடிகிறது. நாற்கரணத்தில் சித்தத்திற்குக் கூறப்பட்ட விளக்கமே பெரும்பாலும் பொருந்துகிறது. 'நினைதல்' என்ற தன்மையினை யுணர்த்தும் சொல்லாகவே அது பயன்படுகிறது. ஆனால் 'நினை தல்' என்பதும் மனத்தின் ஒரு தன்மையேயென்பதையும், குறிப் பிட்ட அத்தன்மையினை இச்சொல் குறிக்கிறது என்பதனையும் மறத்தலாகாது. பக்தி இலக்கியங்களிலேயே இச்சொல் மிகுதியும் பயன்படுத்தப்படுவதால் 'இறைவனைப் பற்றி நினைதல்' என்னும் தன்மையுடைய சொல்லாகப் பொருள் கொள்ளுதல் ஏற்புடைத்தாக அமையும்.

'நஞ்சமுண்டபிரான் அடியினைக்கே சித்தம் வைத்து'......1

'சித்தமே புகுந்தெம்மை யாட்கொண்டு' 2

'சித்தம் புகுந்து சிவமய மாக்குமே' 3

மேற்கண்ட சான்றுகளை நோக்குமிடத்துச் சித்தம் என்ற சொல் 'மனம்' என்ற பொருளையே தருமாறு அமைந்துள்ளமை புலனாகும்.

'சித்தமாகிற் சிவகதி சேர்திரே' 4

என்றஇடத்தில் சித்தம் என்ற சொல் 'விருப்பம்' என்ற பொருளைத் தருகிறது. 'தங்கள் விருப்பம்' என்ற பொருள்படுமாறு, 'தங்கள் சித்தம் என் பாக்கியம்' என்ற வழக்காறிருப்பதனையும் நினைவிற் கொள்ளுதல் வேண்டும்.

சித்தம் என்றசொல் உள்ளம், நெஞ்சம் போன்ற நிலைகளின் தன்மைகளையுணர்த்துமாறும் பயன்படுத்தப்பட்டுள்ளது.

'சித்தம் குருவருளாற் சிவமாகுமே' 5

என்ற திருமந்திரப் பாடலில் சித்தம் என்ற சொல் உள்ளம் என்ற நிலையினையுணர்த்துகிறது.

'சித்தத் துருகி' 6

என்று திருநாவுக்கரசர் குறிப்பிடுவது நெஞ்சம் என்ற நிலையினை யுணர்த்துகிறது. எனவே, சித்தம் என்றசொல் மனம், உள்ளம், நெஞ்சம் என்ற பல நிலைகளையும் உணர்த்தினாலும் 'இறைவ னைப்பற்றி நினைக்கும் தன்மையுடைய மனத்தின் நிலையே சித்தம்' என்று பொருள் காண்பது அச்சொல்லிற்குப் பொருத்தமாக அமையும். சித்தம் என்பது அடிமனத்தை (Sub-concious)க் குறிப் பதாகவும் சிலர் கருதுகின்றனர்.

ஆழ்வார்களும் சித்தமும் :

மெய்யுணர்வின் அடிப்படையில் மனத்தைப்பற்றி ஆழ்ந்து சிந்தித்துப் பல அரிய உண்மைகளைக் கண்டு கூறிய பெருமை ஆழ்வார்களைச் சேரும். இறைவனைப் பற்றிய பக்திப் பாசுரங் களையே அவர்கள் அருளியபோதும், பக்தி ஒளியால் மனித மனங் களின் தன்மைகளையும் கண்டவர்கள் அவர்கள். அதனால்தான் மனத்தின் தன்மைகளையும், அதன் பல நிலைகளுக்கிடையிலுள்ள நுட்பமான வேறுபாடுகளையும் கூர்ந்து நோக்கித் தெளிவுபடுத்தி யுள்ளார்கள்.

மனம், நெஞ்சம், உள்ளம், சிந்தை ஆகிய சொற்களை, அதன் தன்மைகள் புலப்படுமாறு மிகுதியான இடங்களில் எடுத்தாண் டுள்ள ஆழ்வார்கள் சித்தம் என்ற சொல்லைப் பத்து இடங்களில் மட்டுமே பயன்படுத்தியுள்ளார்கள். அச்சொல் உணர்த்தும் தன்மைகளை ஏனைய சொற்களாலேயே உணர்த்திவிடமுடியும் என்று நினைத்து அதன்படி செய்திருக்கலாம். மேலும், ஆழ்வார் களில் பலர் திருமாலிடத்துப் பற்றுக்கொண்டிருந்தது போலவே செந்தமிழ் மொழியிடத்தும் பற்றுக்கொண்டிருந்தனர் என்பதை அவர் தம் இன்தமிழ்ப்பாக்கள் எடுத்துக் காட்டுகின்றன. தூய தமிழ்ச் சொற்களைப் பலவிடங்களில் சிறப்பாகப் பயன்படுத்தி யுள்ளனர். பக்தி இலக்கியங்கள் என்றாலே வடசொல் மிக்கிருக்கும் என்ற நியதிக்குத் திவ்வியப் பிரபந்தம் விதிவிலக்கு. ஆனால் பிற்றை நாளில் அந்த அருந்தமிழ்ப் பாமாலைகளின் தொகுப் பிற்குப் பெயர் மட்டும் வடசொல்லாக அமைந்துவிட்டது. தொகுத் தவர் செய்த புண்ணியம் அது! மனத்தையுணர்த்தும் பிற தமிழ்

சொற்களைப் போன்று சித்தம் என்றசொல் அதிக இடங்களில் எடுத்தாளப் படாமைக்கு ஆழ்வார்களின் தமிழ்ப்பற்றும் காரண மாகும்.

இச் சொல்லை இவர்கள் பயன்படுத்திய இடங்கள் குறைவாக விருந்தாலும் தெளிவான பொருள் புலப்படுமாறு பயன்படுத்தி யுள்ளமை குறிப்பிடத்தக்கது. மனத்தின் ஒரு நிலையினை இச் சொல் உணர்த்துவதாகவே இவர்கள் காட்டியுள்ளார்கள். 'இறை வனைப்பற்றி நினைதலே' சித்தம் என்ற சொல்லின் தன்மை என் பதை இவர்கள் உணர்ந்து உணர்த்தியுள்ளார்கள்.

'மத்தக் களிற்று வசுதேவர் தம்முடைச்
சித்தம் பிரியாத தேவகி' 7

என்ற பெரியாழ்வார் பாசுரத்தில், 'வசுதேவரின் நினைவினின்று அகலாத தேவகி' என்று பொருள் தருமாறு அச் சொல் அமைந் திருப்பதனை யுணர்கிறோம். அதன் தன்மைகளை எவ்வா றெல்லாம் ஆழ்வார்கள் காட்டியுள்ளனர் என்பதை மேலுங் காண்போம்.

சித்தம் ஒருங்குதல் :

நினைவுகள் ஓரிடத்தில் நிலைத்து நிற்கும் தன்மையன அல்ல. அவை அங்குமிங்கும் அலைமோதும் இயல்புடையன. காற்றினும் கடிது விரைந்து செல்லும் வேகம் நினைவுகளுக்குண்டு. பல்லாண்டு கட்கு முன்னர் நடந்த நிகழ்ச்சிகளைக் கூட தற்போது நம் மனக் கண்களில் கொண்டு வந்து நிறுத்தும் ஆற்றல் நினைவுகளுக்குண்டு அவை நல்லவனவற்றை நாடிச் சென்றால் நமக்கு நலமுண்டு. தீயனவற்றை நாடிச் சென்றால் தீவினைகட்கு ஆளாக வேண்டி வரும். எனவே அந்நினைவுகளைக் கட்டுப்படுத்தி அடங்கச் செய்ய வேண்டும். அப்படிச் செய்வதனையே 'சித்தம் ஒருங்குதல்' என்பர்.[?]

'செத்துப் போவதோர் போது நினைந்து செய்யும் செய்
கைகள் தேவபிரான்மேல்
பத்தரா யிறந்தார் பெறும் பேற்றைப் பாழித் தோள் விட்டு
சித்தன் புத்தூர்க் கோன்
சித்தம் நன்கொருங்கித் திருமாலைச் செய்த மாலையிவை
பத்தும் வல்லார்

சித்தம் நன்கொருங்கித் திருமால் மேல் சென்ற சிந்தை
பெறுவர்கள் தாமே' 8

என்ற பாசுரத்தில் சித்தம் ஒருங்குதலின் சிறப்பு நன்கு எடுத்துக் காட்டப்பட்டுள்ளது. சித்தம் நன்கு ஒருங்கிய நிலையில்தான் பெரியாழ்வார் பாசுரங்களைப் பாடியருளினார் என்பதனையும், அப்பாசுரங்களை நன்கு ஆய்ந்து கற்றவர் தாமும் சித்தம் நன்கொருங்கித் தமது சிந்தை திருமாலிடத்துச் செல்லும் உயர் நிலையைப் பெறுவர் என்பதனையும் இப்பாடல் விளக்குகிறது.

சித்தம் ஒருங்கும் போதுதான் சிந்தை திருமால் மேல் செல்கிறது என்பதனை நோக்கும் போது சித்தத்திற்கும் சிந்தைக்கும் உள்ள தொடர்பு விளங்குவதுடன், சிந்தையின் சிறப்பிற்குச் சித்தம் காரணமாகவிருப்பதும் விளங்கும்.

சித்தம் ஒருங்குவதென்பது அவ்வளவு எளிதாக இயலக்கூடியதல்ல. இறைவனின் திருவடிகளைச் சித்தம் தேடிச்செல்லும் போது தான் அவனருளால் அது ஒருங்குகின்றது.

'சித்தத்தை யொன்ற வைத்தார்; சிவமதே நினைய வைத்தார் என்று கூறுகிறார் திருநாவுக்கரசர். திருமாலின் அருளால் சித்தம் ஒருங்குமென்பது ஆழ்வார்கள் முடிவு. சித்தம் நன்கொருங்கும் போதுதான் இறையருளைப் பெற முடியும் என்பதும் ஆழ்வார்கள் கருத்து.

திருமால் பால் சித்தம் :

சித்தத்தை ஒருங்கவிடாமல் செய்வன ஐம்புலன்களே! அப்புலன்களின் போக்கில் சித்தம் செல்லும் போதுதான் தீவினைகள் பல உருவாகின்றன.

'சித்தத்துள் ஐவர் தீய செய்வினை பலவும் செய்ய' ...—10

என்பது திருநாவுக்கரசர் கூற்று. புலன்களின் போக்கில் சித்தம் சென்றால் சிந்தையிலும் தெளிவு பிறக்காது. தெளிவற்ற சிந்தையால் இறைவனைப்பற்றி எண்ண முடியாது. எனவேதான் எந்த நிலையிலும் யாரையும் கூடும் இயல்புடைய இழிவான சிந்தையைத் தவிர்த்து, எப்போதும் உன்னையே கூடத்துடிக்கும் சிந்தையைப் பெற்றேன் என்று கூறுகிறார் குலசேகர ஆழ்வார்.

'எத்திறத்திலும் யாரொடும் கூடும் அச்
சித்தம் தன்னைத் தவிர்த்தனன்; செங்கண்மால்
அத்தனே! அரங்கா வென்றழைக்கின்றேன்;
பித்தனா யொழிந்தே னெம் பிரானுக்கே' 11

என்பது அவர் பாசுரம். சித்தத்தை திருமாலிடத்துச் செலுத்தி நினைவுகள் வேறெதனையும் நாடாதவாறு, 'அத்தனே, அரங்கா' வென்று எப்போதும் அவனையே நினைத்து அவனருளுக்காக ஏங்கும் நிலையினையே, 'பித்தனா யொழிந்தேன் எம்பிரானுக்கே' என்று கூறுகிறார்.

'சித்தம் நின்பால தறிதியன்றே திருமாலிருஞ்சோலை
யெந்தாய்?' 12

என்று அவர் கேட்பது, திருமாலிடத்துச் சித்தம் வைத்திருப்பதனை அவனும் அறிவான் என்பதனை அவர் உணர்த்த விரும்புவதைக் காட்டும்.

திருமாலிடத்துச் சித்தம் வைத்த மெய்யடியார்கள் அவனை வணங்கி வாழ்த்துவதையெல்லாம் அவன் அறிவான்; அவன் தன் திருக்குறிப்பில் அதனைக் கொண்டு அருள்பாலிப்பான்; அத்தகைய மெய்யடியார்களது சித்தத்தையும் பாயலாகக் கொண்டு அவன் பள்ளி கொள்ளுவான் என்ற உண்மைகளை,

'தூய னாயு மன்றியும் சுரும்புலாவு தண்டுழாய்
மாய, நின்னை நாயினேன் வணங்கி வாழ்த்துமீதெலாம்
நீயுநின் குறிப்பினிற் பொறுத்து நல்கு; வேலைநீர்ப்
பாயலோடு பக்தர்சித்தம் மேயவேலை வண்ணனே' 13

என்று விளக்குகிறார் திருமழிசைப்பிரான்.

'வேலைநீர்ப் பாயலோடு பக்தர் சித்தம் மேய வேலை வண்ணன்' என்று குறிப்பிடுவது, பாற்கடலில் உறைவது போன்று அடியார்களின் நினைவிலும் உறைகின்றான்; நினைவுகளின் வடிவமாகத் திகழ்கின்றான் என்பதனைக் காட்டும்.

திருமாலுக்கே அடிமையாகத் திகழ்கின்றார் ஒரு மெய்யடியார்; அவனுக்கு அடிமையாவதைத் தவிர பிறிதொன்றும் அறியாத உறுதி அவர்க்குண்டு. அப்படியிருந்துங்கூட அவர் சித்தம் அவரது விருப்பப்படி திருமாலை நாடவில்லை; அது கட்டவிழ்ந்த நிலையில்

எங்கோ அலைகின்றது. அதைக் கட்டுப்படுத்தித் திருமாலைச் சரணடைய வைக்கத் துடிக்கின்றார். தனது தீவினையின் காரணமாகவே அது அப்படியலைவதாக அவர் கருதுவதால், வினைகளினை வேரறுக்கவல்லவனாகிய திருமாலிடத்துத்தான் செலுத்துகின்ற பக்தியின் மூலமே அதைக் கட்டுப்படுத்த முடியு மென்றும் அவர் உணர்கின்றார். அப்படிப் பக்தி செலுத்துதற் குரிய அன்புடையவனாகத் தான் விளங்குதற்குத் திருமால் அருள் புரிய வேண்டும் என்றும் அவனிடம் வரம் கேட்கின்றார் அவர்.

'சித்தமும் செவ்வை நில்லா தென் செய்கேன்? தீவினையேன்
பத்திமைக் கன்புடையே னாவதே பணியா யெந்தாய்!
முத்தொளி மரகதம்மே! முழங்கொலி முகில்வண்ணாவென்
அத்த, நின் அடிமையல்லால் யாது
மொன்றறிகிலேனே' 14

என்பது அக்கருத்தினைக் காட்டும் திருமங்கையாழ்வார் பாசுரம். இறைவனிடத்து அடிமையாய் இருத்தல் வேறு; அவனிடத்துச் சித்தத்தைச் செலுத்திப் பக்தி காட்டுதல் வேறு என்பதை இப் பாசுரம் தெளிவுபடுத்துகிறது. அடிமையாய் இருந்தால் மட்டும் போதாது; இறைவனிடத்து ஆராக் காதலுடைய பக்தனாகவும் இருப்பதே சிறப்பு.

மங்கையர் பால் சித்தம்:

திருமால் நிலையான பரம்பொருள்; உலகை வாழ்விக்கும் வல்லமை பெற்றவன். அவன்பால் சித்தம் வைத்தால் நாமும் நல்வாழ்வு வாழ்ந்து முடிவில் வானுலகப் பேற்றினையும் அடைய முடியும். மங்கையர்களிடம் சித்தம் வைத்தால் பல்வேறு துன்பங் கட்கு ஆளாகி முடிவில் கெட்டழிவோம். இராவணன் மிகச் சிறந்த வீரன்; தவவலியாலும் புயவலியாலும் உலகையே ஆட்டிப் படைத்தவன். தேவர்களும்கூட அவனிடம் தோற்றதுண்டு. அத் துணை ஆற்றல் பெற்றிருந்தும் அவன் சித்தம் மங்கையர் பால் சென்றதால் ஓர் மங்கையின்மூலமே அழிவைத் தேடிக்கொண்டான்.

'பத்து நீண்முடியும் மவற்றிரட்டிப் பாழித்தோளும்
படைத்தவன் செல்வம்
சித்தம் மங்கையர்பால் வைத்துக் கெட்டான்' 15

என்று அவன் முடிவுபற்றிக் குறிப்பிடுகிறார் திருமங்கையாழ்வார்.

ஒரு தலையும் இரு தோள்களுமுடைய மனிதனே திருமாலின் பால் சித்தம் வைத்துச் சிறப்புப் பெறுகிறான்; ஆனால் பத்துத் தலைகளும் இருபது தோள்களுமுடைய இராவணன் மங்கையர் பால் சித்தம் வைத்துக் கெட்டு விட்டானே என்ற இகழ்ச்சிக் குறிப் பினையும் மேற்கண்ட பாசுரத்தில் காண்கிறோம். இராவணன் மங்கையர் பால் சித்தம் வைத்திருந்தது உண்மையே! ஆனால் அவன் ஓர் சிறந்த சிவபக்தன் என்பதும் உலகறிந்த உண்மை அதனால், திருமால் பால் சித்தம் வைக்காமல் சிவன்பால் சித்தம் வைத்துக் கெட்டு விட்டான் என்பதனை மறைமுகமாக உணர்த்து கின்றாரோ என்பதும் சிந்திததற்குரியது.

பித்தர் போலச் சித்தம் :

சிந்தை தெளிந்த நிலையில் இருந்தால் சித்தமும் தெளிவடைந் திருக்கும். சிந்தையில் குழப்பமிருந்தால் சித்தமும் கலங்கிய நிலை யில் தான் இருக்கும். அந்நிலையினையே பித்தர் நிலையெனக் கூறுவர். பித்தர் நிலையிலிருக்கும் ஒருவரின் நினைவு, சொல் செயல், இவைகளுக்குள் தொடர்பு இருக்கமாட்டாது. நினைப்பது ஒன்றாகவும், சொல்வது ஒன்றாகவும், செய்வது பிறிதொன்றாக வுமே இருக்கும். எதிலுமே நிரந்தரத் தன்மைகளைக் காண முடியாது.

முதுமைப் பருவத்தில் சொற்கள் தடுமாறுகின்றன; உடல் இளைத்துவிடுகின்றது; ஏங்கி இருமித் தவிக்கும் நிலை. சித்தமும் அந்நிலையில் பித்தர் நிலையினையடைந்து விடுகின்றது. வயது முதிர்ந்த பலர் சொல்வது ஒன்றும் செய்வது ஒன்றுமாகக் குழந்தை போலச் செயல்படுவதனைக் காண்கின்றோம். தொடர்பில்லாமல் வாய்க்கு வந்ததையெல்லாம் கூடச் சிலர் பேசுவதுண்டு; வாழ்வின் முடிவை நெருங்கப்போவதை நினைப்பதால் ஏற்படும் அந்தத் தடுமாற்றம் பித்தர் நிலையினைப் போன்றதே! அந்நிலை ஏற்படு முன்பாகவே திருமால் தன்னைக் காத்தருள வேண்டுமென்று வேண்டுகிறார் திருமங்கையாழ்வார்.

'எய்த்த சொல்லோ டீளை யேங்கி யிருமி யிளைத்துடலம்
பித்தர் போலச் சித்தம் வேறாய்ப் பேசியயராமுன்
அத்த னெந்தை யாதி மூர்த்தி யாழ்கடலைக் கடைந்த
மைத்த சோதி யெம்பெருமான் வதரி வணங்குதுமே'......16

என்பது அவர் பாசுரம், பித்தர் நிலையில் சித்தம் வேறாகவும்

சொல் வேறாகவும் இருக்கும் என்பதனையும், பயனற்ற சொற் களைப் பேசியே அயர்வடைவர் அத்தகையோர் என்பதனையும் இப்பாசுரம் உணர்த்துகிறது. அந்நிலை ஏற்படாமல், தெளிந்த சித்தத்தைப்பெற்று அச்சித்தத்தால் திருமாலின் அருள்பெற வேண்டும் என்பதே ஆழ்வார் உணர்த்த விரும்பும் உண்மையாகும்.

சித்தம் எவ்வாறு தெளிய வேண்டும் என்று உணர்த்துகிறார் தாயுமானவர். அலைகளேது மற்ற குளத்துநீர் எவ்வாறு தெளி வுடன் காணப்படுமோ அதுபோன்று சித்தம்தெளிய வேண்டுமாம்.

'திரையிலா நீர்போல் சித்தம் தெளிவனோ?' 17

என்பது அவர் கேள்வி. சித்தத்தின் தன்மையாகிய நினைவாகவும், செய்யுஞ் செயலாகவும் இறைவனே இருக்கின்றான் என்பதை யுணர வேண்டும். அப்படியுணர்ந்தால் பித்தர் நிலைபோல் ஆகாமல் சித்தமும் தெளிவடையும்; செய்யும் செயலும் நல்ல னவாக அமையும்.

'சித்த நினைவும் செயுஞ் செயலும் நீயே' 18

என்கிறார் தாயுமானவர்.

அடிக்குறிப்பு விளக்கம்

1.	திருநாவுக்கரசர் தேவாரம்	7-275-4
2.	திருவாசகம் – சென்னிப் பத்து	
3.	திருமந்திரம் – மூவகை	
4.	திருநாவுக்கரசர் தேவாரம்	5-186-1
5.	திருமந்திரம்	1428
6.	திருநாவுக்கரசர் தேவாரம்	4-111-10
7.	முதலாமாயிரம் – பெரி. திரு.	1-3-6
8.	,, ,,	4-5-10
9.	திருநாவுக்கரசர் தேவாரம்	4-38-7
10.	,,	4-52-9
11.	முதலாமாயிரம் - பெருமாள்	3-3-7
12.	,, பெரி. திரு.	5-3-8
13.	,, திருச்சந்த	110
14.	2ஆம் ஆயிரம் – திருக்குறுந்.	10
15.	,, பெரிய. திரு.	10-2-2
16.	,, ,,	1-3-6
17.	தாயுமானவர் பாடல்கள்	
18.	,,	

அகம்

முன்னுரை :

மனத்தின் பல்வேறு நிலைகளில் ஒன்றினை உணர்த்துவதாக இச்சொல்லும் இலக்கியங்களில் எடுத்தாளப்பட்டு வருகிறது. மனம் நெஞ்சம், உள்ளம் போன்று இச்சொல்லும் தொல்காப்பியர் காலம் தொட்டுப் பயின்று வந்துள்ளது. தமிழர் தங்கள் வாழ்வினையே அகம், புறம் என இரு பிரிவாகப் பகுத்தனர். அகம் என்று அவர்கள் குறிப்பிட்டது வீடு என்ற பொருளில் மட்டுமன்று; மனம் என்ற பொருளினையும் உட்படுத்திக் கொண்டே! புறத்தார்க்குப் புலன் ஆகாதவாறு (மனத்தளவில்) அகத்தளவில் உணரப்படும் காதல் வாழ்வினைப் பற்றியும்; அது களவில் தொடங்கி கற்பாய் மலர்ந்து இல்லற மணங்கமழும் நெறிகளைப் பற்றியும் இயம்பும் முறைகளையே அகப் பொருளிலக்கணம் கூறுகிறது.

தொல்காப்பியமும் சங்கப்பாடல்களும் அகம் என்ற சொல்லால் உணர்த்துவது மனத்தின் எல்லாத் தன்மைகளுக்கும், எல்லா நிலைகளுக்கும் பொருந்தும் என்று கூற முடியாது. அன்பை அடிப்படையாகக் கொண்ட காதல் வாழ்வின் மனநிலையினையே அகம் என்ற சொல் உணர்த்தியது.

> 'அன்பகத் தில்லா உயிர்வாழ்க்கை வன்பாற்கண்
> வற்றல் மரந்தளிர்த் தற்று' 1

என்ற திருக்குறள் அகம் என்ற நிலையினை நன்கு தெளிவுபடுத்தும். 'அன்பு அகத்தில்லா உயிர் வாழ்க்கை' என்று அவர் கூறும் முறையிலிருந்தே அன்பு அகத்தில் இரண்டறக் கலந்து நிற்கும் நிலையினைப் புலப்படுத்தும். அன்பில்லா அகம் அகமென்று கூறத்தகாததாகும். இந்நிலையினையே அகத்தின் தன்மையாக முன்னர்க்காண்கிறோம்.

நாயன்மார்களும் ஆழ்வார்களும் பக்தி இலக்கியங்களைப் படைக்கத் தொடங்கிய காலத்தில் இச் சொல்லின் பொருள் சற்று விரிவடையத் தொடங்குகிறது.

'அகம்' என்ற சொல்லின் அடிப்படைத் தன்மை அன்பே என்பதைப் பக்தி இலக்கியங்களைப் படைத்தவர்களும் உணர்ந்துள்ளார்கள். அத்தன்மை புலப்படுமாறு தான் அச்சொல்லைப் பயன்படுத்தியுள்ளனர். ஆனால் அகம் என்றசொல் மனத்தைப் பொதுவாகக் குறிக்கும் மற்றோர் சொல்லாகவே எண்ணி எடுத்தாண்டுள்ளனர். அதிலும் குறிப்பாக இறைவன் உறையும் மனங்களையே அகம் என்ற சொல்லால் பெரும்பாலும் குறிப்பிட்டுள்ளனர்.

'தொண்டர் அகமலாற் கோயிலில்லை' 2

என்பது திருநாவுக்கரசர் தேவாரம்.

'அன்பால் நீ அகநெகவே புகுந்தருளி' 3

என்பது திருவாசகம்.

'அகத்தூ டணுவணுவாய் அண்டமெலாம் தானாய்'

என்பது தாயுமானவர் பாடல்.

மேற்கண்ட சான்றுகளை நோக்குமிடத்து அகம் என்றசொல் இறைவன் உறையும் மனங்களை யுணர்த்துகிறது என்பதனையும் அதன் தன்மை அன்பை அடிப்படையாகக் கொண்டது என்பதனையும் உணரமுடிகிறது.

காதல் வாழ்விற்கு அடிப்படையான அன்புதான் பக்தி வாழ்விற்கும் அடிப்படையாய் அமைகின்றது. நம்முடைய சமயங்களெல்லாம் அன்பின் வடிவாகத்தான் இறைவனைக் கண்டு தொழுதுள்ளன. இறைவனிடத்து அன்பு செலுத்துதலே அவனையடைதற்குரிய வழியென்றுதான் அருளடியார் அனைவருமே வலியுறுத்தி வந்துள்ளனர். இறைவனடி சேர்ந்த அடியார்களாக நாம் புராணங்களில் தரிசிப்பவர்களெல்லாம் அவனிடத்தும் பிறரிடத்தும் அன்புகாட்டி வாழ்ந்தவர்கள் தாம். மனிதர்களேயன்றி விலங்குகளும் பறவைகளும் கூட இறைவனிடம் அன்பு செலுத்தி அவனருள் பெற்ற நிகழ்ச்சியினையும் படித்துள்ளோம். எனவேதான் மனத்தின் ஒரு தன்மையாக அன்பினை எண்ணாமல் அன்புதான் மனம்; அன்புதான்

இறைவன் என்று எண்ணி அன்போடியைந்த பக்தி நெறியாளர்களாக அவர்கள் வாழ்ந்துள்ளார்கள். அதனால்தான் அகம் என்ற சொல் மனத்தைக் குறிப்பதாகப் பயன்படுத்தியுள்ளனர். ஆயினும் மிகக் குறைந்த அளவிலேயே இச்சொல்லை அனைவரும் எடுத்தாண்டுள்ளனர். இது பக்தி இலக்கியங்களின் நிலை.

அகம் நெகுதல் :

அகம் நெகும் நிலையே அகத்தின் சிறப்பினைக் காட்டும். பிறர் துன்பங்கண்டு இரங்கும் தன்மையுடையோர்க்கே அகம் நெகும் நிலை ஏற்படும். அகத்தில் அன்புடையோர்க்கே பிறர் துன்பங்கண்டு இரங்கும் தன்மை யேற்படும்.

'அன்பால் நீ அகநெகவே புகுந்தருளி' 2

என்று இறைவன் மணிவாசகர் அகத்தில் புகுந்து அதை நெகிழ்வித்த நிலையினையுணர்ந்து அவரே கூறுகின்றார். எவரைக் கண்டும் அஞ்சாத அளவிற்குத் துணிவுடைய மணிவாசகர் சிலரைக் கண்டால் அஞ்சுவதாகக் கூறுகிறார்.

'அகநெகா தவரைக் கண்டால்
அம்மனார் அஞ்சுவாரே' 7

என்று அவர் கூறுவதை நோக்கும்போது அகம் நெகாதவர்கள், கண்டு அஞ்சத்தக்க அளவிற்குக் கொடிய இயல்பினர் என்பது புலப்படுகிறது. கருங்கல்லையும் கரைய வைக்கும் இயல்புடைய திருவாசகத்தை அருளிய மணிவாசகர் அன்பின் சிறப்பை மிகுதியும் உணர்ந்து உணர்த்திய பெருமைக்குரியவர்.

இறைவன் அருள்பெற வேண்டுமென்றால் அன்போடு உருகி அகங்குழைய வேண்டும்; இன்றேல் அவனருள் பெறமுடியாது என்று கூறுகின்றார் திருமூலர்.

'அன்போ டுருகி அகங்குழைவார்க் கன்றி' 8

என்பது திருமந்திரம்.

இறைவன் நம் அகத்துள் புகுந்தபின் அந்த அகம் குழைந்து ஆனந்தமாகிறது என்று கூறுகிறார் தாயுமானவர்.

'அகமெலாம் குழைந்து ஆனந்தமாக' 9

என்பது அவர் பாடல்.

... ... இளமுலைமேல்
பொன்னரும் பாரம் புலம்ப அகங்குழைந்தாங்
கின்ன வுருவி னிமையாத் தடங்கண்ணார்' 10

காதல் வயப்பட்டு நின்ற நிலையினைத் திருமங்கையாழ்வார் தெளிவு படுத்துகிறார்.

தொண்டர் அகமே கோயில்!

எண்ணற்ற கற்கோயில்களையும் பொற்கோயில்களையும் இறைவன் எழுந்தருளுதற்காக நாம் கட்டி வைத்துள்ளோம். அவைகள், கட்டியவரின் இறையுணர்வினையும், கலைகளின் சிறப்பினையும் காட்டுவதாக அமையலாம். ஆனால் உண்மையில் இறைவன் பெரிதும் விரும்புவது நம் அகக் கோயில்களையே! ஏனென்றால் கற்கோயில்களையும் பொற்கோயில்களையும் கட்டுவதற்குச் செல்வர்களால்தான் முடியும். ஆனால் அகங்களில் கோயில் கட்டுதல் ஏழைகளாலுங்கூட முடியுமே! அதனால் அக் கோயில்களையே இறைவனும் விரும்புகின்றான்.

'தொண்டர் தங்கள் அகமே பொற்கோயில்' 11

என்கிறார் தாயுமானவர். நாடாளும் வேந்தன் கட்டும் கற்கோயில் களைவிட அன்போடு வழிபடும் அகங்களே சிறந்தன என்பதைக் காட்டவே அதனைப் பொற்கோயில் என்று குறிப்பிடுகிறார் அவர்.

"தொண்டர் அகமலாற் கோயிலில்லை யையனையாற
னார்க்கே' 12

என்கிறார் திருநாவுக்கரசர்.

நாட்டிலுள்ள எத்தனையோ தவத்தலங்களுக்குச் சென்று அங்குள்ள இறைவனை வழிபட்டு, அவ்விறைவன்மீது பாசுரங்களையும் பாடிய பெருமைக்குரியவர் திருநாவுக்கரர். அவரே 'தொண்டர் அகமலாற் கோயிலில்லை' என்று கூறுகின்றார் என்றால் அன்பால் வழிபடும் தொண்டர்களது அகத்தின் சிறப்பிற்கு வேறு என்ன சான்று வேண்டும்?

நெடியோனாகிய திருமால் என் அகத்திற்குள் புகுந்துள்ளான்; நிச்சயம் என் அகக் கோயிலைவிட்டு அவன் என்றும் நீங்கமாட்டான் என்று உறுதியோடு கூறுகிறார் நம்மாழ்வார்.

'நெடியான் நிறங்கரியான் உள்புகுந்து நீங்கான்
அடியேன துள்ளத் தகம்' 13

என்பது அவர் அருட்பாசுரம். 'உள்புகுந்து' என்று முதலிற் கூறியவர், உள்ளே எங்கு புகுந்தான் என்ற வினாவிற்கு விடையாக 'உள்ளத்து அக'த்திற்குள் புகுந்தான் என்றும் கூறுகிறார். உள்ளத்து அகம்' என்று குறிப்பிடுவதை நோக்கினால்

உள்ளத்தையே அகம் என்று குறிப்பிடுகின்றாரா அல்லது 'உள்ளத்தின் உட்பகுதி' என்று குறிப்பிடுகின்றாரா என்ற ஐயம் ஏற்படுகிறது.

அகம் என்பதற்கு உள்ளே என்ற பொருளும் உண்டு. அதனால் உள்ளத்தினுள்ளே இறைவன் எழுந்தருளியுள்ளான் என்ற பொருளும் பொருந்தும். எனினும் அகம் என்பது இறைவன் உறையுங்கோயில் என்று கூறியிருப்பதால் உள்ளத்தைச் சார்ந்த அகத்திற்குள் இறைவன் எழுந்தருளியுள்ளான் என்பதே சாலப் பொருந்தும். நெஞ்சம், உள்ளம் என்ற சொற்களுடன் அகம் என்பது சேர்ந்து நெஞ்சகம், உள்ளகம் என்று வழங்கும்போது அவைகளும் கோயில்களாகவே கருதப்படுவதையுணரலாம்,

அகங்குளிர்தல் :

மழை பொழியும் போது நிலம் குளிர்கிறது; இனிய நினைவு களால்நம் அகமும் குளிர்கிறது. அகம்குளிரும் நிலையில் இருப்பவர் களிடமே இறைத் தன்மையைக் காணமுடியும். பிறர்துன்பம் கண்டு இரங்கும் தன்மையும், ஏனைய சிற்றறிவுயிர்கட்கும் அன்பு காட்டும் நிலையும் அகங்குளிரும்போதுதான் தோன்றும். பலரது அகங்களில் குளிர்ச்சி இன்று இல்லை. மாறாக, வரண்ட பாலை வனமாகவும் அனல் வீசும் இடமாகவும் அவை இருக்கின்றன. அதனால்தான் அழுக்காறு, அவா, வெகுளி, இன்னாச் சொல் போன்ற மாசுகளை யெங்கும் காண்கின்றோம். போரும் பூசலும் தோன்றுவதற்குக் காரணங்களே அன்பகத்து இன்மையால்தான்.

உண்மையில் அகங்குளிரும் போதுதான் அன்பும் அருளும் தோன்றுகின்றன. அகங்குளிர்ந்தது போன்று நடித்தால் தீங்கு தான் விளையும். கொடிய மனங்கொண்ட ஒருத்தி அகங்குளிர்ந்து கண்ணனாகிய குழந்தைக்குப் பால் தரும் தாய்போல நடிக் கின்றாள். அவள் அகத்தின் உண்மை நிலையுணர்ந்த கண்ணன் பால் குடிப்பது போன்று அவள் உயிரையே குடித்து விடுகின்றான்.

'உகந்துன்னை வாங்கி யொளிநிறங்கொள் கொங்கை
அகங்குளிர உண்ணென்றாள் ஆவி – உகந்து
முலையுண்பாய் போலே முனிந்துண்டாய் நீயும்
அலைபண்பா லானமையா லன்று' 14

என்று பொய்யாய் அகங்குளிர்ந்த அரக்கியின் நிலையினை விளக்கு

கிறார் பூதத்தாழ்வார். இனிய நினைவுகளாலும் இறைவனைப் பற்றிய எண்ணங்களாலும் அகம் குளிர்ந்த நிலையில்தான் அகத்தில் மகிழ்ச்சியும் முகத்தில் மலர்ச்சியும் தோன்றும். அகத்தில்தீய உணர்வுகள் தோன்றி, அவ்வுணர்களால்ஆட்டுவிக்கப்படும் போது முகத்தில் துன்ப அலைகளே தோன்றும். அத்தகையோர்க்கு மகிழ்ச்சி யென்பது என்றுமே இல்லை. பிறரை மகிழச் செய்யும் போதுதான் நாமும் மகிழ முடிகிறது. இறைவனைப் பற்றியே யெப்போதும் நினைந்து, அவனுக்குத் தொண்டு செய்து வாழும் தூயவர்களின் அகங்களில் எப்போதும் மகிழ்ச்சி யொளியே வீசும். அத்தகைய தொண்டர்களை என்றுமே மகிழ்ச்சியோடு வாழச் செய்வதற்காகத் திருமால் திருவரங்கத்தில் பள்ளி கொண்டுள்ளான் என்று கூறுகிறார் குலசேகர ஆழ்வார்.

'வன்பெருவா னகமுய்ய வமர ருய்ய
மண்ணுய்ய; மண்ணுலகில் மனிச ருய்யத்
துன்பமிகு துயரகல அயர்வொன் றில்லாச்
சுகம்வளர அகமகிழும் தொண்டர் வாழ
அன்பொடுதென் திசைநோக்கிப் பள்ளி கொள்ளும்
அணியரங்கன்' 15

என்பது அவர் பாசுரம். 'வானகமும், மண்ணும், மண்ணிலுள்ள மனிதர்களும் உய்வதற்காகவும், துன்பங்கள் நீங்கிச் சுகம் வளர்வதற்காகவும்' என்று கூறுபவர் அதன்பிறகு 'அகம் மகிழும் தொண்டர் வாழ' என்று கூறுவதை நோக்கினால், தொண்டர்கள் வாழும்போதுதான் மேற்கண்ட யாவும் உய்வடைகின்றன என்பதைத் திருமால் உணர்ந்து, அவர்களை வாழ்விப்பதனையே முதற்கடனாகக் கொண்டு பள்ளி கொண்டுள்ளான் என்பது உணரக் கிடக்கிறது. வானகம், மண், மனிதர் எல்லோரும் 'உய்ய' என்று கூறுபவர் தொண்டர்கள் 'வாழ' என்று கூறுவதும் சிந்திக்தற்குரியது. இறவாமல் பிழைத்திருக்கும் சாதாரண நிலையே உய்தல் எனப்படும். இறந்தும் இறவாப் புகழோடு வாழும் நிலையே வாழ்தல் எனப்படும். தொண்டர்கள் வாழ்பவர்கள்.

அகங் கரைதல் :

மெழுகு கரைந்து உருகுவதைப் போன்றதே அகங்கரைந்து உருகும் நிலையும். மெழுகு கரையும்போது பிறர்க்கு ஒளி தருகிறது. அகங்கரைந்த பக்தர்களும் பக்தி ஒளியைப் பிறர்க்குத் தருகின்றார்கள். அகம் நெகுதல், அகம் குளிர்தல் போன்ற

நிலைகளினும் முதிர்ந்த நிலையே அகங்கரைதலாகும். பிறர் படும் துன்பங்களைக் காண்கின்ற பொழுது நம் அகம் நெகிழ்கின்றது; அவர் துன்பத்தைத் துடைக்கும் போது நம் அகம் குளிர்கின்றது; அவர் மகிழ்வதைக் கண்டால் நம் அகமும் மகிழ்கிறது. இவையெல்லாம் அன்புடையோர் அகத்தின் செயல்களே!

இறைவன் மீது கொண்ட தீராக் காதலால் அவனருள் பெற வேண்டுமென்று ஏங்கித் துடித்து, அவனுக்காகப் பக்தி செலுத்தும் அகத்தின் முதிர்ந்த நிலையினையே 'கரைதல்' என்று குறிப்பிடுகின்றார்கள்.

ஆடியாடி யகங்கரைந்து, யிசை
பாடிப்பாடிக் கண்ணீர் மல்கியெங்கும்
நாடிநாடி நரசிங்கா வென்று
வாடி வாடுமிவ் வாணுதலே' 16

என்று அகங்கரைந்த நிலையினைத் தெளிவுபடுத்துகிறார் நம்மாழ்வார். திருமாலின் அருள் பெறுவதற்காக, அவன் மீது மையல் கொண்டு ஆடி, அவன் புகழினைப்பாடி, ஆனந்தக் கண்ணீர் சிந்தி, அவன் திருப்பெயரினைப் பல்காலும் கூறி, அடைய முடியா நிலையெண்ணி வாடி நிற்கின்ற ஒரு பெண்ணின் அகத்தின் நிலையினை நாம் இப்பாசுரத்தில் காண்கின்றோம். மிகுந்த காதல் ஈடுபாட்டின் போதுதான் அகங்கரையும் நிலையேற்படும். பக்திப் பாசுரங்களை அருளிய அருளாளர்களும், அவர்களுக்குப் பாடற் பொருளாக அமைந்திருந்த மெய்யடியார்களும் அகங்கரைந்து இறைவனருள் வேண்டிப் பெற்றவர்களே யாவர்.

அகத்தான் புறத்தான்:

நம்முடைய அகங்களென்ற பொற்கோயில்களையே பெரிதும் விரும்பி இறைவன் எழுந்தருளுவான் என்பதனைக் கண்டோம். அவன்மீது நாம் செலுத்துகின்ற பக்தியின் மூலமே நாம் அவனை அடைய முடியும் என்ற போதிலும் அவனை நம்மால் அறிய முடியுமா என்பது சிந்தனைக்குரியது. அவன் நம் அகத்தில் இருந்தாலும், இருப்பதனை உணரும் திறன் நமக்கு வேண்டுமே; எத்தகையோர் அவனை உணர்வர் என்பதனை விளக்குகிறார் திருமங்கையாழ்வார்.

"... ... ... ஐம்புலன்
அகத்தினுட் செறுத்து நான்குடனடக்கி

முக்குணத் திரண்டவை யகற்றி, ஒன்றினில்
ஒன்றி நின்றாங் கிருபிறப் பறுப்போர்
அறியும் தன்மையை'' 17

என்பது அவர் கூற்று. ஐம்புலன்களின் போக்கில் செல்வதனால் தான் அல்லற்படுகிறோம்; பாவங்களுக்கும் பல்பிறவிப் பிணிகளுக்கும் ஆளாகி இறைவனைக் காண முடியாமல் தவிக்கின்றோம். அப்புலன்களையே செறுத்துவிட்டால் பாவமேது, பல்பிறவியேது? துன்பங்களுக்கெல்லாம் தொடக்க நிலைகளாக உள்ள ஐம்புலன்களையும் வென்ற ஞானியர்களே அகத்தில் இறைவன் இருப்பதையுணர்வர்.

அகத்தில் மட்டும்தானா இறைவன் இருக்கின்றான்? புறத்திலும் அவனே நீக்கமற நிறைந்துள்ளான்.

'அவற்கடிமைப் பட்டேன் அகத்தான் புறத்தான்' 18

என்று பேயாழ்வாரும்,

'அளிவரு மருளினோ டகத்தனன் புறத்தன னமைந்தே' ...19

என்று நம்மாழ்வாரும் கூறுகின்றனர்.

நம் அகத்தில் காண்கின்ற அதே இறைவனின் வடிவத்தைத் தான் ஆலயங்களில் சிலை வடிவிலும், ஓவியங்களின் வடிவிலும் காண்கின்றோம். எங்கெங்குமே அவன் நீக்கமற நிறைந்துள்ளான் என்பதனையே 'அகத்தனன் புறத்தனன்' என்ற கூற்று உறுதிப்படுத்தும். விறகிற்குள் தீயும், பாலிற்குள் நெய்யும் மறைந்திருந்து பின்பு வெளிப்படுவது போன்று இறைவன் அகத்திற்குள் மறைந்திருந்தும், அடியார்கட்கருள் செய்வதற்குப் புறத்தே வெளிப்பட்டும் நிற்பான் என்று திருநாவுக்கரசர் கூறுவதும் இங்கு எண்ணுதற்குரியது. எல்லாவற்றிலும் எல்லாவுமாக இறைவன் இருந்தருள் புரிகிறான் என்பதே இறையடியார் நம்பிக்கை.

இறைவன் அகம்:

தொண்டர்களின் அகத்தையும், அதன் தன்மைகளையும் இதுவரை கண்டோம். இறைவனின் அகத்தைப் பற்றியும்கூட ஆழ்வார்கள் சிந்தித்துள்ளார்கள். இவ்வுலகமும், அகன்ற விசும்பும் திருமாலின் அகத்தில் உள்ளன என்று கூறுகிறார் நம்மாழ்வார். நம்முடைய அகங்களில் இறைவன் உள்ளான்; அதுபோன்று அவனுடைய அகத்தில் இம்மண்ணும் விண்ணும் அடங்கியுள்ளது என்பது அவர்கள் கருத்து.

'புவியு மிருவிசும்பும் நின்னகத்த; நீயென்
செவியின் வழிபுகுந்தென் னுள்ளாய்—அவிவின்றி
யான்பெரியன் நீபெரியை யென்பதனை யாரறிவார்?
ஊன்பருகு நேமியாய் உள்ளு' 20

என்பது அவர் அருளிய பிரபந்தம். இம் மண்ணும் விண்ணும் உன் அகத்தில் உள்ளன. நீ என் செவி வழியாகப் புகுந்து என்னுள் என் அகத்தினுள் உள்ளாய் என்ற அவர் கூற்று சிந்தனைக்குரியது இறைவன் தன் செவி வழியாகப் புகுந்து அகத்துள் உள்ளான் என்பது, இறைவனின் புகழையும் அவன் திருநாமங்களையும் செவி களால் கேட்டு, அதன் மூலம் அவனைப் பற்றித் தன் அகத்துள் ஓர் கருத்தை உருவாக்கிக் கொண்டுள்ளார்; அக்கருத்தே அவர் காது களால் கேட்ட இறைவனின் திருவுருவமாகப் பின்னர் உருப்பெற் றது என்பதனையே உணர்த்தும்.

